
பழந்தமிழ் நூல்களில்

உணவு



முனைவர் பெ. சுப்பிரமணியன்

பழந்தமிழ் நூல்களில்
வாழ்

646

முனைவர் **பெ. சுப்பிரமணியன்,**
எம். ஏ., பிஎச். டி.,
தமிழ்ப் பேருரையாளர்
அ. வீரையா வாண்டையார் நினைவு
திரு புட்பம் கல்லூரி (தன்னாட்சி)
பூண்டி, தஞ்சை மாவட்டம்-613 503.

குருவருள் பதிப்பகம்
'செந்தில் அகம்'
187, அல்லித் தெரு,
குறிஞ்சி நகர் (ஆர். எம். எஸ். காலனி),
தஞ்சாவூர்-613 006.

நூல் - விளக்கம்

முதற்பதிப்பு	:	செப்டம்பர் 1999
நூற் பெயர்	:	பழந்தமிழ் நூல்களில் ஊழ்
ஆசிரியர்	:	முனைவர் பெ. சுப்பிரமணியன்
உரிமை	:	பதிப்பகத்திற்கு
பொருள்	:	இலக்கியம்-தத்துவம்
பதிப்பகம்	:	குருவருள் பதிப்பகம் 'செந்தில் அகம்' 187, அல்லித் தெரு, குறிஞ்சி நகர் (R. M. S. காலனி) தஞ்சாவூர்-613 006.
வெளியீட்டெண்	:	ஒன்று
அச்சகம்	:	பாரதி அச்சகம், நாஞ்சிக்கோட்டை சாலை தஞ்சாவூர்-6.
தாள்	:	13.7
அளவு	:	டெம்மி 1/8
எழுத்து	:	10 புள்ளி
பக்கம்	:	22 + 230 + = 252
நூல் விலை	:	ரூ. 110/-
படிகள்	:	1000
நிதியுதவி	:	தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி இயக்ககம் "குறளகம்", சென்னை-600 108.

சென்னைப் பல்கலைக் கழகத்
தமிழ் இலக்கியத்துறைத் தலைவர்
'சிந்தனைச் செம்மல்' பேராசிரியர்
தெய்வத்திரு. முனைவர் **ந. சஞ்சீவி** அவர்கட்கு
அன்புக் காணிக்கை.



"நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!"

- திருவாசகம்.

அருந்தமிழில் ஆங்கிலத்தில் ஆற்றலுடை அறிஞரேறே!
வருந்திவந்த மாணவர்க்கு வாழ்வளித்த சஞ்சீவி
அருமருந்தே ! தூய அன்பால் அடிமைகொண்டாயுன்றன்
திருவடியை நன்றியுடன் வணங்குகின்றேன் ! ஏற்றருளே!

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனகர்த்தர்

திருவருள்திரு

தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக

பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

அகம் கனிந்து வழங்கிய

அருளுரை

உ
சிவ சிவ

''பழந்தமிழ் நூல்களில் ஊழ்" என்ற கருத்து ஆய்வு மிகச் சிறப்பாக, பேராசிரியர் பெ. சுப்பிரமணியன் அவர்களால் ஆக்கப்பட்டு உள்ளது.

''ஊழ்" என்ற கோட்பாடு தொல்காப்பியர் காலந்தொட்டு இன்றுவரை தொடரும் கோட்பாடாக விளங்கி வருகின்றது. அறச் செயலையே ஆற்ற வேண்டும் என்ற நன்னெறிப்படுத்தலுக்குக் காரணமாக இருந்த நெறி, காலப்போக்கில் மனித முயற்சியை முடமாக்குகின்ற போக்குக்கும் சுயநல மனித சக்தியால் அழைத்துச் செல்லப்படுகின்றது. விதியே காவியத்தை, சமுதாயத்தை, காவிய நாயகனை இயக்குவதாகக் கூறிய கம்பனே, ''விதிக்கு விதியாகும் என் வில் தொழில் காண்டி!'' என்று இலக்குவன் வாயிலாகக் கூறுகின்றான். ''ஊழிற் பெருவலி யாவுள?'' என்ற தமிழ்மாமுனிவரே,

''தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்''

என்று நம்பிக்கையின் நாற்றை நடவு செய்திருக்கின்றார்.

தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் நாலடியார் எனப் பழந்தமிழ் நூல்கள் கூறுகின்ற ஊழ் பற்றிய கருத்தினைப் பேராசிரியர் தெளிவுபடுத்துகின்றார். மனித வாழ்வியலில் நம்பிக்கையும் நல்லெண்ணமும் வளர, ஊழ்க்

கோட்பாடு உறுதுணை ஆகின்றது என்றகருத்து சிந்திக்கத்தக்கது. கிரேக்கர், ரோமர், சீனர், பாபிலோனியர் என்று உலக மக்கள் யாவரும் ஒருமித்துச் சிந்திக்கின்ற கருந்தாக ஊழ்க் கோட்பாடு விளங்குகின்றது என்பதை ஆசிரியர் ஆய்வின் வாயிலாக அறிய முடிகிறது. காதல் வாழ்க்கைக்குக்கூடக் காரணமாக அமைவது ஊழ் என்ற கருத்து, பழந்தமிழ் நூல்களில் விரவிக் கிடக்கின்றது. காதல் வாழ்க்கைக்குத் தடையாக இருக்கும் தாயைக்கூட ''நரகம் செல்வாள்'' என்று சபிக்கும் தலைவி, தணியாத காதல் வேகத்தில் இருக்கின்றாள் என்பதை உணர்ந்தாலும் சொர்க்கம், நரகம் என்ற சிந்தனை ஆழமாகச் சமுதாயத்தைத் தாக்கி இருக்கின்றதுஎன்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

கணியன் பூங்குன்றன் பாடிய ''யாதும் ஊரே! யாவரும் கேளிர்!'' என்ற சிந்தனை முழக்கத்தில் கூடத் தீதும் நன்றும் நமது வினையால் வருவிக்கப்படுபவை. பாயும் நீரின் வேகத்தின் திசையில் மிதவை இயங்குவது போல, உயிர், ஊழின் போக்கால் இயங்குகின்றது என்ற கருத்து ஆழ்ந்த சிந்தனைக்குரியது. இக்கருத்து பழந்தமிழ் நூல்களில் எல்லாம் ஆழமாக வேரூன்றி உள்ளது.

''செடிகளில், மரங்களில் மலர் ஊழ்த்து வெளிப்படுவதைப் போல ஒருவனுடைய இன்ப துன்பங்கள் அவனுடையவாழ்க்கையில் இருந்து ஊழ்த்து வெளிப்படுகின்றது என்றும், ஒருவன் ஆக்கத்திற்கும் அழிவிற்கும் புறச்செயல் காரணமன்று. அவன்றன் எண்ணங்களும், எண்ணங்களின் வழிப்பட்ட செயல்களும் காரணம் ஆதலின் ஊழை மாற்றும் வலிமை மனிதனுக்கு உண்டு என்றும் காலப் போக்கில் ஊழின் ஆற்றல் மிகைப்படுத்தப்பட்டு மனிதர்களை அடிமைப்படுத்திச் சுரண்டும் வர்க்கம் வளர்ந்தது என்றும் தன்னுடைய வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கித் தவறுகளைத் திருத்திக் கொண்டு வாழும் இயல்புடையோர்க்கு ஊழ் உறுதுணை செய்யும் என்றும் மகாசந்நிதானம் அவர்கள் கூறும் விளக்கம் உழைப்பைத் தூண்டி மனித குலத்தை முன்னேறச் செய்ய வேண்டும்'' என்ற சிந்தனை எல்லாருக்கும் எக்காலத்துக்கும் ஏற்புடையதாகும். மனித முயற்சியைத் தூண்டித் தொழிற்படுத்தி நெறிப்படுத்தும் நிலையிலேயே நமக்குத் திருக்குறளும் ஒளி காட்டுகின்றது. கணியன் கணிப்பைப் பொய்யாக்கக் காவியுடைபூண்ட இளங்கோவடிகள் காவியத்தில் ''ஊழ்வினை உருத்து வந்து

ஊட்டும்" என்ற கருத்து காவியத்தின் மையக் கருத்தாக இழையோடுகின்றது.

''தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவன் அரு ளாலே!''

என்ற திருமந்திரப் பாடல் எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.

இந்நூல் பழந்தமிழரது வாழ்க்கையில் ஊழ் பற்றிய சிந்தனைகளை ஆழமாக விளக்குகின்றது. ஊழ்ச் சிந்தனை வாழ்க்கையை நெறிப்படுத்தவும் வாழ்க்கைக்கு ஒளியூட்டவும் பயன் படுமாறு மனித சமூகம் சிந்திக்க வேண்டும். அறம் அல்லாத வற்றைச் செய்தால் அதன் பயன் நம்மைத் திரும்பித் தாக்கும் என்ற சிந்தனை உயிர்த் தொழிலை அறவழி ஆற்றுப்படுத்தும். இது அறிவியல் உலகம் ஏற்றுக்கொண்ட உண்மையும்கூட. நியூட்டனின் மூன்றாம் விதி, ஒவ்வொரு விசைக்கும் அதற்குச் சமமான எதிர்விசை உண்டு என்ற கூற்று சிந்திக்கத்தக்கது. பாமரர் மொழியில் கூறினால் ''எதை விதைக்கின்றோமோ அதையே அறுவடை செய்வோம்''.

''தினை விதைத்தவன் தினை அறுப்பான்
வினை விதைத்தவன் வினை அறுப்பான்!"

என்று பழமொழி கூறும். ''மறந்தும் பிறன் கேடு சூழற்க!'' என்று வள்ளுவமும் ' கெடுவான் கேடு நினைப்பான்'' என்ற பழந் தமிழ் வலியுறுத்தும் நெறியும் ''ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்று சிலம்பு நெறி செப்புவதும் வாழ்க்கையை முறைப் படுத்தி நெறிப்படுத்தவே வழிகாட்டுகின்றன. வையத்துள் வாழ் வாங்கு வாழ ஊழ்நெறி வழிகாட்டட்டும்! மனித முயற்சி முடம் ஆகாமல் பள்ளம் கண்ட புனல் போல இடையுறும் தடைகளை எல்லாம் வெல்லும் வேகத்துடன் செயல்படட்டும்!

மனித வாழ்வைப் பண்படுத்தவும் செம்மைப் படுத்தவும் சீர்மைப் படுத்தவும் ஊழ்க் கோட்பாடு உறுதுணையாக வேண்டும் என்ற ஆசிரியரின் ஆழமான மனித நேயச் சிந்தனை பாராட்டுக் குரியது.

நுண்மாண் நுழைபுலமும் அடக்கமும் ஆற்றலும் வாய்க்கப் பெற்ற பேரறிஞர் பேராசிரியர் பெ. சுப்பிரமணியன் அவர்கள் தமிழ்த் தாயின் கருவூலத்திற்கு இந்த நன்னூலைக்காணிக்கையாய் அளித்து உள்ளார். அவர்தம் தமிழ்த்தொண்டு வளரவும் தமிழ்ப்பணிகள் சிறக்கவும் அண்ணாமலையண்ணலின் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

குன்றக்குடி
5—8—99

என்றும் வேண்டும்
இன்ப அன்பு

(ஒ-ம்) பொன்னம்பல அடிகளார்

பூண்டி இராவ்பகதூர் அ. வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் தன்னாட்சிக் கல்லூரியின் மேன்மைமிகு செயலர்-தாளாளர்

'கல்விக்காவலர்' 'அறநெறியண்ணல்'

திருப்பெருந்திரு

கி. துளசிஐயா வாண்டையார்

அவர்கள்

அகம் நிறைந்து வழங்கிய

ஆசியுரை

ஓம்

'எத்தனைக் கோடி இன்பம் வைத்தாய்இறைவா!'-ஆசுகவி பாரதியின் தீர்க்க உண்மை.

பால் பருகினால் சத்து! கள் குடித்தால் அவமான மயக்கம்! சாதி பழகினால் குலகுணம். முதல் மரியாதைக்கு குரல் கொடுத்தால் குழப்பம்.

தேரோட்டி மகன் என்ற அவமதிப்பால் கர்ணன் தாழ்ந்து விடவில்லை. அவன் வள்ளலுக்கெல்லாம் ஆசானானான்.

மாயமான் என்று தெரிந்தும் சீதையின் அடங்கா அற்ப ஆசை அவளை இலங்கையில் சிக்க வைத்தது. இது சீதைக்கு ஆசூழ்;; இலங்காதிபதிக்குப் போகூழ்.

மது விற்றால் பணம் குவியும். அது சாபக் காசு. பால் விற்றால் அமிர்தம். இது தன்மான இருப்பு.

இராட்டை சுற்றிக் கதரணிந்து சுதந்திரம் பெறுவேன் என்று நம்பினார் காந்தியடிகள். அவர் நாணயம் இன்று நாம் சுதந்திரத் தென்றலைச் சுவாசிக்கிறோம். இவரா? என்று ஏளனம் பேசி கைகொட்டிப் பரிகசித்தவர்கள் விடுதலை பெற்றதும் ''மகான்'' என்று போற்றினர்.

தலையெழுத்து விதியென்று ஒதுங்கி மூலையில் பதுங்கினால், அதுவே நரகம். முயற்சி திருவினையாக்குமென்று உழைத்தால் ஊழும் விலகி வழிவிடும்.

''உனக்குப் படிப்பு வராது, வீட்டில் போய் கோழி மேய்!'' என்ற ஆசிரியரின் கோபத்தைச் சாதனையாக்கினார் உழைப்பாளி எடிசன்.

இன்று நமக்குச் சுகம் தரும் மின்சாரம் முதல் கிராமபோன் ஈறாக அத்துணையையும் உலகிற்குத் தந்த மெய்ஞ்ஞானி!

இகழ்ச்சியையும் தன் ஊக்கத்தால் புகழ்ச்சியாக்கியவர்கள் தான் சான்றோர்.

துன்பம் வரும் பொழுது துவளுவதும் இன்பம் பெறுங்கால் துள்ளுவதும் இயல்பு.

சங்கடத்தையும் சௌகரியத்தையும் சமமாக்கிக் கொள்ளத் தெரிந்தவனுக்குத்தான் நிம்மதி.

நேர்மையானவனை நாணயம் சோதிக்கும்! அஞ்சாமல் அஞ்சுவதோரும் அறனே என்றிரு; அவாவும் உன்னைத் தீண்ட அஞ்சும்.

திரு பெ. சுப்பிரமணியன் ஊழைப்பற்றி ஆய்வு செய்திருப்பது படிப்பவர்களைப் பயமுறுத்த அல்ல!

"ஒளி படைத்த கண்ணினாய் வா! வா!

உறுதி கொண்ட நெஞ்சினாய் வா! வா!" -என்ற கருத்தை உரம் ஊட்ட அவர்தரும் செயல்பாடு.

கங்கையிலும் காவிரியிலும் நீராடுவது உள்ளத்திற்குத் தூய்மை; உடலிற்கும் இன்பம்!

அதற்காக உற்பத்தியாகும் கங்கோத்ரிக்கோ தலைக் காவிரிக்கோ போகவேண்டுமென்ற கட்டாயமில்லை. நதி ஓடி வருகிற காசியிலோ திருவையாற்றிலோ எங்குக் குளித்தாலும் புனித மகிழ்வே.

ஆய்வு மனித சஞ்சலத்தைப் போக்குவது. தனக்கு உவமையில்லா இறைவனை நம்பு! தீயவையும் நல்லவையாகும்.

உண்மைக்கு அடைக்கலமாக, அறிவிற்கு நல்லாசிரியனாக, உழைப்பிற்கு எடுத்துக்காட்டாகத் திரு பெ. சுப்பிரமணியனின் தமிழ்த் தொண்டு தொடர்ந்தால் ஊழையும் ஆகூழாக்குவார் ஈசன்.

பூண்டி (ஒ-ம்) கி. துளசிஐயா வாண்டையார்

3—9—99

அணிந்துரை

'செந்தமிழ்ச் செம்மல்', 'பெரும்புலவர்'
டாக்டர் **அ. மா. பரிமணம்,**
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,
தமிழ்த்துறைத் தலைவர் (ஓய்வு),
அ. வீ.வா.நி, திருபுட்பம் கல்லூரி,
பூண்டி.

C-169, நகராட்சிக்
குடியிருப்பு,
தஞ்சாவூர்-613 007.
28—7—1999

பூண்டி, திரு புட்பம் கல்லூரித் தமிழ்த் துறைப் பேராசிரியர், மனக்கினிய அன்பர் முனைவர் பெ. சுப்பிரமணியன் அவர்கள் உருவாக்கியுள்ள முனைவர்ப் பட்ட ஆய்வேடான ''பழந்தமிழ் நூல்களில் ஊழ்'' என்னும் நூலினை அச்சு வடிவில் கண்டபோது என் சிந்தனை, ஏறத்தாழ நாற்பதாண்டுகட்கு முன்னர், உயர் தமிழாராய்ச்சி இருந்த நிலை நோக்கிச் சிறகடித்தது.

தமிழகப் புலவர் குழு, 1958-இல் உருவாகியபோது, தமிழில் டாக்டர் பட்டம் பெற்ற எழுவரைத் தேடிப்பெற முயன்று கிடைக்கா மையால் அப்பட்டம் பெறாத இருவரைக் குழுவின் அப்பகுதியில் இணைக்கும் நிலை ஏற்பட்டது. காலப்போக்கில் தமிழகத்துப் பல்கலைக்கழகங்கள் தமிழில் முனைவர் பட்டம் பெறுவதற்கான விதிகளைத் தளர்த்தி வாயில்களை அகலமாகத் திறந்து விட்ட மையால், ஆய்வு செய்வோரும், ஆய்வுப் பட்டம் பெற்றோரும் பெருகியுள்ளமை கண்டு மகிழும் போது, ஆய்வின் தரம் உயரா மையினைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை! இந்த நிலையில், ஆய்வு நெறியாலும், ஆய்வுப் பொருளாலும், அதனைப் புலப் படுத்தும் நடையாலும் சிறந்து விளங்கும் ஆய்வேட்டினைக் காண்பது, பாலைவனத்துச் சோலையாய், சோலைதரு நிழலாய், நிழல் கனிந்த கனியாய் இன்பமூட்டுவதாக உள்ளது. அந்த வரிசையில் சிறப்பிடம் பெறத் தக்கதாக இந்த நூல் விளங்குகின்றது என்பது உண்மை; வெறும் புகழ்ச்சியன்று.

தத்துவத்துறை மாணவர்களே ஆய்வு மேற்கொள்ளத் தயங்கும் 'ஊழ்' பற்றிய பொருளில் தலைப்பு நல்கிய நெறியாளர், பேராசிரியர், முனைவர் ந. சஞ்சீவி அவர்களும், அதனை ஏற்று, அவரது வழிகாட்டுதலில் ஆய்வினை நிறைவு செய்த ஆய்வாளரும் பாராட்டுக்குரியராவர். இன்று அமரராக விளங்கும் பேராசிரியர் அவர்கள், ஆய்வேட்டினை அச்சுருவில்கண்டிருந்தால்கழிபேருவகை கொண்டு வாழ்த்தியிருப்பர்.

தமிழ் இலக்கியக் கடலில், தம் ஆய்வுக்கலம் எளிதாகவும், இடர்ப்பாடின்றியும் இயங்கும் வகையில், ஆய்வு எல்லையை ஆய்வாளர் வரையறுத்துக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அதன் பயனாக இலக்கிய வேலியைத் தாண்டாமலும், தத்துவக் கோட்பாடுகளை முற்றிலும் புறக்கணித்து விடாமலும்நின்று ஆய்வை மேற்கொள்வது எளிதாயிற்று. அவ்வரையறை வருமாறு :

> '' ஊழோடு உறவுடைய பிறகோட்பாடுகள், ஊழ்க் கோட்பாடு மக்களிடம் பெற்ற செல்வாக்கு, இக் கோட்பாட்டினால் மனித சமுதாயத்தில் ஏற்பட்ட விளைவுகள், ஆகியவை பற்றியதாக, இவ்வாய்வு மெய்யியல் சார்பினை மிகுதியாக மேற்கொள்ளாது இலக்கிய அடிப்படையையே மிகுதியாகக் கொண்டு செய்யப் பெறுகிறது''.

தொல்காப்பியம், பதினெண் மேற்கணக்கு, கீழ்க்கணக்கு நூல்கள், இரட்டைக் காப்பியங்கள் ஆகியவற்றில் ஊழ் பற்றி அமைந்த இடங்களை அறிய விரும்புவோர்க்கு இந்நூல், தவறுபடாத நண்பனாக உதவும் என்பதில் ஐயமின்று.

கடவுள் உண்மையை உடன்படும் வைதிகம், அதனை உடன் படாத சமணம், புத்தம் ஆகிய இந்தியச் சமயங்களுக்கு, ஊழ்க் கோட்பாடு ஏற்புடையதாகும். அச்சமயங்களின் செல்வாக்கு, தமிழகத்தில் கால் கொள்வதற்கு முன்னரே தமிழ் மக்களிடத்தில் உயிர், இறை, ஊழ் போன்றவற்றில் தெளிவான சிந்தனை இருந்துளது. இதனை ஆய்வாளர், ''பழந்தமிழ் நூல்களில் ஊழ்க் கருத்து, கோட்பாட்டு வடிவில் மிகுதியாகக் கூறப்பெறவில்லை யாயினும் இது பற்றிய எண்ணங்கள் மிகுதியாகவுள்ளன" என்று குறிப்பிட்டுள்ளார்.

'தொல்காப்பியமும் சங்க இலக்கியமும்' என்னும் தலைப்பில் அமைந்த பகுதியில், 'காலம் உலகம் உயிரே உடம்பே' எனத் தொடங்கும் தொல்காப்பிய நூற்பாவில் இடம்பெறும் 'பால்வரை தெய்வம்', 'வினை' ஆகிய இரண்டும் பற்றிய பழைய உரையா சிரியர்கள், புத்துரை வழங்கியவர்கள் கருத்துக்களை ஒருங்கு வைத்து எண்ணித் தம் கருத்துரைத்திருப்பது சிறப்பாக உள்ளது. 'பால்வரை தெய்வம், வினை என்று கூறப்படும் இரண்டும் ஊழ்க் கோட்பாட்டுடன் தொடர்புடையனவாகும்' என்று கூறும் ஆய்வாளர், சேனாவரையரும், நச்சினார்க்கினியரும், ஒருபுடை ஒத்தும், ஒருபுடை மாறுபட்டும் வரைந்துள்ள உரைப் பகுதியினைக் காட்டி, இறுதியில் ''பால்வரைதெய்வத்தால் வரையறுக்கப்படும் வினையின் பயனை உரியவர்க்கு ஊட்டும் தெய்வம் இருவினைத் தெய்வம் எனக் கருதலாம்" என்று தம் கருத்துரைத்து, ''ஆயினும்,

இக்கருத்து மேலும் ஆய்வதற்குரியதாகும்" என்று கூறியிருப்பது சிறப்பாக உள்ளது. தன் வரையறையாகிய இலக்கிய வேலியுள் நின்று, தத்துவநுட்பங்களை நோக்கும் போது அமைத்துக்கொண்ட தற்காப்பாகவே இதனைக் கருதலாம்.

"ஒன்றே வேறே என்றிருபால் வயின் ஒன்றியுயர்ந்த பால தாணையின்... கடிவரையின்றே" என்னும் தொல்காப்பியநூற்பாவில் ஈரிடத்தில் இடம்பெறும் 'பால்' என்னும் சொற்பொருள் பற்றிய உரையாசிரியர்களின் கருத்துக்களைக் காட்டி விளக்கியிருப்பது சிறப்பாக உள்ளது. அவர்கள் பால் எனும் சொற்களித்துள்ள விளக்கங்கள் கொண்டு அவர்களை, ஊழை உடன்படாதவர், இப்பிறப்பு ஒன்றினையே ஏற்றுக்கொண்டு அதில் ஊழ்வலி கூறுவோர், முன்பின்பிறவிகளை உடன்பட்டு ஊழ்வலி கூறுவோர் என்று மூன்று வகைப்படுத்தி விளக்கியுள்ளார்.

மனித சமுதாயத்தில் இறையுண்மைக் கோட்பாடு தோன்றிய காலம்தொடங்கியே இறைமறுப்புக் கோட்பாடும் நிலவிவந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தமிழகத்தில், சமூக சீர்திருத்த இயக்கத்தைத் தோற்றுவித்துச் செயல்பட்ட தலைவர் சிலர் பகுத்தறிவுப் பெயரால் இறைமறுப்புக் கோட்பாட்டினைப்படையில் மேற்கொண்ட பிரசாரத்தின் பயனாகத் தமிழ் அறிஞர் சிலர், தமிழர்க்கு வாழ்வறம் கூறும் திருக்குறள், வாழ்விலக்கணம் கூறும் தொல்காப்பியம் ஆகியவற்றில் இடம் பெற்ற இறைவன், ஊழ் முதலிய சொற்களுக்கு வேறுபட்ட பொருளைக் காணவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாயினர். அதனால் நூலாசிரியரின் காலச் சூழல், அவர் கொண்ட கருத்து ஆகியவற்றைக் கருதாமல் உரை விளக்கம் செய்துள்ளனர். ஆய்வாளர், இறையுண்மை, ஊழ், ஆகியவற்றில் நம்பிக்கையுடைய சமயமொன்றை மேற்கொண்டொழுகுபவராயினும் பொதுநிலை நின்று ஊழ்பற்றி (பால்) கூறப்பட்ட பல கருத்துக்களையும் வகுத்து நிரல்படுத்திக்காட்டி அவற்றுள் தக்கதனை ஏற்கும் உரிமையினை வாசகர்களுக்கு வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறே தம் ஆய்வு எல்லைக்குட்பட்ட பல நூல்களில் இடம் பெறும் ஊழ் பற்றிய பகுதிகளை விளக்கியுள்ளார்.

தமிழிலக்கியங்களில் ஊழ் பற்றி அறிய முனைபவர்கள் ஒப்புநோக்கும் வகையில், அதுபற்றிப் பிற நாட்டார் கொண்டுள்ள கருத்துக்களையும் சுருங்கக்கூறி விளக்கியுள்ளார். மேலும் அது

பற்றி அறியவிரும்புவோர்க்கு ஆய்வாளர் காட்டியுள்ள கலைக்களஞ்சியங்களும் பிற நூல்களும் பெருமளவில் உதவக்கூடும், ''தமிழில் உள்ள 'ஓரை'யென்னும் சொல் கிரேக்க மொழியில் ஒலியில் மட்டு(மி)மன்றிப் பொருளிலும் ஒப்புமையுடையதாக Hora என வழங்கப்படுவது போலப் பழந்தமிழ் இலக்கியங்களில் ஊழைக் குறிக்க வழங்கிய 'முறை' என்னும் சொல் கிரேக்கர் குறிப்பிடும் 'மொய்ரை' என்னும் ஊழ்த் தெய்வத்துடன் தொடர்புடையது போலத் தோன்றுகிறது'' என்று கூறிய ஆய்வாளர், 'இத்தொடர்பு அறிஞர்தம் ஆய்விற்குரியது' என்று குறிப்பிட்டுள்ளார். எனினும் சிலவிடங்களில், தம் முடிவினைத் தெளிவுபடக் காட்டிமிருப்பது சிறப்பாகஉள்ளது. தொல்காப்பியர், வாழ்க்கையின் முதற்படியாகிய காதல் வாழ்க்கைக்கு ஊழ் காரணம் என்று குறிப்பிட்டதால், வாழ்க்கையின் மற்ற நிகழ்ச்சிகளுக்கும் ஊழ்தான் காரணம்என்னும் கருத்துடையவர் என்பதும், பழவினைப்பயன் ஊழ் என்னும் பழந்தமிழர் சிந்தனை தொல்காப்பியருக்கு உடன்பாடானதே என்பதும் தெளிவாகும். இது தொல்காப்பியரின் ஊழ் பற்றி ஆய்வாளர்தம் முடிபாகும்.

ஊழ் பற்றிய சிந்தனை எத்தகையதாயினும், அதனை நம்பும் மனிதர்களுக்கு அது எவ்வாறு உதவும் என்பதனை ஆய்வாளர் ''நன்மை வரும் போது தன் முயற்சியால்-உழைப்பினால் வந்தது என்று எண்ணி மகிழும் இயல்புடைய மனிதர், துன்பம் வரும் போது தமது வினையினால் வந்தது என்ற நினைவுஇல்லாமல் வருந்துவர். இது போன்ற சூழ்நிலையில் மனிதனுக்கு ஆறுதல் தந்து வாழ்வில் பற்றுடையவனாக்குவதற்குக் கண்ட அறிவார்ந்த காரணமே ஊழ் ஆகும்" என்று காட்டிமிருப்பது ஏற்புடையதாகும்.

சிலப்பதிகாரம் மணிமேகலைஆகிய இருசெந்தமிழ்க்காப்பியங்களின், கதைக் கருக்கள் தமிழ் மண்ணிற்கே உரியனவாயினும், தமிழல்லாத வடபுலத்தில் உருவாகிய கருத்துக் கருவாம். ஊழ்க் கோட்பாட்டினை அக்காப்பியங்கள் கவினுற விளக்கியுள்ள பாங்கினை ஆய்வாளர் நன்கு புலப்படுத்தியுள்ளார். ஊழின் செயற்பாட்டிற்கு இறைவனே காரணனாவான் என்னும் மெய்யுணர்வுக் கோட்பாடுடைய சைவர்களும் வைணவர்களும் மிக்கிருந்த தமிழகத்தில், ஊழின் செயற்பாட்டிற்கு இறைவன் தேவையில்லை என்னும் மெய்யுணர்வுக் கோட்பாடுடைய சமணம் புத்தம் ஆகிய சமயங்களின் ஊழ்க் கோட்பாடு செல்லுபடியாகும் வண்ணம் தங்கள் காப்பியங்களைப் படைத்த பெருமை இளங்கோவையும்

சாத்தனாரையும் சாரும். அதனை இரு காப்பிய நிகழ்ச்சிகளையும் விளக்கு முகத்தான் ஆய்வாளர் காட்டியுள்ளார். ஊழே கருத்தா வாகிச் செய்தவனைப் பற்றிப் பயன் நல்கும் என்னும் உண்மையே ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்பதன் கருத்தாகும்.

''....'ஊழ்' உழைப்புக்கு அடிப்படையாக அமைவது என்பதைக் காட்டி மனித சமுதாயத்தின் ஆக்கத்துடன் கூடிய நல் வாழ்விற்கு-உயர்விற்குத்-துணை செய்வதாக அமையும் என்பது நூலாசிரியர் எண்ணமாகும்'' என்று ஆய்வாளர் முடித்துள்ள இந் நூல் தமிழில் இலக்கிய, தத்துவ ஆய்வுகள் மேற்கொள்ளும் மாணவர்கட்கு நன்கு பயன்படும் என்பதில் ஐயமின்று. நூலாசிரியர் முனைவர் பெ. சுப்பிரமணியன் அவர்கட்கு எம் பாராட்டும் வாழ்த்தும் உரியவாகுக.

தஞ்சை-7 அன்பன்
28-7-99 (ஒ-ம்) **அ. மா. பரிமணம்**



நன்றியுரை

தமிழகக் கல்வி வளர்ச்சியில் சிறப்பிடம் பெற்றுள்ள பூண்டி இராவ்பகதூர் அ. வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் தன்னாட்சிக் கல்லூரி வாண்டையார் குடும்பத்தின் கொடைவிளக்கு. எளிய மக்களின் எய்ப்பினில் வைப்பாக அவர்களது அறியாமை அகற்றும் அறிவாலயம். இக்கல்லூரியை உயர் குறிக்கோளுடன் நிறுவிய தெய்வத்திரு அ. வீரையா வாண்டையார், அவர்தம் இளவல் தெய்வத்திரு அ. கிருட்டிணசாமி வாண்டையார் ஆகியோரையும், கல்லூரியின் முன்னாள் ஆட்சிக்குழுத் தலைவர் தெய்வத்திரு வீ. அப்பாவு வாண்டையார் அவர்களையும் என்றும் எண்ணி வழிபடுகின்றேன்.

நான் பயிலும் காலத்திலிருந்தே எளியனிடம் அன்பும் அருளும் கொண்டு, பணியாற்றும் வாய்ப்பினை - வாழ்வினை எனக்களித்த ஆட்சிக்குழுச் செயலர் - தாளாளர், 'கல்விக் காவலர்' 'அறநெறியண்ணல்' திருப்பெருந்திரு கி. துளசிஐயாவாண்டையார், அவர்கள் இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிச் சிறப்புச் சேர்த்துள்ளார்கள். ஐயா அவர்களின் பெருங்கருணைக்கு என்றும் நன்றிக் கடப்பாடுடையேன்.

கல்லூரி ஆட்சிக்குழுப் பெருமக்களுக்கும், கல்லூரி முதல்வர் முனைவர் சிவ. இராமன் அவர்களுக்கும், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் பி. கண்ணையன் அவர்களுக்கும் என் நன்றி என்றும் உரியது.

ஊழ் பற்றிய ஆய்வுச் சிந்தனையை என் நெஞ்சப்புலத்தில் விதைத்த தமிழ்மாமுனிவர் அருள்நெறித்தந்தை தெய்வத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களை நினைந்து நினைந்து வழிபடுகின்றேன். அவர்களுக்குப்பின் குன்றக்குடித் திருவண்ணாமலை யாதீன கர்த்தராக விளங்கும் திருவருள்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கள் அருள் நெறியன்பர்களிடம் மாறாத அன்பு பூண்டவர்கள். இந்நூல் முழுமையும் படித்து அருளுரை வழங்கி உள்ளமைக்காக அவர்களுக்கு என்றும் நன்றிக் கடப்பாடுடையேன்.

என் தந்தையினும் மேலாக என் அறிவு வளர்ச்சியில் நாட்டம் கொண்டவரும் எனக்கு ஆய்வு வழிகாட்டியாக அமைந்தவருமாகிய

என் பேராசிரியப் பெருந்தகை சிந்தனைச் செம்மல் முனைவர் ந. சஞ்சீவி அவர்கள் என் ஆய்வு முடியும் முன்னரே இறைவன் திருவடிப்பேறு எய்தினார்கள். அவர்களது திருவடிகட்கு இந்நூலைக் காணிக்கையாக்கியுள்ளேன். வாழ்நாளளவும் அவர்தம் அன்பின் பெருமை பேசுவதைத் தவிர வேறு என்ன கைம்மாறு செய்ய வல்லேன்?

பேராசிரியப் பெருந்தகை மறைந்தபின், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத் துறைத் தலைவராக விளங்கி, அப்பல்கலைக் கழகத்தின் இந்நாள் மாண்புறு துணைவேந்தராக விளங்கும் பேராசிரியப் பெருந்தகை முனைவர் பொன். கோதண்டராமன் (பொற்கோ) அவர்கள் எனக்கு நெறியாளராக அமைந்து ஆய்வு நிறைவு பெற உதவி செய்தார்கள். அவர்களுக்கு என்றும் நன்றியுடையேன்.

மூதறிஞர் குழுவில் இடம் பெற்று என் ஆய்வுக்கு அரிய சிந்தனைகளை வழங்கிய உலகத் தமிழராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குநர் பேரறிஞர் முனைவர் க. த. திருநாவுக்கரசு அவர்களுக்கும், சென்னைப் பல்கலைக்கழகத் தத்துவ மைய முன்னாள் இயக்குநர் முனைவர் ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

பூண்டிக் கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவரும் என்னிடம் பேரன்பு பூண்டவருமாகிய மூத்த தமிழ்ப் பேரறிஞர் ‘செந்தமிழ்ச் செம்மல்’ ‘பெரும்புலவர்’ டாக்டர் அ. மா. பரிமணம் அவர்கள் இந்நூல் முழுவதையும் படித்து உரிய திருத்தங்களையும் கூறி, அரிய அணிந்துரை வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியுடையேன்.

நான் பூண்டியில் பயிலும் காலத்திலேயே என் சிந்தையைக் கவர்ந்த நல்லாசிரியரும், ஆய்வியல் பேரறிஞரும், சங்கத்தமிழ்ச் சதுரரும், சங்கநூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவல்லுநரும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் செந்தமிழ்க் கல்லூரி முன்னாள் முதல்வருமாகிய முனைவர் அ. தட்சிணாமூர்த்தி அவர்கள் இந்த ஆய்வு முழுமை பெறப் பேருதவி செய்தார்கள். காலத்தால் அவர்கள் செய்த உதவிக்கு என்றும் நன்றிக் கடப்பாடுடையேன்.

பூண்டிக் கல்லூரியில் நான் மாணவனாக இருந்த காலத்தி லிருந்துஎன்னிடம் அன்புகாட்டிஅறிவூட்டிய தெய்வத்திருமுனைவர் வே. காத்தையன், தெய்வத்திரு பேராசிரியர் கி. கோதண்டபாணி, பேராசிரியர் செ. பொன்னுசாமி, முனைவர் க. இராமையன், முனைவர் கோ. இரா. கிருட்டிணமூர்த்தி, முனைவர்குரு. கோவிந்த ராசன், முனைவர் இரா. செயபால் ஆகிய பேராசிரியப் பெரு மக்கட்கும் ஏனைய தமிழ்த்துறைப் பேராசிரியப் பெருமக்களுக்கும் நன்றியுடையேன். முன்னாள் கல்லூரி முதல்வர் பேராசிரியர் மு. சு. கோவிந்தசாமி அவர்களுக்கும், முன்னாள் கல்லூரி முதல் வரும் என் வளர்ச்சியில் நாட்டம் கொண்ட நாவலருமாகிய பேராசிரியர் ந. மெய்ப்பொருள் அவர்களுக்கும் என்றும் நன்றியுடையேன்.

பச்சையப்பன் கல்லூரியில் நான் முதுகலை பயின்ற போழ்து எனக்கு அறிவூட்டிய பேராசிரியப் பெருந்தகை அ. மு. பரமசிவானந்தம் உள்ளிட்ட பேராசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் நன்றியுடையேன்.

ஆய்வு செய்யும் காலத்தில் குன்றக்குடித்திருமடத்திலிருந்து நூல்களைஅனுப்பி உதவிய என் உடன்பிறவாத் தமையனார் தவத்திரு அடிகளார் அவர்களின் தலைமை எழுத்தர் கவிஞர்கோ மரு.பரமகுரு அவர்களுக்கும், நூல்கள்உதவிய,எங்கள்தமிழ்த்துறை நண்பர் முனைவர் இரெ.குமரன் அவர்களுக்கும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத்துறைப் பேராசிரியர்கள் முனைவர் வீ. அரசு,முனைவர் கு. மோகனராசு ஆகியோருக்கும் பூண்டிக்கல்லூரி முன்னாள் ஆங்கிலப் பேராசிரியர் முனைவர் வீ. ஆர். அங்கப்பன் அவர்களுக்கும், தஞ்சை சரசுவதிமகால் நூலக அன்பர்களுக்கும் ஆய்வேட்டினை உருள் தட்டச்சு செய்து கொடுத்த திரு.முருக. நாகராசன்(நாகு) அவர்களுக்கும் என் நன்றி என்றும் உரியது.

தமிழக அரசின் தமிழ்வளர்ச்சித்துறை நல்லநூல் வெளியீட்டுத் திட்டத்தின்வழி இந்நூல் வெளியிட நிதியுதவி வழங்கியமைக்காகத் தமிழ்வளர்ச்சித்துறைக்கும் அதன் இயக்குநர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கும் என்றும் நன்றி உடையேன்.

இந்நூலை வெளியிடுமாறு காணும் போதெல்லாம் ஊக்கப்படுத்தியவரும் தமிழுக்கும் தமிழர்களுக்கும் தளராத் தொண்டாற்றுபவருமாகிய நாவலர் ந மு. வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் பி. விருத்தாசலம் அவர்கட்கும், எளியேனிடம் அளவற்ற அன்பினைப்பொழியும் தஞ்சை அகத்தியர் சன்மார்க்க குருகுல அன்பர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நூலைச் சிறப்புடன் அச்சிட்டுக்கொடுத்த பாரதி அச்சகத்தாருக்கும், மேலட்டைஓவியம்வரைந்து கொடுத்த எங்கள் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் நண்பர் நா. சிவாஜி கபிலன் அவர்களுக்கும், மேலட்டை அச்சிட்டுக் கொடுத்த வி. டி. ஜே. ஆப்செட் அச்சகத்தார்க்கும் என் நன்றி என்றும் உரியது.

பழந்தமிழ் நூல்களில் ஊழ் பற்றிய முதல் ஆய்வு நூலான இதனை ஏற்று, நூலில் காணும் குறை பொறுத்து, குணம் போற்றும் தமிழ்ச் சான்றோர்களுக்கும் ஆய்வு மாணவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்து அன்னைத் தமிழை வாழ்த்தி வணங்குகின்றேன்.

வாழ்க தமிழ் !

தஞ்சை-6 அன்பன்,

9—9—99 **பெ. சுப்பிரமணியன்**



திருச்சிற்றம்பலம்

1. திருநாவுக்கரசர் தேவாரம்-திருக்குறுந்தொகை (5ஆம் திருமுறை)

1. கோயில் :

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ.

2. திருவண்ணாமலை :

தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப் போம்நம துள்ள வினைகளே.

3 திருக்கச்சி ஏகம்பம் :

பண்டு செய்த பழவினை யின்பயன்
கண்டுங் கண்டுங் களித்திகாண் நெஞ்சமே
வண்டு லாமலர்ச் செஞ்சடை ஏகம்பன்
தொண்ட னாய்த்திரி யாய்துயர் தீரவே.

2 மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் :

யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந் துறுமாறே.

3. அருட்பிரகாச வள்ளலார் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல் :

''எம்மையும் என்னைவிட் டிறையும் பிரியா
தம்மை அப்பனுமாம் அருட்பெருஞ் ஜோதி !
பிரிவுற் றறியாப் பெரும்பொரு ளாய்என்
அறிவுக்கு அறிவாம் அருட்பெருஞ் ஜோதி !''

திருச்சிற்றம்பலம்.

பொருளடக்கம்

குறுக்க விளக்கம்

தொல்-சொல்	:	தொல்காப்பியம் சொல்லதிகாரம்
தொல்-பொருள்	:	தொல்காப்பியம் பொருளதிகாரம்
நற்	:	நற்றிணை
குறுந்	:	குறுந்தொகை
ஐங்	:	ஐங்குறுநூறு
பரி	:	பரிபாடல்
கலி	:	கலித்தொகை
அகம்	:	அகநானூறு
புறம்	:	புறநானூறு
திருமுருகு	:	திருமுருகாற்றுப்படை
மதுரை	:	மதுரைக் காஞ்சி
பட்	:	பட்டினப்பாலை
திருக்	:	திருக்குறள்
சிலப்	:	சிலப்பதிகாரம்
மணி	:	மணிமேகலை
நாலடி	:	நாலடியார்
நான்மணி	:	நான்மணிக்கடிகை
பழ. நா. பழமொழி	:	பழமொழி நானூறு
தி. மா. நூ.	:	திணைமாலை நூற்றைம்பது
ப	:	பக்கம்
பக்	:	பக்கங்கள்
மு. நூ.	:	முற்கூறிய நூல்
மு. ப	:	முன் பக்கம்
கழகம்	:	திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை
செ. ப. செ. ப. க	:	சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-5
தொகு	:	தொகுப்பாசிரியர்
பதி	:	பதிப்பாசிரியர்
மொ	:	மொழி பெயர்ப்பாசிரியர்
Vol	:	Volume
Ibid	:	Ibidem
P	:	Page
PP	:	Pages

1. முன்னுரை

உலகம் போற்றும் வரலாற்றுத் தொன்மையும், நாகரிகச் சிறப்பும், பண்பாட்டுச் செம்மையுமுடைய பழைய இனங்களின் வரிசையில் தமிழினமும் ஒன்றாகக் கருதப்படுவதற்குத் துணையாக இருப்பவை பழந்தமிழ் நூல்களாகும். தொல்காப்பியம், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாகிய அற நூல்கள் ஆகியவை பழந்தமிழ் நூல்களாகச் சொல்லப்படுவது மரபு. இவற்றுள் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவை சங்க நூல்கள் என்றும் சிலம்பு, மேகலை, திருக்குறள் உள்ளிட்ட கீழ்க்கணக்கு நூல்கள் சங்கம் மருவிய கால நூல்கள் என்றும் தமிழிலக்கிய வரலாற்றில் கூறப்படுவது மரபு. இவை சமய இயக்கங்கள் - இலக்கியங்கள் பெருமளவில் தோன்றுவதற்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்தவையாதலாலும், இலக்கியங்கள் மட்டும் கொள்ளாது தொல்காப்பிய இலக்கணம் போன்றவை ஆய்வில் கொள்ளப்பட்டதால் 'பழந்தமிழ் நூல்கள்' என்ற வரையறை செய்து கொள்ளப்பெற்றது. சென்னைப் பல்கலைக் கழகம் இவ்வமைப்பில் பண்டைய இலக்கியங்கள் (Ancient Literature) என்ற பாடத் திட்டத்தினை இளங்கலை, முதுகலை மாணவர்களுக்குப் பல்லாண்டுகளுக்கு முன்பே வகுத்திருந்ததும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆய்வுப் பொருளும் நோக்கமும் :

மக்களுடைய அறிவார்ந்த சிந்தனைகள், உயர்ந்த கருத்துக்கள் ஆகியவையே அவர்களுடைய வாழ்க்கையின் உயர்வுக்கு அடிப்படையாக அமைகின்றன. ஓரினம் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்குவதற்குக் காரணம் அவ்வினத்தின் சிந்தனைச் செழுமையேயாகும். விலங்கு களினின்றும் மனிதனை வேறுபடுத்தும் எண்ண வளர்ச்சியும் அறிவாற்றலும் மனித சமுதாயம் விலங்கு வாழ்க்கையை விலக்கி உயரிய மானிட வாழ்க்கையில் தோய்ந்து இதனை விடவும் மேலான தெய்வ வாழ்வுக்குக்-கருத்துலக வாழ்வுக்கு அழைத்துச் செல்கின்றன. அக்கருத்துலக வாழ்வு பற்றிய சிந்தனை வேறு பாடுகளிருப்பினும், இம்மையில் செம்மை வாழ்வு வாழவேண்டும் என்ற உயர்ந்த நோக்கின் அடிப்படையிலேயே உலகில் பல்வேறு இனங்களிலும் தோன்றிய அறிவுத்துறையில் வல்ல சான்றோர் பயனுடைய பல கருத்துக்களைக் கண்டு அவை மக்கள்

வாழ்க்கையுடன் இயைந்த உண்மையைக் காட்டினர். அவ்வாறு மனித சமுதாயம் கண்ட உலகப் பொதுமைக் கோட்பாடுகளாகிய கடவுள், அறம், மறுபிறப்பு, துறக்கம், நரகம் போன்ற கோட்பாடுகளுள் ஊழ்க் கோட்பாடும் ஒன்றாகும். இவை யாவும் சமயத் தொடர்புடைய அறக் கோட்பாடுகளாகக் கருதப்படுவனவாம். இக்கோட்பாடுகளில் ஒன்றான ஊழ்க் கோட்பாடு பழந்தமிழரின் நம்பிக்கையிலும் அறிவார்ந்த கருத்து நிலையிலும் ஆழமாகப் பதிந்திருந்த உண்மையினைப் பழந்தமிழ் நூல்கள் காட்டுகின்றன.

கருத்து வேறுபாட்டிற்குப் பெரிதும் இடமளிக்கக்கூடிய இக்கோட்பாடு மெய்யியல் சிந்தனையாளர்களாலும், சமயச் சான்றோராலும், தமிழகத்தில் சமயங்கள் செல்வாக்குப் பெறத் தொடங்கிய காலத்தில் கோட்பாட்டு உருப்பெற்று மெய்யறிவு விளக்கங்களால் (தத்துவ ஆராய்ச்சி) ஆய்வு செய்யப் பெற்றது. இக்கோட்பாடு கருத்துலகச் செல்வாக்கு மட்டுமன்றி மக்கள் வாழ்க்கையிலும், கல்லாதவர்களால் கூட நம்பிக்கையுடன் கருதப்படுவது. பழந்தமிழ் நூல்களில் ஊழ்க்கருத்து, கோட்பாட்டு வடிவில் மிகுதியாகக் கூறப்பெறவில்லையாயினும் இது பற்றிய எண்ணங்கள் மிகுதியாகவுள்ளன.

பழந்தமிழ் நூல்களைப் பற்றிய ஆய்வுகள் பல்வேறு கோணங்களில் செய்யப் பெற்றிருப்பினும் ஊழ்க் கோட்பாடு பற்றிய முழுமையான ஆய்வு இதுகாறும் செய்யப்பெறவில்லை. பின் வந்த சமய நூல்களில் இக்கோட்பாடு விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகியவற்றில் ஊழ்பற்றி வந்துள்ள ஒரு சில நூல்கள், கட்டுரைகள், பிற நூல்களைப் பற்றிச் சான்றோர்கள் எழுதிய நூல்கள், கட்டுரைகளில் ஆங்காங்கே குறிக்கப்படுவது தவிர முழுமையாகப் பழந்தமிழ் நூல்களில் ஊழ் பற்றிய ஆய்வு இதுகாறும் செய்யப்பெறவில்லை. இவ்வாய்வு இவ்வெற்றிடத்தை நிறைவு செய்ய முயல்கின்றது.

ஆய்வு எல்லை :

தொல்காப்பியம் தொடங்கிப் பதினெண்கீழ்க்கணக்கு வரையுள்ள பழந்தமிழ் நூல்கள் ஆய்விற்கு எடுத்துகொள்ளப் பெறுகின்றன. தொல்காப்பியம், சங்கஇலக்கியங்கள்,

திருக்குறள், இரட்டைக் காப்பியங்கள், அறநூல்கள் ஆகியவற்றில் ஊழ் என்னும் சொல் பெற்ற இடம், ஊழ் என்னும் சொல்லின் படிநிலைவளர்ச்சி, இச்சொல் கோட்பாட்டுப் பொருள் வளர்ச்சி பெற்ற நிலை, ஊழ்க் கருத்தையுணர்த்தும் பிறசொற்கள், ஊழோடு உறவுடைய பிற கோட்பாடுகள், ஊழ்க் கோட்பாடு மக்களிடம் பெற்ற செல்வாக்கு, இக்கோட்பாட்டினால் மனித சமுதாயத்தில் ஏற்பட்ட விளைவுகள் ஆகியவை பற்றியதாக, இவ்வாய்வு மெய்யியல் சார்பினை மிகுதியாக மேற்கொள்ளாது இலக்கிய அடிப்படையையே மிகுதியாகக் கொண்டு செய்யப் பெறுகிறது.

ஆய்வு மூலம் :

இவ்வாய்வுக்குரிய முதன்மைச் சான்றாகத் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, அறநூல்கள் ஆகியவை கொள்ளப்பட்டன. பிற தமிழிலக்கியப் பாடல்களின் அடிக்குறிப்புக்களும் முதன்மைச் சான்றுகளாகவே கொள்ளப்பட்டன. பழந்தமிழ் நூல்களுக்கு உரையெழுதிய உரையாசிரியர் கருத்துக்கள், பிற்கால அறிஞர் எழுதிய திறனாய்வு நூல்கள், தமிழ், ஆங்கில, வடமொழி அகராதிகள், நிகண்டுகள், தமிழ், ஆங்கிலக் கலைக்களஞ்சியங்கள், ஆகியவை துணைச்சான்றுகளாகக் கொள்ளப்பட்டன.

ஆய்வுப் பொருள் சுருக்கம் :

முதலியல் முன்னுரையாக அமைந்துள்ளது, இரண்டா மியலில். ஊழ் பற்றிய சொல், பொருள்விளக்கங்கள், அகராதி, நிகண்டுகள் தரும் பொருள், தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள், இரட்டைக் காப்பியங்கள் அற நூல்கள் ஆகியவற்றில் இச்சொல் பெற்ற இடம், பொருள் வளர்ச்சி, கோட்பாட்டுப் பொருள் வளர்ச்சி நிலை, ஊழோடு உறவுடைய பிறகோட்பாடுகள் பற்றிய விளக்கம், இன்றைய நாளில் ஊழ் பற்றிய கருத்து ஆகியவை கூறப்பட்டுள்ளன.

மனித சமுதாய வரலாற்றில் ஊழ் பற்றிய எண்ணம், ஊழ்வலிக் கோட்பாடு, இக்கோட்பாடு பற்றிய தொன்மை நாகரிகச் சிறப்புடைய கிரேக்கர், ரோமர், சீனர், பாபிலோனியர், எகிப்தியர், ஆரியர் ஆகியோரிடம் ஊழ் பற்றி நிலவிய

எண்ணங்கள், அண்மைக்கால அயல்நாட்டுச் சிந்தனையாளரின் கருத்துக்கள், உலகச் சிந்தனையில் ஊழ்க் கருத்து பற்றிய ஒற்றுமை ஆகியவை மூன்றாம் இயலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நான்காம் இயலில் தொல்காப்பியத்தில் ஊழ்பெறும் இடம், பால்வரைதெய்வம், காதல் உறவுக்கு ஊழ் காரணம் என்னும் கருத்து, ஊழ் பற்றிய கருத்து வேறுபாடுகள், வினையும் ஊழும் ஆகியன ஆய்வு செய்யப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களில் ஊழ் பெறும் இடம், ஊழோடு உறவுடைய பிறகோட்பாடுகளாகிய அறம், இம்மை, மறுமை, துறக்கம், நரகம், ஊழ்பற்றி மக்கள் பேசும் இன்ப துன்பம், ஆற்றிக் கொள்ளல், வாழ்த்தல், பழித்தல், அறிவுறுத்தல், அறங்கூறல், தெய்வம் வேண்டல் ஆகிய பல்வேறு சூழல்கள், சங்கத்தமிழரிடம் ஊழ்க் கோட்பாட்டின் செல்வாக்கு ஆகிய விரிவான செய்திகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

திருக்குறள் கீழ்க்கணக்குத் தொகுப்பில் கூறப்பட்டாலும் இதன் சிறப்பும் கருத்து வளமும் கருதித் தனியியலாகவும், திருக்குறள் நீங்கலான ஏனைய அறநூல்கள் தனியியலாகவும் கொள்ளப்பட்டது. எனவே இவ்வைந்தாம் இயலில், திருக்குறளின் அறத்துப்பாலில் ஊழியல் அமைப்பு, அறம், மறுமை, துறக்கம் நரகம், வீடுபேறு ஆகியவை ஊழோடு கொண்ட உறவு, திருவள்ளுவரின் ஊழ்க் கோட்பாடு, செல்வம், அறிவு, உலகியற்கை, கருத்தியல், தவம், தலைவன் தலைவி உறவு, துன்பத்தின் வித்து, துய்ப்பு ஆகிய பொருள்களில் ஊழ்க் கோட்பாடு ஆய்வு செய்யப்படுவதுடன், ஊழின் ஆற்றல், இருவினையும் ஊழும், ஊழை வகுத்தான், ஊழும் ஆள்வினையும் பற்றிய கருத்துக்கள், திருவள்ளுவர் ஊழ்வழி உணர்த்தும் உண்மை ஆகியவை ஆராயப்பட்டுள்ளன.

ஆறாமியலில், சிலப்பதிகாரத்தின் முப்பெரும் உண்மைகளுள் ஒன்று ஊழ், காப்பியப் போக்கில் ஊழின் தோற்றம், வளர்ச்சி, முதிர்ச்சி, அறம், மறுபிறப்பு, துறக்கம், நரகம், வீடுபேறு, கனவு, நிமித்தம், புனித நீராடல், சாபம் ஆகிய ஊழோடு உறவுடைய கோட்பாடுகள், தற்கூற்றாகவும் கதைமாந்தர் கூற்றாகவும் இளங்கோவால் உணர்த்தப்படும் ஊழின் ஆற்றல், சமணத்தின் வினைக்கோட்பாடு, சிலம்பில் ஊழ் பற்றிய அறிஞர் கருத்துக்கள் ஆகிய செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

ஏழாமியலில், மணிமேகலையில் ஊழின் ஆட்சி, கதைத் தொடர்பும் ஊழும், ஆபுத்திரன் வரலாறு, ஆதிரையின் வரலாறு, காயசண்டிகையின் வரலாற்றுடன் ஊழின் தொடர்பு, ஊழ்வினை உருத்துவந்தூட்டுவது, வினையின் விளைவும் மணிமேகலையின் தெளிவும், பாசமும் ஊழும், முனிவர், அறவணர், பத்தினிக்கடவுள், சமயக்கணக்கர் ஆகியோர் உணர்த்தும் ஊழ், காப்பிய முடிவும் ஊழும், முற்பிறப்பு, மறுபிறப்பு ஆகிய ஊழுடன் தொடர்புடைய செய்திகள், பௌத்தத்தின் ஊழ்க் கோட்பாடு, மணிமேகலையில் ஊழ் பற்றிய அறிஞர் கருத்துக்கள் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

எட்டாமியலில், சமணச் சார்புடைய அற நூல்கள், பிற சமயச் சார்புடைய அற நூல்கள், நாலடியாரில் பழவினை நாலடியாரின் பிற அதிகாரங்களில் ஊழ், பழமொழி நானூற்றில் ஊழ், பழமொழியின் பிற அதிகாரங்களில் ஊழ், நான்மணிக்கடிகை, திரிகடுகம், ஏலாதி, திணைமாலைநூற்றைம்பது, இன்னிலை ஆகிய நூல்களில் ஊழ் பெறும் இடம், ஊழும் முயற்சியும் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

ஒன்பதாமியலில், ஊழ்க்கருத்து வளர்ச்சிநிலை, கோட்பாட்டு நிலையில் மீள்பார்வையாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. நியதிக் கொள்கை, வினைக்கொள்கை, ஊழ்க்கொள்கை, ஆகியவற்றின் விளக்கம், ஊழ்க்கோட்பாட்டின் அடிப்படை கருத்துக்கள், ஊழ்க் கருத்து உழைப்பு இரண்டின் உறவு, ஊழ்க்கோட்பாடு உணர்த்தும் உண்மை ஆகியவை ஆராயப்பட்டுள்ளன.

பத்தாமியல் ஆய்வேட்டின் முடிவுரையாக அமைந்துள்ளது.

2. 'ஊழ்' - ஒரு விளக்கம்

ஊழ் என்னும் சொல் தமிழிலக்கியங்களில் குறிப்பிடத்தக்க வகையில் இடம் பெற்றுள்ளது. இச்சொல் பல்வேறு காலங்களில் பல்வேறு பொருள்களில் ஆளப்பெற்ற சிறப்புடையது. இச் சொல்லின் தோற்றம், இதன் பொருள், காலப்போக்கில் இச் சொல்லின் பொருள் வளர்ச்சி ஆகியவை குறித்து ஆராய்வது ஊழ் பற்றிய ஆய்வுக்கு அடிப்படையாகும்.

ஊழ் - சொல்லும் பொருளும் :

ஊழ் என்னும் சொல் தொடக்கத்தில் உலகியல் நிலையில் இயற்கைப்பொருள்களை, நிகழ்வுகளைச் சுட்டும் பொருளில்தான் வழங்கியது. பெரும்பான்மையும் மலர்தல், முதிர்தல், தோன்றுதல், சிறத்தல் ஆகிய பொருள்களில் ஆட்சிபெற்றது. ஊழ், ஊழ்த்தல்,

ஊழி ஆகிய சொற்கள் சிந்தனைக்குரியன. மலரும் நிலையிலுள்ள மலரின் செவ்வியையும், கனியும் நிலையிலுள்ள பழத்தின் பருவத்தையும் ஊழ் என்னும் சொல் குறிப்பிடுவதைச் சங்க நூல்களில் காணமுடிகிறது. அரும்பாக இருக்கும் ஒன்று மலரும் செவ்வியுற்றபோது மலராக அலர்கிறது; காயாக இருக்கும் ஒன்று முற்றி முதிர்ந்து பழுக்கும் நிலையினை அடைந்து கனியாகிறது. அரும்பாகவோ, காயாகவோ இருக்கும் நிலையில் பொருள்களைத் துய்க்கவியலாது. முதிர்ந்த பருவம் வாய்த்தபோது, மலரும் கனியும் நுகர்தற்குரிய பயனுடையனவாக மாறுகின்றன. தொடக்க நிலையில் ஊழ் என்னும் சொல் இவ்வாறு இயற்கைப் பொருள் களின் பருவ நிலையை, துய்ப்பிற்குரிய செவ்வியைக் குறிப்பதாகத்தான் விளங்கியிருக்கிறது.

ஊழ் என்பதற்குப் பான்மை, தன்மை ஆகிய பொருள்களும் உள்ளன. ஒருபொருளின் இயல்பையுணர்த்தும் வகையில் இச்சொல் பான்மை, தன்மை, மரபு, முறை ஆகிய பொருள்களில் வழங்கி இருக்கலாம். ஒருபொருளின் உடனாகவே நுண்மையாக இருந்து உரிய பருவம் உறும்போது வெளிப்படும் ஆற்றலைக் குறிக்கும் சொல்லாக இதனைக் கொள்ளவும் இடமுண்டு. ஆலம் வித்து மிகச் சிறியது. அவ்வித்து முளைத்து ஆலமரமாக வளர்வதற்குரிய நுண்ணிய இயற்கையாற்றல் அவ்வித்திலேயே அடங்கியுள்ளது. வித்து மண்ணில் விழுந்து நீரையும் சூழலையும் துணையாகக் கொண்டு பெரிய மரமாக வளர்கிறது. அவ்வாறு வளர்வதற்குரிய தன்மை அவ்வித்துடனேயே இருந்தும் வித்து நிலையில் வெளிப் படுவதில்லை. முளைத்து வளர்ந்தபிறகே ஆலமரம் தோன்றுகிறது. ஆலம் விதை விதைத்தால் ஆல மரமாகவே வளர்கிறது; வேறு மரமாகத் தோன்றுவதில்லை. இதைப் போலவே உலகிலுள்ள மரஞ் செடிகொடிகள், விலங்குகள், பறவைகள், மனிதர்கள் ஆகிய உயிர்க் கூட்டங்கள் அனைத்திற்கும் அவ்வவற்றின் இயல்பும் பண்பும் மாறாதிருந்து அவை சிறப்படைய அவ்வவற்றின் உடனாகவே நுண்ணிய ஆற்றல் அமைந்துள்ளதை உணர முடிகிறது. உழை, உழைத்தல், பால் ஆகிய சொற்களும் ஊழ் என்னும் சொல்லுடன் நெருங்கிய உறவுடையன. உழை, பால் என்னும் சொற்கள் உடன், பக்கம், பான்மை என்னும் பொருளுடையன. ஆகவே ஒன்றின் பக்கத்தில், உடனாகவே இருந்து உரிய காலத்தில் வெளிப்படும் ஆற்றலை ஊழ் எனக் குறிப்பிட்டனர். வித்து நிலையிலிருந்து விளைவு நிலைக்கு வரும் பருவத்தினைக் குறித்த இச்சொல் காலப்போக்கில் விளைவிற்குரிய ஆற்றலுக்கு ஆகுபெயராய் மாறி ஊழாற்றலைக் குறித்துள்ளது. இயற்கைப் பொருள்களைக் குறித்து உலகியல் நிலையில் வழங்கிய

இச்சொல் மெய்ப்பொருட் கோட்பாட்டுள் ஒன்றான ஊழ்க் கோட்பாட்டினைக் குறிப்பிடுவதாக வளர்ந்தமையைக் காண முடிகிறது.

நிகண்டுகள் தரும் பொருள் :

தமிழில் அகராதிகள் தோன்றாத காலத்தில் சொற்களின் பொருள்களைத் தொகுத்து விளக்கியவை நிகண்டுகளேயாகும். நிகண்டுகளில் முதலில் தோன்றியது சேந்தன் திவாகரம் என்பதாகும். திவாகரம் பண்பு பற்றிய பெயர்த் தொகுதியுள் மாலை, பெற்றி, தன்மை, மரபு, பாழ், ஊழ், பான்மை, பண்பு, முறை, உழுவல், தகவு, தகை, இயல்பு, குணம், நுனித்தல், உரிமை, நிலைமை, நீர்மை, பரிசு, கிழமை, விதி, அதிகாரம் ஆகிய சொற்கள் ஒரு பொருளாகும் எனவும், 'ஊழ் என்கிளவி குணமுழுதாகும்' எனவும் குறிப்பிடுகிறது.[1]

பிங்கல நிகண்டு, பண்பிற் செயலின் பகுதிவகை என்ற வரிசையில், மேல் திவாகரம் குறித்த சொற்களைக் குறிப்பிட்டு அவையெல்லாம் குணப்பெயர்கள் என்று கூறுவதுடன்,[2]

''பழைமையும் மரபும் பகையும் ஊழெனல்''[3] என ஊழ் என்னும் சொல்லிற்குரிய பொருள்களையும் குறிப்பிடுகிறது. மேலும் முறைமை, பழமை ஆகிய சொற்களுக்குரிய பொருள்களைச் சொல்லுமிடத்திலும்,

முறைமையும் ஊழும் பாவமுந் தன்மமும்
முறையும் வாமும் வழியுமா மென்ப[4]
ஒல்லை புராண முதுமைமுறை யூழ்
தொல்லை முந்தை தொன்று டண்டு
தொன்மை முன்னை புராதனம் பழைமை[5]

எனக் குறிப்பிட்டிருப்பது கொண்டு இச்சொற்களெல்லாம் ஊழ் என்னும் சொல்லுடன் இயைபுடையன என்பதை அறியலாம்.

பால் என்னும் சொல், பகுத்தல், பக்கம், திசை, இயல்பு ஆகிய பொருள்களையுடையது எனத் திவாகரமும்,[6] பங்கு, இடம், பால், குணம், பக்கம், திக்கு, இயல்பு ஆகிய பொருள் களையுடையது எனப் பிங்கலமும்[7] கூறுகின்றன. செயல்பற்றிக் கூறும்போது,

கருமமும் செயலும் தருமமும் தொழிலும்
வினையும் ஒரு பொருள் விதியு மாகும்[8]

எனத் திவாகரமும்,

கருமமுந் தொழிலும் விதியும் பணியும்
வினையமுஞ் செயலும் வினையின் பெயரே[9]

எனப் பிங்கலமும் குறிப்பிடுகின்றன. மேலும் சூடாமணி நிகண்டு விதி, கருமம், கன்மம், வினை ஆகியபொருள்களையும்,[10] கயா தரநிகண்டு மேற்குறித்த பொருள்களுடன் வேறு பல பொருள் களையும் குறிப்பிடுகின்றன.[11]

ஆதலின் நிகண்டுகள் கூறும் பொருளடிப்படையில் காணும் போது, ஊழ் என்னும் சொல், தன்மை, இயல்பு, மரபு ஆகியன போன்ற பண்புப் பெயர்ச்சொல்லாக இருந்து, செயல் குறிக்கும் வினை, விதி, கருமம் ஆகிய பொருள்களை உணர்த்துவதாக மாறியிருக்க வேண்டுமென்று தெரிகிறது. மரபு, பழைமை, பால், முறை ஆகிய சொற்கள் எல்லா நிகண்டுகளிலும் ஊழ் என்பதனுடன் தொடர்புடையனவாகக் காட்டப்படுகின்றன. பழைமை என்ற பொருளிலிருந்துதான் ஊழ் என்ற சொல் பழவினை என்னும் பொருளைக் குறித்திருக்க வேண்டும்.

அகராதிகள் தரும் பொருள் :

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேரகராதி, ஊழ் என்னும் சொல்லுக்கு 1. பழமை, 2. பழவினை, 3. பழவினைப் பயன், 4. முறைமை, 5. குணம், 6. தடவை, 7. முதிர்வு, 8. முடிவு, 9. பகை, 10. மலர்ச்சி, 11. சூரியன் ஆகிய பதினொரு பொருள்களைக் கூறுகிறது.[12] இவ்வகராதி ஊழி[13] என்ற சொல்லுக்கும் விதி (fate) என்ற பொருளைக் குறிக்கிறது. முன்னரே வினைப் பயனுக்கேற்ப வரையறுக்கப்பட்ட வாழ்நாள் என்னும் பொருளில் இச்சொல் ஊழ் என்பதனுடன் தொடர் புடையதாகும். மேலும் ஊழ் என்ற சொல்லுக்கு நேரான கருமம்,[14] தெய்வம்,[15] பால்,[16] முறை,[17] வினை[18] ஆகிய சொற்களுக்கும் ஊழ், விதி, வினைப்பயன் என்னும் பொருளையே குறிப்பிடுவதும் கருதத்தக்கது.

கழகத் தமிழ் அகராதி ஊழ் என்ற சொல்லுக்கு உலக முடிவு, குணம், நியமம், பகை, பழவினை, பழைமை, பூர்வகன்மம், முடிவு, முறை, விதி, வெயில், முதிர், வாகு, பதனழி, மலர், நினை, முதிர்வு, முதிர்ச்சி, தடவை, மலர்ச்சி, கதிரவன்-ஆகிய பொருள் களைச் சுட்டுகிறது.[19]

பிற அகராதிகளும் ஊழ் என்ற சொல்லுக்கு உலக முடிவு, பழைமை, பழவினைப் பயன், குணம், பகை, முறைமை, முடிவு, விதி ஆகிய பொருள்களையே காட்டுகின்றன.[20]

ஆங்கில அகராதிகள் ஊழ் என்ற சொல்லுக்கு நேரான சொற்களாக Fate, Destiny ஆகிய ஆங்கிலச் சொற்களையே காட்டுகின்றன. மெய்ப்பொருட் கோட்பாட்டுள் ஒன்றான வினைக்

கொள்கையை உணர்த்தும் ஊழ், விதி, வினைப்பயன்-ஆகிய எல்லாச் சொற்களும் மேற்கண்ட இரு ஆங்கிலச் சொற்களாலேயே குறிக்கப்படுகின்றன.

சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட ஆங்கிலத் தமிழகராதி, 'Fate' என்ற சொல்லுக்கு, ஊழாற்றல், விதி, நேர்வு நிகழ்வுகளனைத்தின் எல்லையில் வகுப்பமைவு, கிரேக்க ஊழணங்குகள் மூவருள் ஒருவர், விலக்கமுடியா நேர்வு, வகுத்த வகுப்பளவு, அமைத்த அமைப்பு, வரையறுக்கப்பட்ட கால எல்லை, கால இறுதி, வாழ்க்கை முடிவு, சாவு, அழிவு, இறுதி விளைவு, கேடுகாலம், நடக்க இருப்பது, நிகழ வேண்டியது-ஆகிய பொருள் களைக் குறிப்பிடுகின்றது.[21]

இவ்வகராதி 'Destiny' என்ற சொல்லுக்கு ஊழ், விதி, விலக்கமுடியா முடிவு, மாற்ற முடியா அமைவு, முன்பே வகுத் தமைக்கப்பட்ட நிகழ்ச்சிக் கோவை, நடந்தே தீரவேண்டிய வகுப்பமைவு, அமைவு நோக்கம், ஊழின் வகுப்பமைவுக்கூறு-ஆகிய பொருள்களைக் குறிப்பிடுகின்றது.[22]

அகராதிகள் அனைத்தும் ஊழ் என்பதற்கு நேராகப் பழைமை, பழவினை, பழவினைப்பயன், முறைமை, முதிர்வு, முடிவு-ஆகிய சொற்களைக் காட்டுவது சிந்தித்தற்குரியது.

தொல்காப்பியத்தில் ஊழ் :

தொல்காப்பியத்தில் ஊழ் எனுஞ்சொல் பழவினைப் பொருளில் இடம்பெறவில்லை. இச்சொல் மெய்ப்பாட்டியலில்,

> கூழை விரித்தல் காதொன்று களைதல்
> ஊழணி தைவரல் உடைபெயர்த் துடுத்தலொடு
> கெழீஇய நான்கே இரண்டென மொழிப[23]

என்னும் நூற்பாவில் மட்டுமே ஆளப்பெற்றுள்ளது. மெய்ப்பாடுகள் பலவற்றுள் ஊழணி தைவரல் என்பதும் ஒன்று. ஊழணி தைவரல் என்பதற்கு இளம்பூரணர்,

> முறைமுறையாக அணிந்த அணியைத் தைவருதல்[24]

என உரை கூறினார்.

> நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்,
> ஊழணி என்பது, கைம்மையரல்லாக் குலமகளிர் களையாது அணியும் வளை போல்வனவற்றைக் குறிக்கும். இன்றியமையாது இவை குடிப்பெண்டிர் கொண்டணிதல் முறையாதலின், ஊழணியென உரைக்கப் பட்டது.[25]

என்று விளக்கம் கூறினார். இந்நூற்பாவின் இறுதியடிக்குக் 'கெழீஇய நான்கே' என்று பாடங்கொண்டு 'முறைமையுடைய நான்கும்' என்று இளம்பூரணர் உரையெழுதியுள்ளார். நாவலர் பாரதியார் 'ஊழின் நான்கே' என்று பாடங்கொண்டு, 'முறையே இந்நான்கும் என்று உரைவிளக்கம் தந்துள்ளார். இருவரும் பாட வேறுபாடு கொண்டாலும் பொருள் வேறுபாடு கொள்ளவில்லையென்பது கருதத்தக்கது.

ஊழணி என்பது முறையாக அணியும் அணி என்றும் தைவரல் என்பது வருடுதல் அல்லது தடவுதல் என்றும் பொருள்படும். நீக்கவியலாத வளை முதலான மங்கல அணிகளைக் குடிப்பெண்டிர் அணிவது முறையாதலின் அத்தகைய அணிகளைத் தைவருதல் ஒரு மெய்ப்பாடெனத் தொல்காப்பியரால் கூறப்பட்டது.

இவ்வாறு ஊழ் என்னும் சொல் முறை, மரபு ஆகிய உலகியற் பொருளில் ஆளப்பட்டிருப்பினும் முறை[26] என்னும் சொல்லே சங்க இலக்கியங்களில் ஊழ்க்கருத்தினைக் குறிப்பதால், தொல் காப்பியர் காலத்தில் ஊழ் பற்றிய சிந்தனை இருந்தது என்பதும், பால்வரை தெய்வம்,[27] பால்,[28] பாலதுஆணை,[29] வினை[30] ஆகிய சொற்கள் ஊழ்க்கருத்தினை வலியுறுத்துவனவாகத் தொல்காப்பியரால் ஆளப்பட்டுள்ளன என்பதும் அறியத்தக்கன. ஊழோடு உறவுடைய கருமம்,[31] தெய்வம்,[32] முறை,[33] விதி,[34] ஆகிய சொற்கள் தொல்காப்பியத்தில் உலகியற் பொருளில் ஆளப்பட்டிருக்கின்றனவேயொழிய ஊழ்ப்பொருளில் இடம் பெறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

சங்க இலக்கியங்களில் 'ஊழ்' :

இச்சொல் சங்க இலக்கியங்களில் மிகுதியாக இடம் பெற்றிருப்பினும், ஊழ்க்கோட்பாட்டினையுணர்த்தும் நிலையில் அருகியே ஆட்சி பெற்றுள்ளது. மலர்தல்,[35] முதிர்தல்,[36] கனிதல்,[37] உதிர்தல்,[38] முறை[39] ஆகிய பொருள்களில் ஆட்சிபெற்றுள்ளது. பெரும்பான்மையான இடங்களில் இச்சொல் முதிர்தல், மலர்தல், முறை, ஆகிய பொருள்களிலேயே சங்க இலக்கியங்களில் ஆளப்பெற்றுள்ளது. 'ஊழுறுபூ',[40] 'ஊழுறு தீங்கனி'[41] என இச்சொல்லாட்சி வருமிடங்களைக் காணலாம். ஊழ்த்தல்[42] என்ற சொல் மலர்தல், முதிர்தல், பழுத்தல், தோன்றுதல் ஆகிய பொருள்களிலேயே ஆளப்பெற்றுள்ளது.

ஐங்குறுநூற்றில், ''பல்லூழ் நினைப்பினும் நல்லென் ஊழ''[43] எனத் தொடங்கும் பாடல், பலமுறை ஆராயினும், மகளிர் கணவர்க்கே உரியரென்னும் நன்முறையே பெறப்படுதலின்

தலைவன் தலைவி இருவரும் உடன்போக்கில் சென்றது அறிவுடன்பட்டதே என்று தாய் இரங்கிக் கூறியதாக அமைந்த தாகும். உரையாசிரியர் 'நல்லென் ஊழ' என்பதற்கு நல்லூழ் எனக்கொண்டு இவ்வூழ் இருவருக்கும் ஒத்ததாகலின் உடன் போக்கில் செல்லத் துணையாயிற்று என்று கூறும் விளக்கம் சிந்தனைக்குரியது. உரையாசிரியர் கருத்தினடிப்படையில் காணும் போது, எட்டுத்தொகை நூல்களிலேயே இவ்வோரிடத்தில் மட்டுமே ஊழ் என்னும் சொல்ஊழ்க் கருத்தினைக் குறிப்பிடு வதகாகக் கருதமுடிகிறது.

பட்டினப்பாலை, 'உருகெழுதாயம் ஊழின் எய்தி'44 என்னும் அடியினால், கரிகாற் பெருவளத்தான் தன் அரச உரிமையை ஊழினால் பெற்றான் எனக் குறிப்பிடுகிறது. தமிழ் நாட்டு அரசியல் வரலாற்றில் மன்னனுக்குப்பின் அவனது மகனே அரசனாகும் முறை இருந்தமையால் ஊழ் என்பது அரசியல் முறையினைக் குறிப்பதாகக் கொள்வதும் பொருத்தமாகத் தோன்றுகிறது. முன்னோரால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் முறை, பழக்க வழக்கங்கள், மரபுகள் ஆகியவை காலப்போக்கில் விதி, சட்டம் என்பதாகக் கொண்டு இவற்றை ஊழ் எனக்கூறினர் எனக் கருதலாம். ஆயினும் ஒருவன் ஒருமன்னனுக்கு மகனாகப் பிறப்பதற்கும் அரசுரிமையைப் பெறுவதற்கும் ஊழே காரணம் என்று பழந்தமிழர் நம்பினர் எனவும் கருத இடமுண்டு. பால், முறை, வினை முதலான ஏனைய சொற்கள் சங்க நூல்களில் ஊழ்க் கோட்பாடு பற்றிய சிந்தனைகளை உணர்த்துகின்றன. ஆதலின் சங்க இலக்கியங்களில் மேற்காட்டிய இரண்டிடங்களில் ஊழ் பற்றிய சிந்தனை ஊழ் எனும் சொல்லின்வழி உணர்த்தப்பட்ட தாகக் கொள்ளலாம்.

திருக்குறளில் ஊழ் :

தமிழரின் ஊழ் பற்றிய சிந்தனை வளர்ச்சி வரலாற்றில் திருக்குறள் குறிப்பிடத்தக்க இடம் பெறுகின்றது. 'ஊழ்' என்னும் சொல் சங்க இலக்கியத்திற்போலவே பிறபொருளிலும் ஆளப்படும் நிலை திருக்குறளில் உண்டு.45 எனினும் இன்று நாம் கருதும் மெய்ப்பொருளியற் கோட்பாட்டுப் பொருளைத் தெளிவாக விளக்கும் முதல்நூல் திருக்குறளாகவே தெரிகின்றது. அறத்துப் பாலின் இறுதியில் ஊழ் பற்றிய அதிகாரம் ஒன்றை அமைத்தார் திருவள்ளுவர். அவ்வதிகாரம், ஊழ் என்பது என்னவென்று வரையறுக்கவில்லையெனினும் திருவள்ளுவர் காலத்தில் ஊழ்பற்றி

நிலவிய கருத்தினைத் தெளிவாக விளக்குவதாக அமைகிறது. ஊழிற்கெனத் தனியதிகாரம் வகுத்ததோடமையாது, அதனுடன் தொடர்புடைய நல்வினை, தீவினை, துறக்கம், நரகம் முதலான பலவற்றையும் பற்றிப் பரவலாகப் பேசியுள்ளார்.

வினைக்கோட்பாட்டினை வலியுறுத்தும் சமயங்களும் தத்துவ நெறிகளும் வினைக்குரிய விளைவினையும் ஏற்றுக்கொள்கின்றன. மனிதனின் செயல், ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு விளைவுண்டு என்னும் அடிப்படைக் கருத்து எல்லாருக்கும் உடன்பாடானதாகும். விதை விதைத்தால் விளைந்த பின் பயனைப் பெறுவதுபோல, வினை விதைத்தால் அவ்வினையின் பயனையடைய வேண்டு மென்பது கருத்து. ஆதலின் சங்க இலக்கியங்களில் மிகுதியாக உலகியற் பொருளிலேயே வழங்கிய ஊழ் என்னும் சொல் திருக்குறளில் வினைப்பயன் என்னும் பொருளில் பழவினைப் பயனைக் குறிப்பதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

> ஊழதிகாரத்தில் 'ஊழ்' என்பதற்குப் பரிமேலழகர்,
> அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே
> சென்றடைதற் கேதுவாகிய நியதி

எனக்கூறிய விளக்கமும்,

'ஊழாவது முன்பு செய்த வினை பின்பு விளையும் முறை' என மணக்குடவர் கூறிய விளக்கமும்,

> 'ஊழாவது போன சென்மத்தின் வினைப்பயனைச்
> சொல்லியது'

எனப் பருதியார் கூறிய விளக்கமும், பழவினைப்பயன் என்றே பொருள் தருகின்றன.46 அதிகார வைப்புமுறை பற்றிய விளக்கத்தினைக் கூறும் பரிமேலழகர்,

> ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி,
> விதியென்பன ஒருபொருட்கிளவி. இது பொருள்
> இன்பங்கள் இரண்டிற்கும் பொதுவாய் ஒன்றனுள்
> வைக்கப்படாமையானும் மேற்கூறிய அறத்தோடு
> இயைபுடைமையானும் அதனது இறுதிக்கண்
> வைக்கப்பட்டது.''47

எனக் கூறுகிறார். மணக்குடவர்,

> ஒருவன் செய்தவினை தனது பயனை வழுவின்றிப்
> பயத்தல் அறத்தினாகுமாதலான் இஃது அறத்தின்
> இறுதிக்கண் கூறப்பட்டது.48

என்கிறார். எனவே நல்வினை, தீவினை ஆகிய வினை விகற்பங் கட்கும் அவற்றின் பயன்களுக்கும் ஊழோடு அமைந்த நெருங்கிய உறவு தெளிவாகிறது.

திருவள்ளுவர், ஊழதிகாரத்தும் பிற அதிகாரத்தும் ஊழ் என்னும் சொல்லினால் மட்டுமின்றி கருமம், தெய்வம், பாக்கியம், பால், முறை, வரை, வினை ஆகிய சொற்களினாலும் ஊழ்க் கோட்பாட்டினை விளக்குகிறார்.

கருமம் என்ற சொல் திருக்குறளில் ஏழு இடங்களில் இடம் பெற்றுள்ளது.49 இச்சொல் 'கர்மந்' என்னும் வடமொழிச் சொல்லிலிருந்து வந்த சொல்லென்பர்.50 தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் தொழில், வினை, செயல் என்னும் பொருளில் இடம்பெற்ற இச்சொல் சங்க இலக்கியங்களில் ஆளப்பெற வில்லையென்பது குறிப்பிடத்தக்கது. ஒருவனது செயலுக்குரிய பயன்கள் (காரண காரிய விளைவுகள்) அவனையே சென்றடைவன என்னும் ஊழ்க்கொள்கைப்படி ஒவ்வொருவரது செயல்களும் (கருமங்களும்) தூய்மையுடையனவாகி, நல்வினைகளாகச் செய்யப்படவேண்டும் என்று வலியுறுத்திய திருவள்ளுவர் 'எண்ணித்துணிக கருமம்'51 என்றும் 'தவம் செய்வார் தம் கருமம் செய்வார்' என்றும் கூறுகிறார்.52

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்''53

என்னும் குறளின்கண், பிறப்பு, குணம், அறிவு ஆகியவற்றினால் மக்கள் எய்தும் பெருமைக்கும், மற்றைச் சிறுமைகளுக்கும் உரைகல் லாவது அவர்கள் தாம்தாம் செய்யும் செயல்களே என்று குறிப் பிடுகிறார். இக்கருத்து,

தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன54

என்னும் கணியன் பூங்குன்றனார் கருத்தையொட்டியதாகவும் ஊழ்க்கோட்பாட்டினை விளக்குவதாகவும் அமைந்துள்ளது.

தெய்வம் என்னும் சொல் ஆறு குறள்களில் இடம் பெற்றிருப்பினும் இவற்றில் இரண்டிடங்களில் தேவர் என்னும் பொருளிலும்,55 மூன்றிடங்களில் வழிபடுதெய்வம் என்னும் பொருளிலும்,56 ஆள்வினையுடைமை அதிகாரத்தில் மட்டும் 'தெய்வத்தான் ஆகாதெனினும்' என்னும் குறளில் ஊழ்ம் பொருளிலும்57 ஆளப்பெற்றுள்ளது.

பாக்கியம், அதிருஷ்டம் ஆகிய சொற்கள் நல்வினைப் பேற்றினையும் துர்ப்பாக்கியம், துரதிருஷ்டம் ஆகிய சொற்கள் தீவினைப்பேற்றினையும் குறிக்கும் வடமொழிச் சொற்கள் என்பர்.58 திருவள்ளுவர், அலர் அறிவுறுத்தல் அதிகாரத்தில்,

646

அலரெழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலரறியார் பாக்கியத் தால்[59]

என்ற குறளில், ஊழ்ப்பொருளைக் குறிப்பிடுகின்றார். பரிமேலழகர் 'பாக்கியம்' என்ற சொல்லுக்குத் தெய்வம் என்றே பொருள் தந்துள்ளார். தலைவியைப் பெறாததால் வருந்தும் தன் உயிர் போகாமல் நிற்கின்றது; அதனைத் தன் நல்வினைப் பயனால் தானே அறிவதல்லது அலர் கூறுகின்ற பலரும் அறியாமலிருக்கின்றனர் என்னும் தலைவன் கூற்றில் பாக்கியம் என்னும் சொல் நல்லூழ் என்னும் பொருளில் ஆளப்பெற்றுள்ளது.

பா என்னும் சொல் திருக்குறளில், நிலம், பகுதி, ஆன்படு பால், பான்மை[60] ஆகிய உலகியல் பொருள்களிலும் ஊழ்ப் பொருளிலும் ஆளப்பெற்றுள்ளது. தீப்பால், நோய்ப்பால்[61] என்று தீவினைகளைக் கூறியவர், ஒருவன் தன்னைத்தான் விரும்பி வாழ்பவனாயின், தீவினைப்பகுதியை எவ்வளவு சிறிதாயினும் பிறர்மாட்டுச் செய்யாமலிருத்தல் வேண்டுமென்று வலியுறுத்துகிறார்.[62] 'வினைபடுபால்'[63] என்னுமிடத்தில் செயலால் நன்மையானது, தீமையானது என்பதைக்கொள்ளவேண்டுமென்று கூறினார். இவ்வாறே பால் என்னும் சொல் பகுதியென்னும் பொருளுடையதாயிருந்து, நன்மை, தீமை ஆகிய பகுதியையும் குறிப்பிட்டுப் பின்னர் இருவகைஊழையும் உணர்த்தும் நிலையினை அடைந்ததை அறிய முடிகிறது. ஊழதிகாரத்தில்,

பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம[64]

என்னும் குறள் ஊழ்ப்பொருளில் ஆளப்பட்டுள்ளது.

முறை[65] என்னும் சொல் அறம், நீதி, நெறி, நடுவு நிலைமை, செங்கோன்மை, முறைமை ஆகிய பொருள்களில் திருவள்ளுவரால் ஆளப்பட்டுள்ளது. வரை[66] என்னும் சொல் எல்லை, அளவு ஆகிய பொருள்களில் ஆளப்பட்டுள்ளது. இச்சொற்கள் ஊழ்ப்பொருளில் திருவள்ளுவரால் ஆளப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

விதி, நியதி, வினை ஆகிய சொற்கள் பிற்காலத்தில் ஊழ்ப் பொருளை உணர்த்தத் தொடங்கின. விதி, நியதி ஆகிய சொற்கள் திருக்குறளில் ஆட்சிபெறவில்லை. பழந்தமிழ்நூல்களில் செயலைக் குறித்த வினை என்னும் சொல் மிகப் பிற்காலத்தில் செயலின் விளைவை, பயனையே குறிக்கும்நிலையினையடைந்தது. 'என்வினைப்பயன்' என்று சொல்வதற்கு மாறாக 'என்வினை' (என் தலைவிதி) என்றே மக்கள் கூறத் தொடங்கினர் எனலாம்.

வினை என்ற சொல்லுக்கு முன்னடையாக ஒருசொல் சேர்ந்து இருவினை,[67] நல்வினை,[68] தீவினை[69] அறவினை[70] எனவரும் சொற்கள் நன்மை, தீமை ஆகிய இருவகை ஊழையும் உணர்த்தும் சொற்களாக வளர்ந்த நிலையை அறியலாம்.

இரட்டைக் காப்பியங்களில் ஊழ் :

தமிழ்க்காப்பிய வளர்ச்சியில் முதற்காப்பியம் என்ற சிறப்பினைப்பெற்ற சிலப்பதிகாரமும், அக்காப்பியத்தின் தொடர்ந்த கதையினைக் கூறுவதாகிய மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கப்பெறுவன. ஊழ்க்கோட்பாட்டு வளர்ச்சி வரலாற்றில் திருக்குறளைப் போலவே சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சிறப்பிடம் பெறுகின்றன. சிலப்பதிகாரம் ஊழ் என்னும் சொல்லிற்குரிய தெளிவான விளக்கத்தினையும் வரையறையினையும் தருகிறது.

சிலப்பதிகாரக்காப்பியம் மூன்று குறிக்கோள்களை உலகிற்கு உணர்த்துதற்காக எழுதப்பெற்றது எனச் சிலப்பதிகாரத்தின் பதிகம் கூறுகின்றது. அம்மூன்றனுள் 'ஊழ்வினை உருத்து வந்தூட்டும்' என்பதும் ஒன்று. நாடகக் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் இன்றியமையாத பாத்திரமாக ஊழ் காட்டப் படுகிறது. பண்டைய இலக்கியங்களில் ஆளப்பெறுவது போல ஊழ் என்னும் சொல் சிலப்பதிகாரத்தில் உலகியற் பொருளில் ஒருசில இடங்களிலேயே ஆளப்படுகிறது.[71] இச்சொல் இக்காப்பியத்தில் தான் முதன் முதலில் வினை என்ற சொல்லுடன் சேர்ந்து பழவினை என்னும் பொருளில் 'ஊழ்வினை' என ஆளப்படுவது குறிப்பிடத் தக்கதாகும்.[72] பால்,[73] முறை[74] முதலான சொற்கள் இந் நூலில் பலவிடங்களில் வேறுபொருள்களில் ஆளப்பட்டிருப்பினும் ஊழ்க்கோட்பாட்டினை யுணர்த்துவனவாக ஆளப்பெறவில்லை. 'விதிமுறை' என்னும் சொல் கட்டுரைகாதையில் மதுராபதித் தெய்வம் கண்ணகிக்கு ஊழ்வினையின் தன்மையினைச் சொல்லித் தீயின் விடுதலையைக் கொண்டதாக,

> மதுரைமா தெய்வம் மாபத் தினிக்கு
> விதிமுறை சொல்லி அழல்வீடு கொண்டபின்[75]

எனக்கூறிய அடிகளில் ஊழ்க்கருத்தினையுணர்த்துவதாக ஆளப்பட்டுள்ளது.

ஊழ்வினை என்பது முன்வினை, முற்பிறப்பின் வினை என்னும் பொருளில் ஆளப்படுகிறது. சிலப்பதிகாரக் கதையின் தலைவன் தலைவியராகிய கோவலன், கண்ணகியரின் முற்பிறப்

பினனக்கூறி, முற்பிறவி வினையின் காரணமாக இப்பிறவியில் இருவரும் துன்பங்களை அடைவதாகக் காப்பியத்தை இளங்கோவடிகள் படைத்துள்ளார். காப்பியத்தின் திருப்பங்களிலும் இன்றியமையாத நிகழ்வுகளிலும் ஊழ்வினையையே அடிகள் காரணமாகக் காட்டுகின்றார். கோவலன் மாதவியைப் பிரிவதற்கு,

> யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்துருத்த
> தாகலின்[76]

என ஊழ்வினையைக் காரணமாகக் காட்டத் தொடங்கும் ஆசிரியர் காப்பியம் முழுவதும், 'ஊழ்வினை'[77] 'வினை',[78] 'பண்டைத் தொல்வினை',[79] 'வல்வினை',[80] 'தொல்லைவினை',[81] தீவினை,[82] வெவ்வினை,[83] கடுவினை,[84] நல்வினை,[85] உம்மைவினை,[86] செய்வினை,[87] பழவினை[88] என்னும் சொற்களால் காப்பியத்தில் ஊழின் ஆட்சியையும் ஆற்றலையும் விளக்குகிறார் வினையின் விளைவு,[89] வினைப்பயன்,[90] என்னும் சொற்களாலும் ஊழ்க்கோட்பாட்டினைக் குறிப்பிடும் இளங்கோவடிகள் பழந்தமிழரின் ஊழ்பற்றிய சிந்தனைக்குத் தெளிவான வடிவத்தினைச் சிலப்பதிகாரத்தின்வழி அளிக்கிறார் என்பது கருதத்தக்கது.

சிலப்பதிகாரத்தைப் போல மணிமேகலையின் கதை நிகழ்வுகளை ஊழ் நடத்திச்செல்லாவிடினும், கதைப்போக்கில் நிகழும் இன்றியமையாத நிகழ்வுகளுக்குக் காரணமாக ஊழைக் காட்டுகிறார் சாத்தனார். புத்த சமயநெறிக்குரிய உண்மைகளை இந்நூலில் பலவிடங்களில் வற்புறுத்தும் ஆசிரியர் ஏனைய சமயங்களின் உண்மைகளையும் முறைப்படக் கூறுகிறார். 'ஊழ்' என்னும் சொல் இந்நூலில் முந்தைய இலக்கியங்களில் ஆளப் பட்டிருப்பதுபோல, உலகியற்பொருளில் சிலஇடங்களிலேயேஆளப் படுகிறது. சிலப்பதிகாரத்தில் ஊழ் என்பதுடன் வினை என்னும் சொல்லும் சேர்ந்து 'ஊழ்வினை'[91] எனக்கோட்பாட்டுப் பொருளையுணர்த்துவது போல மணிமேகலையிலும் ஆளப்படு கிறது. ஊழ் என்னும் சொல்லே தனித்து நின்று,

> முன்னுள ஊழே பின்னுமுறு விப்பது[92]

என ஊழ்க்கோட்பாட்டினை வலியுறுத்துவதும் அறியத்தக்கது. சங்கநூல்களில் ஊழ்க்கோட்பாட்டுப்பொருளில் ஆளப்பெற்ற பால், முறை ஆகிய சொற்கள் இந்நூலில் கோட்பாட்டுப்பொருளில் ஆளப்பெறவில்லையென்பதும், இச்சொற்கள் உலகியற் பொருளிலேயே ஆளப்படுவதும் அறியத்தக்கதாகும். பல்வேறு சமயங்களின் பலவகைத் தத்துவ உண்மைகளைக் கூறினும் ஊழ் வினைக் கோட்பாட்டினையும் சாத்தனார் திறம்படக் கூறுகிறார்.

காப்பியத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளிலும், ஊழ்க்கோட்பாட்டினை வலியுறுத்தும் இடங்களிலெல்லாம் வினை,93 பழவினை,94 பழ வினைப்பயன்,95 செய்வினை,96 தொடர்வினை,97 வல் வினை,98 வெவ்வினை,99 அருவினை,100 நல்வினை,101 தீவினை,102 இருவினை103 ஆகிய சொற்களைக் கையாண் டுள்ளார். தொல்காப்பியத்திலும் பிறநூல்களிலும் உலகியற் பொருளில் ஆளப்படும் 'கருமம்' என்னும் சொல், 'கருமத் தொகுதி',104 'கருமஈட்டம்''105 'கன்மக் கூட்டம்',106 என ஊழ்க்கோட்பாட்டினையுணர்த்துவனவாக மணிமேகலையில் ஆளப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

அறநூல்களில் ஊழ் :

சங்க நூல்கள் அகம், புறம் என்னும் இருவகைப் பாகு பாட்டில் காதல், வீரம், ஈகை, கலை, அறிவியல், அறவியல் சிந்தனைகள் முதலான மக்கள் வாழ்க்கையின் பல்வேறு கூறு களையும் உட்படுத்திக் கூறுகின்றன. சங்கம் மருவிய காலநூல் களாகக் கூறப்படும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அகத் துறைப்பாடல்கள் இடம் பெற்றிருப்பினும், இவற்றில் பெரும்பாலான நூல்கள் மக்கள்வாழ்க்கைக்குரிய அறநெறிகளையே பெரிதும் வற்புறுத்துகின்றனவாதலின் இவை அறநூல்கள் என்றும் நீதிநூல்கள் என்றும் அழைக்கப்பெறுகின்றன.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள் நீங்கலாக, எஞ்சியவற்றுள் பாடல் எண்ணிக்கையிலும் பொருட்சிறப்பிலும் பெருமையுடையவை நாலடியாரும் பழமொழியும் ஆகும். நானூறு பாடல்களைக் கொண்ட நாலடியார் சமண முனிவர்களால் பாடப் பெற்றதென்பர்.107 இந்நூலில் 'ஊழ்' எனும் சொல் உலகியற் பொருளில் ஆளப்பட்டுள்ளதேயொழிய ஊழ்க்கோட்பாட்டுப் பொருளில் ஆளப்பெறவில்லை. நாலடியார் 'பழவினை' என்னும் தனியதிகாரம் அமைத்து ஊழ்க்கோட்பாட்டினை விளக்குவதுடன், அறன்வலியுறுத்தல், தீவினையச்சம், மெய்ம்மை ஆகிய பிற அதிகாரங்களிலும் இக்கோட்பாட்டினை விளக்குகிறது. மேலும் நல்வினை,108 அறவினை,109 வினைப்பயன்,110 மேலை வினைப்பயன்,111 முன்னைவினை,112 செய்தவினை,113 செய்வினை,114 கொடுவினை115 ஆகிய சொற்களால் ஊழ்க் கோட்பாட்டினை நாலடியார் வலியுறுத்துகிறது.

பழமொழி நானூறு முன்றுறையரையனார் என்னும் சமணர் செய்த நூலென்பர்.116 இந்நூலில் 'ஊழ்' எனும் சொல் உலகியற் பொருளில் இடம்பெற்றிருப்பினும், கோட்பாட்டுப்பொருளையும்

உணர்த்துகிறது. இந்நூல் 'ஊழ்' எனத் தனியதிகாரம் அமைத்து ஊழ்க்கோட்பாட்டினை விளக்குவதுடன் பிற அதிகாரங்களிலும் இக்கருத்தினை வலியுறுத்துவதைக் காணமுடிகிறது. வினை,[117] நல்வினை,[118] செய்தவினை[119] என்னும் சொற்களால் ஊழ்க் கருத்து விளக்கப்படுகிறது. நாலடியார், பழமொழி இரண்டிலும் பால், முறை, போன்ற சொற்கள் ஊழ்க்கோட்பாட்டினை விளக்குவனவாக ஆளப்பெறவில்லை.

நான்மணிக்கடிகை, திரிகடுகம், ஏலாதி, திணைமாலை நூற்றைம்பது, இன்னிலை, ஆகிய நூல்களில், வினை,[120] முன்னைவினை,[121] நல்வினை,[122] பழவினை,[123] ஆகிய சொற்களால் ஊழ்க்கோட்பாடு விளக்கப்பெறுகிறது. திணைமாலை நூற்றைம்பதில் பால் என்னும் சொல் ஊழ்வினைப் பொருளில் ஆளப்பட்டுள்ளது.[124] இந்நூலில் ஊழ் எனும் சொல் முதிர்தல், மலர்தல் ஆகிய உலகியற் பொருள்களில் ஆளப்பெற்றுள்ளதே யொழிய கோட்பாட்டினை உணர்த்துவதாக ஆளப்படவில்லை. இவையொழிந்த ஏனைய நூல்களில் ஊழ்வினை பற்றிய கருத்துக்கள் இடம்பெறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

கோட்பாட்டுப் பொருள் வளர்ச்சிநிலை :

இதுகாறும் கண்டவாறு பழந்தமிழ் நூல்களில் 'ஊழ்' என்னும் சொல் மலர்தல், முதிர்தல், கனிதல் ஆகிய உலகியற் பொருளில் தொடக்கநிலையில் ஆளப்பெற்று, காலப்போக்கில் வினை முதிர்ந்த நிலையினை, வினையின் விளைவினைக் (பயனை) குறிப்பதாக வளர்ச்சி பெற்றது. அவரவர் விதைத்த வினையின் விளைவை அவரவரே நுகரவேண்டுமென்ற கோட்பாட்டின்படி ஒருவன் இன்று செய்யும் வினைகளே (செயல்களே) நாளை அவனுக்கு உரிய வினைப்பயனை அளிக்கின்றன. ஆதலின் உலகியலில் முதிர்தல், கனிதல் என்ற பொருளைக்குறித்த ஊழ் என்னும் சொல் வினையின் விளைவு முதிர்ந்து, கனிந்துவந்து பயனளிக்கும் வேளையில் அவ்வினைப்பயனை உரியவரே நுகரும் நிலையினைக் குறிக்கத் தொடங்கியிருக்கிறது. ஆங்கிலத்தில் பழவினைப்பயனை 'Fruit of Karma, என்று குறிப்பிடும் வழக் குண்மையும் வினையின் முதிர்வுநிலையினைக் காட்டும்.[125] ஒருவன் செய்யும் செயல்களின் விளைவுகள் திரண்டு, வினையின் விளைவாகி அவனே நுகரும் வகையில் உரிய நேரத்தில் அவனை யடையும் பழவினையினை, அதன் பயனை ஊழ் எனக் கருதினர். இவ்வாறு இயற்கைப் பொருள்களின் மலர்தல், முதிர்தல், கனிதல் ஆகிய பருவத்தையுணர்த்திய இச்சொல் உயிர்களின் வினைப்பயன்

உரியகாலத்தில் அவற்றினால் துய்க்கப்படும் செவ்வியையுணர்த்தும் நிலைக்கு வளர்ந்து மெய்ப்பொருட்கோட்பாட்டுள் ஒன்றான வினைக்கோட்பாட்டினைக் குறிக்கும் நிலையை அடைந்திருக்க வேண்டுமெனக் கருதமுடிகிறது. பின்னர், வினை, பால், முறை ஆகிய சொற்களைவிட ஊழ் என்னும் சொல் மெய்ப்பொருட் கோட்பாட்டினை விளக்கும் நிலையில் செல்வாக்கும் அழுத்தமும் உடையதாக மாற்றம் பெற்றுள்ளது.

சங்க இலக்கியங்களில் ஊழ் என்னும் சொல் மிகுதியாக இயற்கைப் பொருள்களில் வழங்கி, ஒருசில இடங்களில் ஊழ்க் கருத்தினை விளக்குகிறது. திருக்குறளில் இயற்கைப் பொருளைக் குறிக்கும் நிலையில் அருகியே வழங்கப்படும் இச்சொல் தத்துவக் கருத்துநிலையில் சிறப்பிடம் பெற்றுவிடுகிறது. திருவள்ளுவர் 'ஊழ்' என்னும் தனியதிகாரம் வகுக்கவும், வினைப்பயனை உணர்த்தவும் இச்சொல் காரணமாகிறது. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் ஊழ், வினை ஆகிய இருசொற்களையும் இணைத்து முன்வினை, பழவினை என்னும் பொருளில் ஆளத் தொடங்கினார். அறநூல்களில் நாலடியார் 'பழவினை' எனவும், பழமொழி நானூறு 'ஊழ்' எனவும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன. இவ்வாறு படிப்படியாகச் சங்கநூல்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, அறநூல்கள் ஆகியவற்றில் சீரான பொருள் வளர்ச்சியினைப் பெற்று மெய்ப்பொருட்கோட்பாட்டுள் ஒன்றான ஊழ்க்கோட்பாட்டினை யுணர்த்தத் தொடங்கியிருக்கிறது என்பது அறியத்தக்கது.

ஊழோடு உறவுடைய ஏனைய கோட்பாடுகள் :

ஊழ்க்கோட்பாடு பற்றிய ஆய்வுக்குப் பழந்தமிழரின் மெய்ப் பொருட் கோட்பாடுகளில் சிலவற்றை இணைத்துக்காண்பது பெரிதும் பயன்தரும். கடவுள், அறம், மறுபிறப்பு, துறக்கம், நரகம், வீடுபேறு ஆகிய கோட்பாடுகள் ஊழ்க்கோட்பாட்டுடன் உறவுடையனவாகக்கருதப்படுகின்றன. உலகம் முழுவதும் வாழ்ந்த சான்றோர்கள் மேற்கண்ட கோட்பாடுகளைப்பற்றிச் சிந்தித்து மக்களுக்கு உணர்த்தியிருக்கின்றனர். பழந்தமிழ்ச் சான்றோர் பலரும் இச்சிந்தனைகளில் தோய்ந்து தங்கள் கருத்துக்களை நூல்களின் வாயிலாகப் புலப்படுத்தியுள்ளனர். இக்கோட்பாடுகள் பொய்யென்றும் இல்லையென்றும் மறுத்த வர்கள் சங்க காலத்திலும் இருந்துள்ளனர். இவ்வாறு மறுப்ப வருடன் சேரலாகாது என்று உறையூர் முதுகண்ணன் சாத்தனார் சோழன் நலங்கிள்ளிக்கு,

> நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
> இல்லையென் போர்க்கு இனனா கிலியர்[126]

என்னும் பாடலால் அறிவுறுத்தியதைக் காணமுடிகிறது. தொல்காப்பியம்,

> வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
> நிகழ்ச்சி அவர்கட் டாக லான[127]

எனக் கூறியதற்கேற்ப, அறிவில் வல்லவர்களாகிய உயர்ந்த சான்றோர்களே இவ்வுலகை வழிநடத்தும் திறமுடையர் என்பது தொன்றுதொட்டு நிகழ்ந்து வரும் உண்மை. இத்தகைய சான்றோர் உலக மக்களின் வாழ்வு செம்மையடைவதற்காக அறிவுவழிப்பட்ட பலவகைக் கோட்பாடுகளை வலியுறுத்தினர். இக்கோட்பாடுகளை இல்லையென்று மறுப்பவர் அலகையாகக் கருதப்படுவர் என்பதனைத் திருவள்ளுவர்,

> உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்து
> அலகையா வைக்கப் படும்[128]

என்னும் குறளால் கூறுகிறார். கடவுள், அறம் முதலான கோட்பாடுகள் கண்ணால்காண முடியாத அருவப்பொருள்களாயினும் இவை சிந்தனையினாலும் உணர்வினாலும் அறிந்து கொள்ளக் கூடிய கருத்துப்பொருள்களாகும். ஊழ் இக்கோட்பாடுகளுடன் கொண்ட உறவு பின்வரும் இயல்களில் விளக்கப்படுகிறது.

இன்றைய நிலையில் ஊழ்பற்றிய கருத்து :

உலகம் முழுவதும் பன்னெடுங்காலமாக ஊழ்பற்றிய சிந்தனை பேசப்பட்டு வருகிறது. மனிதச் சிந்தனை வளத்தில் விளைந்த அறிவார்ந்த கோட்பாடுகளில் ஊழ்க்கோட்பாடும் ஒன்று. பழந்தமிழ் நூல்களில் சமயச் சார்பின்றி வலியுறுத்தப் பட்ட ஊழ்க்கொள்கை இயக்கவழிப்பட்ட சமயங்கள் தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்ற காலத்தில் சமயச் சார்புடையதாக, கடவுளோடு தொடர்புடையதாகக் காட்டப்பட்டது. பின்னர், காப்பியங்களிலும் பின் வந்த நூல்களிலும் இக்கொள்கை இலக்கியப்போக்கில் சில இடங்களில் எடுத்தாளப்படினும் சமயச் சார்புடன் கூறப்பட்ட இடங்களே மிகுதியாகும். கடவுள், ஊழ் முதலான கருத்துப் பொருள்களை இல்லையென்று மறுப்பவர் இன்றும் உலகில் உள்ளனர். இக்கோட்பாடுகளை அறிவடிப் படையில் உவமையினாலும் பிறவற்றாலும் விளக்கமுடியுமே யொழிய, கண்ணில் காட்ட இயலாது. இக்கோட்பாடுகள் அறிவால் அறியும் பொருள்களாதலின் தத்துவஞான உலகில் இவை மிகுந்த மதிப்புடையன. ஏனைய கோட்பாடுகளைப்

போலவே வினைக்கோட்பாட்டினையும் அறிஞருலகம் பெரிதும் வலியுறுத்துகின்றது.

கற்றோரிடை மட்டுமின்றிக், கல்லாரிடத்திலும் இக் கோட்பாடு செல்வாக்குப் பெற்றதாக விளங்குகிறது. சமூகத்தில் நிலவும் பொருள், அறிவு முதலான வேறுபாடுகளுக்கும் இன்பம் துன்பம் முதலான உணர்வுகளுக்கும் காரணம் புலப்படாத நிலையில் மனித இனம் ஊழைக் காரணமாக இன்றும் காட்டி வருகின்றது. காரணம் புரியாதபோது மனிதன் அமைதியிழந்து வாழ்க்கையில் வெறுப்படைவது இயல்பு. அவ்வாறு வெறுப்பேற் படாது வாழ்க்கையில் பற்றினை வைத்து, இடையறா முயற்சியும் உழைப்பும் கொண்டு மனிதன் முன்னேறுவதற்கும், அவன் அமைதியுடன் வாழ்வதற்கும் ஊழ்க் கோட்பாடு உறுதுணை யாகின்றது. ஆதலின் இன்றைய நிலையிலும், ஊழ்க்கோட் பாட்டினால் விளைந்த நன்மைகளையும் தீமைகளையும் அறிந்து கொண்டு மனித வாழ்க்கையைச் செம்மையுற அமைத்துக் கொள்வதற்கு ஊழ்க் கோட்பாடு தேவையான ஒன்றென்பது சான்றோர் கருத்தாகும். மக்கள் வழக்கில் ஊழ் என்ற சொல்லால் இக்கோட்பாடு அழைக்கப்படுவது இன்றைய நிலையில் அருகி வீட்டதாயினும், 'என்வினை', 'என்விதி', 'என்தலைவிதி' என்றெல்லாம் மக்கள் வழக்கிலிருப்பது போல, வினை, விதி ஆகிய சொற்கள் ஊழ்க்கோட்பாட்டினை வலியுறுத்தும் சொற் களாகக் கருதப்படுகின்றன. பின்வரும் இயல்களில் இக்கோட் பாட்டின் செல்வாக்கு இலக்கியங்களில் இடம்பெற்ற திறம் குறித்து விளக்கப்படுகிறது.

குறிப்புக்கள்

1. திவாகரம், கழகம், 1958, ப. 194.
2. பிங்கலம், கழகம், 1968, ப. 247
3. மேற்படி, ப. 404.
4. மேற்படி, ப. 301.
5. மேற்படி, ப. 301.
6. திவாகரம், கழகம், 1958, ப. 276.
7. பிங்கலம், கழகம், 1968, ப. 465.
8. திவாகரம், கழகம், 1958, ப. 196.
9. பிங்கலம், கழகம், 1968, ப. 311.
10. சூடாமணிநிகண்டு, ஆறுமுகநாவலர் வி. அச்சகம், சென்னை, ஆ. இ., ப. 187.
11 கயாதரம், சென்னைப் பல்கலைக்கழகம், 1939, ப 54.

12. தமிழ்ப்பேரகராதி, செ. ப. 1956 தொகுதி-I, பகுதி-II, ப. 501.
13. மேற்படி, ப. 502.
14. தமிழ்ப்பேரகராதி, செ. ப. 1962, தொகுதி-II, பகுதி-I, ப. 762.
15. தமிழ்ப்பேரகராதி, செ ப. 1963, தொகுதி-IV பகுதி-I, ப. 2033.
16. தமிழ்ப்பேரகராதி, செ. ப. ஆ. இ. தொகுதி-V, பகுதி-I, பக். 2625-2626.
17. தமிழ்ப்பேரகராதி, செ. ப. 1934, தொகுதி-VI, பகுதி-I பக். 3299-3300.
18. தமிழ்ப்பேரகராதி, செ. ப. 1935, தொகுதி-VI, பகுதி-IV ப. 3737.
19. கழகத் தமிழகராதி, கழகம், சென்னை, 1969, ப. 193.
20. ந. சி. கந்தையா பிள்ளை, **செந்தமிழ் அகராதி**, ஆசிரியர் கழகம், சென்னை, ஆ. இ., ப. 90. வே. இராமச்சந்திர சர்மா (தொகு) **கம்பர்தமிழகராதி**, ப.169 இராமநாதன் (தொகு.), **இருபதாம் நூற்றாண்டுத் தமிழகராதி**, 1909 ப. 283.
21. அ. சிதம்பரநாதன் (பதி), **ஆங்கிலத் தமிழகராதி**, செ. ப. 1965, ப. 375.
22. மேற்படி, ப 291
23. தொல். பொருள். கழகம், 1974, நூ. 258.
24. தொல். பொருள். இளம்பூரணம், கழகம், 1974, நூ. 258.
25. ச. சோமசுந்தரபாரதியார், **தொல்காப்பியப் பொருட்படலப் புத்துரை-மெய்ப்பாட்டியல்**, நாவலர் புத்தக நிலையம், 1975.
26. புறம்-192.
27. தொல். சொல். 57.
28. தொல். பொருள். 90.
29. மேற்படி.
30. தொல். பொருள். 640.
31. தொல். பொருள். 121, 168, 502.
32. தொல். பொருள். 20, 50, 113.
33. மேற்படி, 257, 269, 309, சொல்-240, 365.
34. தொல். பொருள். 645.
35. அகம். 17, 101, 134; கலி-36, 44.
36. அகம். 217, 339; ஐங். 458; குறுந். 68.
37. அகம் 117.
38. அகம். 2, 273; ஐங். 363.
39. அகம். 25, 58,; ஐங். 390; குறுந். 270.
40. நற். 326; அகம். 134.
41. குறுந். 278.
42. அகம். 10, 348; கலி 26.
43. ஐங் 374.
44. பட். அடி. 227.
45. திருக் 650.
46. ச தண்டபாணிதேசிகர் (தொ) **திருக்குறள் உரைவளம்** அறத்துப்பால், இ. இ. 1957, ப. 475.
47. மேற்படி, மு. நூ., மு. ப.
48 மேற்படி.
49. திருக். 266, 467, 505, 578, 818, 1011, 1021.
50. டி. டி. தாதாச்சாரியார், **கலைக் களஞ்சியம்**, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1956, தொகுதி-3, பக் 271-272.
51. திருக். 467.
52. திருக். 266.

53. திருக். 505.
54. புறம். 192.
55. திருக். 43, 50.
56. திருக். 55, 702, 1023.
57. திருக். 619.
58. A Sanskrit - English Dictionary, Oxford at the Clarendon Press, Reprinted in 1963. Sir Monier Monier Williams, M. A., K. C. I E., Bhagya P. 752. Adrishta P. 18. Dur-Bhagya P. 486. Dur-adrishta P. 484.
59. திருக். 1141.
60. திருக். 78, 422, 1000, 1121, 437.
61. திருக். 206.
62. திருக். 209.
63. திருக். 279.
64. திருக். 376.
65. திருக்.388, 541, 547, 553.
66. திருக். 234, 480.
67. திருக். 5.
68. திருக். 335.
69. திருக். 201.
70. திருக். 321.
71. சிலப். 6-137; 7-6; 10-92.
72. சிலப். பதிகம். 57; 7-52; 10-4; 16-217; 20-59; 23-28; 27-59; 70.
73. சிலப். 1-65, 66; 3-149; 4-25; 5-34; 9-5, 6; 11-36, 47; 13-17, 27, 103, 139.
74. சிலப். 23-131,132;23-160, 161; 24- 19; 26-47; 28-33, 34; 28-139; 28-207.
75. மேற்படி, 23-178.
76. மேற்படி, 7-52.
77 மேற்படி, 7-52.
78. மேற்படி, 9-78.
79. மேற்படி, 10-164.
80. மேற்படி, 10-171.
81. சிலப். 29-13
82. மேற்படி. 16-156.
83. மேற்படி14-31.
84. மேற்படி, 24-6
85. மேற்படி, 15-91.
86. மேற்படி, 23-171
87. மேற்படி, 28-167.
88. மேற்படி, 30-74.
89. மேற்படி, 16-148.
90. மேற்படி, 14-33
91. மணி, 6-152; 20-123.
92. மேற்படி, 20-101; 27-164.
93. மேற்படி, 4-113.
94. மேற்படி, 5-35.
95. மேற்படி, 12-50.
96. மேற்படி, 3-76.
97. மேற்படி, 12-112.
98. மேற்படி, 21-60.
99. மேற்படி, 12-16.
100. மேற்படி, 12-36.
101. மேற்படி, 24-98
102. மேற்படி, 21-113; 22-24
103. மேற்படி, 26-39.
104. மேற்படி, 30-112.
105. மேற்படி, 30-142.
106. மேற்படி, 30-151.
107. நாலடியார் - முகவுரை, கழகம், 1964.
108. மேற்படி, 2-9; 6-1.
109. மேற்படி, 3-9.
110. மேற்படி, 4-3
111. மேற்படி, 11-5.
112. மேற்படி, 11-7.
113. மேற்படி 11-8.
114. மேற்படி 12-10.

115. மேற்படி, 13-4.

116. ச. கணபதி முதலியார், பதினெண்கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள்பழமொழி, கழகம், 1966, பக்.195-196.

117. பழமொழி, 44

118. மேற்படி, 361.

119. மேற்படி, 372.

120. நான்மணி. 46, 50; ஏலாதி, 72.

121. நான்மணி, 52.

122. திரிகடுகம், 95.

123. மேற்படி, 67.

124. தி. மா நூ. 12.

125. "ஊழ் - பழவினைப்பயன் -Fruit of Karma; fruit of deeds committed in former birth or births" தமிழ்ப்பேரகராதி, செ. ப. தொகுதி-I, பகுதி-II, 1956, ப. 501.

126. புறம். 29.

127. தொல். பொருள். 638.

128. திருக். 850.

3. மனித சமுதாய வரலாற்றில் ஊழ் பற்றிய எண்ணங்கள்

மனித இனம் தோன்றி நீண்ட காலத்திற்குப் பின்பே சிந்திக்கும் ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு சிந்திக்கத் தொடங்கிய பின்னர் அவ்வாற்றல் வளர்ந்த நிலையில், உயர்ந்த எண்ணங்களால் வாழ்வு வளம்பெறுமென்பதையுணர்ந்து, மனித சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய கருத்துக்களைச் சான்றோர்கள் அறிவுறுத்தினர். வரலாறு, நாகரிகம், அகப்பண்புகளின் செவ்விய வளர்ச்சி ஆகியவற்றால் சிறப்புற்று வாழ்ந்த தொன்மைக் கால மனித இனங்களின் கருத்துக்களிடையில் ஒற்றுமையும் உயர்வும் மிளிர்வதைக் காணமுடிகிறது. தமிழினத்தைப் போன்ற தொன்மை நாகரிகச் சிறப்புடைய கிரேக்கர், ரோமர், சீனர், பாபிலோனியர், எகிப்தியர், ஆரியர் ஆகிய சமுதாய மக்களின் சிந்தனைகளில் ஊழ்க் கோட்பாடு பற்றிய கருத்தும் இடம் பெற்றிருக்கிறது. பழந்தமிழ்ச் சமுதாயத்தில் ஊழ்க் கோட்பாட்டாய்வு மேற்கொள்வதற்கு, மற்ற இன மக்களின் எண்ணங்களைக் காண்பதும் பயன்தரும் என்ற நோக்கில் அறிமுக அளவில் (மேம்போக்காக) இவ்வாய்வு செய்யப்படுகிறது

'டெஸ்டினி' (Destiny) -'ஃபேட்' (Fate)- பொருள் விளக்கம்

மேலை நாடுகளில் மிகப் பழங்காலந்தொட்டே ஊழ் பற்றிய நம்பிக்கை இருந்து வருகிறது. ஊழாற்றல் என்னும் விதியினைக் குறிக்க ஆங்கிலத்தில் 'டெஸ்டினி', ஃபேட் என்ற இருசொற்கள் வழங்குகின்றன. இவ்விரண்டு சொற்களும் ஒரே பொருளுடையன வாயினும் சிறிது வேறுபாடுடையனவாக அறிஞரால் கூறப்படுகின்றன. சமய அறவியல் கலைக் களஞ்சியம் விதி என்பதற்குரிய விளக்கம் கூறுமிடத்தில் இரண்டும் ஒன்றுதான் எனக் குறிப்பிட்டு, 'டெஸ்டினி' என்பது வாழ்நாள் முழுவதற்கும் முடிவு செய்யப்பட்ட ஒரு முழு நிகழ்ச்சியைக் குறிப்பது என்றும், ஃபேட் என்பது ஏற்கனவே பேராற்றலால் முடிவு செய்யப்பட்ட ஒன்று குறிப்பிட்ட நிகழ்ச்சியில் செயற்படும் போது குறிக்கப் பெறுவது என்றும் விளக்குகிறது.[1]

'டெஸ்டினி' என்பது நிகழ்ச்சிகளைக் கட்டுப்படுத்தக்கூடிய, முடிவு செய்யக்கூடிய ஒரு பேராற்றல் என்னும் நம்பிக்கையாகும். இந்நம்பிக்கையை ஏற்றுக்கொண்டால் நன்மை, தீமை ஆகியவை

முன்னரே முடிவுசெய்யப்பட்டன என்பதையும் நம்பியாக வேண்டும். எது நடக்க வேண்டுமோ அது நடக்கும். 'எப்பொழுது என்ன எப்படி நிகழுமோ அது நிகழும்-Que Sera Sera' என்பது இலத்தீன் கவிதையாகும். ஆகவே 'டெஸ்டினி' என்பது பொதுச் சொல். ஃபேட் என்பது வாழ்க்கையின் குறிப்பிட்ட நிகழ்ச்சியில் நடப்பதைக் குறிப்பது. ஃபேட் என்பது மனிதனுக்கு ஆக்கமான செயலைக் (சாதகமான) குறிப்பதில்லை. 'அவனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்பது அவளுடைய விதி', 'விபத்தில் உயிர் விட வேண்டுமென்பது அவனுடைய விதி' என வரும். ஆயினும் 'டெஸ்டினி', 'ஃபேட்' இரண்டுமே தவிர்க்க முடியாத, விலக்க முடியாத நிகழ்ச்சியைக் குறிக்கின்றன என்னும் கே.சுப்பிரமணியன் கருத்து முன்னர்க் கூறிய கலைக்களஞ்சியக் கருத்திற்குத் துணையாகிறது.[2] ஆதலின் 'டெஸ்டினி', 'ஃபேட்' இரண்டும் ஊழாற்றலைக் குறிப்பன என்பதும், இங்குக் காட்டப்பட்ட நுட்ப வேறுபாட்டினை விடுத்து, இன்று விதி என்னும் ஒரே பொருள் குறித்தும் இவை வழங்குகின்றன என்பதும் குறிப்பிடத் தக்கவையாகும்.

ஊழ்வலிக் கோட்பாடு (Fatalism) :

ஊழ்வலிக் கோட்பாட்டினை ஆங்கிலத்தில் 'ஃபேடலிசம்', என்று அழைக்கின்றனர். வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொன்றும் ஏற்கனவே முடிவுசெய்யப்பட்டது என்று நினைக்கும் மனப்பான்மை 'ஃபேடலிசம்' என்றழைக்கப்படுகிறது. இந்நம்பிக்கையுடையவரை ஊழ்க்கோட்பாட்டினராகக் (Fatalist) கூறுவர். பண்டைய கிரேக்க, ரோமானியரால் தொடக்கத்தில் இப்படி விதிப்பதற்கு ஒரு பேராற்றல் இருப்பதாக நம்பப் பட்டது. பிற்காலத்தில் அந்த ஆற்றல் 'மொய்ரா' (Moira), ஃபேட் Fete), பார்சே (Parcae) என்னும் பெயர்களால் உருவகப்படுத்தப்பட்டது. விதி நம்பிக்கை உடையவர்கள், வாழ்க்கையில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்வார்கள். நடப்பது நடந்தே தீரும் என்ற நம்பிக்கையில் தங்களை ஒப்படைத்துக் கொண்டார்கள். பிற்காலத்தில் எழுந்த கிறித்தவ சமயப்பிரிவுகளால் இக்கொள்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. காலிவினிஸ்டுகள் போன்ற கிறித்தவப் பிரிவினர் மனித சுதந்திரத்தை வற்புறுத்துகின்றனர்.

தொடக்க நிலையில் இஸ்லாமிய சமயத்தினர், எல்லாம் வல்ல பேராற்றலுடைய இறைவனால் எல்லாப் பொருள்களும் ஆளப்படுவதாகக் கூறினர். தொடக்க நிலை விதிக் கோட்பாடுகள் அரேபியா, ஈரான் போன்ற நாடுகளில் வளர்ந்த ஜெர்வானிசம் (Zervanism) போன்ற கோட்பாடுகளின் செல்வாக்கினால் மாற்ற மடைந்தன. பின்வந்த இஸ்லாமியக் கோட்பாடுகள் மனித

வாழ்க்கை அவன் விதியினால் (கிஸ்மத்-Kismet) நிர்ணயிக்கப் படுகிறது என்றும், விதியின் ஆட்சிப் பிடியிலிருந்து விலகிக் கொள்வதற்கு இறைவனிடத்தில் முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்தின. இவ்வாறு உலகம் முழுவதும் சிந்திக்கக்கூடிய ஒரு தத்துவக் கோட்பாடாக ஊழ்க் கோட்பாடு விளங்குகிறது.[3]

கிரேக்கரும் ஊழும் :

கிறித்துவுக்கு முன்னர் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே நகர அரசுகள் அமைத்து, நாகரிகச் செழுமையுடன் வாழ்ந்தவர்கள் கிரேக்கர்கள். அவர்களது மொழி, இலக்கியம், நாகரிக வாழ்வியல் அனைத்தும் அப்பண்டைக் காலத்திலேயே மிகச் சிறப்புற்றிருந்தன.

> காலமறியப்பட்ட உலக இலக்கியங்களில் பழைமை யிலும் உயர்விலும் பண்பாட்டுச் சிறப்பிலும் கிரேக்க மொழி ஒப்பும் உயர்வும் அற்றது. அதன் முதற் பெருங்கவிஞரான ஹோமர் கிறிஸ்து பிறப்பதற்கு 1000 ஆண்டுகட்கு முன் இருந்தார். அவ்விலக்கியம் உச்ச நிலை அடைந்திருந்த காலம் கி.மு. 5 ஆம் 4ஆம் நூற்றாண்டுகள்[4]

என்னும் கா. அப்பாதுரையார் கூற்று கிரேக்கரின் நாகரிகத் தொன்மை, மொழி, இலக்கியச் சிறப்புக்களைக் காட்டுகிறது.

> கிரேக்கர்கள் கடவுள் நம்பிக்கையில் தோய்ந்திருந்தனர். தெய்வ நம்பிக்கையில்லாதவர்கள் சிறந்த மனிதராகவோ, நல்ல பிரஜையாகவோ இருக்க முடியாதென்பது அவர்கள் கருத்தாயிருந்தது. இந்த தெய்வ நம்பிக்கை யானது ஒன்றே தெய்வமென்பதாக இராமல், பல தெய்வ வழிபாடாகப் பரவி நின்றது. எல்லாத் தெய்வங்களுக்கும் மேலான தெய்வம் ஜுஸ்[5]

என்று வெ. சாமிநாத சர்மா கூறுவதுபோல, இவர்கள் ஆழ்ந்த கடவுள் நம்பிக்கையுடையவர்களாதலின் மதச் சடங்குகள், உயிரியல், நாள்கோள் பார்த்தல் முதலான சோதிடம், கனவு, சாபம், பில்லி, சூனியம், இறந்தவர் உலகம், (பிதிருலோகம்) இறந்தவர்களை வணங்கும் பழக்கம் ஆகியவற்றுடன் ஊழ் வினையிலும் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருந்தனர். கிரேக்கர் சமய நம்பிக்கையிலாழ்ந்ததால் தன்னம்பிக்கையற்று நின்றனர் என்று கூறிய ஈஸ்கிலஸ் என்பவரே விதியில் நம்பிக்கை மிக்க வராகத் திகழ்ந்தார் என்று கா. அப்பாதுரையார் குறிப்பிடுகின்றார்.[6]

ஃபேட் என்ற சொல் பெரும்பாலும் போகூழைக் குறிப்ப தாகவும், 'ஃபார்ச்சூன்' (Fortune) என்ற சொல் ஆகூழைக் குறிப்பதாகவும் கூறப்படுகிறது. மனிதனுடன் நெருக்கமாக இணைந்துள்ள இவ்விரண்டும் மனித வாழ்க்கையை இரண்டு கோணத்திலிருந்து பார்ப்பனவாகும்; 'பார்ச்சூன்' என்பது எல்லாமே மனிதனால் தீர்மானிக்க முடியாதவை; 'ஃபேட்' என்பது எல்லாமே முன்பே தீர்மானிக்கப்பட்டவை; கிரேக்க இலக்கிய காலத்தில் விதியையும் தெய்வமாகக் கருதுகிற நிலை காணப் படுகிறது; தொடக்கத்திலிருந்தே கிரேக்கர் மனித வாழ்க்கையில் முன்பே தீர்மானிக்கப்பட்ட நியதி, ஒழுங்கு அமைந்திருப்பது பற்றிய கருத்தினைக் கொண்டிருந்தனர். 'வருவதுரைத்தல்' என்பதில் உள்ள நம்பிக்கையினால் இக்கருத்து மேலும் வளர்க்கப் பெற்று வலிவுபெற்றது; 'மெக்ரோபியஸ் (Macrobius)என்பவரால் சொல்லப்படுகின்ற 'ஃபார்ச்சூன்' பற்றிய கருத்து ஹோமருக்குத் தெரியாது. 'ஃபேட்' என்பதன் கருத்து அப்படிப்பட்டதன்று. அவருடைய இலியத், ஒடிசி இரண்டு காவியங்களிலும் விதி பற்றிய கருத்துப் பரவலாக இடம் பெற்றுள்ளது. கிரேக்கப் புராணங்களில் மூன்று தெய்வங்களாக விதியைச் சொல்லும் கருத்து ஹோமரில் காணப்படவில்லை. ஹோமரில் கூறப்படும் 'மொய்பா' (Moipa) ஒரு தெய்வமாகவே காணப்படுகிறது என்ப தாகச் சமய அறவியல் கலைக்களஞ்சியம் கிரேக்கருடைய ஊழ் பற்றிய கருத்தினைக் கூறுகிறது.[7]

மனித வாழ்க்கையைத் தீர்மானிக்கின்ற விதிக்குரிய தெய்வங்களாக ஊழணங்குகள் மூவர் 'மொய்ரை' (Moirai) என்ற பெயருடன் குறிப்பிடப்படுகின்றனர். கி. மு. 8ஆம் நூற் றாண்டைச் சேர்ந்த ஹெசியட் (Hesiod) என்பவரே இத்தெய் வங்கள் மூன்றும் முத்தொழிலைச் செய்வதாக முதன் முதலில் குறிப்பிட்டார். அவர் கூற்றுப்படி கிளாத்தோ (Clotho) என்னும் தெய்வம் மனித வாழ்க்கையாகிய நூலை நூற்பதாகவும், (படைத் தல்) லாக்கிசிஸ் (Lachesis) என்னும் தெய்வம் வாழ்க்கை நூலை அளப்பதாகவும், (அளித்தல், காத்தல்) 'அட்ரோபஸ்' (Atropos) என்னும் தெய்வம் வாழ்க்கை நூலை அறுப்பதாகவும், (அழித்தல்) இத்தெய்வங்கள் 'ஜீயஸ்' என்னும் கடவுளாகப் போற்றப்பட்ட தாகவும் அமெரிக்கக் கலைக்களஞ்சியம் கூறுகிறது.[8]

கொலம்பியக் கலைக் களஞ்சியம், முன்னர்க் குறிப்பிட்ட மூன்று ஊழணங்குகள் பற்றிய செய்தியைக் கூறி, இவர்களுடைய செல்வாக்கின் அளவு உறுதியாகச் சொல்ல முடியாததாக இருந்தாலும், சிலர் ஊழின் ஆற்றல் ஜீயஸ்ஸின் ஆற்றலைவிட மிகுதியானது என்று கூறுவதாகவும் குறிப்பிடுகிறது.[9]

காம்ப்டன் கலைக் களஞ்சியம், ஊழணங்குகள் மூவரைப் பற்றிய செய்தியைச் சொல்லி, கடவுளோ, மனிதனோ யாரும் இம்மூன்று தெய்வங்களின் முடிவிலிருந்து தப்ப முடியாது என்று கூறுகிறது.10

கிரேக்கரைப் பொறுத்தவரை ஊழ் மனிதனுடைய செயற் பாடுகளை முழுமையாக, முன்னரே தீர்மானிக்கின்ற ஒரு ஆற்றல் என்றும், இது தத்துவ, சமயச் சார்புடைய ஒரு கோட்பாடென்றும், ஒவ்வொரு தனி மனிதனுடைய வாழ்வும், நன்மை, தீமையும் தெய்வங்களால் சேர்ந்தோ அல்லது 'ஜீயஸ்' என்னும் தெய்வத் தாலோ வரையறுக்கப்படுவதாகவும், வகுக்கப்படுவதாகவும் கருதினர். பிற்காலத்தில் அவ்வாறு வகுப்பது 'ஜீயஸ்' என்றே கருதப்பட்டது. அக்கருத்தின்படி ஒரு தனி மனிதன் தன் ஊழால் விளைகின்ற நன்மை தீமைகளிலிருந்து தப்பவே முடியாது என்றும், மேலும் அவன் செய்கின்ற தவறுகள் (தீவினைகள்) ஏற்கனவே வகுக்கப்பட்ட பயனை மிகுதிப்படுத்துமே தவிர குறைக்காது என்பதும் ஒடிசியில் கூறப்படுகிறது. இறைவனுடைய எச்சரிக் கையைப் புறக்கணித்ததால் பெருந்தண்டனைக்கு உள்ளான 'எஜீஸ்தஸின்' (Aegisthus) முடிவு இங்கு எடுத்துக் காட்டப் படுகிறது.

இலியட்டில் (XIV 845) வருகிற பெட்ரோக்ளஸ் (Petroclus) எஜீஸ்தஸின் சாவு ஜீயஸ் மற்றும் அப்பல்லோவால் நிர்ணயிக்கப் பட்டது என்று சொல்கிறான்; நான்கு வரிகளுக்கு அப்பால் கொடிய மொய்ராவும் அப்பல்லோவின் மகனாகிய லீடோவும் அந்தச் சாவைக் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது.

இலியட்டில் வரும் ஒரு கதையின்படி ஹெக்டரைக் கொன்று முடித்தவுடன் 'ஆக்லிஸ்' (Achilles) இறந்துவிட வேண்டுமென்பது அவன் விதி. ஆனால் அவன் விரும்பினால் வீட்டில் அமைதியாக நெடுங்காலம் புகழிழந்து வாழவும் முடியும். கிரேக்கருடைய நாகரிகத்தில் ஒரு நாடு முழுவதற்கும் விதி விதிக்கப்படுவதாகவும், நம்பிக்கையுண்டு. பாரசீகம் ஆசிய நாடுகளை வென்று சிறப்போடு விளங்கும் என்பது எஸ்கிளிஸினால் விதிக்கப்பட்டது. ஆனால் கடல் கடந்து போருக்குச் செல்லும்போது தோல்விகளைச் சந்திக்க வேண்டும் என்றும் விதிக்கப்பட்டது. அவ்வாறே வரலாற்றிலும் நடந்திருக்கிறது. மொய்ரா ஒரே கடவுளாகவும், மூன்று தனித் தெய்வங்களாகவும் கருதப்படுகிறது என்று கூறி, மூன்று ஊழணங்கு கள் பற்றியும் அவர்களது மூன்று தொழில்கள் பற்றியும் விரிவாகப் பிரித்தானியக் கலைக் களஞ்சியம் குறிப்பிடுகிறது.11

ஹோமர், ஹெசியட் போன்ற கவிஞர்கள் ஊழ் பற்றிக் கூறியிருப்பது போலவே அவர்களுக்குப் பின்னர்த் தோன்றிய ஏனைய கவிஞர்களும் கூறியிருக்கின்றனர். சோலன் என்பவர் ஊழ்வினையின் பேராற்றலைக் கண்டு வியப்புற்றுப் பாடியுள்ளார் என்றும் மனிதனுக்கு இன்ப துன்பங்களைக் கொண்டுவந்து ஊட்டுவது ஊழ்வினையே என அவர் பாடியுள்ளார் என்றும் கூறி,

> என்றும் அழியாது நிலைபெற்று விளங்கும் தெய்வங்கள் நமக்கு அளிக்கும் பரிசுகளை நாம் புறக்கணிக்கக் கூடாது, நாம் தொடங்கும் ஒவ்வொரு செயலுக்கும் இன்னலும் இடையூறும் உண்டாவது இயற்கை. ஒருவன் செயலைச் செய்யத் தொடங்கும் பொழுது அதன் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை முன் கூட்டி அறிய முடியாது; அவன் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக அது முடிந்தாலும் முடியலாம்
> (கிரேக்கப் பாடல் தொகுதி - ப. 47)

என்னும் பாடலை எடுத்துக்காட்டிக் க. த. திருநாவுக்கரசு விளக்குகிறார்.[12]

கி. மு. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எம்ப்பிடோக்ளீஸ் என்னும் தத்துவ ஆராய்ச்சியாளரும் அணுவாதியுமாகிய அறிஞர் முற்பிறவி, மறுபிறவி பற்றிய நம்பிக்கையுடையவர்.

> மனிதர்களெல்லோரும் ஒரு காலத்தில் தேவர்களாயிருந் தார்கள். பின்னர் அவர்களுடைய தீவினை காரணமாக மனித நிலைக்கு இழிந்து விட்டார்கள் என்பது இவன் நம்பிக்கை[13]

என்று வெ. சாமிநாத சர்மா கிரேக்கருக்கு இருந்த ஊழ் பற்றிய நம்பிக்கையைக் குறிப்பிடுகிறார். உலகம் போற்றும் ஆங்கிலம் முதலான பல மொழி இலக்கியங்களுக்கு மூலமாகக் கருதப்படுகின்ற கிரேக்கர் புராணங்களும், இலக்கியங்களும், தத்துவ் நூல்களும் கிரேக்கர்களுக்கு ஊழ்வினைக் கொள்கையில் இருந்த நம்பிக்கை யையும் சிந்தனையையும் தெளிவாகக் காட்டுகின்றன.

ரோமரும் ஊழும் :

கிரேக்கப் பேரரசு வீழ்ச்சியுற்ற பின் ரோமாபுரி எழுச்சியுற்றது. சமய அறவியல் கலைக் களஞ்சியம் ஃபேட் என்பதற்குக் கொடுக்கும் விளக்கத்தில், கிரேக்கம், ரோமம் ஆகிய இரு இனத்து மக்கள் கருத்தாகவும் ஒரே செய்தியைக் கூறுகிறது. ரோமானியருடைய இலக்கியங்கள் பெரிதும் கிரேக்கருடைய இலக்கிய மரபுகளைப்

பார்த்துப் பின்பற்றிய பாணியாகத் தோன்றுகிறது என்பர் க. த. திருநாவுக்கரசு.14 ஆகவே கிரேக்கர் ஊழ் பற்றிக் கொண்டிருந்த சிந்தனைகள் ரோமருக்கும் பொதுவானதாகும். கிரேக்கர் 'மொய்ரா' என்றழைக்கும் ஊழ்த் தெய்வத்தை, ரோமர் 'பார்சே' (Parcae) என்றழைக்கின்றனர் 15 ரோமானியர் கொள்கைப் படி விதி என்பது கடவுள் வாய்மொழியாகக் கொடுத்த ஆணை என்று கருதப்பட்டது.16 கிரேக்கரிடம் மூன்று ஊழணங்குகள் குறிப்பிடப்படுவது போல, ரோமரிடமும் நோனா, டெக்கூமா, மோர்ட்டா (Nona, Decuma, Morta) என்னும் மூன்று தெய்வங்கள் ஊழ்த் தெய்வங்களாகக் குறிக்கப் படுகின்றன.17

ரோமருடைய இலத்தீன் மொழியில் மிகச் சிறந்த கவிஞர்கள் விளங்கினர். இலத்தீன் மொழியில் வர்ஜில் என்பவர் பாடிய உழவுப் பாட்டில் ஊழ்வினையின் ஆற்றல் விளக்கப்படுகிறது.

> கொடிய ஊழ் என்னை அழைக்கிறது; சுழலும் என் கண்கள் மூடிக் கொள்ளுகின்றன; இப்பொழுது நான் விடைபெறுகிறேன்; ஆழங் கண்டறியப்படாத இரவு என்னை அணைத்துக் கொள்ளுகிறது.
>
> (உழவுப் பாட்டு - 593-596)

என்று அவர் பாடியிருப்பதாக க. த. திருநாவுக்கரசு எடுத்துக் காட்டுகிறார்.18

வானவியல் பற்றிப் (Astronomica) பாடிய மெனிலஸ் (Manilius) சோதிடத்தில் நம்பிக்கையுடையவர். அவர் நூலைத் தொடங்கும்போதே 'ஊழ்வினை மெய்ம்மையானது' என்ற நம்பிக்கையோடு தொடங்குவதுடன், ஊழ்வினையின் கையாளாய் நட்சத்திரங்கள் பணிபுரிகின்றன. அவை மனிதரை இன்பதுன்பங்களை அனுபவிக்குமாறு வினைப் பயனை ஊட்டுகின்றன என்று குறிப்பிடுவதாகவும், உலக நிகழ்ச்சிகள் அனைத்தும் 'விதியின் விளையாட்டால்' நடைபெறுகின்றன என்பதை,

> உலகப்பொருள்கள் எல்லாம் தெய்விக ஆற்றல்
> ஒன்றால் நெறிப்படுத்தப் பெறுகின்றன. அவை
> எல்லாம் தெய்விக சிந்தனையின் போக்கிலே
> செயல்படுகின்றன.
>
> (வானவியல் பகுதி. 476-480)

என விளக்குவதாகவும் க. த. திருநாவுக்கரசு எடுத்துக்காட்டுகிறார் 19

சீனரும் ஊழும் :

சீனநாடு உலக நாடுகளுள் மிகப்பழைய நாடு. சீன நாகரிகம் தொன்மைச் சிறப்புடையது. சீனமொழி, கன்பூசியஸ், மென்சியஸ், சுங்-சூ, லாவோ-ட்ஸனா போன்ற சிந்தனையாளர்களையும் கவிஞர்களையும் பெற்ற மொழி. சீன மொழியில் ஊழை, 'மிங்' (Ming) என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். மிங் என்பதன் அடிப்படைப் பொருளாவது சொல்லப்பட்ட அல்லது முடிவு செய்யப் பட்ட ஒரு பொருள் என்பதாகும். இச்சொல் 'வாய்' என்பதற்குரிய அடிப்படையையும் சட்டம் என்பதற்குரிய குறியீட்டையும் உள்ள டக்கியதாகவும் இருக்கிறது தத்துவமொழியில் ஊழ் என்பது அழிவில்லாதது, மாற்றமுடியாத கடவுளின் சட்டம் என்று பொருள் படுகிறது. 'மிங்' என்பதற்குச் 'சொர்க்கத்தின் முடிவு' மனிதனுடைய தலைவிதியை முடிவு செய்கின்ற மாற்றமுடியாத தீர்ப்பு என்று விளக்கம் கொடுக்கப்படுகிறது. இச்சொல் அடிக்கடி வாழ்வு என்பதனோடு ஒத்த பொருளுடையதாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒருவனுடைய வாழ்நாளின் அளவு (எல்லை) மாற்ற முடியாத நிலையில் வரையறுக்கப்பட்டிருக்கிறது நீண்ட 'மிங்' என்பது நீண்ட வாழ்நாள் என்று பொருள்படுகிறது. எனவே 'மிங்' என்பதைக் கணக்கிடுவது என்பது மனிதனுடைய நல்வினையை முன்பே அறிவிப்பதாகக் கருதப்படுகிறது.[20]

ஒருவன் தனக்கு ஊழால் வரையறுக்கப்பட்ட நிலையினைப் புரிந்து கொள்ளத் தவறினாலும், அல்லது அதனை வெளிப் படையாக மறுத்தாலும் அவன் ஊழால் வரையறுக்கப்பட்ட நிலை மைக்கு மேல் ஓர் உயர்ந்த நிலையை எவ்வகையிலும் அடைய முடியாது என்று இக்கலைக்களஞ்சியம் கூறும் சீனரது ஊழ்க் கோட்பாடு தமிழகச் சிந்தனையுடன் ஒத்திருப்பதை அறிய முடிகிறது.[21]

கன்பூசியஸ் நூல்களில் 'மிங்' என்பது அடிக்கடி வருகிறது. இது 'மேலுலகத்தின் தீர்ப்பு', 'தேவருலகம்' என்பது இந்தச் சொல்லுக்கு முன் அடையாகப் பயன்படுத்தப்படுகிறது. இது தெய்வத்தின் தீர்ப்பு எனக்கொள்ளலாம். ஒருவனுடைய வாழ்வும் சாவும் விதியால் (மிங்) தீர்மானிக்கப்படுகின்றன. செல்வமும் மதிப்பும் தெய்வத்தைச் சார்ந்துள்ளன என்னும் ஊழ் பற்றிய கருத்துக்களை இக்கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது[22]

சீன இலக்கியங்கள், நூல்களில் சொல்லப்பட்ட விதிபற்றிய கோட்பாடுகள் மக்களின் அன்றாட வழக்கத்திலும் பயன்படுத்தப் படுகின்றன.

1. 'தும் தும் தும்' - Tum, Tum, Tum
(வாழ்நாள் வரையறுக்கப்பட்டது)
2. எல்லாம் விதியே - All is destiny

மனிதன் தன்னுடைய விதியை மாற்றுதற்கு முயல்வது பயனளிக்காது. எல்லாம் விதியினாலே உறுதி செய்யப்பட்டது. என்னும் பொருளுடைய இப்பழமொழிகள் மக்கள் வழக்கில் உள்ளன.[23] சீன நாட்டில் சித்தர் நெறி போன்ற ஒன்றையளித்த லாவோ-ட்ஸ-ு, 'எல்லாம் வினையின் விளைவு' என்பதைப் போன்றதொரு கொள்கையை வலியுறுத்தியதாகக் க. த. திரு நாவுக்கரசு குறிப்பிடுகிறார்.[24] இதுகாறும் கண்டவற்றால் சீனர் கள் ஊழ்க் கோட்பாட்டில் கொண்ட நம்பிக்கையும் எண்ணங்களும் புலனாகின்றன.

பாபிலோனியரும் ஊழும் :

தொன்மை நாகரிக மக்களுள் பாபிலோனியரும் குறிப்பிடத் தக்கவராவர். பாபிலோனியரும் அசீரியரும் ஊழ் என்பதைத் தனியான கடவுளாக உருவகப்படுத்தவில்லை. ஆதலின் இது தொடர்பான தன்மை, இயல்புகளைச் சொல்ல முடியவில்லை. ஊழ் (Fate) என்பதற்கு இணையான, சிறப்பான தனிச் சொல்லாக 'சிம்து' (Simtu) என்பதைப் பயன்படுத்தினர். ஆதலால் இந்தச் சொல்லை என்னென்ன பொருள்களில் பயன்படுத்தினார்கள் என்பதைத் தெளிவாக வரையறுக்க வேண்டியுள்ளது. இந்த நேரடிச் சான்றுகளுக்கு மேலாகப் பாபிலோனியர்களின் விதி அல்லது ஊழ் என்பதைப் பற்றிய ஒரு கருத்து நிலவியிருக்கலாம், அது 'சிம்து' என்ற சொல்லோடு சிறப்பான தொடர்புகொண்டதாக இல்லாமல் இருந்திருக்கலாம்; இப்பொழுது கிடைக்கின்ற நூற் பகுதிகளில் அதனுடைய சாயலை விட்டுச் செல்லாமல் இருந்திருக் கலாமென்றே கருத வேண்டியுள்ளது என்னும் கலைக் களஞ்சியக் கருத்துப் பாபிலோனியர் தம் ஊழ் பற்றிய சிந்தனையைத் தெளிவாக விளக்க முடியவில்லையாயினும், ஊழைக் குறிப்பதற்கு அவர்கள் 'சிம்து' (Simtu) என்ற சொல்லைப் பயன்படுத்திய செய்தியைக் குறிப்பிடுகிறது.[25]

எகிப்தியரும், ஊழும் :

கிரேக்கரைப் போன்று எகிப்தியரும் பழைய நாகரிகச் சிறப்பும், கடவுள், ஊழ், மறுபிறப்பு ஆகியவற்றில் நம்பிக்கையும் கொண்டவர்கள். இவர்கள் விதியைப் பற்றி ஒரு திட்டவட்டமான கருத்துடையவர்களாக இருந்தார்கள். இவர்கள் விதியை

'ஷாய்' (Shai) என்னும் பெயருடைய தெய்வமாக உருவகப்படுத்தியிருந்தார்கள். ஊழ் என்பதைக் குறிக்கும் சொல் ஷாய் என்பதில் இருந்து சாய் என்று வழங்கத் தொடங்கியது. சாய் என்ற சொல் தீர்மானித்தல் அல்லது வரையறுத்தல் என்னும் பொருளுடைய 'சா' என்ற மூலத்திலிருந்து உருவான சொல்லாகும். சாய் (Sai) என்பது 'எவ்வாறு இருக்க வேண்டும்' என்ற பொருளுடையது. உலகப் பொருள்கள் எல்லாம் எவ்வாறு இருக்க வேண்டுமென்பது முடிவு செய்யப்பட்ட, விலக்க முடியாத, தவிர்க்க முடியாத விதியின்படி நடப்பதாதலின் இப்பொருளில் இச்சொல்லை எகிப்தியர் வழங்கினர். எனவே ஊழ் முடிவு செய்வது (Decide) வரையறுப்பது (Define) என்னும் பொருளுடையதாதலின் இப்பொருள்களை உள்ளடக்கிய 'Sai' என்ற சொல்லை எகிப்தியர் ஊழைக் குறிக்க வழங்கினர் என்பது சிந்தனைக்குரியது 26

ஆரியரும், ஊழும் :

மிகப் பழைய இன மக்களுள் ஆரியரும் அடங்குவர். இவர்களது மொழி சமஸ்கிருதம் ஆகும். இதனை வடமொழி என வழங்குவது மரபாதலின் வடமொழி நூல்களில் ஊழ் பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் சிந்திக்கத் தக்கனவாம். ஊழ் (Fate) என்ற சொல்லுக்கு நேரான பல சொற்கள் வடமொழியில் உள்ளன. 'காலம்' என்ற சொல் நிகழ்வுகளுக்குக் காரணமாக இருந்து விளங்கிக் கொள்ள முடியாத, காரணம் காண முடியாத ஆற்றல் என்ற பொருளில் வழங்கப் பெறுவது; மேலும் ஊழ் என்பது விதி, தெய்வ ஆட்சி, ஆணை தெய்வம், தெய்விகம், வானுலகத்தில் உள்ளது, தெய்விக ஆற்றல், தெய்வச் சித்தம் ஆகிய பல சொற்களால் அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு உயிரினாலும் முன் பிறவியில் செய்யப்பட்ட ஒன்று உணரப்படுவதே தவிர, கண்ணால் காணமுடியாது; இத்தவிர்க்கமுடியாத பேராற்றல் 'அதிருஷ்டம்' (காணமுடியாதது) என அழைக்கப்படுகிறது. 'காலம்' (Time) என்பது விதி பற்றிய பழைய சொல்லாக இருக்கலாம். அதர்வண வேதத்தில் (XIX-53) 'காலம்' என்பது பழைமையானதாகவும், விதி என்பதனுடன் நெருங்கிய உறவுடையதாகவும், தெய்விக ஆணையெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது சமய அறவியல் கலைக்களஞ்சியம் குறிப்பிடும் செய்தியாகும். 27

ஊழ் என்பதற்கு வடமொழியில் காலம், நியதி, விதி, கர்மந் (கர்மம்) ஆகிய சொற்களுடன் 'அதிருஷ்'-ம்' (A-drishta) 'துரதிருஷ்டம்' (Dur-adrishta), 'பாக்யம்' (Bhagya), 'துர் (Dur-Bhagya) ஆகிய சொற்களும் உறவுடையனவாகக் காட்டப்

பட்டுள்ளன. திருஷ்டம் என்றால் கண்ணால் பார்க்கக் கூடியது என்றும், 'அதிருஷ்டம்' என்றால் பார்க்க முடியாதது என்றும் பொருள்படும். கண்ணால் காண முடியாது நடப்பது அதிருஷ்டமாகும். பாக்கியம், நல்லூழ், நல்வினைப்பயன் என்றும், துர்ப்பாக்கியம் தீயூழ், தீவினைப்பயன் என்றும் பொருளாகும்.[28]

> பால் எனும் ஊழில் முறைமை இருப்பதாகக் கருதப் பெற்றதால் ஊழை ரிக்வேதம் கொண்டாடும் 'ரித' வுடனும் ஒப்பிடலாம். பொழுது புலர்வதும் சூரியன் ஒளிர்வதும், பகலுக்குப்பின் இரவும், இரவுக்குப் பின் பகலும் நிகழ்வதும், பருவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வருவதும் அந்த 'ரித' என்னும் பிரபஞ்ச முறையின் ஆற்றலால்தான் என்று ரிக்வேதம் (I-67) கூறும். ஆநிரைகள், உணவு முதலியவை கிடைக்கச்செய்வதும் ரிதவே. (I-141 1; I-151-4, 8;
> II-27-12; III-20-4; III-56-2;
> III-54 3; IV 23-9, 10; V-41-1.
>
> முதலியவை). அறம் நிலவச்செய்வதும் ரிதவே

என்று எஸ். இராமகிருஷ்ணன் ரிக்வேதத்தில் ஊழைக்குறிக்க 'ரித' என்னும் சொல் வழங்கியமையைக் குறிப்பிடுகின்றனர்.[29]

மிகப்பழைய இதிகாசங்களாகிய வியாசர்செய்த மகாபாரதம், வான்மீகியின் இராமாயணம் இரண்டும் ஊழ்வினையாற்றலை மிகுதியாக வற்புறுத்தியுள்ளன. மகாபாரதத்தில் அஷ்டகனுக்கு யயாதி சொல்லும் போது, ஞானமுள்ளவன் துக்கப்படலாகாது, விதியை எண்ணிச் சுக துக்கமின்றிச் சமமாக இருத்தல் வேண்டும் என்றும்,

> ஸ்வேதஜங்களும் (வெப்பத்திலுண்டாகும் தேள் முதலியன) அண்டஜங்களும் (முட்டையில் பிறக்கும் பறவை முதலியன) உத்பீஜங்களும் (பூமியைப்பிளந்து கிளம்பும் புல் பூண்டு, முதலியன) ஸர்ப்பங்களும், புழுக்களும் ஜலத்திலுள்ள மீன்களும் கற்களும் புற்களும் கட்டைகளுமாகிய யாவும் தம்தம் விதி முடிந்தபின் அவற்றின் இயற்கையை அடைகின்றன.[30]

என்றும் ஊழின்ஆற்றலைக்கூறி ஆறுதல்படுத்துவது அறியத்தக்கது.

தன் மக்களை இழந்து துன்பத்தால் வருந்தும் திருதராட்டினிடத்தில் விதுரர் சாத்திரங்களின் பொருள்களையும், முன்வினை, வினைப் பயன் ஆகியவற்றையும் கூறிப் போரில் இறந்தவர்கள் சொர்க்கத்தையடைகிறார்கள் என்றும் கூறுகிறார். மேலும்,

> பூர்வம் செய்த கர்மமானது மனிதன் படுத்துக் கொண்டிருந்தால் கூடப்படுத்திருக்கிறது; நின்றால் நிற்கிறது; ஓடினால் ஓடுகிறது. எந்த எந்த நிலைமையில் எந்த எந்த நன்மை தீமைகளைச் செய்கிறானோ அந்தந்த நிலைமையில் அந்தந்தப்பயனை அடைகிறான். எவன் எந்த சரீரத்தோடு எந்தஎந்தக் கர்மாவைச் செய்கிறானோ அவன் அந்த அந்தச் சரீரத்தினால் அந்த அந்தப்பயனை அடைகிறான். தனக்குத்தானே பந்து, தனக்குத் தானே சத்துரு. தானே செய்த நன்மைக்கும் தீமைக்கும் தானே சாட்சி. நல்ல செய்கையினால் ஸௌக்கியம். பாவத் தொழிலால் துக்கம். எல்லா இடத்திலும் செய்யப்பட்டதே பலிக்கிறது. ஓரிடத்திலாவது செய்யப்படாதது பலிக்கிறதில்லை[31]

என்று கூறும் இடம் கருதத்தக்கது.

போரில் தாயத்தார்களைக் கொன்றதால் ஏற்பட்ட துன்பத்தில் வருந்தியிருக்கும் தருமனுக்கு வியாசர், நீரில் குமிழிபோல் சேர்க்கையும் பிரிவும் வருவதும் போவதுமாயிருக்குமென்பது முடிவு; கூட்டங்களின் முடிவு அழிவு; உயர்வின் முடிவு கீழே விழுவது. சேர்க்கையின் முடிவு பிரிவு; வாழ்வின் முடிவு இறப்பு என்றெல்லாம் விளக்கம் கூறி,

> வியாதி, ஜலம், ஆயுதம், அக்னி, பசி, விஷம், ஜ்வரம், மரணம், மேலிருந்து விழுதல் முதலிய எந்த ஆபத்தில் எந்த மனிதன் போகும்படி விதியிருக்கிறதோ அவன் அதே வழியில் செல்லுகிறான். விதியைத் தாண்டினவனும் விதியிலிருந்து வெளிப்பட்டவனும் எவனுமில்லை. விதியில் அகப்படாத மனிதனே இல்லை.[32]

என்றும் குறிப்பிடும் இடங்களில் பாரதத்தில் ஊழ்வினையின் ஆற்றல் வலியுறுத்தப்படுவதை அறியமுடிகிறது.

இராமாயணத்தில், இராமன் காட்டிற்குச் செல்லவும், தந்தை இறக்கவும், தன் தாயாகிய கைகேயியே காரணம் என்று வருந்திய பரதனுக்கு இராமன் அறம் உரைத்தபோது தான் காட்டிற்குச் செல்ல நேர்ந்ததற்குத் தெய்வமே காரணம் என்றும் தந்தை இறந்ததற்குக் காலகதியே காரணம் என்றும் சொல்லி, சுதந்திரமில்லாத உயிரைத் தெய்வமே இழுத்துச் செல்கிறதென்றும், பழுத்த பழங்கள் மரத்திலிருந்து விழுவதுபோலப் பிறந்த

மனிதனுக்கும் இறப்பைத்தவிர வேறொன்றும் பயனில்லையென்றும் சொல்லிய கருத்துக்கள் ஊழின் ஆற்றலை வலியுறுத்துவதாக அமைந்துள்ளன.33

சீதையைப் பிரிந்தஇராமன் இலக்குவனிடத்தில் துன்பத்துடன் வருந்தும்போது, தன் துன்பத்திற்குக் கரும பலனே காரணம் என்றும்,

> கடலில் அலைகளைப்போல் வரும் சோகங்கள் ஒன்றன் பின் ஒன்றாக என் மனத்தையும் ஹிருதயத்தையும் பிளக்கின்றன. பூர்வ ஜன்மத்தில் நான் வேண்டிய வரையில் பாபங்களைச் செய்திருக்கவேண்டும். இப்படி துக்கத்தின்மேல் துக்கம் நேருவது அதன் பயனேயன்றி வேறல்ல34

என்றும் வருந்திக் கூறிய கருத்துக்கள் ஊழ்வினையை வலியுறுத்துகின்றன.

இவ்வாறு ஆரியருடைய வடமொழி நூல்களாகிய பாரதம், இராமாயணம் மட்டுமின்றிப் பகவத் கீதை, மநுதருமசாத்திரம் போன்ற பழைய நூல்களிலும் ஊழ்வலி பற்றிய கருத்துக்கள் மிகுதியாக வலியுறுத்தப்படுகின்றன.

ஊழ் பற்றிய பிற நாட்டறிஞர் கருத்து :

தமிழரிடம், ஊழ்பற்றிய சிந்தனை இருந்தது போலவே பிற நாட்டு மக்களிடத்தும் இருந்தது என்பதைப் பழங்காலச் சிந்தனையாளர்களின் கருத்துக்கள் வழியறிந்ததுபோலவே, அண்மைக்காலச் சிந்தனையாளர்களின் கருத்துக்களின் வழியும் காண்பது ஆய்விற்கு பயன்தரும் என்ற நோக்கில் அயல்நாட்டில் தோன்றிய அண்மைக் காலச் சிந்தனையாளர்களின் கருத்துக்கள் காட்டப்படுகின்றன. அவற்றை 'டெஸ்டினி' 'பேட்' என்னும் பொருள்களில் காணலாம்.

'டெஸ்டினி' (Destiny) :

1) மனிதன் நினைக்கிறான் தெய்வம் முடிவு செய்கிறது என்று தாமஸ் கெம்பிஸ் குறிப்பிடுகிறார்.

2) மண்ணிலே பிறந்த எந்த ஆணும் பெண்ணும் அவர்கள்கோழையானாலும் வீரனானாலும் தன்னுடைய விதியைத் தவிர்க்க முடியாது என்பது ஹோமர் கருத்தாகும்.

3) நாம் செய்யும் குற்றங்களுக்கும் இழைக்கின்ற தவறுகளுக்கும் நம்மைப் பொறுப்பாக்குகின்ற, பலிகடா ஆக்குகின்ற ஒன்று தான் விதி என்பது பால்ஃபோர் என்பார் கூற்று.

4) உன்னுடைய தலையில் கடவுள் எழுதிய எழுத்து ஒவ்வொரு வருக்கும் நடந்தே தீரும் என்பது குரான் வலியுறுத்தும் சிந்தனையாகும்.

5) கடவுளால் ஆணையிடப்படாதவை எவையும் நிகழ்வதில்லை. நம்முடைய விதி முன்பே முடிவு செய்யப்பட்டுவிட்ட ஒன்று. நிகழ்ச்சிகள் எதிர்பாராமல் நடக்கக்கூடியன அல்ல. ஆனால் மனிதன் அனுபவிக்க வேண்டிய இன்பங்களும் துன்பங்களும் முன்பே தீர்மானிக்கப்படுகின்றன என்பது செனேகா என்னும் அறிஞர் கருத்தாகும்.35

'ஃபேட்' (Fate) :

1) நம்முடைய நிகழ்வுகளை உருவாக்குகின்ற ஒரு தெய்விக ஆற்றல் இருக்கிறது என்றும் ஷேக்ஸ்பியர், நம்முடைய விருப்பங்களும் விதியும் ஒன்றோடொன்று மாறுபாடுகின்றன. எனவே நம்முடைய திட்டங்கள் தூக்கியெறியப்படுகின்றன. நமது எண்ணங்கள் நம்முடையவை. ஆனால் அவற்றின் முடிவுகள் நம்முடையனவல்ல என்றும் ஊழ்க் கோட்பாடு குறித்துக் கூறுகிறார்.

2) விதி என்பது நல்லவர்களின் நண்பன்; அறிவாளிகளின் வழி காட்டி; முட்டாள்களின் சர்வாதிகாரி; தீயோரின் எதிரி என்பது ஆல்ஜர் என்பார் கருத்து.

3) எல்லாம் ஓர் ஒழுங்கின்படி உருவாக்கப்பட்டு இயங்குகின்றன. ஆனால் நம்முடைய வாழ்க்கையை ஒரு நிலையற்ற விதி ஆட்சி செய்கிறது என்று கெதே குறிப்பிடுகின்றார்.

4) 'உனக்கு விதியில் நம்பிக்கையிருக்குமானால் உன்னுடைய நன்மைக்காகவாவது அதைநம்பு' என எமர்சன் கூறுவது கருதத்தக்கது.36

இவ்வாறு அறிஞர் பலரது ஊழ்பற்றிய கருத்துக்களை எண்ணங்களின் புதிய அகராதி (The New Dictionary of Thoughts) விளக்குகிறது.

மனிதன் காரண காரியத் தொடர்பில் சிக்குண்டு கிடக் கின்றான். அவனுடைய வாழ்க்கை காரணகாரியங்களால் ஆக்கப் பட்டிருக்கிறது. அது வினை விதைப்பதும் வினை அறுப்பதுமாக இருக்கின்றது. அவனது செயல் ஒவ்வொன்றிலும் காரணம் இருப்பதால் அதனைச் சமநிலைப் படுத்துவதற்கு விளைவுகள் வேண்டும் அவன் காரணத்தைத் தன் விருப்பப்படி தேர்ந்து எடுக்கலாம். ஆனால் விதியின் பயனைத் தேர்ந்தெடுக்கவோ

அல்லது மாற்றவோ முடியாது. கட்டுப்பாடில்லாத மனம் காரணங்களைத் தோற்றுவிப்பதற்குச் சக்தி அளிக்கின்றது. விளைவுகளில் கட்டுப்படும்படி செய்வது விதியெனக் கூறுகின்றனர். குறிப்பிட்ட வேலைகளை ஒருவன் செய்து முடிக்க வேண்டுமென விதிக்கப்படுகிறது. ஆனால் அவன் தன்னையுமறியாமல் தானாகவே உரிமையுடன் அதனைச் செய்து முடிக்கின்றான். நன்மையும் தீமையும் தன்னுடைய செயல்களாலேயே வருதலால் அவற்றில் இருந்து அவனால் தப்ப முடிவதில்லையென்று ஜேம்ஸ் ஆலன் ஊழ் என்பதற்குரிய விளக்கத்தைக் கூறி ஒவ்வொருவனுடைய செயலும் அவனுக்கு வினையாக வருதலின் அதிலிருந்து தப்ப முடியாது என வலியுறுத்தும் ஊழ்க் கோட்பாடு அறியத்தக்கது[37]

கோட்பாட்டளவில், ஊழ் என்பது முன்செய்த வினையின் பயன்; அது மனிதனுடைய இம்மை வாழ்வை முன்னரே முடிவு செய்யும்-வரையறுக்கும் ஆற்றல் வாய்ந்தது; அவ்வூழின் ஆற்றலை வெல்வது இயலாது; இப்பிறவியின் இன்ப துன்பங்களுக்குக் காரணம் ஊழ்வினையே என்பன போன்ற கருத்துக்கள் பழந் தமிழரிடம் மட்டுமின்றி, மேற்காட்டிய பழைய இன மாந்தரிடம் உலகம் முழுவதும் நிலவியிருக்கின்றன என்பதை அறிய முடிகிறது. பழந்தமிழர் 'பால்வரை தெய்வம்' என்று ஊழ்த் தெய்வத்தைக் குறிப்பிட்டது போல வேறுபல இனத்தவரும் ஊழைத் தெய்வமாகக் கருதியுள்ளனர்.

தமிழில் உள்ள ஓரையென்னும் சொல் கிரேக்க மொழியில் ஒலியில் மட்டுமின்றிப் பொருளிலும் ஒப்புமையுடையதாக 'Hora' என வழங்கப்படுவது போலப் பழந்தமிழிலக்கியங்களில் ஊழைக் குறிக்க வழங்கிய முறை என்னும் சொல் கிரேக்கர் குறிப்பிடும் 'மொய்ரை' என்னும் ஊழ்த் தெய்வத்துடன் தொடர்புடையது போலத் தோன்றுகிறது. இத்தொடர்பு ஒலியாலும் பொருளாலும் தற்செயலாக அமைந்ததா அல்லது தமிழரும் கிரேக்கரும் கொண்ட வணிக, பண்பாட்டுத் தொடர்புகள் மூலம் ஒருவரைப் பார்த்து ஒருவர் அமைத்துக் கொண்டதா என்பது அறிஞர் தம் ஆய்விற்குரியது.

இவ்வாறு உலகில் மிகத் தொன்மை வாய்ந்த நாகரிகச் சிறப்புடைய மக்களாகிய கிரேக்கர், ரோமர், சீனர், பாபிலோனியர், எகிப்தியர், ஆரியர் ஆகியோரிடத்திலும் அண்மைக் காலத்தில் அயல்நாட்டில் தோன்றிய அறிஞர்களிடையிலும் ஊழ்க்கோட்பாடு பற்றிய எண்ணங்கள் நிலவின என்பதையறிய முடிகிறது. உலக ளாவிய நிலையில் மனித குலம் முழுவதும் சிந்திக்கப்படும் ஊழ் பற்றிய எண்ணங்களால், மனித வாழ்க்கையின் போக்கிலும்,

இன்ப, துன்ப உணர்வுடன் கூடிய அனுபவங்களிலும் தோன்றும் கருத்து ஒருமைப்பாடு தெளிவாகும். இக்கருத்தொற்றுமையை, உலகப் பொதுமைச் சிந்தனைகளை, யாவரும் அறிந்து கொள்வது, மனித குல ஆக்கத்திற்குப் பயன் விளைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்புகள்

1. "If any distinction is to be drawn between Fate and Destiny, it is simply that the later is but the former regarded of operative in Particular cases."

   — Encyclopaedia of Religion and Ethics, Edinburgh-T&T. Clark, Latest Impression, 1967, Vol V, P. 772.

2. K. Subramanian, 'Know Your English', **The Hindu,** Feb. 28, 1989

3 Encyclopaedia Britannica, Printed in the U.S.A., 1969. Vol. 9, P. 109.

4. கா. அப்பாதுரையார், **உலக இலக்கியங்கள்,** கழகம், சென்னை-1, ஏப்ரல் 1955, ப. 20.

5. வெ. சாமிநாதசர்மா, **கிரீஸ் வாழ்ந்த வரலாறு,** பிரபஞ்சஜோதி பிரசுராலயம், புதுக்கோட்டை, 1963, ப. 160.

6. கா. அப்பாதுரையார், மு. நூ., பக். 27-28.

7. Fate is the counterpart of Fortune (q. v). They are Two ways looking at life;both are essentially connect ed with man. From the point of view of Fortune all is indeterminate; from the point of view of Fate all is determined.

   — Encyclopaedia of Religion and Ethics, Vol. V, P. 786.

8 "Fates, Fatz (Lat. Fata) in classical mythology, three sister goddess (called moirai by the Greeks and Parcae by the Romans) who deter mine the course of human life .. Hesiod, in the

8th century B. C. first names the three fates as Clotho who spins the thread of life; Lachesis, who measures it; and Atropos, who severs it; he says they are the daughters of zeus"

— The Encyclopadia Americana, 1829, Vol. 11, P. 54.

9. The Columbia Encyclopaedia, Columbia University Press, London, 1963, P. 699.

10 Compton's pictured Encyclopaedia, Chicago, 1956 Vol. 5, P. 44.

11. Encyclopaedia Britannica, Vol. 9, P. 110.

12. க. த. திருநாவுக்கரசு, திருக்குறள் நீதிஇலக்கியம், செ ப.க., 1971, பக். 153 154.

13. வெ. சாமிநாதசர்மா, மு. நூ , ப. 398.

14. க. த. திருநாவுக்கரசு, மு. நூ., ப. 168.

15. "Fatalism, the attitude of mind which accepts whatever happens as having been bound or decreed to happen. Such acceptance may be taken to imply belief in binding or decreeing agent; and the development of this implication in ancient Greek and Roman mytholcgy. with its Personified Moirai, Fata or Parcae, is discussed in the article Fate."

— Encyclopaedia Britannica, Vol 9, P. 109.

16. "The Romans identified their obscure native deities the parcae with the Moirai, and evidently under the influence of Greek myth, pluralized their fatum, the "spoken" decree of the gods "

— Encyclopaedia Britannica, Vol. 9, P. 110.

17. "The Roman Parcae were named Nona, Decuma and Morta."

— Encyclopaedia Americana, Vol. 11, P.54.

18. க. த. திருநாவுக்கரசு, மு. நா., பக். 213-214.

19. மேற்படி, பக். 217-218.

20. "The chinese equivalent for 'fate', viz. 'ming', like the original of our English word, means primarily 'Something spoken or decreed.' It is composed of the radical for 'mouth' and the symbol for 'law' or 'commandment'; ...... As fatum in philosophical language represents the eternal immutable law of gods, so 'ming' is interpreted as the appointment of Heaven the unalterab e decree which determines man's lot; it is often used as synonymous with 'life'-regarded as the span of existence, whose limits are irrevocably fixed, so that a long ming is but another name for long life. To 'Calcu late ming' is to forecast one's fortune"'......

— Encyclopaedia of Religion and Ethics, Vol. V, P. 783.

21 Ibid.

22. "In the confucian classics the term ming fre quently occurs, though, as we are informed, it was one of the subjects. On which the Master was characteristically reticent. The word is sometimes qualified by the addition of 'Heaven', i. e., 'Heaven's decree'; and some times 'Heaven' alone stands for the decree of Heaven. The two terms are often found in apposition, as in the statement, 'Death and life have their determined appointment (ming) riches and honour depend upon Heaven"
— Encyclopaedia of Religion and Ethics, Vol.5. PP 783-784.

23. Ibid, P. 785.

24. க. த. திருநாவுக்கரசு, மு. நா., ப. 295.

25 "But they possessed a special word for 'Fate' (simtu), and it is desirable to establish as accu rately as possible the senses in which the word was used."

— Encyclopaedia of Religion and Ethics, Vol.5, P. 778.

26. "The Egyptians had a very definite notion of Fate or destiny, which was personified as the deity Shai. The word for 'destiny', Sau, later Sai (Shai) is derived from the verb Sa, 'decide', 'define'...... Sai = 'What must be', unavoidable Fate."

— Encyclopaedia of Religion and Ethics, Vol. V, P. 785.

27. "Fate (Hindu) The Skr. language has various equivalents for what we call fate, such as e. g. Kala, bit. 'Time', as leading to events the causes of which are impercepetible to the mind of man; 'Vidhi','Ordinance'. 'rule', 'deiva','divine' 'Celestial', 'divine power' or will, 'destiny', 'fate', 'chance', 'adrista what is not seen'......... Karman (Karma), work done in a former existence and leading to inevitable results fate...... in hymns of the Atharvaveda (XIX.53) on the power and Devine nature of Time, Which is akin to Destiny or Divine Ordinance."

— Encyclopaedia of Religion and Ethics, Vol. 5, P. 790.

28. Sir Monier Monier-Williams, **A Sanskrit-English Dictionary**, Oxford of the Clarendon press, 1963, P. 18, 484; 486; 752.

29. எஸ். இராமகிருட்டிணன், **வள்ளுவர் குறிப்பிடும் ஊழ் ஓர் ஆராய்ச்சி, தாமரை** திங்களிதழ் சனவரி 1981, பக். 22-23

30. ம. வெ.இராமானுஜாசாரியார் (பதி.) மகாபாரதம் **ஆதிபருவம்** (தமிழ் மொ. பெ.) பக். 306-307.

31. மேற்படி, மு. நூ. **ஸ்திரீ பருவம்** பக். 6-8.

32. மேற்படி, மு. நூ., **சாந்தி பருவம்** பக். 81-83.

33. உ. வே. சி.ஆர். சீனிவாச அய்யங்கார் (மொ.) **ஸ்ரீமத்வான்மீகி இராமாயணம் அயோத்யாகாண்டம்**, தி லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை-17, 1963, பக். 360-361.

34. மேற்படி, மு நூ., ஆரணியகாண்டம், பக். 168.

35. The New Dictionary of Thoughts, An Encyclopaedia of Quotations, Revised and Enlarged by C. N. CATREVAS and JONATHAN EDWARDS, Universal Text Books Limited, London, Year nil. pp. 128-129.

36 Ibid pp. 193-194

37. ஜேம்ஸ் ஆலன், **விதியை வெல்லுதல் (Mastery of Destiny)** என். கே. வேலன் (மொ.), கழகம், 1969, ப. 7.

4. தொல்காப்பியமும் சங்க இலக்கியமும்

பழந்தமிழர் தம் வாழ்வியல், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு, நாகரிகம், பண்பாடு, சிந்தனை வளம் ஆகியவற்றை இன்றும் நமக்கு உணர்த்துவன சங்க நூல்களாகும். தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய நூல்கள் சங்க நூல்கள் என அழைக்கப் பெறுகின்றன. இவற்றுள் தொல்காப்பியம் இலக்கணமாகவும், தொகையும் பாட்டும் இலக்கியங்களாகவும் அமைந்துள்ளன.

தொல்காப்பியத்தின் தொன்மையும், சிறப்பும் :

தொல்காப்பியம் இடைச்சங்க காலத்தில் தோன்றியது என்று இறையனார் களவியலுரை குறிப்பிடுகிறது.[1] தொல்காப்பியத்தின் காலம் பற்றி அறிஞர்களுக்கிடையில் கருத்து வேறுபாடிருப்பினும் கி.மு. 5ஆம் நூற்றாண்டிற்கு முந்தியதாக அறிஞர் பலர் இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர்[2]. இன்று தமிழில் கிடைத்துள்ள நூல்களில் தொன்மைச் சிறப்புடையது தொல்காப்பியமாகும். இது மூன்று அதிகாரங்களில் ஐந்திலக்கணமும் உணர்த்துகிறது. இந்நூல் எழுத்து, சொல் முதலான மொழியிலக்கணம் மட்டும் கூறாது, மொழிக்குரிய மக்களின் அகவாழ்வு, புற வாழ்வு, அவர்களது பண்பாடு, நாகரிகம், தொழில்முறை, பொருள் வளம், சமூக நிலை, கடவுள் வழிபாடு, கலை வளர்ச்சி, பழக்க வழக்கங்கள் ஆகிய அனைத்துக் கூறுகளையும் விளக்கும் சிறப்புடையது. தொல் காப்பியப் பொருளதிகாரம் காதல் வாழ்வுக்கு இலக்கணம் பேசுவது மட்டுமல்லாமல் வாழ்வியலின் அகப் பண்புகள், உணர்வுகள், மெய்ப் பாடுகள் ஆகியவற்றை விளக்கும் பல்துறை அறிவுக் களஞ்சிய மாகவும் திகழ்வதாகும். இந்நூலில் கடவுள், உயிர், உலகம் போன்ற மெய்ப்பொருட் சிந்தனைகளும் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்றான ஊழ் பற்றிய சிந்தனையும் தொல் காப்பியத்தில் இடம் பெற்றமையைக் காணமுடிகிறது.

தொல்காப்பியத்தில் ஊழ் பெறும் இடம் :

தொல்காப்பியத்தில் ஊழ் என்னும் சொல் பழவினைப் பொருளில் ஆளப்பெறவில்லையென்பதும், பால்வரை தெய்வம், பால், பாலது ஆணை, வினை ஆகிய சொற்கள் ஊழ்ப் பொருளில் ஆளப்பட்டுள்ளன என்பதும் முன்னியலில் கூறப்பட்டுள்ளது.[3] சொல்லதிகாரத்தில் பால்வரை தெய்வம், வினை ஆகிய சொற்களும் பொருளதிகாரக் களவியலில் பால். பாலது ஆணை ஆகிய சொற் களும் மரபியலில் வினை என்னும் சொல்லும் ஊழ்க் கருத்தினை விளக்குவனவாக அமைந்துள்ளன.

பால்வரை தெய்வம் :

> காலம் உலகம் உயிரே உடம்பே
> பால்வரை தெய்வம் வினையே பூதம்
> ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்
> ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
> ஆவயின் வருஉங் கிளவி யெல்லாம்
> பால்பிரிந் திசையா உயர்திணை மேன[4]

என்னும் நூற்பா கிளவியாக்கத்தில் பாலுக்குப் புறனடையாகக் கூறப்பட்டது. காலம், உலகம், உயிர், உடம்பு, பால்வரை தெய்வம், வினை, பூதம், ஞாயிறு, திங்கள், சொல் எனக் கூறப் பட்ட பத்தும், அத்தன்மையுடைய பிறவுமாக அப்பகுதிக்கண் வருஞ்சொல்லெல்லாம் உயர்திணைச் சொல்லாயினும், உயர்திணைக் கண் பால் பிரிந்திசையாது, அஃறிணைப் பாலாயிசைக்கும் என்பது இந்நூற்பாவின் பொருளாகும். இவ்வாறு கூறப்பட்ட பத்தனுள் பால்வரைதெய்வம், வினை என்று கூறப்படும் இரண்டும் ஊழ்க் கோட்பாட்டுடன் தொடர்புடையனவாகும்.

இந்நூற்பாவில் பால்வரைதெய்வம் என்பது எல்லார்க்கும் இன்ப துன்பத்திற்குக் காரணமாகிய இருவினையையும் வகுப்பது எனவும், வினையென்பது அறத்தெய்வம் எனவும் சேனாவரையர் விளக்கம் கூறியுள்ளார்.[5]

பால்வரை தெய்வம் என்பதற்குச் சேனாவரையர் கூறிய விளக்கத்தை உடன்பட்ட நச்சினார்க்கினியர், வினையென் பதற்குரிய விளக்கத்தை உடன்படாது, வினையென்பது இருவினைத் தெய்வம் என்னும் பொருளில்,

> வினை விளைந்தது-இஃது இருவினைத்தெய்வம்[6]

என்று கூறியிருப்பது கருதத்தக்கது. நச்சினார்க்கினியர் கருத்துப் படி வினையை வகுக்கும் பால்வரைதெய்வம் வேறு, இருவினைத் தெய்வம் வேறு என்றாகிறது. இவ்விரு தெய்வத்திற்கும் உரிய தொடர்பு யாது என்பது ஆய்விற்குரியது.

மொ. அ. துரையரங்கசாமி சேனாவரையர் கருத்தினை ஏற்றுக்கொண்டு,

> பால்வரைதெய்வம் (சொல்-57) என்று ஈண்டுக் குறிக்கப் பட்டது. தெய்வம் போல ஆற்றல் சான்றதாய் இரு வினையையும் வகுப்பதாம் எனக் கொள்ளல்வேண்டும்[7]

என்று கூறுவர். அவரவர் செய்யும் வினையின் பகுதியை அவர வருக்கு வகுப்பது, வரையறுப்பது பால்வரைதெய்வம் என்னும்

கருத்து அறிஞர்கள் ஏற்றுக்கொண்டதாகும். இந்நூற்பாவிலேயே வினை எனச் சொல்லப்பட்ட வினைத் தெய்வம் எத்தன்மையது என்பது பற்றி அறிஞர்கள் யாரும் கருத்தளிக்கவில்லை பால்வரை தெய்வத்தால் வரையறுக்கப்படும் வினையின் பயனை உரியவர்க்கு ஊட்டும் தெய்வம் இருவினைத் தெய்வம் எனக் கருதலாம். ஆயினும் இக்கருத்து மேலும் ஆய்விற்குரியதாகும்.

பால்வரை தெய்வம் என்ற சொல்லாட்சியிலிருந்து, கடவுள் வினைப்பயனை வரையறுத்து முடிவு செய்பவன் என்றும், அவன் வினைப்பயனுக்கேற்பவே மனிதவாழ்வினை வரையறுத்து முடிவு செய்கிறான் என்றும், தொல்காப்பியர் விளக்கியிருப்பதாகக் கொண்டு இதன்மூலம் பழந்தமிழர் ஊழின் மீது கொண்ட நம்பிக்கை புலனாகிறது என்று சி. இலக்குவனார் கூறும் கருத்து[8] தொல் காப்பியர் கருத்திற்கு ஏற்புடையதாகும்.

காதலர் சந்திப்பிற்குக் காரணம் :

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி யுயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே[9]

என்னும் களவியல் நூற்பா தலைவன், தலைவியர் சந்தித்துக் காதல் கொள்ளும் காமக் கூட்டத்திற்குக் காரணம் ஊழ் என்பதை விளக்குகிறது.

இளம்பூரணர், ஒருவனும் ஒருத்தியுமாக இல்லறஞ் செய்யுங் கால், அவ்விருவரையும் மறுபிறப்பினும் ஒன்றுவித்தலும் வேறாக்கு தலுமாகிய இருவகை ஊழினும், இருவருள்ளமும் பிறப்புத்தோறும் ஒன்றி நல்வினையின் கண்ணே நிகழ்ந்த ஊழினது ஆணையால் பிறப்பு முதல் பத்துவகையில் ஒத்த தலைவனும் தலைவியும் எதிர்ப் படுவர் என்று உரை கூறியுள்ளார். மேலும் உலகில் பருவம் வாய்த்த நம்பி நங்கையர் ஒருவரையொருவர் காணும் போதெல் லாம் புணர்ச்சி வேட்கை தோன்றாமையானும், குறிப்பிட்ட தலைவனும் தலைவியும் புணர்தற் குறிப்பொடு காண்பதற்குப் பாலது ஆணையே காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.[10]

நச்சினார்க்கினியர், இந்நூற்பாவின் முதலடியில் வரும் 'பால்' என்பதற்கு நிலம் என்றும், இரண்டாம் அடியில் வரும் 'பாலது ஆணை' என்பதற்குப் 'பால்வரை தெய்வத்தின் ஆணை' என்றும் கொண்டார்.[11]

இந்நூற்பாவிற்கு உரைகண்ட பண்டைய ஆசிரியரும் பிற் காலத்து அறிஞர் பலரும் பால் என்பது ஊழைக் குறிக்கும் என்றே கொண்டு, ஒன்றுவிப்பது, வேறாக்குவது என இருவகை ஊழை

உடன்படுவர்.[12] இவ்வாறு ஒன்றாக்குவதற்கும் பிரிப்பதற்கும் காரணம் தலைவன் தலைவியர் முற்பிறப்புக்களில் செய்த வினையே என்பர்.[13] அறிஞர்கள் இந்நூற்பாவிற்குக் கூறிய விளக்கங்களை,

1) ஊழை உடன்படாதார் கருத்து
2) இப்பிறப்பின் வினைப்பயனை இப்பிறவியிலேயே ஊட்டுவது ஊழ் என்னும் கருத்து
3) முற்பிறப்பின் வினைப்பயனை இப்பிறப்பில் ஊட்டுவது ஊழ் என்னும் கருத்து.

என மூன்று வகையாகக் காணலாம்.

ஊழை உடன்படாதார் கருத்து :

புலவர் குழந்தை இந்நூற்பாவின் முதலடியில் வரும் பால் என்பதற்கு இடம் என்று பொருள்கொண்டு, பாலது ஆணை என்பதற்கு 'அன்பு தோன்றுதற்குரிய ஆண்பால், பெண்பால் என்னும் இருகூற்றின் கட்டளைப்படி' என விளக்கம் தருவதுடன், ஆண்மை பெண்மை என்னும் இருபாலின் தூண்டுதலினாலேயே அன்பு தோன்றுதலின், அத்தூண்டுதலை 'பாலது ஆணை' என்று தொல்காப்பியர் கருதியதாகவும் கூறினார்.[14]

புலவர் செந்துறைமுத்து, இயற்கைப் புணர்ச்சிக்கு விளக்கம் தருமிடத்தில், பருவம் அடைந்த ஒருவனும் ஒருத்தியும் தாமாகவே எதிர்ப்பட்டு ஒருவரையொருவர் காதலிப்பதாகும் என்று கூறி, ஊழ் காரணமாகும் என்பதனை ஏற்றுக்கொள்ளாமல்,

> குறைவின்றி நிறைந்த ஆண்தன்மையினையும் பெண் தன்மையினையும் கொண்ட ஒப்புயர்வில்லாத் தலைவனும் தலைவியும் அத்தன்மைகளின் தூண்டுதலால் ஒருவரையொருவர் இயற்கையால் காண்பர்[15]

என்று குறிப்பிடுவதும் ஊழை உடன்படாது கூறிய கருத்துக்களேயாம்.

இப்பிறவி வினைப்பயனை இப்பிறவியிலேயே ஊட்டுவது ஊழ் :

அ. கி. நாயுடு, பரிமேலழகர் ஊழ் என்பதற்குத் திருக்குறளில் சொல்லிய விளக்கங்களை ஏற்று, பரிமேலழகர் உரைக்குறிப்பில் முற்பிறப்புக் குறிப்போ, பழவினைக் குறிப்போ இல்லையென்ற காரணத்தைக் காட்டி,

> இப்பிறவியில் செய்த வினைகளின் பயன்கள் இப்பிறவியில் அடைவதே ஊழ் ஆகும் [16]

என்பர். மேலும், மறுபிறப்பு இல்லையென்றும், மறுபிறப்பில் பழவினைப் பயன்களை நுகர்வர் என்று சமயவாதிகள் சொல்வது மறுபிறப்பு உண்டு என்று சொல்வதற்காகச் செய்த கற்பனையாகும் என்றும் மறுபிறப்பை மறுத்து, அவரவர் செய்த வினைப்பயன்களை இப்பிறவியிலேயே நுகர்வர் என்பதை மீண்டும் வலியுறுத்தி உள்ளார்.[17]

இந்நூற்பாவின் முதலடியில் வரும் பால் என்பதற்கு ஊர் என்றும், இரண்டாமடியில் வரும் 'பாலது ஆணை' என்பதற்குத் 'தமக்குள் ஒன்றாக உயர்ந்த மணப்பக்குவப் பகுப்புக்களின் விதிப் படி' என்றும் இவர் எழுதிய உரைவிளக்கம் ஆய்விற்குரியது.[18]

முற்பிறப்பின் வினைப் பயனை இப்பிறவியில் ஊட்டுவது ஊழ் :

இப்பிறப்பில் காதல் வாழ்க்கையில் தலைப்படும் தலைவன் தலைவியர் கூடுவதற்கு அவர்கள் பண்டைப் பிறப்புக்களில் பழகிய அன்பும் அவர்கள் செய்த நல்வினையுமே காரணம் என்பர் முன்னோர். களவு பற்றி விளக்கம் தரும் பரிமேலழகர்,

> களவாவது, பிணி, மூப்பு, இறப்புக்களின்றிளஞ்ஞான்றும் ஒருதன்மையராய் உருவுந்திருவும் பருவமும் குலனும் குணனும் அன்பும் முதலியவற்றால் தம்முள் ஒப்புமை யுடையராய தலைமகனும் தலைமகளும், பிறர் கொடுப்பவும் அடுப்பவும் அன்றிப் பால்வகையால் தாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்துவருவது[19]

என்று கூறியுள்ளார்.

மு. இராகவையங்கார்,[20] ந.சுப்புரெட்டியார்[21] ஆகியோர் மேற்கண்ட களவியலுரை மேற்கோளை எடுத்துக்காட்டி ஊழ்பற்றி விளக்குவர். கா. சுப்பிரமணிய பிள்ளை,

> பிறப்பு முதலிய பல வகையால் ஒற்றுமையுடைய தலைவன் தலைவியர் மனம் ஒற்றுமைப்பட்டு அன்பு மிகுதற்கு ஏதுவாகிய ஊழ்வினைத் தெய்வத்தின் கட்டளைப்படி ஒருவரையொருவர் தாமாக எதிர்ப்படுவர்[22]

என்று கூறிய கருத்து அறியத்தக்கது.

சாமி சிதம்பரனார், ஊழ் என்பது முற்பிறப்பின் வினைப் பயன் என்ற கருத்தை,

ஊழ்வினை அதாவது பிராரத்வகர்மம் (முற்பிறப்பின் வினைப்பயன்) உண்டு என்பதும் தொல்காப்பிய காலத்துத் தமிழர்களின் கொள்கை. ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்ளுவதற்குக் காரணம் ஊழ்வினைதான்23

என்று தெளிவாகக் கூறி, தொல்காப்பியக் களவியல் இரண்டாம் நூற்பாவினை எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்.

க. வெள்ளைவாரணர், தலைவன் தலைவியரைச் சேர்த்து வைப்பதும், பிரித்து விலக்குவதும் ஊழே என்றுகூறி, மேற்கண்ட தொல்காப்பிய நூற்பாவை எடுத்துக்காட்டி, அவ்வூழின் ஆணைக்குக் காரணமாவது தலைவன் தலைவியர் முற்பிறப்புக்களில் பழகிய நட்பால் விளைந்த வினைப்பயனே என்ற பொருளில் விளக்கம் தந்துள்ளார்.24

இளவழகனார், இயற்கைப்புணர்ச்சி பற்றி விளக்குமிடத்தில் தலைவன் தலைவி இருவரும் கூடுவதற்கு முன்பே முற்பிறப்புக்களில் தொன்று தொட்டதாய் வரும் ஊழ்வினை இருந்தவாறு கடவுளருளால் அவர்தம் உள்ளம் இசைவு படுதலால், அஃது இயற்கைப் புணர்ச்சி என்பதற்கு உரித்தாயிற்று என்று கூறினார்.25

சி. இலக்குவனார் மரபு வழிப்பட்ட ஊழ் பற்றிய பழவினைக் கருத்தை ஏற்றுக்கொண்டு, ''பால் என்பதற்கு ஆண்பெண் இரு பாலாரும் பருவம் வந்து பால் உணர்ச்சி தோன்றி மணக்கும் எண்ணம்'' எனப் புதிய கருத்து விளக்கமும் தந்துள்ளார்.26

இந்நூற்பாவில் வரும் 'ஒன்று', 'வேறு' என வரும் பால்களுக்கு 'நிலம்' என்று பொருள் எழுதிய நச்சினார்க்கினியர் கருத்தை மறுத்து, தலைவன் தலைவியரை ஒன்றாக்கும் பால், வேறாகப் பிரித்துவைக்கும் பால் என்று ஊழை இருவகையாகக் கூறிய இளம்பூரணர் கருத்தை உடன்பட்டு, முற்பிறப்பின் முயற்சியின் பயனே இப்பிறப்பில் தலைவன் தலைவியரைக் கூட்டியது என்பதை விளக்கி, இதுவே தொல்காப்பியர் கருத்துமாகும் என்று வலியுறுத்தும் மொ. அ. துரையரங்கனார் கருத்து அறியத் தக்கது 27

ந. சுப்பு ரெட்டியார், ஒத்த அன்புடைய தலைவன் தலைவியர் ஒருவரையொருவர் காண்பது ஊழ்வலியினால் என்பதை எடுத்துக்காட்டி, ஊழின் ஆணைக்குக் காரணமாவது அவ்விருவரும் பண்டைப்பிறப்புக்களில் பயிலியது கெழீஇய நட்பென்பார், 'ஒன்றியுயர்ந்த பாலதாணை' என்றும் பிறவிதோறும் பழகிய அன்பின் தொடர்ச்சியே ஒருவரையொருவர் இன்றியமையாதவராகக் காணுதற்குரிய காதற்கிழமையை வழங்கியதென்பார் 'ஒத்தகிழவனும்

கிழத்தியும் காண்ப' என்றும் தொல்காப்பியனார் கூறினார் என்பதைப் புலப்படுத்தினார்.28

வ. சுப. மாணிக்கனார்,29 லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்,30 ம. ரா. போ. குருசாமி31 ஆகியோர் இந்நூற் பாவைக் காட்டி, காதலுக்கு ஊழின் ஆணை காரணம் என்பதை விளக்கித் தமிழர்கள் ஊழின் ஆற்றலை நம்பினார்கள் என்பதைத் தொல்காப்பியர் தெளிவாக்கியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் அறியத்தக்கன.

புலவர் குழந்தை, புலவர் செந்துறைமுத்து ஆகியோர் ஆண் பெண் என்னும்இருபாலின் தூண்டுதல் பால்என்றும், பருவமடைந்த இருவர்அத்தன்மையால் தூண்டப்பெற்றுக்கூடுவர்என்றும் கூறுவது தொல்காப்பியர் கருத்திற்கு ஏற்றதாகத் தோன்றவில்லை. பருவம் வந்த ஆண், பெண் பால் இயல்பிலேயே இருவரைத் தூண்டுதல் பால் என்றால், உலகில் எதிர்ப்படும் இளமையுடையார் பலரும் பால் கவர்ச்சியும் பருவமும் காரணமாகக் காதல் கொண்டு விடுவதில்லை. குறிப்பிட்ட தலைவன் தலைவியர் மட்டும் ஒருவரை ஒருவர் காதலிப்பதற்கு யாது காரணம் என்று சிந்திக்கும் போது-தான் ஊழின் இடம் புலனாகிறது.

அ. கி. நாயுடு குறிப்பிட்டது போல் இப்பிறவியின் வினைப் பயன் தலைவன் தலைவியரைக் கூட்டும் என்றால் பருவம் அடைவதற்கு முன்னுள்ள அறியா இளமைக் காலத்தில் அவர்கள் செய்யும் செயல்கள் வினையாகத்தக்கனவா? அவை வினைப்பயனை நல்குவனவா என்ற வினாக்கள் தோன்றும். எல்லாப் பொருத்தங் களும் உடைய தலைவன் தலைவியர் உள்ளத்தால் ஒன்றுபட்டுக் கூடுவதற்குக் காரணமாகத்தான் ஊழைத் தமிழர் கருதினர். தொல்காப்பியர், வாழ்க்கையின் முதற்படியாகிய காதல் வாழ்க்கைக்கு ஊழ் காரணம் என்று குறிப்பிட்டதால் வாழ்க்கையின் மற்ற நிகழ்ச்சிகளுக்கும் ஊழ்தான் காரணம் என்னும் கருத்துடையவர் என்பதும், பழவினைப் பயன் ஊழ் என்னும் பழந்தமிழர் சிந்தனை தொல்காப்பியருக்கு உடன்பாடானதே என்பதும் தெளிவாகும்.

வினையும் ஊழும் :

வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்32

என்னும் நூற்பா முதனூல் செய்யும் ஆசிரியர்பற்றிக் குறிப்பிடுகிறது. இருவினையிலிருந்து நீங்கியவனும், பேரறிவுடையவனுமாகிய முனைவனால் செய்யப்படுவது முதல்நூல் எனப்படும். மக்களாகப்

பிறந்தவர்கள் இருவினையால் பற்றப்படுகின்றவர்களாதலின், இயல்பாகவே இருவினைகளிலிருந்து நீங்கியவன் இறைவனே என்றும், அவன் செய்தது முதல்நூல் என்றும், பின்னர் அந்நூலைத் தொடர்ந்து மற்றவரால் செய்யப்படுவது வழிநூல் என்றும் இலக்கண ஆசிரியர் கூறுவர்.[33] இக்கருத்தினையே இந்நூற் பாவில் தொல்காப்பியர் விளக்குகிறார். திருவள்ளுவர்,

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்[34]

என்று குறிப்பிட்டிருப்பதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. 'வினை என்பன இருவினை' என்பர் பேராசிரியர்.[35] இறைவன் இரு வினையின் நீங்கியவன் என்பதை இந்நூற்பாவினை எடுத்துக்காட்டி ந. சுப்புரெட்டியார் விளக்கியுள்ளார்.[36]

இறைவன் இயல்பாக வினையிலிருந்து நீங்கியவன் என்பதால் அவன் செயலிலிருந்து நீங்கியவன் என்பதுபொருளன்று. செயலினால் விளையக் கூடிய பயன்கள் அவனைப்பற்றமாட்டா என்பதே பொருளாகும்.

பால் என்பது வினையின் பகுதி எனவும், அவரவர்க்குரிய வினைப்பயனை, பங்கினை வகுத்து வரையறுக்கும் தெய்வம் பால் வரை தெய்வம் எனவும் கருத முடிகிறது. பால்வரை தெய்வத்தால் பகுக்கப்படும் பால்ஊழ். அவ்வூழின் ஆணையே பாலது ஆணை என்று சொல்லப்படும் பால்வரை தெய்வத்தின் ஆணை. நல்வினைப் பயன் ஆகூழ் என்றும் தீவினைப் பயன் போகூழ் என்றும் திருவள்ளுவரால்[37] குறிக்கப்படுவதற்கு முன்னர், ஒன்றாக்குவது, வேறாக்குவது என்று இருவகை ஊழைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியம் இலக்கண நூலாதலின் இலக்கியங்களில் சொல்லப்படுவது போல் விரிவாகச் செய்திகள் இந்நூலில் இடம்பெற வாய்ப்பில்லை. தொல்காப்பியர் கருத்தை உரையாசிரியர்களின் விளக்கங்களைக் கொண்டே அறியவேண்டியுள்ளது. ஆயினும், பழ வினைப் பயன் ஊழ் என்றும் அவ்வூழ் இருவகைப்படும் என்றும் வாழ்வின் அடிப்படையான காதல் வாழ்க்கையிலிருந்து மற்றைய அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் ஊழே காரணமாக அமைகின்றது என்றும் பழந்தமிழர் கொண்ட ஊழ்பற்றிய கருத்தினைத் தம் நூலில் ஓரிரு இடங்களிலேயே தெளிவாகப் புலப்படுத்தினார் தொல் காப்பியர் என்பது குறிப்பிடத்தக்கது.

சங்க இலக்கியங்களில் ஊழ் பெறும் இடம் :

சங்க இலக்கியங்களில் ஊழ் என்னும் சொல், மலர்தல், முதிர்தல், கனிதல் ஆகிய உலகியல் பொருளிலேயே மிகுதியாக

ஆட்சி பெற்றுள்ளது என்றும், ஐங்குறுநூற்றிலும் பட்டினப்பாலையிலும் மட்டும் ஊழ்ப்பொருளில் இச்சொல் 38 ஆளப்பெற்றுள்ளது என்றும் முன்னியலில் விளக்கப்பெற்றது.

ஊழ் எனும் சொல் ஊழ்கோட்பாட்டினை வலியுறுத்தும் வகையில் மிகுதியாக இடம் பெறாவிட்டாலும், ஊழோடு தொடர்பு உடைய பிறசொற்கள் இக்கோட்பாட்டினை வலியுறுத்துகின்றன. சங்க இலக்கியங்களில் காதல்வாழ்வு இன்ப, துன்ப உணர்வு நிலைகள், அறிவுறுத்தி ஆற்றுவிக்கும் இடங்கள் ஆகிய இன்றியமையாத சூழல்களில் இக்கோட்பாடு வலியுறுத்தப்பெறுகிறது. வாழ்க்கையின் நிகழ்ச்சிகளில் ஆட்சி செலுத்தும் ஒன்றாக ஊழ் இடம்பெறுவதையும் காணமுடிகிறது.

ஊழ்க்கோட்பாட்டினையுணர்த்தும் மற்ற சொற்கள் :

சங்க இலக்கியங்களில் பால், முறை, வினை ஆகிய சொற்கள் இக்கோட்பாட்டினையுணர்த்துகின்றன. பால்39 நற்பால் 40 நோய்ப் பால்,41 அறனில்பால்,42 முறை,43 அறவினை,44 இருமை வினை,45 செய்வினை,46 தொல்வினை,47 தொல்வினைப்பயன்,48 நல்வினை,49 பழவினை.50 முன்னியவினை,51 வினை,52 வினையின் விழுப்பயன்,53 ஆகிய சொற்கள் ஊழ்க்கோட்பாட்டினை உணர்த்துகின்றன.

தெய்வம்54 என்னும்சொல் கடவுட் பொருளில் பலவிடங்களில் ஆளப்பட்டிருப்பினும் ஊழ்ப்பொருளில் ஆளப்பெறவில்லை. முறை55 என்னும் சொல் வரிசைமுறை, ஒழுங்கு, அறம், மரபு ஆகிய பொருள்களில் இடம் பெற்றிருப்பினும் புறநானூற்றில் மட்டும் ஊழ்ப்பொருளில் ஆளப்பெற்றுள்ளது. பால்56 என்னும் சொல் உண்பொருளான பாலையும் பகுதி, கூறு, புலம், ஆகிய பொருள்களையும் குறிப்பிட்டதுடன், மேற்காட்டிய இடங்களில் ஊழ்ப்பொருளிலும், வினை57 என்னும் சொல் தொழில், செயல் என்னும் பொருளில் பலவிடங்களில் ஆளப்பட்டதுடன், மேற்காட்டிய இடங்களில் ஊழ்ப் பொருளிலும் ஆளப் பெற்றுள்ளது. விதி என்ற சொல் பிற்காலத்தில் ஊழ்ப்பொருளை ஏற்றது. சங்க இலக்கியத்தில் இச்சொல் அருகியே காணப்படுகிறது மந்திரவிதி58 என்று திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகிறது. மந்திரத்தில் வரையறுக்கப் பட்டது என்பதே இதன்பொருள். இங்கு இச்சொல்லுக்கு ஊழ்க் கோட்பாட்டுப் பொருளைக் கொள்ளவியலாது.

அறம், 59 அறநெறி60 ஆகிய சொற்களும் ஒருசில இடங்களில் ஊழ்ப்பொருளில் வழங்கப்படுகின்றன. வினை என்னும் சொல் சங்க இலக்கியங்களில் தொல்வினை, நல்வினை, பழவினை

என்றாற்போல அடைச்சொல் பெற்று ஊழ்ப்பொருளை உணர்த்தியது. சங்க இலக்கியங்களில் வினை, பால் ஆகிய சொற்களே பெரிதும் ஊழ்ப்பொருளில் ஆளப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஊழோடு உறவுடைய கோட்பாடுகள் :

சமய மெய்ப்பொருட் கோட்பாடுகளில் கடவுள், அறம், இம்மை, மறுமை, துறக்கம், நரகம், வீடுபேறு ஆகியவை ஒன்றோடொன்று உறவுடையவை என்பது முன்னியலில் விளக்கப்பட்டது. பழந்தமிழர் கடவுள்நம்பிக்கையும் வழிபாடும் உடையவர் என்பதைச் சங்க இலக்கியங்களால் அறிய முடிகிறது. பிற்காலத்தில் தோன்றியவாறு கடவுள் போன்ற மெய்ப்பொருட் கோட்பாடுகளை விளக்கத் தனி நூல்கள் சங்க காலத்தில் தோன்றவில்லை. நிறுவனவழிப்பட்ட சமயங்கள் தோன்றிய பின்னர்தான் அவ்வச் சமயங்களையொட்டிய மெய்ப்பொருட் கோட்பாடுகளும் வரையறை செய்யப்பெற்று நூல்களில் விளக்கப்பெற்றன. இவ்வாறு தோன்றிய நூல்கள் மெய்ப்பொருள் நூல்கள் (தத்துவ நூல்கள்) எனப்பெற்றன.

பிற்காலத்தில் இறைவன் இருள்சேர் இருவினையும் சேராதவன் என்றும்,வினைகளால் பற்றப்படும் உயிர்களின் வினைப் பயனை அழித்து உயிர்களுக்கு அருள் செய்பவன் என்றும் கூறப் பட்டது போலச் சங்க இலக்கியங்களில் கூறப்படவில்லை. உயிர்களின் ஊழ்வினைக்கும் கடவுளாற்றலுக்கும் உள்ள உறவு பற்றியறிய முடியாவிட்டாலும் அறம், ஊழ் ஆகியவையே கடவுளாற்றலைப் போலக் கருதப்பட்ட உண்மையைச் சங்க இலக்கியங்கள் அளிக்கின்றன.

அறமும் ஊழும் :

அறம் என்பதை வரையறுத்துச் சொல்வது அரிதாயினும், நற்செயல்களைச் செய்தல் அறம் என்றும், தீச்செயல்களைச் செய்தல் அறமல்லன என்றும் கூறப்படும்.

> ஒரு மனிதன் செய்கின்ற குறிப்பிட்ட செயலால் அவனுக்கு நன்மையும், பிறருக்கு எவ்வழியிலேனும் தீமையும் உண்டாகுமானால், அதை அறச்செயல் என்று உலகம் கொள்ளுவதில்லை. எனவே எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் நன்மை பயக்கத்தக்க செயல் களையே சான்றோர்கள் கருதுகின்றனர். அத்தகைய நற்செயலைச் செய்வதால் ஒருவனுக்குப் புகழ் உண்டாகிறது; மறுமைக்கு ஒரு பயனும் விளைகின்றது. அப்பயனைப் 'புண்ணியம்' என்று கூறுவர்61

என்னும் க. த. திருநாவுக்கரசுவின் கருத்து அறத்திற்குரிய விளக்கமாகக் கருதத்தக்கது.

சமயத் துறையில் அறத்தின் பயன் புண்ணியம் என்று கூறுவது மரபு. நற்செயல்களின் விளைவாகக் கிடைக்கும் நல்வினைப் பயனாகிய புண்ணியத்தை அறம் என்று கூறும் வழக்கு மிகத் தொன்மையானது என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்களில் காணலாம்.[62] நேரிய நெறியில் செம்மை வாழ்க்கை வாழ்வதற் குரிய எழுதாச் சட்டமாக அறம் அன்று விளங்கியது. சான்றோர் உயர் அற நெறிகளை அற நூல்களின் வழி மக்களுக்கு உணர்த்தி அறவழிப்படுத்தினர். அறிவுடைய சான்றோர்கள் காட்டிய வழியை அற வழியாக - ஆட்சி வழியாக மக்களும் மன்னரும் பின்பற்றி வந்தனர். அறத்தைக் கடைப்பிடித்தால் இம்மையில் இன்ப வாழ்வும், மறுமையில் அழியா இன்பமாகிய பேரின்ப வீடுபேறும் அடைய முடியும் என்று பழந்தமிழர் நம்பினர். கடவுள் நம்பிக்கை யில்லாத சமணரும் புத்தரும் அறம், ஊழ் ஆகியவற்றைப் பெரிதும் நம்பினர், அறம், ஊழ் ஆகியவையே பயனை நல்கும் ஆற்றல் உடையன என்று கருதியமையால் அறம் வழுவாமலிருக்க வற்புறுத்தினர். ஆதலின் அறத்தை மட்டுமே நம்பிய நிலையில் இருந்து அது ஒழுக்க இயல், சமயம் ஆகியவற்றுடன் இணைந்து தெய்வத் தன்மை பெற்று அறத் தெய்வமாகப் போற்றப்பட்ட வளர்ச்சி நிலையைக் காண முடிகிறது. அறத்திற்கு அஞ்சிய உணர்வு மக்களிடம் இருந்த நிலையில் தனி மனிதனுடைய உரிமை, கடமை, சமூகப் பிணைப்பு, இல்லற இணைப்பு, பழக்க வழக்கங்கள், விருப்பு, வெறுப்புக்கள் ஆகிய அனைத்தியல்புகளும் அறக் கோட் பாட்டினால் கட்டுப்படுத்தப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டுச் சமுதாயக் கூட்டு வாழ்க்கைக்கு மனிதன் பண்படுத்தப்பட்டான் என்று கொள்ளலாம்.

பண்டைத் தமிழ்ச் சான்றோர் அறத்தினை ஒரு கொள்கை யாகவோ, கோட்பாடாகவோ, சமய நெறியாகவோ மட்டும் கருத வில்லை, கடவுள், அறம். சமயம் ஆகியவற்றை வாழ்க்கை நெறி யாகவே கொண்டு வாழ்ந்தனர்; இவை வாழ்க்கையில் இருந்து விலக்க முடியாதவையாக அமைந்திருந்தன. ஆகவே தனி மனிதனின் செயல்முறைகளை நெறிப்படுத்துவதுடன் அவனைப் படிப்படியாகப் பண்படுத்தி, மனித வாழ்க்கையின் உயர் குறிக்கோ-ளாகிய 'பேரா இயற்கைப் பெருநிலையை'[63] பேரின்ப வீடு பேற்றினை அடைய ஆக்கமும் ஊக்கமும் நல்கிப் பெருந்துணை செய்வது அறம் என்பதே முன்னைத் தமிழரின் நம்பிக்கையாகும்.

அறம் செய்தால் நற்பயன் விளையுமென்றும் அறமல்ல செய்தால் தீப்பயன் விளையுமென்றும் சங்க காலத் தமிழர் நம்பினர்.[64] மன்னர் அறத்தின் வழியில் ஆட்சி நடத்த வேண்டுமென்பதைப் புலவர்கள் வலியுறுத்தினர்.[65] உறையூர் அறம் நின்று நிலைபெற்ற இடமாகப் போற்றப்பட்டது.[66] மன்னர் நால்வகைப் படைவலிமையைப் பெற்றிருப்பது மட்டும் சிறப்பு ஆகாது. அவர்தம் கொற்றம் அறநெறியைக் கொண்டதாக இருக்க வேண்டுமென்று சான்றோர் கூறினர்.[67] 'அறம்புரி கொள்கை நான்மறை முனிவர் வேள்வி செய்தல் அறம் காத்தற்கு என்று கருதப்பட்டது'.[68] உள்ளம் ஒத்த தலைவன் தலைவியரைச் சேர்த்து வைப்பதனை அறத்தொடு நிற்றல் என்பர்.[69] இவ்வாறு இருவரையும் சேர்த்து வைக்கவில்லையாயின் அவர்கள் உடன் போக்கில் சென்று மணஞ்செய்து கொண்டு கற்புநெறி காப்பது அறமெனப் பட்டது.[70] தலைவியைப் பெற்று அவளது நலத்திற்குப் பாடுபடும் அன்னையாயினும், தலைவியை இற்செறித்து வைக்குமிடத்து 'அறனில்யாய்'[71] எனப்படுகிறாள். தலைவன் தலைவியை அறியேன் என்று பொய் கூறினும்,[72] வரைவு நீட்டித்துப் பிரியினும்[73] அவன் அறனிலாளன் என்று கூறப்பட்டான். தலைவன் நல்லவனாயின் அவன் அறமுடையவன் என்று தலைவியால் போற்றப்பட்டுள்ளான்.[74] தலைவன் தலைவி சேர்ந்து வாழ்வதே அறமாகக் கருதப்பட்டமையின், 'மடலேறுதல்' கூடத் தலைவியை அடைவதற்காகவே என்பதால் அறம் எனக் கூறப்பட்டது.[75] வையாவிக் கோப்பெரும் பேகன் தன் மனைவி கண்ணகியைப் பிரிந்திருப்பதையறிந்த பரணர், அவ்வாறு பிரிந்திருப்பது அறமல்லவென்று கூறி அவளுடன் சேர்ந்து வாழ்வதே அறமெனச் சாற்றிச் சேர்த்து வைத்ததை அறிய முடிகிறது.[76]

வாழ்த்தும்போது அறம் சிறக்க வேண்டுமென்றும், அறமல்லது அழிய வேண்டுமென்றும் வாழ்த்தினர்.[77] நலங்கிள்ளி ஆவூரை முற்றுகையிட்ட போது நெடுங்கிள்ளி கோட்டையினுள் கதவடைத்திருத்தல் அறமற்ற செய்கையென்று கோவூர்கிழாரால் இடித்துக் கூறப்பட்டது.[78] கொடும்பாவம் செய்தவருக்கும் கழுவாயுண்டு; ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்தோருக்குப் பாவ நீக்கமில்லை என்று அற நூல்கள் கூறியதாகப் புறநானூறு குறிப்பிடுகிறது.[79] ஆய் அண்டிரன் அறவிலை வணிகனல்லன் என்றும், அவன் வறியவர்க்கு வழங்கும் கடனறிந்து வழங்கக் கூடிய வள்ளன்மையுடையவன் என்றும் கூறப்பட்டுள்ளான்.[80]

ஊழ்க் கோட்பாட்டுடன் தொடர்புடையவற்றுள் கூற்றமும் ஒன்று. உயிரின் இருவினைகளுக்கேற்ப அதன் முடிவுக் காலத்தில் அறம் தவறாது அவ்வுயிரைக் கவரும் செயல் கூற்றுவனுடையது என்பது பழந்தமிழர் நம்பிக்கை. வள்ளல்களும் பிறர்க்குப் பயன்தரும் வாழ்வுடைய அறவோர்களும் இறந்த போது கையற்று வருந்தும் நிலையில் கூற்றுவனை 'அறனில் கூற்றம்' என்று வெகுண்டு கூறுவதைக் காண முடிகிறது.[81] பிறருக்குப் பொருள் கொடுத்தலில் குறைவின்றி அறனறிந்து ஒழுகும் தீதில்லாதவனுடைய செல்வம் பெருகும்[82] என்னும் கருத்தினைக் கொண்டு அறமற்றவன் செல்வம் தேயும் என்ற குறிப்பினை உணரமுடிகிறது.

அறம் பற்றிப் பேசும் மேற்கண்ட சூழல்களை ஒருங்கு வைத்துக் காண்கையில் மாந்தர் செய்யத் தகுவனவும் தவிரத் தகுவனவுமே அறம் என்பது தமிழர் கோட்பாடு என்னும் கருத்துப் புலனாகிறது. தொல்காப்பியத்தில் ஊழை வரையறுக்கும் தெய்வம் பால்வரை தெய்வம் எனப்பட்டது. சங்க இலக்கியங்களில் அறம், ஊழ் இவற்றைத்தெய்வம் என்பதனுடன் இணைத்துப் பேசவில்லையாயினும், அறமும் ஊழும் தெய்வத்தைப் போலவே ஆற்றலுடையனவாகக் காட்டப்பட்டுள்ளன.[83] நல்லன செய்தலாகிய அறமும், நன்மை தீமை என்னும் இருவினைப் பயன்களாகிய ஊழும் ஒன்றல்ல என்பதும் இவை ஒன்றோடொன்று தொடர்புடைய இருவேறு ஆற்றல்கள் என்பதும் பழந்தமிழர் கொண்டிருந்த கொள்கையாகும்.

இம்மை மறுமையும் ஊழும் :

இம்மையென்பது இவ்வுலக வாழ்க்கையாகும். உயிரின் வாழ்வு இவ்வுலகத்துடன் முடிவுறாமல் தொடரும் என்றும், இம்மை வினைகளுக்கேற்ற பயன் மறுமையில் கிட்டும் என்றும் தமிழர் நம்பினர். மறுமை என்பது மறுபிறப்பு, புத்தேளிர்உலகம் (துறக்கம்) நிரய உலகம் (நரகம்) வீடுபேறு ஆகியவற்றைக் குறிக்கும் எனினும் இச்சொல் மறுபிறப்பினையே மிகுதியாகக் குறிப்பிடும். உலகில் தோன்றிய பழைய இனமக்களுக்கெல்லாம் மறுமையுணர்வு இருந்ததுபோலவே தமிழர்க்கும் இருந்தது; மறுபிறப்பில் தமிழர் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தனர்.

காதல் பிறவிதோறும் தொடர்ந்துவருவது எனப் பழந்தமிழர் நம்பியதால் தலைவியொருத்தி இப்பிறப்பு நீங்கியபின் மறுபிறப்பு உண்டாயினும், தன் தலைவனே தனக்குக் கணவனாகவும், தானே அவனுக்குத் தலைவியாகவும் ஆகவேண்டுமென்றும் விரும்பியதாகக் குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகிறது [84] பொருள்தேடச் செல்ல விரும்பிய தலைவனைச் செலவழுங்குமாறு செய்வித்த தோழி,

முறைமையின் நீங்கிப் பொருள் தேடுவார்க்கு அப்பொருள்தான் அவரை நீங்கி இம்மையிலும் மறுமையிலும் பகையாவதை அறியாயோ? என அறிவுறுத்தியதாக அறிய முடிகிறது.[85] கொல்லு கின்ற ஏற்றினைத் தழுவும் வெற்றி வீரனையே ஆயர்மகள் மணப்பாள்; ஏற்றின் கோட்டிற்கு அஞ்சுபவனை மறுபிறப்பிலும் புல்லாள் என்க் கலித்தொகை காட்டுகிறது.[86] தலைவன் தலைவி யிடம் கொண்ட காமநோய் இன்றுபோலவே என்றும் அழியாததாய் மறுமையிலும் நிலைபெறுமாதலின் தலைவியை இப்பிறவியின்கண் அடைய முடியாவிட்டாலும் மறுமையுலகத்து அடையும் பயனுண்டு என்று தன்னெஞ்சிற்குச் சொல்லியதாகக் குறுந்தொகைப் பாடல் குறிப்பிடுகிறது.[87] நல்ல ஆண்மக்களைப் பெற்ற செம்மலோர் இவ்வுலகத்துப் புகழோடு விளங்கி மறுபிறப்பில் மேலுலகத்தையும் தடையின்றி அடைவர் என்பதை,

இம்மையுலகத்து இசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின் றெய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோர்[88]

என்னும் அகநானுற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.

இம்மையில் நன்மையே செய்தவருக்கு அச்செயல் மறுமையில் அவருக்கு நன்மையே விளைக்குமல்லது தீங்கினை விளைப்பதில்லை என்பது பழமொழியாகுமென்று,

.... இம்மை
நன்றுசெய் மருங்கில் தீதில்என்னும்
தொன்றுபடு பழமொழி யின்றுபொய்த்தன்றுகொல்[89]

என்னும் அகநானுற்றுப்பாடலால் அறிய முடிகிறது.

பேகன் என்னும் வள்ளல் மறுபிறப்பின் பயன்கருதாது பிறர் வறுமையை நோக்கி எத்துணைப் பொருள் கொடுப்பதும் அழகான தென்று கொடுக்கும் வள்ளன்மையுடையவன் என்று பரணர் பாராட்டியுள்ளார்.[90] உயர்ந்த நட்புடையவர்கள் மறுமையிலும் நண்பர்களாக இருக்கவேண்டுமென்று விரும்புவர் என்னும் கருத் தினைக் கபிலர் ஊழிடம் வேண்டிய பாடல் காட்டுகிறது.[91] ஆதலின் மறுமையில் பிறப்பினை அடைவது அல்லது புத்தேள் உலகை அடைவது அல்லது நரகையடைவது ஆகியவற்றுக்கு உயிர்கள் இம்மையில் செய்யும் வினைகளே காரணம் என்பதைச் சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

துறக்க, நரகமும் ஊழும் :

இப்பிறவியில் நல்லறம் காப்போர் மறுமையில் துறக்கத் திற்குச் சென்று தம் நல்வினைக்கீடான இன்பத்தைத் துய்ப்பர்

என்னும் நம்பிக்கை பழந்தமிழர்க்கு இருந்தது. துறக்கம், மேலுலகம், விண்ணுலகம், தேவருலகம், புத்தேள் உலகம், அமரருலகம் என்றெல்லாம் அழைக்கப்படும் அவ்வுலகம், மண்ணில் புண்ணியம் செய்தோர் இன்பத்தை மட்டுமே துய்ப்பதற்குரியது என்று கருதப் படுகிறது. மண்ணுலகில் அறமல்லனவாகிய பாவங்களைச் செய்தோர் மறுமையில் நிரயம், நரகம், கீழோருலகம் என்னும் கொடியவுலகினை அடைவர் என்று நம்பினர்.

பெறற்கரும் தொல்சீர்த் துறக்கம்92

துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை93

என்னும் குறிப்புக்கள் துறக்கம் பற்றிய சான்றுகளாகும்.

மாந்தரஞ்சேரலிரும்பொறை ஓம்பியநாடு புத்தேள் உலகத்தையொக்கும் என்று பிறர் சொல்லக் கேட்டு நேரில் வந்து கண்டதாகக் குறுங்கோழியூர்கிழார் பாடியுள்ளார்.94 இப்பூவுலக இன்பமும், தேவருலக இன்பமும் அழகு பொருந்திய தலைவியுடன் ஒருநாள் துய்க்கும் இன்பத்திற்கு ஈடாகமாட்டா என்று தலைவன் கூறியதாகஅறிய முடிகிறது.95 தலைவியொருத்தியைத்தலைவன் பிரிந்ததனால் உண்டாகிய துன்பத்தை இன்பமாகக் கருதிய அவள், அன்புடைய உறவினர் செய்யும் இன்னாமை தேவருலகஇன்பத்தை விடச் சிறந்தது என்று கூறினாள் என்னும் குறிப்பும் கருதத்தக்கது.96

தேவருலகம் 'மேலோர் உல்கம்'97 என்றும் கூறப்பட்டது. அவ்வுலகில் வாழ்வோர் அமரர்கள் என்றும்அவர்கள் மூவாத்தன்மை உடையவர்கள்98 என்றும் கறைமிடற்றண்ணலாகிய சிவபெருமான் முப்புரங்களையழித்துத் தேவர்களுக்கு வெற்றியைத் தந்தான் என்றும் அறியமுடிகிறது.99

தலைவன் பொருள் தேடுவதற்குச் செல்கிறான் எனக் குறிப் பாலறிந்த தலைவி வருந்த, அவளது வருத்தத்தினை மாற்றும் தோழி, உன்னைப் பிரிந்து சென்று, தேவருலகமும் அவர்கள் உண்ணும் அமிழ்தமும் ஒருசேரப்பெறினும் அவ்விடத்தே தலைவர் காலத்தை நீட்டிக்க மாட்டார் என்று கூறியதாக அகநானூறு குறிப்பிடுகிறது.100

தீவினை செய்தவர் கொடிய நரகத்தையடைவர் என்னும் கருத்தும் பலவிடங்களில் இடம்பெற்றுள்ளது. சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரலிரும்பொறையைக் கண்டபோது, நரிவெரூஉத்தலையார்.

அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயம் கொள்பவ ரோடொன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி[101]

என அறிவுறுத்தியது கருதத்தக்கது.

நல்லியக்கோடன் என்னும் வள்ளல், நிரயம் போலத் துன்பம் செய்த தன் வறுமையைப் போக்கியதாக நன்னாகனார் கூறியுள்ளார்.[102] இற்செறிக்கப்பட்ட தலைவி தன் அன்னையின் காவல் மிகுதிக்கு அஞ்சித் தாயின் நெஞ்சத்தைக் கொடிய நிரயத்திற்கு ஒப்பிட்டுக் கூறினாள்.[103] தலைவன் வரும் இரவு வேளையில் உறங்காமலிருக்கும் அன்னை பெண் கொலை புரிந்த நன்னனைப் போல நீக்க முடியாத நிரயத்தில் சென்று துன்புறுவாளாக எனக்கூறும் கருத்தும்சிந்திக்கத்தக்கது.[104] அலர் தூற்றும் பெண்டிர் நிரயம் புகுதற்கேயுரியர் என்று அகநானூற்றுத் தலைவி கூறுகிறாள்.[105]

இவ்வாறு துறக்கம், நரகம் பற்றிச் சங்க இலக்கியங்கள் கூறும் செய்திகளைக் கொண்டு காணும்போது, ஒருவன் செய்யும் வினை நல்வினையாயினும் தீவினையாயினும் அவ்வினைக்குரிய பயனை அவன் நுகர வேண்டுமென்பதும், நல்வினை செய்தவன் துறக்கம் அடைவான், தீவினை செய்தவன் நரகமடைவான் என்பதும் அறிய முடிகிறது. செய்த வினையின் பயனைச் செய்தவன் அனுபவிப்பதற்குரிய நியதியே ஊழாதலின் துறக்கம், நரகம், ஊழ் ஆகியவற்றுக்கிடையே உள்ள உறவு புலப்படும்.

வீடுபேறும் ஊழும் :

அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கையும் சான்றோர் உறுதிப்பொருள்கள் என்பர். சங்கத் தமிழர் இவ்வுலக வாழ்விற்குரிய அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றை மட்டுமே மிகுதியாகக் குறிப்பிட்டுள்ளனர்.[106] இவ்வுலக வாழ்வில் அறத்தைப் பேணி, பொருள் இன்பங்களை நெறிப்படித் துய்த்து வாழ்வோர் முறையாக வீடு பேற்றினையடைவர் என்பது தமிழர் நம்பிக்கை. நல்வினை செய்தார் தாம் செய்த நல்வினையின் பயனைத் தேவருலகில் சென்று துய்ப்பர். நல்வினைப் பயன் மிகுதியால் தவத்தின் பெருமை நோக்க, துறக்க இன்பம் சிறிதாயின், துறக்கவுலக நுகர்ச்சி வேண்டாது மீண்டும் பிறவாத பேரின்பவீடுபேற்றைப் பெறுவர். உயிர் பிறப்பிலிருந்து விடுதலை பெறுவது வீடு. உயிர்கள் தம் நல்வினை மிகுதியால் தேவருலகம் சென்று இன்பத்தினை அனுபவித்தாலும் வீடுபேறு என்னும்

முத்தியை இறைவன் திருவடிப் பேற்றை அடைய வேண்டுமாயின் மீண்டும் மண்ணில் பிறக்க வேண்டுமென்பதே சான்றோர் கொள்கை. வினையற்றநிலையே வீடுபேற்றினைக் கொடுக்கும். கோப்பெருஞ்சோழன் பாடிய பாடல் ஒன்றில் மட்டுமே வீடுபேறு பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது 107 பின்னாளில் திருக்குறளில், 'மற்றீண்டுவாராநெறி', 108 'பேரா இயற்கைப் பெருநிலை', 109 'வானோர்க்கு உயர்ந்த உலகம்' 110 என வீடுபேறு பற்றிய குறிப்புக்கள் இடம் பெற்றிருப்பது கருதத்தக்கது.

பழந்தமிழர் ஊழின் ஆற்றலை வெல்ல முடியாதென்றும், அதனைத் துய்த்தே கழிக்க வேண்டுமென்றும் நம்பினர். ஊழினைத் துய்த்துக் கழித்தபின், வினை நீக்கமாகிய, ஊழற்ற நிலையினை அடைந்து, உயிர்களின் முடிவான உயர் குறிக்கோளாகிய வீடு பேற்றினை எய்திப் பேரின்பத்தில் அமைதியுறலாமென்பது பழந் தமிழர் நம்பிக்கையாதலின் வீடுபேற்றிற்கும் ஊழுக்கும் உள்ள தொடர்பு புலனாகும்.

ஊழ் பற்றி மக்கள் பேசும் சூழல் :

சங்க காலத் தமிழர் ஊழின் ஆற்றலை நம்பினர் என்பதும், ஊழ்க் கோட்பாட்டினை ஊழ் என்ற சொல்லால் குறிப்பிடுவதை விடப் பிற சொற்களால் அக்கோட்பாட்டினை விளக்குவதே மிகுதி என்பதும் இதுகாறும் அறிய முடிந்தது. ஊழின் ஆற்றலைப் பழந்தமிழ் மக்கள் என்னென்ன சூழல்களில் எவ்வெவ் வகையில் எண்ணிப் பேசினர் என்பதும் ஊழைக் குறித்து அவர்கள் கொண்டிருந்த உணர்வு நிலைகள் எவ்வாறிருந்தன என்பதும் அறியத் தக்கனவாகும்.

இன்பமும் துன்பமும் :

இன்பதுன்ப உணர்வுகள் மனத்தைத் தாக்கும் வேளையில் மக்கள் ஊழை நினைந்து பேசியிருக்கின்றனர். இன்பத்தை விழைவதும் துன்பத்தை வெறுப்பதும் மனித இயல்பு. இன்பம் வரும்போது நல்வினைப் பயனால் வந்தது என்று எண்ணி ஊழை வியந்து பேசுவதை விடத் துன்பம் வந்தபோது ஊழைக் காரண மாகக் கருதிப் பேசுவதுதான் மிகுதி. நன்மை வரும்போது தன் முயற்சியால் உழைப்பினால் வந்தது என்று எண்ணி மகிழும் இயல்புடைய மனிதர் துன்பம் வரும்போது தமது வினையினால் வந்தது என்ற நினைவு இல்லாமல் வருந்துவர். இதுபோன்ற சூழ்நிலையில் மனிதனுக்கு ஆறுதல் தந்து வாழ்வில் பற்றுடைய வனாக்குவதற்குக் கண்ட அறிவார்ந்த காரணமே ஊழ் ஆகும். சங்க இலக்கியங்களில் இன்பம் வந்தபோதும் ஊழை நினையும்

நிலையினைக் காணமுடிகிறது. குறுந்தொகையில் மோதாசனார் பாடிய பாடல், தலைவனும்தலைவியும் உடன்போனவழி அவர்களை இடைச்சுரத்துக் கண்டோர்மகிழும் கூற்றில் அமைந்தது. தலைவன் இளமையில் அவளது கூந்தலைப் பிடித்து இழுக்கவும் அவள் அவனது புல்லிய தலைமயிரை வளைத்து இழுப்பாளாய் ஓடவும், அன்புடைய செவிலித்தாயர் இடைமறித்துத் தடுக்கவும் ஒழியாமல், அவர்களுக்குள் கலாம் விளைத்துக் கொள்வார்கள்; இப்பொழுது மலரைப் பிணைந்த இரட்டை மாலையைப் போன்ற அவர்கள் மணம்புரிந்து மகிழும் இயல்பை உண்டாக்கிய 'ஊழ்வினையே நீ நன்மையை உடையாய்' என்று இன்புற்றுக் கூறுவதாக அமைந்த கருத்து எண்ணத்தக்கது.111

கருவூர்க்கிழார்என்பார் பாடியபாடலில், தலைவி வரைவிடை ஆற்றாள் என வருந்திய தோழிக்குத் தலைவி, கயத்தை நாடிச் செல்லும் யானை, தன் முயற்சியின்றியே அருவி தந்த கொறுக்கந் தட்டையை உண்டாற்போல, விளையாட்டு விருப்பால் வந்த தலைவன் நல்லூழின் வயப்பட்டுத் தன்னைக்கண்டுஇன்புற்றானாதலின், தாம் தலைவனோடு கொண்ட கேண்மை பால்வயத்தாலாயது என்றும் அக்கேண்மை அறாது என்றும் மகிழ்ந்து கூறியதாக அமைந்த உவமைக் குறிப்பினால் ஊழ்வலி உணரத்தக்கதாகும்112

உலோச்சனார் பாடிய அகநானூற்றுப் பாடலில் களவொழுக்கத்திலிருந்த தலைவியைக் காணத் தலைவன் வந்தது பற்றிக் குறிப்பிடும்போது, முற்பிறப்பிலே பலநன்மைகளும் செய்து அவ்வினைப்பயன் பொருந்திய நல்வினையால் களவுநீங்கும்படி தலைவன் வந்து சேர்ந்தான் என்னும் கருத்தினை,

கானல் அல்கிய நங்கள வகலப்
பல்புரிந் தியறல் உற்ற நல்வினை

என்று தலைவி மகிழ்ந்து கூறுவது கொண்டு இன்பச் சூழ்நிலையிலும் ஊழ் பேசப்பட்டமையை அறிய முடிகிறது113

இன்ப உணர்வைவிட மனித மனத்தை எளிமையாகத் தாக்குவது துன்ப உணர்வு. துன்பத்தால் பாதிக்கப்பட்டோர் தமது துன்பத்திற்குக் காரணமாக ஊழைக் கூறுகின்றனர். நற்றிணையில் பாடியோர் பெயர் தெரியாத பாடலொன்று இதற்குத் துணையாகின்றது. தலைவன் பிரிவால் வருந்தும் தலைவி, ''கடுமையான சுரநெறியில் சென்ற காதலர்பால், அவரை வழிபட்டுப் பின்னே சென்றொழிந்த என்னெஞ்சம் முன்புசெய்த நல்வினையின் பயனை இப்பொழுது துய்க்கின்றது; அந்த நெஞ்சு போல நல்வினை செய்திலேனாகலின் இங்கேதங்கி ஊரார் தூற்றும் பழிச்சொல்லைக்

கேட்கும் தீவினையுடையேனாகி அதன் பயனைத் துய்க்கின்றேன். இவ்வாறு இருவினைப் பயனையும் துய்த்தலால் நகைதோன்ற, யானே என்னை நோக்கி நகை செய்து கொள்வேன்' என்று தன் துன்ப மிகுதியில் நல்வினை, தீவினை பற்றிக் குறிப்பிட்டு இருப்பது கருதத்தக்கது.114

தலைவன், கீழ்கடலிலுள்ள பறக்கவியலாத நாரை மேல் கடலிலுள்ள அயிரை மீனை விரும்பினால் பெறமுடியாது வருந்தும் என்ற உவமையைக் கூறித் தான் அடைய முடியாத சேய்மையான இடத்தளாக உள்ள தலைவியைப் பெறுதலரிது என்று எண்ணித் தன் நெஞ்சை நோக்கி, 'நீ துன்பத்திற்குக் காரணமான ஊழ்வினை யையுடையை' என்னும் கருத்தில்,

நோயை நெஞ்சே நோய்ப் பாலோயே115

என்று கூறி துன்புறுவதாகக் குறுந்தொகை கூறுகிறது.

தலைவி தோழியிடம் கூறுவதாக அமைந்த கபிலர் பாடல், தலைவனது தேர் பாதி இரவில் இங்கேவந்து மீண்டு சென்றதென்று அயலார் கூறுவதைக் கேட்ட தாய் தன்னைத் துன்புறுத்துவ தாகவும், அணிகலன்களையணிந்த அழகும் இளமையுமுடைய நல்வினை வாய்க்கப்பெற்ற மகளிர் தம்மை வருத்தாத தாயருடன் உள்ளனர் என்றும், தன் தாய் தன்னைத் துன்புறுத்துவதால் தான் தீவினையுடையள் என்றும் குறிப்பினால் கூறியதாக உள்ளது.116 இக்கூற்றில் நல்லூழ், தீயூழ் பற்றிய செய்தியை அறிய முடிகிறது.

தலைவியை ஆற்றியிருக்குமாறு வற்புறுத்தும் தோழியிடம், 'ஆற்றுக என்று சொல்வது உனக்கு எளியது; ஆனால் எனக்கோ அது செயற்கரியதாய் இருக்கின்றது; தலைவன் குறித்துச் சென்ற கார்ப் பருவமும் கடந்து, கூதிர்ப் பருவமும், பனிமுதிர்ப் பருவமும், வந்துற்றது. கண்ணோட்டமில்லாத வாடைக் காற்றானது தலைவனிடம் சென்று நீ பொருளீட்டுவதிலேயே நீண்ட காலம் மகிழ்ந்தனை என இடித்துரைத்து, துணையில்லாத வாழ்க்கையில் நாம் பெற்றுள்ள துன்ப நிலையினை எடுத்துக் கூறி அறிவுறுத்து மானால் நமக்கு நன்மை பயக்கும்; அவ்வாறு செய்யாமல் கண்ணில்லாத வாடை முன்னைவிடப் பெரிதும் வருந்தி நீரொழுகும் கண்ணையுடையேம் ஆகும்படி நமக்கு மட்டுமே துன்பமாக அமைந்தது; நமது தொல்வினைப் பயன் அத்தன்மைத்துப் போலும்' என்று வருந்திக் கூறியதாக,

பனிவார் கண்ணே மாக யினியது
நமக்கே யெவ்வம் ஆகின்று
அணைத்தாற் றோழிநந் தொல்வினைப் பயனே11Y

என்னும் பா டலா அறிய முடிகிறது. இப்பாடலில் தலைவி ஆற்ற முயன்றும் இயலாத நிலையில் துன்பத்தைத் துய்க்க வேண்டு மென்பது ஊழின் முடிவு போலும் எனத் தோழியிடம் கூறி ஆறுதலடைந்தது அறிய முடிகிறது.

பாரியும் கபிலரும் உயிரிற் கலந்த நட்பினையுடையவராய் விளங்கினமையைப் புறநானூற்றுப் பாடல்களால் அறியலாம். மூவேந்தரின் சூழ்ச்சியால் வேள்பாரி இறந்தபின், பாரியைப் பிரிந்த பெருந்துன்பம் தாங்காமல் கபிலர் வருந்தினார். வடக்கிருந்து உயிர்துறந்து மறுமையில் கூடிப் பண்டே போல் நட்புக் கிழமையால் நல்வாழ்வு வாழ்தல் வேண்டுமென அவர் எண்ணினார். பாரியை மனக்கண்ணில் கண்டு, ''மாவண்பாரி என்னை நீ பல ஆண்டுகள் பேணிப் பாதுகாத்தாய்; உயிர் கலந்து ஒன்றிய கேண்மையுடை யனாய் ஒழுகினாய்; ஆயினும் நீ இவ்வுலகினின்றும் பிரியுங்கால் என்னையும் உன்னோடு உடன்வரவிடாது பிரிந்தாய்; இதனால் நீ என்பால் வேறுபட்டாய் போலும்; யான் உனக்குப் பொருந்தாதவன் போலும், எவ்வாறாயினும் ஆகுக; இனி, இப்பிறப்பில் நம்மிரு வரையும் காட்டி ஒன்றிய நட்பால் உயர்வாழ்வு வாழச் செய்த நல்லூழ் மறுமையிலும் உன்னோடு உடனுறையும் வாழ்வை நல்குவதாக,'' என்ற கருத்துடன் கூறிய,

இம்மை போலக் காட்டி யும்மை
இடையில் காட்சி நின்னோடு
உடனுறை வாக்குக உயர்ந்த பாலே118

என்னும் பாடல் வரிகள் கபிலர் தம் துன்ப மிகுதியால் ஊழை வேண்டிப் பாடியனவாக அமைந்துள்ளன.

ஆற்றிக் கொள்ளல் :

ஒருவருக்குத் துன்பம் வரும்போது அத்துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அவர் வருந்துவதுண்டு. அவ்வாறு வந்த துன்பத்தைத் தாங்கும் மனநிலையை, ஆற்றலைத் தந்து அவருக்கு நம்பிக்கையை ஊட்டும் ஒன்றாக ஆற்றிக் கொள்ளும் துணையாக ஊழ் பேசப்பட்டுள்ளது. குறுந்தொகையில் சிறைக்குடியாந்தையார் பாடிய பாடல், தாய் முதலியவர்களால் காக்கப்படும் தலைவி காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகித் தோழிக்குச் சொல்லியதாக அமைந்தது. பிறவிதோறும் தலைவனும் தலைவியுமாகி இருவேமாகப் பயின்று வந்த இவ்வுலகத்தில் பிரிவினால் ஒருவரை விட்டு ஒருவர் நீங்கி வாழ்வதைக் காட்டிலும், பூவானது தம் இடையிலே படினும், அக்காலம் பல ஆண்டுகள் கடந்தாற் போன்ற துன்பத்தையுண் டாக்கும் தன்மையையுடைய நீரின்கண் உறைகின்ற மகன்றில்

பறவைகளின் புணர்ச்சியைப் போலப் பிரிவதற்கரிதாகிய நீங்காத காமத்தோடு, ஒருங்கே எம்உயிர் போவனவாகுக என்று தலைவி கூறியதாக அமைந்துள்ளது.[19] தலைவனைப் பிரிந்திருத்தலினும் உயிர் நீத்தல் சிறப்புடையது என்றும் அவ்வாறு இருவருயிரும் ஒருங்கே நீங்கின் மீண்டும் தலைவன் தலைவி உறவுடன் பிறக்க முடியும் என்றும் தலைவி ஆற்றிக்கொள்ளும் கூற்றினைக் கொண்டு இம்மையில் தலைவன் தலைவி உறவு கொண்டோர் ஊழின் துணையால் மறுமையிலும் தலைவன் தலைவியராக முடியும் என்னும் நம்பிக்கை பழந்தமிழரிடை இருந்ததை உணரலாம்.

தலைவன் தலைவியை உடன்போக்கில் கொண்டு சென்றதனையறிந்த தலைவியின் நற்றாய், அவ்வாறு அவன் உடன் கொண்டு போதற்குக் காரணம் பல்லாற்றானும் ஆராய்ந்து, நல்வினையின் காரணமாகத் தலைவனும் தலைவியும் கூடிக் கற்புப்பூண்டு இருமையும் பயத்தற் சிறப்புடைய இல்லறம்நடத்தலே நல்லறம் எனத் தெளிந்து, இதுவே அறநெறி எனக் கொண்டு ஆற்றினாள் எனக் கூறும் ஐங்குறுநூற்றுப் பாடலில் அறநெறி என்னும் சொல் ஊழ்முறை என்ற பொருளில் ஆளப்பட்டிருப்பது செவிலித்தாய் ஆற்றிக்கொள்ளும் நிலையில் ஊழ்பற்றிப் பேசியதும் விளங்குகிறது.[20]

வாழ்த்தலும் பழித்தலும் :

ஒருவன் தனக்கு நன்மை வரும்போது ஊழையெண்ணி 'நல்லகாலமாக விதியினால் வந்தது' என்றும், தீமை வரும்போது நம் கெட்டகாலம் பாழாய்ப்போன விதி சதி செய்துவிட்டது' என்றும், ஊழை வாழ்த்துவதும் பழிப்பதும் இன்றும் உலகியலில் காணக் கூடிய உண்மை. இவ்வுண்மையடிப்படையில்' சங்க இலக்கியங் களிலும் ஊழை வியந்து வாழ்த்திய நிலையையும், ஊழைப்பழித்த நிலையையும் காணமுடிகிறது. தலைவன் தன்னை வரைதற்குரிய பிறப்பு, குடிமை முதலாகக் கூறப்பட்ட ஒப்புமையுடையனாதலால் அவன் தன் தலைவன் என்று தாம் வரைவினை உட்கொண்டு கூறியதாகவும் கூறிய தலைவி, 'நொதுமலர் வரைவு' என்பதனை வாயினால் கூற விரும்பாது, 'பிறிதொன்றாகக் கூறும்' எனக் கூறினாள்; முன்னர் தலைவனுடன் கூட்டுவித்த ஊழ் மீண்டும் அவ்வாறு செய்தலைத் தவிராது என்னும் கருத்துடன், 'உறற் பாலயார்க்கும் உறும்' என்ற பழமொழிக்கேற்ப, ஊழ் ஊட்டு வித்தவாறே கூட்டாது ஊரார் கூறியாங்கும் ஆக்குமோ என அஞ்சி,

பிறிதொன்றாகக் கூறும்
ஆங்கு மாக்குமோ வாழியபாலே[21]

என வாழ்த்தியதாக ஐங்குறுநூற்றுப் பாடல் கூறுகிறது.

புறநானூற்றில் பெருமாவிலங்கைத் தலைவன் நல்லியக் கோடனைப் புலத்திணை நன்னாகனார் கண்டு அவனிடம் பெரும் பரிசில் பெற்று அவனைப் பாராட்டும்போது,

இல்லோர் சொல்மலை நல்லியக் கோடனை
உடையை வாழியெற் புணர்ந்த பாலே/22

என அவ்வள்ளலிடம் தம்மைச் சேர்த்து வைத்த ஊழை வியந்து வாழ்த்தியிருப்பது கருதத்தக்கது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு மாங்குடி மருதனார் பாடிய மதுரைக் காஞ்சியில் இவ்வுலக வாழ்வின் நிலையாமையை உணர்த்தி, வாழுங்காலத்தில் அறச்செயல்களைச் செய்து இன்பத்தை அனுபவிக்கும்படி அறிவுரை கூறிப் பால்வரை தெய்வத்தால் வரையறுக்கப்பட்ட எல்லைக்குரிய வாழ்நாள் முழுதும் மகிழ்ந்தினிது வாழ்க என்னும் கருத்துடன்,

மகிழ்ந்தினி துறைமதி பெரும
வரைந்துநீ பெற்ற நல்லூ ழியையே/23

என்று வாழ்த்தியதை அறிய முடிகிறது. இதில் முற்பிறப்பின் நல்வினைக்கேற்ப இப்பிறவியில் வாழ்நாள் வரையறுக்கப்பட்டதாக அமைகிறது என்னும் ஊழ்க்கோட்பாடு கூறப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் ஊழைப் பழிப்பதாக ஐங்குறுநூற்றில் ஓரிடத்தில் மட்டுமே அறிய முடிகிறது. நல்வினையால் விளைந்த செல்வமும் இன்பமும் பொருந்திய நுகர்ச்சிக்குரிய வீட்டில் இன்பம் துய்க்கும் வாய்ப்பில்லாமல், தமர் வருந்தும் படியாகத் தன் தலைவனுடன் வெஞ்சுரத்தினையடைவதற்குக் காரணமாக இருந்த அறப்பண்பில்லா ஊழ், காட்டில் பட்ட தீ முழுவதுமாக அழிந்து ஒழிவதுபோல அழிவதாக என்று தாய் சினத்துடன் வெறுத்துப் பழிப்பதாக அமைந்த பாடலில், அறம் தவறாது பயனை நல்கும் பால் 'அறனில் பால்' என்று பழிக்கப்பட்ட நிலையினைக் காணமுடிகிறது./24

அறிவுறுத்தலும் அறங்கூறலும் :

அக இலக்கியங்களிலும் புற இலக்கியங்களிலும் பெரியோர் அறிவுறுத்தும் நிலையிலும், பொதுவாக அறம்கூறும் நிலையிலும் ஊழ்வலியைக் காரணமாகக் காட்டிப் பேசியுள்ளனர். வரையாது வந்தொழுகும் தலைவன் சிறைப்புறமாக வந்து நிற்க, தலைவிபடும் துன்பம் முழுவதையும் தலைவன் கேட்டு விரைவில் மணம் செய்துகொள்ள வெண்டுமென்ற கருத்துடன் தோழி தலைவியை நோக்கித் தலைவன் செவிபடக் கூறுவதாக அமைந்த,

யாஞ்செய் தொல்வினைக்கு எவன்பேது உற்றனை[125]

என்னும் பாடல் குறிப்பிடத்தக்கது. தோழி தலைவியிடம், 'தலைவியே! நாம் செய்த பழவினையினை நாம் துய்க்க வேண்டி இருப்பதால் இத்துன்பத்தை அடைகிறோம்; அங்ஙனமிருக்க நீ ஏன் மயங்குகின்றனை? வருந்தாதே! நம் துன்பத்தைத் தலைவர்பால் நாம் சென்று கூறிவிட்டு வருந்தும் என்னுடன் எழுவாயாக! கடல் நீரால் விளைந்த உப்பு மழையினால் கரைந்து ஒழிவதுபோல நீ உள்ளம் உருகுதற்கு யான் அஞ்சுகிறேன். நம் தலைவர் நமக்குச் செய்த கொடுமையை நினைந்து அவருடைய பழங்களை உதிர்க்கின்ற குன்றுகள் நம் பாற் பெரிதும் அன்பு உடைமையாலே தம் வருத்தத்தை அடக்கிக் கொள்ள முடியாமல் தம் கண்ணீர் அருவியாகப் பெருகும்படி அழுது நிற்பதைக் காண்கிறோம்; ஆனால் அவர் மட்டும் இரங்குபவர் அல்லர்' என்று தலைவன் நெஞ்சில் உறுத்தும் வண்ணம் அறிவுறுத்தும் வகையிலும், நமது ஊழ்வினைப் பயனை நாம் அனுபவிக்கும் வரையில் தலைவன் தரும் இன்பத்தை நாம் அடைதலரிது என்று தலைவிக்கு ஆறுதல் அளிக்கும் வகையிலும் கூறியது கருதத்தக்கது.

மிளைகிழான் நல்வேட்டனார் என்பார், தோழி தலைமகனுக்கு அறிவுறுத்தியதாகப் பாடியது,

நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே[126]

என்னும் பாடலாகும். இப்பிறவியில் அனுபவிக்கும் பொருள்கள் எல்லாம் முன்பு செய்த வினைப் பயனால் எய்தப் படுவனவாகும்; சான்றோர் செல்வம் என்பது தம்மைச் சேர்ந்தோர் துன்பத்தை அஞ்சி, அத்துன்பத்தைப் போக்கி அவரைக் கைவிடாமல் காத்தலே ஆகும்; ஆனால் தலைவன் தன்னை அடைக்கலமாக அடைந்த தலைவியைக் காக்கவில்லையென்ற குறிப்பினைக்கூறிஅறிவுறுத்தும் நிலையில் ஊழ் பேசப்படுகிறது.

தலைவனது பொருள்வயிற் பிரிவினை அறிந்த தோழி, களவுக் காலத்து ஒழுக்கத்தை எடுத்துக்காட்டித் தலைவன் தேடும் பொருள் நல்வினையுடையவரிடத்து மீண்டும் மீண்டும் சென்று தங்கும் இயல்புடையதாதலின் அது கைகூடினும் கூடும்; கூடாதொழியினும் ஒழியும் என்றும் தலைவனைப் பிரிந்து வாழ முடியாத தலைவியோ தலைவன் பிரியும்போதே இறந்துபடுவாள் என்றும் விளக்கி, ஊழ்வினையின் பாற்படும் பொருளை விரும்பித் தன்னைப் பிரிய விரும்பாத தலைவியை விட்டுத் தலைவன் பிரிதல் கூடாது என்றும் அறிவுறுத்தியதாகக் கலித்தொகைப் பாடலால் அறிய முடிகிறது.[127]

வரைந்து கொள்வதாகக் கூறி, காலம் நீட்டித்த தலைவனுக்கு அறிவுரை கூறிய தோழி, செய்ந்நன்றிக்கேடாகிய தீவினையும், சூள் பொய்த்தலாகிய தீவினையும் உயிர் உலகத்தை விட்டுப் பிரியினும், துறக்கம் அடையினும் விடாமல் பயனை நுகர்விக்கும் என வலியுறுத்தி, தலைவியை மணப்பதாகத் தலைவன் உரைத்த சூள் பொய்த்துவிட வேண்டாம் எனக் குறிப்பாக உரைத்துத் தலைவியை மணஞ்செய்துகொள்ள வற்புறுத்திய,

சூள்வாய்த்த மனத்தவன் வினைபொய்ப்பின் மற்றவன்
வாள்வாய்நன் றாயினுமஃதெறியாது விடாதேகாண்[128]

என்னும் பாடல் அறிவுறுத்தும் நிலையில் ஊழைக் குறிப்பிடுகிறது.

புறநானூற்றில் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் சான்றோர் சோழன் நலங்கிள்ளிக்கு அறிவுரை வழங்கினார். இவ்வுலகில் அரசராயிருந்தோருள் உரையும் பாட்டும் உடையோர் சிலரே; தாமரையிலையையொப்பப் பயன்படாது மாய்ந்தோர் பலராவர்; புலவர்களால் பாடப்படும் புகழை; உடையவர்கள் தாங்கள் செய்ய வேண்டிய நல்வினையைச் செய்து முடித்த பின்னர் பாகனாற் செலுத்தப்படாத விமானத்தின் மூலம் விண்ணுலகடைவர் என்று அறிவுடைய சான்றோர்கள் சொல்லக் கேட்டதாகவும், அவ்வாறே நலங்கிள்ளியும் நல்வினை செய்ய வேண்டுமென அறிவுறுத்தியதையும் நல்வினை செய்வார் விண்ணுலகடைவர் என்னும் கருத்தையும் அறியமுடிகிறது.[129]

ஐயாதி சிறுவெண்தேரையார் என்னும் சான்றோர் வேந்தனுக்கு அறிவுறுத்தும் பாடலொன்றில், கடல் சூழ்ந்த இவ்வுலகத்தை ஆண்டவேந்தர் கடல் மணலினும் பலராவர் அத்தகைய வேந்தர் எல்லாரும் சுடுகாட்டைத் தமக்கு முடிவிடமாகச் சென்று சேர்ந்து தத்தமக்குரிய நாட்டை மற்றவர் கொள்ள இறந்து போயினர்; இறவாமல் இந்த உடம்போடே என்றும் இருந்தவர் யாரும் இல்லை; முதுகாட்டில் உப்பில்லாத சோற்றைக் கையிற் கொண்டு பின்புறம் பாராது இழிசினன் கொடுக்கும் பலியுணவை யேற்கும் துன்பம் பொருந்திய இறுதிநாள் வரும்முன்பே இந்நில வுலக வாழ்வைப் பற்றறத் துறந்து, தவமாகிய நல்வினையைச் செய்தல் வேண்டுமென்னும் கருத்தினைக் கொண்ட,

இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் துறந்தே[130]

என்னும் பாடலின் வழி ஊழ் பேசப்படுகிறது.

ஔவையார், சேரமான் மாவண்கோவும், பாண்டியன் கானப் பேர்தந்த பெருவழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியும் ஓரிடத்தே கூடியிருக்கக்கண்டு, அந்தணர் வளர்க்கும் முத்தீயைப்போல வீற்றிருக்கின்றனர் எனப் பாராட்டி அறிவுரை கூறினார். இவ்வுலகம் முழுதும் தம்முடையதென உரிமையுடன் ஆண்ட வேந்தராயினும் இறக்குங்கால் அவரோடு இவ்வுலகமும் செல்வதில்லை. அவருக்குப் பின்வரும் வேந்தர் வேற்றுநாட்டின ராயினும் உலகையடையும் தவமுடையராயின் அவருக்கே உரியதாகிவிடும்; பொருள்வேண்டி இரந்துநின்ற அந்தணர்க்குப் பெரும்பொருள் கொடுத்து மகளிர் பொற்கலங்களில் கொடுத்த தேறலை மகிழ்ந்து, இரவலர்க்கு வேண்டிய பொருள்களைக் குறைவறக் கொடுத்து இவ்வுலகில் வாழ்வதற்கென வரையறுக்கப் பட்ட வாழ்நாள் முழுதும் நன்றாக வாழ்தலே வேண்டுவதாகும்;

> வாழச் செய்த நல்வினை யல்லது
> ஆழுங் காலைப் புணைபிறி தில்லை[131]

என்று அறிவுறுத்தினார். இப்பாடலில் அரசவுரிமை முற்பிறப்பில் தவமுடைய நல்வினையால் கிடைக்குமென்றும், இம்மையில் வாழ்நாள் ஊழ்வினைக்கேற்ப வரையறுக்கப்படுகிறது என்றும், நல்வினையைத் தவிர்த்துப் பிறிதொன்றும் இறக்குங்காலத்தில் துணையாவதில்லையென்றும் கூறி, அறம்பலசெய்து நல்வினையை ஈட்டுமாறு மூவேந்தர்க்கும்அறிவுரை வழங்கியதை அறிய முடிகிறது.

அகத்துறையில், உள்ளப்புணர்ச்சியால் ஒன்றுபட்ட தலைவன் தலைவியைச் சேர்த்து வைப்பதே அறமென்றும், சேர்த்து வைக்கும் முறைக்கு அறத்தொடு நிற்றல் என்றும் கூறுவர். தலைவி ஒருத்தி தலைவனிடம் காதல் கொண்டாள்; காதல் துன்பத்தால் வேறுபட்டாள்; தலைவியின் மாற்றத்தைக் கண்ட பெற்றோர் தலைவிக்குரிய காவலை மிகுதிப் படுத்தித் துன்பத்தின் காரணம் அறிய வெறியாட்டுச் செய்தனர். வெறியாடும் மகள் இந்நோய் முருகனால் வந்தது என்று சொல்லவும், அமைதியுறாத தலைவி, நீல மலரைப் பார்த்து நெஞ்சுள்ளே வருந்தி, அழுத கண்களை உடையவளாகித் தலைவனுடன் நட்புச் செய்யத் துணிந்தது குற்றமன்று; அவ்வாறு செய்த நட்பு பழவினையினாலே வரை யறுத்துப் பொருத்தப்பட்டதன்றி 'யாம் தேடிக் கொண்டது இல்லை; தலைவன் எத்தகுதி உடையவன் என்பதை ஆராய்ந்து அறிவதற்கு யாம் எத்தகுதியை உடையேம்?' என்று தலைவி சொல்லியதாகத் தோழி செவிலியிடம் அறத்தொடு நின்றபோது ஊழை வியந்து கூறுவதைப் பேரிசாத்தன் என்னும் புலவர் பாடிய குறுந்தொகைப் பாடலால் அறிய முடிகிறது.[132]

மலையில் வாழும் குறவர்கள் தலைவனுக்குத் தலைவியைக் கொடுக்காமல் வரைவு மறுத்துப் பிறருக்குக் கொடுக்க நினைந்து அறமல்லாதவற்றை விரும்பிச் செய்த காரணத்தினால் மலையில் வள்ளியும் கிழங்குகீழ் வீழ்க்கமாட்டா; மலையின்மேல் தேனும் தொடா; கொல்லையில் தினைக் கதிர்கள் விளையமாட்டா என்று அறத்தை எடுத்துச் சொல்லி, நல்வினையைச் செய்யும்படி தோழி அறத்தொடு நின்றதாகக் கலித்தொகைப் பாடலால் அறியலாம்.133

கோப்பெருஞ்சோழன் தன் மக்கள் மாறுகொண்டதனால் வடக்கிருந்து உயிர்விடத் துணிந்து, வடக்கிருக்கத் தொடங்கினான்; அதுபோது வடக்கிருத்தலாகிய நல்வினையும் அதனால் எய்தும் துறக்கம், வீடுபேறு ஆகியன இல்லையென்று சிலர் இகழ்ந்து கூறிய போது, அவர்தம் கூற்றை அறிவுமிக்கவனான சோழன் மறுத்துப் பாடிய பாடல் ஆய்வுக்குச் சான்றாகிறது. யானை வேட்டைக்குச் செல்வோன் யானையையும் தன்வேட்டையில் எளிதாக வாய்க்கப் பெறுவான்; சிறு பறவைகளை வேட்டையாட விரும்பிச் செல்வோன் அவற்றைப் பெறாது வெறுங்கையுடனே திரும்புவதும் உண்டு; ஆதலால் உயர்குறிக்கோளுடைய உயர்ந்தோர்க்குத் தாம் செய்த நல்வினையின் பயனைத் துய்க்க வேண்டிய வாய்ப்பிருப்பின் இரு வினையும் செய்யப்படாத தேவருலகாகிய துறக்கவுலகத்தின்கண் இன்பம் துய்த்தலும் கூடும்; நல்வினைப்பயன் மிகுதியால் தவத்தின் பெருமை நோக்கத் துறக்க இன்பம் சிறிதாயின், துறக்கவுலக நுகர்ச்சி வேண்டாது மீண்டும் பிறவாத பேரின்ப வீடுபேற்றைப் பெறுவர்; மறுபிறப்பு, துறக்கம், வீடுபேறு பற்றிய நம்பிக்கையற்று ஐயப்படுவார், நல்வினையாம் தவம் செய்வோர் மீண்டும் தன் வினைப் பயனுக்கேற்பப் பிறவார் என்று சொல்லுவராயினும், இமயமலையின் உச்சி உயர்ந்து நிற்பது போலத் தம் பெரும்புகழின் உச்சியை நிலைநிறுத்தி வசையற்ற உடம்போடு இறத்தல் தலையாயது ஆதலின் எவ்வாறேனும் மாந்தர் நல்வினை செய்தல் வேண்டும் என்று அறம்கூறும் நிலையில் அமைந்த பாடல் சங்க காலத் தமிழகத்தில் நல்வினை, தீவினை,துறக்கம், நரகம்,வீடுபேறு ஆகிய பல்வேறு சிந்தனைகள் இருந்த நிலையினையும், இவை யனைத்துடனும் ஊழ் உறவுடையது என்பதையும் குறிப்பிடுவதை அறிய முடிகிறது.134

சங்க இலக்கியங்களில் புறநானூற்றில் மட்டும் ஒரே பாடலைப் பாடியுள்ள பிரமனார் என்பார் காஞ்சித் திணையில் மறக்காஞ்சித் துறையில் பாடிய பாடல் அறங்கூறும் நிலையிலமைந்தது மூவேந்தர் நாட்டையும் பொதுவெனப் போற்றாது தமக்கேயுரிய தாகக் கொண்டு ஆண்ட வேந்தருக்கும் வாழ்நாட்கள் கழிந்தன;

அவர் ஈட்டித் தொகுத்த செல்வமும் அவர் செல்லுயிர்க்குத் துணை யாவதில்லை; அவரவர் செய்யும் அறவினையே மறுமைத் துணையாய் இன்பம் தரும்; துணைவர்கள் கூடியழ, உயிர் கூற்று வனால் கவர்ந்து கொள்ளப்படும் காலத்தில், இவ்வுலகினின்றும் உயர்ந்து வீட்டுலகைப் பெறுதற்கு அறவினையாகிய துணையே தெப்பமாவதாம்; அத்துணையைக் கைவிட்டவர்க்கு மேலுலகப் பேறு இல்லையாம் என்னும் கருத்துக்களில் அறவினை செய்து நல்வினைப் பயனை அடையுமாறு கூறுகிறது.135

தெய்வம் வேண்டல் :

பற்பல சூழல்களில் மக்கள் ஊழை நினைந்து பேசுவது போலத் தெய்வத்தை வணங்கி வேண்டும் நிலையிலும் ஊழ் பேசப்பட்-டுள்ளது. பரிபாடலில் திருமாலை வாழ்த்தி வேண்டும் நிலையில் அமைந்த பாடலில், திருமாலை வழிபடும் உயிர்கள் பிறப்பதற்குக் காரணமான இருவினைகளும் இல்லன என்றும், முத்தொழிலை உடைய கடவுள் அவன்என்றாலும்,காத்தலாகிய ஒரு தொழிலையே பொருந்திய திருவுள்ளத்தினையுடையவன் என்றும் கூறுமிடத்தில் பிறப்பதற்கு நல்வினை, தீவினையாகிய இருவகை ஊழும் காரண மாக அமைகின்றன எனக் குறிப்பிட்டிருப்பது அறியத்தக்கது.136

பல்வேறு வகையைச் சேர்ந்த மனிதர்களும் மற்றவர்களும் வந்து குழுமி திருமாலின் திருவடியின்கண் வணங்குவார் இன்புறு தற்கிடமான, இரண்டாகிய கருநிறம் பொருந்திய படப்பொறிகள் அழகு செய்த எருத்தினையுடைய மலை போன்ற ஆதிசேடனுடைய திருக்கோயில், விளைந்து முதிர்ந்த நல்வினையினது சிறந்த பயன் நுகர்தற்கு இடமான, நடுக்கமில்லாத சிறந்த புகழினையுடைய துறக்கவுலகத்தையே ஒப்பதாகும் என்பதனைக் கொண்டு நல்லூழின் பயனைத் துய்ப்பதற்குத் துறக்கம் செல்ல வேண்டும் என்னும் கருத்தைப் பரிபாடல் திரட்டினால் அறிகிறோம்.137

திருமுருகாற்றுப்படையில், முருகன் அருளைப் பெறுவதற்கும் அவனது திருவடிப்பேற்றினையடைவதற்கும் உரிய நல்வினை களைப் பலபிறப்புக்களிலும் விரும்பிச் செய்து அதனால் உண்டாகிய செம்மல் உள்ளத்துடன் அவன் திருவடியிற் செல்லும் செலவை விரும்பினால் முற்பிறப்பிற்செய்த நல்வினையாலே விரும்பிய பேற்றினை ஒருவன் அடையமுடியுமென்றும், 'முன்னியவினை' என்பது முருகன் திருவடிகளைஅடைவதற்காக முற்பிறப்பில்முயன்று செய்த தவமாகிய நல்வினையைக் குறிப்பிடுகிறது என்றும் நச்சினார்க்கினியர் கூறிய உரை விளக்கம் கொள்ளத்தக்கதாகும். இந்நூல் முருகன் அருளை வேண்டும் அடியார்க்கு உரைத் தமையால் தெய்வத்தை வேண்டும் நிலையிலமைந்தது எனக் கருதலாம்.138

சங்க காலத் தமிழரிடம் ஊழ்க் கோட்பாட்டின் செல்வாக்கு :

சங்க இலக்கியங்களின் துணைக்கொண்டு ஆராய்ந்து பார்க்குமிடத்து, ஊழ்க் கோட்பாடு சங்க காலத் தமிழரிடத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுடனும் அறிவார்ந்த நிலையிலும் இடம் பெற்றிருந்ததை அறிய முடிகிறது. மனித வாழ்வு ஊழினால்-முற்பிறப்பின் வினைப்பயனால் வரையறுக்கப்பட்ட கால எல்லைக்குள் அமைகிறது என்றும், இப்பிறப்பின் வினைகளின் பயனுக்கேற்பவே மறு பிறப்போ, துறக்கமோ, வீடுபேறோ கிட்டுமென்றும் தமிழர் நம்பினர் என்பதை,

வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்139

மகிழ்தினி துறைமதி பெரும
வரைந்துநீ பெற்ற நல்லூ ழியையே140

என்னும் சான்றுகளால் அறியலாம். வாழ்வின் ஒவ்வொரு செயலுக்கும் ஊழ் காரணமாகுமென்று எண்ணினர்.

இப்பிறப்பில் தலைவன் தலைவியர் ஒருவரையொருவர் கண்டு காதல் கொள்வதற்குக் காரணம் அவர்கள் பண்டைப் பிறப்பில் பழகிய உறவினால் தொடர்ந்துவரும் ஊழே என்று தமிழர் கருதினர். எவ்வகை உறவுமில்லாத, ஒருவரையொருவர் முன்னரே அறிந்திராத தலைவன் தலைவியர் உள்ளங்கள் செம்மண் நிலத்தில் பெய்த மழை நீர் போல ஒன்றுபட்டுக் கலந்தமைக்குக் காரணமாக அமைந்தது இருவரையும் கூட்டி வைக்கும் ஊழின் செயலென்று கருதினர். இவ்வாறு தலைவன் தலைவியரை ஊழ் சேர்த்து வைப்பதை இயற்கைப் புணர்ச்சி, பால்தரு புணர்ச்சி, தெய்வப் புணர்ச்சி என அகப்பொருள் நூல்கள் விளக்குகின்றன.141

காமம் நோய் என்று குறைகூற வேண்டியதில்லையென்று கூறி, அடங்கியிருந்த யானையின் மதம் தழையுணவை உண்ட காலத்தில் வெளிப்படுவதைப் போல ஊழின் வலியால் காணற்குரியாரைக் காணப்பெறின் இயல்பாகவே உள்ளத்துள் அடங்கி இருந்த காமம் வெளிப்படுமென்றும், அவ்வாறுதான் ஊழ்வலியினால் தலைவியைக் கண்டதும் அக்காமவுணர்வு வெளிப்பட்டது என்றும் ஒருதலைவன் கூறியதாக அறியமுடிகிறது.142

தலைவன் தலைவி உறவு பிறவிதோறும் தொடர்ந்து வருவது என்ற நம்பிக்கை அன்று இருந்தது. ஆதலால் இறக்கும் போதும் இருவரும் ஒன்றாகவே இறக்கவிரும்பியிருக்கின்றனர்.143 தலைவி ஒருத்தி மறுமையிலும் தன் காதலனே தனக்குக் கணவனாக வாய்க்க வேண்டுமென்றும், தான் அவன் நெஞ்சு நேர்பவளாக வேண்டுமென்றும் எண்ணுகிறாள்.144

காதலாலும் பிறவுணர்வுகளாலும் செயல்களாலும் ஏற்படும் இன்ப துன்பங்களுக்குக் காரணம் ஊழ் என்ற நம்பிக்கை இருந்தது.

ஊழில் நம்பிக்கையுடையவர்கள் நம் முன்னையோர். மக்கள் எய்தும் இன்ப துன்பங்களுக்கு அவரவர் முன்னைப் பிறப்புக்களிற் செய்த இருவினைகளே காரணம் என்பதும், அவை தத்தம் பயன்களைத் தர உருப்பெறுங்கால், ஊழெனப் பெறும் என்பதும், இம்மையிற் செய்யும் முயற்சிகளெல்லாம் அவ்வூழுக்கு உறுதுணையாய் அமைவனவே என்பதும் அவர் கொண்ட முடிவுகளாகும்[145]

என்று மு. அருணாசலம் பிள்ளை கூறும் கருத்து அறியத்தக்கது.

அரசியலில் அரசவுரிமை மன்னனுக்குப்பின் அவன் மக்களுக்கு விதியினால் தரப்படுவதாக அவர்கள் நம்பினர்.

மூத்தோர் மூத்தோர் கூற்றம் உய்த்தெனப்
பால்தர வந்த பழவிறல் தாயம்
எய்தின மாயி னெய்தினஞ் சிறப்பென[146]

எனவும்,

உருசெழு தாயம் ஊழின் எய்தி[147]

எனவும் வரும் அடிகள் இவ்வுண்மையைக் காட்டுகின்றன. மன்னன் வெற்றி, ஒழுக்கம் ஆகியவற்றுடன் அறம் வழுவாமல் குடிகளைத் துன்பமின்றிக் காப்பானாகில் அவன் தான்செய்த தொல்வினைப் பயனைத் துய்ப்பதற்குத் துறக்கத்திற்கு விரும்பிச் செல்ல முடியும் என்ற நம்பிக்கையைக் கலித்தொகைப் பாடல் காட்டுகிறது[148]

விண்ணில் மண்ணிலுள்ள இன்ப துன்பக் கலப்புநிலை இல்லையென்றும், இன்பம் மட்டும் நுகரும் வாய்ப்பிருப்பினும் அவ்வாய்ப்பு அவர்களது செய்வினையாலேயே கிடைக்கிறது என்றும், தேவருலக இன்ப வாய்ப்பு குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் நாட்டில் எப்போதும் கிடைக்கிறது என்றும் ஆவூர் மூலங்கிழார் கூறிய கருத்து ஊழின் செல்வாக்கினையுணர்த்து கிறது.[149] சோழிய ஏனாதி திருக்கண்ணனின் முன்னோனாகிய மலையமான் திருமுடிக்காரி அவன்செய்த நல்வினையாகிய நல்லறத்தின் பயனைத் தெய்வ உலகமாகிய துறக்கவுலகம் சென்று துய்க்கச் சென்றனன் என்பதை,

ஈண்டுச்செய் நல்வினை யாண்டுச்சென் றுணீஇயர்
உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தனன்[150]

என்னும் பாடற்குறிப்பு நல்லூழ் துறக்கவுலகத்திற்குச் செலுத்தும் என்ற கருத்தை விளக்குகிறது.

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆயலன்151

என்னும் புறநானூற்றுப் பாடல் ஆய் அண்டிரனது மறுமைப் பயன் கருதாத வள்ளன்மைச் சிறப்பினையுணர்த்துகிறது. இக்கருத்திலிருந்து பழந்தமிழர் ஊழ்வினை, மறுமைப் பயன் போன்றவற்றில் கொண்டிருந்த நம்பிக்கை புலனாகிறது.

இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டியது பொருட்செல்வம். ஊழின் காரணமாகவே ஒருவனுக்குப் பொருட் செல்வமும் அமையும் என்பதைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும் செல்வமன்று என்றும் அவை யனைத்தும் செய்வினைப் பயனால் எய்தப் படுவன என்றும் நம்பினர்.152 பொருள் நல்வினையுடையவரிடத்து மீண்டும்மீண்டும் சென்று தங்கும் இயல்புடையது. நல்வினை இல்லையெனின் ஒருவர் எவ்வளவு வருந்தி உழைத்தாலும் பொருள்கூடாது.ஆதலின் ஊழ்வினையினால் அமையும் பொருளினை விரும்பி, பிரிய விரும்பாத தலைவியைப் பிரிந்து அவளோடு துய்க்கும் இன்பத்தை இழக்கவேண்டாமென்று தலைவனிடம் தோழி அறிவுறுத்திய நிலை அறிய முடிகிறது.153

மன்னருடன் உயர்ந்த நட்பினைப் பூண்டிருந்த புலவர்கள் தங்கள் நட்பு ஊழின் ஆற்றலால் அமைந்தது என்றும் அத்தகைய நட்பு என்றும் தொடர வேண்டுமென்றும் கருதி ஊழை வாழ்த்திய நிலையினை அறியலாம்.154 பாரி இறந்தபின் அவனைப் பிரிந்த கபிலர் இம்மை போல மறுமையிலும் பாரியிடம் நட்பு கொள்ளச் செய்யுமாறு ஊழினை வேண்டியது ஊழின் செல்வாக்கினைக் காட்டுகிறது.155

இம்மையில் இறைவனை வழிபடவும், அவன் அருளைப் பெறவும் முன்வினைப் பயன் வேண்டுமென்று தமிழர் கருதினர். 156 வையையில் நீராடும் பேற்றினை முற்பிறப்பில் செய்த தவத்தினால் இப்பிறப்பில் பெற்றதாகவும், அத்தவத்தினை யாவரும் விரும்பத் தக்க வையையின் நீர் நிறைவின்கண் மறு பிறப்பினும் பெற வேண்டுமென்று வேண்டும் நிலையில் ஊழின் ஆற்றலையுணர முடிகிறது.157

பழந்தமிழர் காதல், இன்பம், துன்பம் ஆகிய உணர்வுகளினால் தாக்குறும் போது மட்டும் ஊழைப் பற்றிப் பேசினர் என்று கருத வியலாது. அறிவார்ந்த நிலையில், தத்துவ நிலையிலும் ஊழைப் பற்றிச் சிந்தித்திருக்கின்றனர் என்ற உண்மையும் அறிய முடிகிறது.

உணர்வுகளால் தூண்டப் பெற்று ஊழ் பற்றிப் பேசுவது நம்பிக்கை அடிப்படையில் மட்டும் கூட அமையலாம். ஆனால் அறிவாற்றலுடைய சான்றோர் தத்துவநிலையில் நுண்பொருள்கள் பலவற்றை அறிவால் ஆராய்ந்து கூறியிருக்கின்றனர். அவ்வாறு கூறப்பட்ட கடவுள், அறம், இம்மை, மறுமை, துறக்கம், நரகம் ஆகிய கோட்பாடுகளுடன் தொடர்புடையதாகவும் ஆற்றலுடையதாகவும் ஊழ்க் கோட்பாடும் சிந்திக்கப் பெற்றிருக்கிறது என்பதையறிய முடிகிறது.

> பழந்தமிழர் கடவுளுண்மையுணர்ந்து வழிபட்டொழுகி வினையுணர்வும், மறுபிறப்புண்மையும் மேற்கொண்டிருந்தனர்.158

என்னும் ஔவை சு. துரைசாமி பிள்ளை கருத்து இவ்விடத்தில் கருதத் தக்கது.

கோப்பெருஞ்சோழன் பாடிய பாடல் ஊழ், மறுபிறப்பு, துறக்கம், வீடுபேறு பற்றிய கொள்கைகளை அறிவார்ந்த நிலையில் சிந்தித்துக் கூறப்பட்டதாகும்.159 செயலின் விளைவினைச் செய்தவன் அனுபவித்தேயாக வேண்டுமென்பது ஊழ்பற்றிய நியதி. நல்வினையின் பயனாக ஒருவன் துறக்கம் அடைந்தாலும் அவன் செய்த தீவினையின் பயனை அவனுக்கு ஊழ் ஊட்டாமற் போகாது எனக் கலித்தொகை கூறுகிறது.160 இக்கருத்துப் பின்னர் தோன்றிய திருக்குறளில், ஊழ் 'மற்றொன்று சூழினும் தான் முந்துறும்'161 என்றும், சிலப்பதிகாரத்தில் 'ஊழ்வினை உருத்து வந்தூட்டும்'162 என்றும் வலியுறுத்தப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.

கணியன் பூங்குன்றனார் பாடிய ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' எனத் தொடங்கும் பாடல் மனிதகுல ஒருமைப்பாட்டு முழக்கத்தினை ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே எழுப்பிய சிந்தனைத் திறமும் தத்துவச் செறிவும் உடையதாகும். இப்பாடலில் 'தீமையும் நன்மையும் அவரவர் செயல்களின் விளைவால் தாமே வரினல்லது பிறர்தரவாரா; செய்யும் செயல்களுக்கேற்ப அவற்றின் வினைக் கேற்பத் துன்பமும் இன்பமும் செய்தவரை அடையும்; நீர்வளம் மிக்க பேராற்றின் நீர்வழியே செல்லும் மிதவைபோல அரியஉயிர் ஊழின் வழியே படும் என்பதைச் சான்றோர் காட்டிய அறிவு நூல்களின் வழித் தெளிந்தனமாதலின் 'பெரியோரை வியத்தலும், சிறியோரை இகழ்தலும் இலம்' என்று பூங்குன்றனார் விளக்கிய கருத்து, அவரவர் வினைக்கேற்பவே வினைப்பயனாகிய ஊழ் அமையுமென்றும், உயிர் பிறவிதோறும் செய்த ஊழின் வழியிலேயே செல்லும் என்றும் வலியுறுத்துகிறது.163

இதுகாறும் கண்டவற்றால் செயலின் விளைவு, (வினை விளைவு) வினையின் பயன் ஊழ் என்பதும், வாழ்வின் அனைத்துச் செயல்களுக்கும் அவரவர் வினைப்பயனே காரணமாக அமைந்து இயக்கிவைக்கும் ஆற்றல் வாய்ந்தது என்பதும் பழந்தமிழர் கொண்டிருந்த கருத்தாகும் என்பதைத் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் ஆகியவை புலப்படுத்துகின்றன.

குறிப்புக்கள்

1) இறையனார் களவியலுரை - முதற்சூத்திரவுரை கழகம், 1969, ப. 5.
2. மது. ச. விமலானந்தம், **தமிழ் இலக்கிய வரலாறு**, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை-1, 1979, ப. 56
3. பார்க்க - முன்னியல் - குறிப்பு - 27, 28, 29, 30
4. தொல். சொல். நூ. 57.
5. மேற்படி, சேனாவரையர் உரை.
6. மேற்படி, நச்சினார்க்கினியர் உரை.
7. மொ. அ. துரையரங்கசாமி, **தொல்காப்பிய நெறி**, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை-1, 1963, ப. 66
8. 'From the use of the expression Palvaraitheivam (Verse - 57 Porul) it is to be known that they believed that God himself as destiny which determines the course of life.''
   — S. ILAKKUVANAR,
   Tolkappiyam (in English)
   with critical studies, 1963, P. 483
9. தொல். பொருள். நூ. 90
10. மேற்படி, இளம்பூரணர் உரை.
11. மேற்படி, நச்சினார்க்கினியர் உரை.
12 (அ) க. வெள்ளைவாரணர், **தமிழ் இலக்கிய வரலாறு - தொல்காப்பியம்**, அ. ப. கழகம், 1978, பக். 119-120
   (ஆ) மொ. அ துரையரங்கசாமி, மு. நூ. மு. ப.
13. (அ) சாமி சிதம்பரனார், **தொல்காப்பியத் தமிழர்**, இ. இ 1956, பக். 111-112.
   (ஆ) க. வெள்ளைவாரணர், மு. நூ. மு. ப.
14. புலவர் குழந்தை, **தொல்காப்பியம் பொருளதிகாரம் உரை** வேலா பதிப்பகம், ஈரோடு, 1968, பக். 103-105
15. புலவர் செந்துறைமுத்து, **தொல்காப்பியர் வாழ்க்கை நெறி**, வள்ளுவர் பண்ணை, சென்னை, 1962, பக். 21, 23-24
16. அ. கி. நாயுடு, **தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம்**, முப்பால் நிலையம், கோவை, 1962, ப. 70.

17. அ. கி. நாயுடு, மு. நூ., ப. 515

18. மேற்படி, ப. 65

19. பரிமேலழகர், **திருக்குறள் - காமத்துப்பால்**, முன்னுரை - பூம்புகார் பிரசுரம், சென்னை-1982.

20. மு. இராகவையங்கார், **தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி**, மதுரைத் தமிழ்ச் சங்கம், 1922, ப. 39

21. ந. சுப்பு ரெட்டியார், **தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை**, பழனியப்பா பிரதர்ஸ், 1964, ப. 67.

22. கா. சுப்பிரமணிய பிள்ளை, **பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து**, தமிழ்நெறி விளக்கப் பதிப்பகம், சேலம், 1939, ப. 60.

23. சாமி சிதம்பரனார், மு நூ., மு. ப.

24. ''ஒருவனும் ஒருத்தியும் கூடிவாழும் மனையறத்தின் பயனாக அவ்விருவரையும் பிறப்புத்தோறும் சேர்த்து வைப்பதும், பிரித்து விலக்குவதுமாகிய இருவகை ஊழினும், இருவர் உள்ளமும் எக்காலத்தும் ஒன்றி வாழ்தற்கேற்ற நல்லூழின் ஆணையால், ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தம்முள் எதிர்ப்பட்டுக் காண்பர். அன்பு முதலியவற்றால் தலைவன் மிக்கவனாயினும் குற்றமில்லை .... இயற்கைப் புணர்ச்சிக்கண் ஒருவரையொருவர் எதிர்ப்பட்ட அளவே வேட்கையைத் தூண்டி நிற்றற்கு அவ்விருவரும் பண்டைப் பிறப்பிற் பயிலியது கெழீஇய நட்பன்றிப் பிறிது காரண மில்லையென்பதே தொல்லாசிரியர் கருத்தாகும்.''

— க. வெள்ளைவாரணர், மு. நூ. மு. ப.

25. இளவழகனார், **பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை**, கழகம், 1960, பக். 4-5.

26. சி. இலக்குவனார், **தொல்காப்பிய ஆராய்ச்சி**, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1961, பக். 157-159.

27. ''ஒருவனும் ஒருத்தியும் பால்வரை தெய்வத்தின் ஆணையால் தம்முள் உறவு கொள்வர். அதன் ஆணை இருவகைப்படும். ஒன்றாக்குவதற்கும் வேறாகவே நிற்கச் செய்வதற்கும் பால்வரை தெய்வத்தின் ஆணை இருவகைப்படுவனவாகும்.... ...., கடந்த பிறப்புக்களில் அதுவே கண்ணுங் கருத்துமாய் முயன்றவர், முயற்சியின் பயனை, அவ்வவரிடத்துக் கொணர்ந் தூட்டும் பால்வரை தெய்வத்தின் ஆணையால் தம்முள் எதிர்ப்படுவர்; முயல்வர்; உயர்வெய்துவர் .... அவரவர் செய்த வினையின் பயன் அவரவரொடு பிறப்புத்தோறும் செல்லும் என்பது ஒருவகையினர் கருத்தாகும். அப்பயனைப் பால்வரை தெய்வம் என்பதொன்று அவரவரிடத்துக் கொணர்ந்து ஊட்டும் என்பது மற்றொரு வகையினர்

கருத்தாகும். தொல்காப்பியர் பின்னர்க்கூறிய வகையினைச் சேர்ந்தவர் என்பது வெளிப்படை''

- மொ. அ. துரையரங்கசாமி, மு. நூ., பக். 221-224.

28. ந. சுப்புரெட்டியார், மு. நூ. பக். 33, 57, 66, 84 493-94.
29. வ. சுப. மாணிக்கம், **தமிழ்க்காதல்**, பாரிநிலையம், சென்னை 1975, பக், 44-48.
30. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார், **தொல்காப்பியச் செல்வம்,** முத்தையா பதிப்பகம், 1966, ப. 68.
31. ''தொல்காப்பியர் காலத்தில் ஊழ்பற்றிய நம்பிக்கை தமிழரிடையே நிலவி வந்திருக்கிறது. 'ஊழ்' என்ற சொல்லுக்கு முறைமை என்பது நேர் பொருள். பொருள்கள் எல்லாவற்றையும் ஒழுங்குற இயக்கும் ஒரு தத்துவத்தை ஊழ் என்று குறித்தனர். ஊழ் என்ற சொல்லுக்குத் தெய்வம் என்ற பொருளும் உண்டு என்பது ஈண்டு உணரத்தக்கது. 'ஒன்றே வேறே...... காண்ப' (கள-2) என்ற சூத்திரத்தில் ஊழின் ஆற்றலைத் தமிழர்கள் நம்பியவாறு தொல்காப்பியனார் தெரிவிக்கின்றார்.''

    - ம. ரா. போ. குருசாமி, **சங்ககாலத்திற்குமுன்**
    மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோவை, 1975, ப. 126.

32. தொல். பொருள். நூ. 640
33. (அ) தொல். பொருள். நூ. 640, 641.
    (ஆ) பவணந்தி முனிவர், நன்னூல், நூ. 6, 7.
34. திருக். 5
35. தொல், பொருள். நூ. 640. பேராசிரியர் உரை.
36. ந. சுப்புரெட்டியார், மு. நூ. ப. 497-498.
37. திருக். 371,
38. பார்க்க. இயல் ஒன்று-குறிப்பு-35, 36, 37.
39. குறுந். 229, 366; ஐங். 110; புறம், 75, 176, 236.
40. குறுந். 246.
41. நற் 107; குறுந். 128.
42 ஐங். 376.
43. புறம். 192.
44. புறம். 357.
45. பரி. 13.
46. நற். 210; புறம். 27, 38.
47. நற். 88.
48. கலி. 118; அகம். 243.
49. நற். 107; அகம். 400; புறம். 174, 214, 367.
50. கலி. 21.
51. புறம் 363;. திருமுருகு. அடி. 66.
52. கலி. 149.
53. பரி. திரட்டு-1.
54. நற். 9, 185; குறுந். 89, 263; புறம். 58; திருமுருகு. 160,287, 290.
55. நற். 66, 121; குறுந். 40, 190; திருமுருகு. 103; பொருந,102;பெரும். 478

56. நற். 21, 103, 142; குறுந். 144, 196, 198; ஐங். 3, 168. புறம். 34, 44, 50; சிறுபாண். 131, 250; பெரும். 168, 240
57. நற். 42, 69, 81, 88, 103, 111,118; குறுந். 63, 135 172, 195; ஐங்.302, 376; கலி 3, 7, 8, 10, 13, 17, 19, 35, 68, 84.
58. திருமுருகு. அடி. 95.
59. புறம் 357; கலி. 9, 39,141
60. ஐங். 371; மதுரை. 191.
61. க. த. திருநாவுக்கரசு, **திருக்குறள் நீதிஇலக்கியம்** செ. ப. க. 1971, பக். 37-88.
62. நற். 68; கலி. 140.
63. திருக் 370.
64. கலி. 39.
65. புறம். 35, 221; பொருந. 230;பெரும். 36; மதுரை. 191.
66. புறம். 39, 58.
67. புறம். 55.
68. புறம். 93, 397
69. கலி. 39.
70. ஐங். 321; கலி. 9.
71. நற். 376; குறுந். 244; ஐங். 385; அகம். 60, 302
72. அகம் 256
73. ஐங். 229
74. கலி. 42
75. கலி. 14
76. புறம். 145
77. ஐங். 7
78. புறம். 44
79. புறம். 34
80. புறம் 134.
81. புறம். 230, 237
82. கலி. 27.
83. புறம். 236; குறுந். 366; கலி. 39.
84. குறுந் 49.
85. கலி. 14.
86. கலி. 103.
87. குறுந். 199.
88 அகம். 66.
89. அகம். 101.
90. புறம். 141.
91. புறம். 236.
92. பட். அடி. 104; பெரும். அடி 388.
93. அகம். 233.
94. புறம். 22.
95. குறுந். 101.
96. குறுந். 288.
97. புறம் 229, 240
98. அகம். கடவுள் வாழ்த்து
99. புறம். 55.
100. அகம். 213.
101. புறம். 5.
102. புறம். 376.
103. நற். 236.
104. குறுந். 292.
105. அகம். 95.
106. புறம். 28, 31.
107. புறம். 214.
108. திருக். 356.
109. திருக். 370.
110. திருக் 346.
111. குறுந். 229.
112. குறுந். 170
113. அகம். 400.
114. நற். 107.
115. குறுந் 128.
116. குறுந். 246.
117. அகம். 243.
118. புறம். 236.
119. குறுந். 57.
120. ஐங். 371.
121. ஐங் 110.
122. புறம். 176.
123. மதுரை. அடி. 781, 782,
124. ஐங் 376.
125. நற். 88.
126. நற். 210.
127. கலி. 21.
128. கலி. 149.

129. புறம். 27.
130. புறம். 363.
131. புறம். 367.
132. குறுந். 366.
133. கலி. 123.
134. புறம். 214.
135. புறம். 357
136. பரி. 13.
137. பரி. திரட்டு 1.
138. திருமுருகு. அடி. 61- 66
139. புறம். 367.
140. மதுரை. அடி. 781, 782.
141. குறுந் 40.
142. குறுந் 136.
143. குறுந். 57.
144. குறுந். 49.
145. மு. அருணாசலம்பிள்ளை ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவுகள், கழகம், 1965, பக். 89-90
146. புறம். 75.
147. பட். அடி. 227.
148. கலி. 118.
149. புறம். 38.
150. புறம். 174.
151. புறம். 134.
152. நற். 210.
153. கலி. 21.
154. புறம். 75.
155. புறம். 236.
156. திருமுருகு. அடி. 66.
157. பரி. 11. அடி. 138-139.
158. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, புறநானூற்றுச் சொற்பொழிவுகள், கழகம், ஆ. இ., பக். 220-221.
159. புறம். 214.
160. கலி. 149.
161. திருக். 380.
162. சிலப். பதிகம்.
163. புறம். 192.

5. திருக்குறளும் ஊழும்

உலகம் போற்றும் ஒப்பற்ற அற இலக்கியமாகிய திருக்குறளில் பல்வேறு வகையான அறக் கோட்பாடுகள், மெய்ப் பொருட் சிந்தனைகள் ஆகியவற்றுடன் ஊழ்க்கோட்பாடும் விளக்கப் பெற்றுள்ளது. தம் காலத்திய தமிழ் மக்களின் ஊழ்க் கோட்பாடு பற்றிய கருத்துக்களைத் திருக்குறளில் ஆசிரியர் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார்.

அறத்துப்பாலும் ஊழியலும் :

அறத்துப்பாலில் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என நான்கியல்களும், பொருட்பாலில் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூன்றியல்களும் காமத்துப்பாலில் களவியல், கற்பியல் என இரண்டியல்களும் கொண்டு திருக்குறள் அமைந்துள்ளது. இவ்வமைப்பில் ஏனைய இயல்களெல்லாம் அதிகார அளவில் மிகுதியாகக் கொண்டிருக்க, ஊழியல் மட்டுமே ஒரே அதிகாரத்தைக்கொண்ட சிறப்பினதாகும்.

சங்க இலக்கியங்களிலேயே அறத்திற்குத் தெய்வத்தன்மை கொடுக்கப்பட்டு, அறத்தினைக் கடவுளாக உருவகப்படுத்திப் போற்றிய நிலை காணப்படுகிறது.[1] அந்நிலை மேலும் வளர்ச்சி யுற்றுத் திருக்குறளிலும் அறம் கடவுளாகப் போற்றப்பட்டமையைக் காணமுடிகிறது. அறக்கடவுள் நல்லதன் நலனும் தீயதன் தீமையும் ஆய்ந்து அவரவர்க்குரிய பயனைத் தருவதாக நம்பப்பட்டது. அவரவர்க்குரிய பயனை நல்கும் தெய்வம் ஊழ்வினைத் தெய்வமென்று பின்னாளில் கருதப்பட்டது. தமிழர் அறக்கடவுளை வினைப்பயனை ஊட்டும் தெய்வமாக நம்பினர் என்பதனை,

> அறத்தெய்வம் நல்வினை செய்தோர்க்கு நன்மைகளையும் தீவினை செய்தோர்க்குத் துன்பங்களையும் தருவதாக நம்பப்படுகிறது. இவ்வகையில் அது ஊழ்வினைத் தெய்வமாகக் கருதப்படுகிறது.[2]

என்னும் க. த திருநாவுக்கரசுவின் கருத்தினைக் கொண்டு அறியலாம்.

பழந்தமிழர் அறத்தைப் போற்றிய சிறப்பினைக் கருதியும் ஏனைய பொருள், இன்பங்களுக்கு அடிப்படையானது அறம் என்பதாலும், சிறந்த சிந்தனையாளராகிய திருவள்ளுவர் அறத்துப் பாலை முதன்மையாக வைத்தார். முப்பத்தெட்டு அதிகாரங்களில் அறத்தின் இயல்பும் சிறப்பும் உரைத்து, அறத்தின் முடிவாகச் சொல்லப்பட்ட ஊழ் அதிகாரத்தினை அறத்துப்பாலின் இறுதியில்

வைத்த இயைபு இதன் மூலம் புலனாகும். அறக்கடவுளை ஊழ்வினைத் தெய்வமாகக் கருதிய நிலை இருந்திருப்பினும், அறமும் ஊழும் ஒன்று என்று கொள்ள இயலாது. இருவினைப் பயனை ஊட்டும் நடுநிலையுடைய அறத்தெய்வம் வினைப்பயனை யூட்டும் நிலையில் ஊழ்வினைத் தெய்வமாகவும் கருதப்பட்டுள்ளது. ஆயினும் ஊழ் என்பதற்கு, 'இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதற்கு ஏதுவாகிய நியதி' என்னும் பரிமேலழகர் கூற்றிற்கேற்பவே பெரும்பாலான அறிஞர்கள் கொள்ளும் கருத்தும் அமைவதால் திருவள்ளுவர் கருத்தும் இதுவே எனக் கொண்டு பார்க்குமிடத்து இருவினைப் பயனாகிய ஊழினை ஊட்டும் பேராற்றலுடைய கடவுள் வேறு என்றும் அக்கடவுள் அறத்தின் வடிவமானது என்றும் தமிழர் நம்பினர். எனவே மனிதனுக்கு வேண்டிய அறமெல்லாம் உரைத்து, அறம் செய்வார்க்குரிய நல் வினைப்பயனையும், அறமல்லன செய்வார்க்குரிய தீவினைப் பயனையும் சொல்லி, இவற்றான் வரும் இன்ப துன்பங்களை வலியுறுத்தி மனிதகுலத்தைச் செம்மைநெறியில் வாழச்செய்யும் நோக்குடனேயே அறத்துப்பாலின் இறுதியில் ஊழியலைத் தனி இயலாக வைத்து ஊழின் சிறப்பினைத் திருவள்ளுவர் உணர்த்தினார் என்னும் உண்மை புலனாகும்.

ஊழும் பிறகோட்பாடுகளும் :

திருக்குறளில் கடவுள், அறம், உயிரின் இருவினைகள், இம்மை மறுமைப் பிறப்புக்கள் துறக்கம், நரகம், வீடுபேறு ஆகியவை பற்றிய நம்பிக்கை வழிப்பட்ட சிந்தனைகள் இடம் பெற்றுள்ளன. மேற்கண்டவற்றில் திருவள்ளுவர் நம்பிக்கை இல்லாதவர் என்று சொல்லச் சிறிதும் இடமில்லை.

> திருவள்ளுவர் தெளிவான கடவுட்கொள்கையுடையவர். ஆன்மாவிற்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள தொடர்பினையும், இருள்சேர் இருவினையையும், பற்றற்றான் பற்றினைப் பற்றுவதற்குரிய வழியையும் எளியமுறையில் யாவரும் தெளிவாகப் புரிந்துகொள்ளும் வகையில் அவர் விளக்கியுள்ளார்.[3]

என்று க. த. திருநாவுக்கரசு கூறும் கருத்தும்,

> வள்ளுவர் காலத்து மக்கள் தலைவிதியிலே, ஊழ் வினையின் வலிமையிலே கொண்டிருந்த நம்பிக்கையை ஊழ்வினை என்ற அதிகாரத்தில் காணலாம். அவர் காலத்து மக்கள் நம்பிக்கையை அவர் மறைத்து விடவில்லை. அப்படியே எடுத்துக்காட்டுகிறார்.[4]

என்று சாமி. சிதம்பரனார் கூறும் கருத்தும் திருவள்ளுவரின் உள்ளக்கருத்தை விளக்குவனவாம்.

இறைவனும் ஊழும் :

இறைவன் இருவினைகளிலிருந்து நீங்கியவன் என்றும் அவன் வினைகளால் பற்றமுடியாதவன் என்றும், உயிர்கள் இருவினை நீக்கமுற்று வீடுபேறடைய அவன் அருள் செய்கிறான் என்றும் நூல்கள் கூறுகின்றன. இறைவன் திருவடிகளைப்பற்றி அவனுடைய பொருள்சேர் புகழை விரும்பி வணங்குவாரிடத்து, பிறத்தற்குக் காரணமாகிய இருவினையும் உண்டாகமாட்டா; அவ்வினைப்பயன் இன்மையால் உயிர்கள் பிறவித் துன்பமாகிய பெருங்கடலை நீந்திக்கரையேறி வீடுபேற்றினையடையும் என்னும் கருத்துக்களைத் திருக்குறள் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் காணமுடிகிறது [5]

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு[6]

என்னும் குறளில் நல்வினை, தீவினை ஆகிய இரண்டினையும் இருள்சேர் இருவினை எனக்குறிப்பிட்டது. நல்வினையும் பிறத்தற்குக் காரணமாவதால் வினைநீக்கமே வீடுபேற்றினைத் தரும் என்னும் கருத்தினை விளக்கவேயாகும்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்[7]

என்னும் குறளின் வழி, ஐம்பொறிகளால் தோன்றும் அவாவினை அறுத்தவனாகிய இறைவனது மெய்யான ஒழுக்க நெறியில் நிற்பவர், எக்காலத்தும் பிறப்பின்றி ஒருதன்மையராய் வாழ்வர் என்கிறார் வள்ளுவர். 'தனக்குவமை இல்லாதான் தாள்',[8] 'அறவாழி அந்தணன்தாள்'[9] என இறைவன் திருவடியைக் குறிப்பிட்டு இத்திருவடிகளைச் சேர்ந்தோர் பிறவித் துன்பத்தை அடையமாட்டார் என்றும் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். இறைவன் திருவடியைப் பற்றினோர் அவாவினால் விளையும் இருவினைகளைச் செய்து மேலும் வினையினைச் சேர்த்துக் கொள்ளாமல், பழவினையைத் துய்த்துக் கழித்து வினையின் நீங்கி வீடுபேறடைவர் என்பது திருவள்ளுவர் கருத்து. பிற்காலத்தில் கடவுள் நம்பிக்கையுடைவர்கள் உயிர்களின் வினைகளை மாற்றும் வல்லமை இறைவனுக்கு உண்டென்பர்.[10] இதனால் ஊழ் இறைவனிடம் கொண்ட தொடர்பு புலப்படும்.

அறமும் ஊழும் :

வித்திற்கேற்பவே விளைவும் ஆகும் என்பது போல, செயலிற் கேற்பவே பயனும் அமையுமென்பதால் நற்செயல்களைச் செய்து நல்வினைப் பயனைஈட்டுமாறு அறத்துப்பால்முழுவதும் வலியுறுத்து

கிறார் வள்ளுவர். அறத்தினை வலியுறுத்திய இடங்களிலெல்லாம் வினைப் பயன், இம்மை, மறுமை பற்றியும் குறிப்பிட்டுள்ளது கருதத்தக்கது. அறம், ஊழ் இரண்டின் தொடர்புடைய குறட் பாக்கள் மிகுதியாக இருப்பினும் ஆய்வுக்கு வேண்டியன மட்டும் இங்குக் காட்டப்படுகின்றன.

உலகில் ஒவ்வொருவரும் அறத்தின் வழியில் செய்யும் செயல்கள் யாவும் நன்மையுடையனவாய் நல்வினையின் பாற் படுவன எனவும், அறமற்ற வழியில் செய்யும் செயல்கள் யாவும் தீமையுடையனவாய்த் தீவினையின் பாற்படுவன எனவும் சான்றோர் கூறியுள்ளனர். தீவினை தரும் துன்பத்திலிருந்து விடுபட்டு இன்பம் அனுபவிக்க வேண்டுமாயின் நல்லூழுக்குக் காரணமாகிய அறச்செயல்களைச் செய்யவேண்டுமென்பதால் திருவள்ளுவர் அறத்தை மிகுதியாக வற்புறுத்தினார். அறமே வீடுபேற்றையும் துறக்கம் முதலிய செல்வத்தையும் தருமாதலின் அறத்தின் மிக்க ஆக்கம் உயிர்களுக்கு இல்லையென்று கூறி அறமே உயிர்களால் இவ்வுலகில் செய்யத்தக்கது என்று வலியுறுத்துகிறார்.[11] அறத்தினைப் பின்னர் செய்யலாம் என்று கருதாமல் நாள்தோறும் செய்ய வேண்டும்; அவ்வாறு செய்த அறம் உடம்பிலிருந்து உயிர்பிரிந்து போகும் காலத்து உயிருக்கு அழிவில்லாத துணையாக அமையும் என்னும் கருத்தினை

அன்றறிவாம் என்னாது அறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை[12]

என்னும் குறளால் விளக்குகிறார். செய்யும் செயல்களுக்கு உரிய பயன் உறுதியாக விளையுமாதலின் அறத்தினைச் செய்வோர் உரிய பயனை உறுதியாக அடைவர். ஆயினும் அறத்தின் பயன் இதுதான் என்று நூல்களினால் வரையறுத்து உணர்த்த இயலாது எனவும், சிவிகையில் ஏறிச் செலுத்துபவன், அச்சிவிகையைச் சுமப்பவன் ஆகிய இருவரிடையில் காணலாம் எனவும் விளக்கும்

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை[13]

என்னும் குறளின் வழி அறம் செய்த நல்லூழ் உடையவன் சிவிகையின் மேல் அமர்ந்து செலுத்துபவனாகவும் அறமல்ல செய்த தீயூழ் உடையவன் சிவிகையைச் சுமப்பவனாகவும் உணர முடிகிறது.

ஒருவன் இவ்வுலகில் செய்யத்தக்கது அறமாகிய நல் வினையேயென்றும், அவன் ஒழிக்க வேண்டியது தீவினையே[14] என்றும் கூறும் வள்ளுவர், அவ்வாறு ஒருநாள் கூட வீணாளாகாமல்

அறத்தைச் செய்வானாயின் அவ்வறச் செயல் அவன் மீண்டும் பிறவாதவாறு, வழியை அடைக்கும் கல்லாக விளங்கும் என்னும் கருத்தினை,

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்15

என்ற குறளால் விளக்குகிறார். அறத்தின் பயனைப் பலவாறு கூறிய திருவள்ளுவர் அறமல்லவற்றைச் செய்வதனால் விளையும் தீவினைப்பயனாகிய துன்பத்தைக் கூறும் வகையில், எலும்பில்லாத உயிர்களை வெயில் காய்வது போல அன்பில்லாத உயிர்களை அறக்கடவுள் காயும் என்னும் கருத்தினை,

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்16

என்ற குறளால் விளக்குகிறார். ஒருவன் பிறனுக்குத் தீங்கு நினையாதிருப்பதே மிகச் சிறந்த அறமாகச் சமய நெறிகள் வற்புறுத்துகின்றன. ஆதலின் பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை மறந்தும் நினையாதிருக்க வேண்டுமென்றும், அவ்வாறு ஒருவன் பிறனுக்குக் கேடு நினைவானாயின் அவனை விட்டு அறக்கடவுள் நீங்கும், நீங்கினால் அவன் தன் எண்ணம், சொல், செயல் விளைக்கும் தீவினையினால் தானே அழிவான் என்பதால் அறக்கடவுள் அவனுக்குக்கேட்டினைச் சூழும் என்னும் கருத்தினை,

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு17

என்ற குறளால் விளக்குகிறார். ஆகவே நல்வினைக்குக் காரணமாகிய அறத்திற்கும் ஊழுக்கும் உரிய உறவு புலனாகும்.

மறுமையும் ஊழும் :

மனிதன் தன் வாழ்நாளில் செய்யும் செயல்களுக்கு ஏற்ப விளையும் பயன்களை இரண்டாகக் கூறுவார் வள்ளுவர். அவை இம்மைப் பயன் எனப்படும். செய்த வினைக்கேற்ப அவை நற்பயன்களாகவும் தீப்பயன்களாகவும் அமையும். இம்மையில் ஒருவன் செய்யும் வினைக்கேற்ப மறுபிறவியையோ, துறக்கமாகிய தேவருலக வாழ்வையோ, நரகத்தையோ, வீடுபேற்றையோ அடைவான் என்னும் கருத்தின் வழி வினையின் விளைவாகிய ஊழ்பற்றிய கோட்பாடு வலியுறுத்தப்படுகிறது. ஊழினால் பல பிறவிகளில் உழன்று இன்ப, துன்பங்களைத் துய்த்த உயிர் இறைவனடியை அடைவதற்காக மனிதப்பிறவியைப் பெற்று நல்வினைகளைச் செய்து வீடுபேறு எய்துகிறது என்ற கருத்தில் பிறவியைக் கடலாக உருவகப்படுத்திய திருவள்ளுவர்,

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்18

என்கிறார். 'காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின் பிறவிப் பெருங்கடல் என்றார்' என்று பரிமேலழகர் கூறும் விளக்கம் உயிர் பல பிறவிகளையடைகிறது என்பதை வலியுறுத்துகிறது. உயிர் பல பிறவிகளில் உழன்றபின் மனிதப் பிறவியைப் பெறுகிறது என்பதை மாணிக்கவாசகர்,

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
....
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்[19]

எனக் கூறியது கொண்டு அறியலாம்.

மறுமை என்பது இம்மைப் பிறப்பிற்கு அடுத்த நிலையினைக் குறிக்கும். மறுமையில் விளையும் இன்ப துன்பமாகிய பயன்கள் பற்றித் திருவள்ளுவர் பலவிடங்களில் வற்புறுத்தியுள்ளார்.

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்[20]

என்னும் குறளினால், ஒருவன் இன்சொல் பேசுவதனால் அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் இன்பம் விளையும் என்று கூறும் வள்ளுவர், வறுமையென்னும் பாவி ஒருவனுக்கு வரும்போது அவனுக்கு இம்மையின்பமும் மறுமையின்பமும் இல்லாமற் செய்வான் என்கிறார்.[21]

எழு பிறப்புக்கள் உண்டு என்று சொல்லும் மரபுவழிப்பட்ட கருத்துத் தமிழகத்தில் நெடுங்காலமாக உள்ளது. திருவள்ளுவரும் இக்கருத்தைப் பலவிடங்களில் வலியுறுத்துகிறார். பண்புடைய மக்களைப் பெற்றவருக்கு வினைவயத்தால் பிறக்கும் பிறப்பு ஏழின் கண்ணும் துன்பங்கள் சேர மாட்டா என்னும் கருத்தினை,

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்[22]

என்னும் குறளால் விளக்குகிறார். தாம் எய்திய துன்பத்தினை நீக்கியவருடைய நட்பினை எழுவகைப் பிறப்பிலும் நல்லோர் நினைப்பர் என்றும் கூறியுள்ளார்.[23] தீவினையில் செல்லாது அடங்கியவனுக்கு அவனது புலனடக்கம் ஏழு பிறப்புக்கும் காப்பாக இருக்கும் என்பதனை,

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து[24]

என்னும் குறளில் விளக்குகிறார். ஒருவன் ஒரு பிறப்பில் கற்ற கல்வி அவனுக்கு ஏழு பிறப்பினும் சென்று உதவும் பெருமை யுடைத்து[25] என்று வள்ளுவர் கூறிய கருத்து, வினைகள் பிறவி தோறும் தொடர்வது போலக் கல்வியறிவும் தொடரும் என்பதைக் காட்டுகிறது. பரிமேலழகர் ஏழ்வகைப் பிறப்புக்கள் பற்றித் திருக்குறள்

உரையில் குறிப்பிட்டுள்ளார்.[26] ஆதலின் திருவள்ளுவருக்கு ஏழ் பிறப்புக்கள் பற்றிய நம்பிக்கையும், அப்பிறப்புக்களைத் தொடர்ந்து சென்று இயக்கும் ஆற்றலுடையது ஊழ் என்னும் கொள்கையும் உண்டு என்பது தெளிவாகும்.

துறக்க நரகமும், ஊழும்,

பிறப்பு என்பது வினைகளின் விளைவு என்றும், நல்வினையினால் இம்மையிலும் மறுமையிலும் இன்பமும், தீவினையினால் இருமையிலும் துன்பமும் அடைய நேருமென்றும், ஐம்பூதங்களால் ஆகிய இவ்வுடம்பினைத் துறந்த உயிர் நல்வினைப் பயனைத் துய்க்க அமரருலகம் சென்று இன்பத்தையனுபவிக்கும் என்றும், தீவினைப் பயனைத் துய்க்க நரக உலகம் சென்று துன்பத்தையனுபவிக்கும் என்றும் இந்திய நாட்டுச் சமயங்களும்,புராணங்களும் மிகுதியாகக் கூறுகின்றன. கண்ணுக்குப் புலனாகாத நுண்ணுடம்பைப் பெற்று இன்பம் மட்டுமே அனுபவிப்பதற்குரிய இடமாகத் தேவருலகம் சொல்லப்படுகிறது. அவ்வுலகில் கற்பகத் தரு, காமதேனு ஆகியவையும் தேவருலக மகளிரும் புண்ணியப் பயனால் ஆங்குச் செல்வோருக்கு இன்பம் வழங்குவர் என்றும், அவ்வாறு இன்பம் மட்டுமே அனுபவிக்கும் தேவர்களுக்குத் தலைவன் இந்திரன் என்றும் புராணங்கள் குறிப்பிட்டுள்ளன. இத்தகைய உலகம் ஒன்று உள்ளதா என்று ஆராய்ந்து காணும் முயற்சி வேண்டியதில்லை என்பதை அவ்வுலகம் பற்றிச் சொல்லும் கருத்துக்களே விளக்குகின்றன. காட்சிக்கு அப்பாற்பட்ட நுண்ணுடலில், அருவ நிலையில் தேவர்கள் அவ்வுலகில் வாழ்வதாகக் கூறும் கருத்தினைக் காட்சி நிலையில் ஆய்ந்து காண இயலாது. ஆயினும் திருவள்ளுவருக்கு அவ்வுலகம் பற்றிய நம்பிக்கை இருந்தது என்பதை அறியலாம்.

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு[27]

என்றும்,

கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு[28]

என்றும், புத்தேள் உலகு பற்றிக் கூறியுள்ளார். அன்புடைய காதலரிடத்தில் ஊடுவதைவிட புத்தேள் நாட்டின்பம் பெரிதோ என்பது ஊடலுவகைக் குறள் கருத்தாகும்.[29] செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் சிறப்புடையான் வானத்தவர்க்கு நல்விருந்தாவான்.[30] என்றும். 'வானகமும் ஆற்றல் அரிது,[31] 'மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று'[32] 'அடக்கம் அமரருள் உய்க்கும்'[33] 'தேவரனையர் கயவர்'[34] என்னும் வள்ளுவர் குறிப்பிடும் குறட்பாக்கள் துறக்கம்பற்றி விளக்குகின்றன. துறக்கம்

என்ற சொல் சங்க இலக்கியத்துள் 'அமரர் உலகு' என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது.35 எனினும் இச்சொல் திருக்குறளில் ஓரிடத்தும் ஆளப்படாமைக்குரிய காரணம் புலப்படவில்லை. காமத்துப் பாலில் 'தாமரைக் கண்ணான் உலகு'36 எனக் கூறப் பட்டிருப்பது செங்கண்மால் உலகம் என ஏற்றுக்கொண்டால் இன்றும் மக்கள் நம்பிக்கையிலுள்ள சிவனுலகு, மாலுலகு (வைகுண்டம்), தேவருலகு போன்ற பல நுண்ணிய உலகங்களைப் பற்றிய நம்பிக்கை திருவள்ளுவர் காலத்து மக்களுக்கும் உண்டு என்பது புலனாகிறது.

திருக்குறளில் இருள், அளறு ஆகிய சொற்கள் நரகத்தைக் குறிக்கின்றன.

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்'37

என்னும் குறளில் 'இருள்' என்பதற்குப் பரிமேலழகர், மணக்குடவர், பருதியார், காளிங்கர் ஆகிய உரையாசிரியர்கள் நரகம் என்றே கொள்கின்றனர்.

அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்38

அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்39

ஆகிய குறட்பாக்கள் நரகம் பற்றிக் கூறுகின்றன. மேலும் ''ஊன் உண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு''40 ''தான்புக்கு அழுந்தும் அளறு''41 ''பூரியர்கள் ஆழும் அளறு''42 என்னும் குறட்பாக்களில் அளறு என்ற சொல்லினால் நரகத்தைச் சுட்டி யுளளார். தீவினை செய்வார் நரகம் அடைவர் என்னும் கருத்தும், அவ்வாறு உயிர்கள் அடைவதற்கு அவற்றின் ஊழே காரணம் என்னும் கருத்தும் திருவள்ளுவரால் வலியுறுத்தப்படுகின்றன.

வீடுபேறும், ஊழும் :

வினையின் காரணமாக உயிர்கள் பிறப்பையும் இறப்பையும் மாறி மாறியடைந்து உழல்கின்றன. இப்பிறவியில் ஓர் உடம்பில் தங்கிய உயிர் மறுமையில் பிறிதோர் உடலில் சென்று தங்கும் வாய்ப்புண்டு என்னும் கருத்தில்,

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு43

என்று வள்ளுவர் கூறினார். ''உறங்கி விழிப்பது போலும் பிறப்பு'' என்னும்படியான, அழியக்கூடிய உடம்புக்கும் அழியாத உயிருக்கும்

தொடர்பாக அமைவது வினையேயாகும். வினைத் தொடர்பினை அறுத்தால் பிறவாமையை அடையலாம் என்பது நூல்களின் முடிவு.

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும்.[45]

யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்[46]

என்னும் குறட்பாக்கள் பற்றறுத்து விடெய்தும் கருத்தினை விளக்குகின்றன. பிறப்பிற்கு வித்து அவா ஆதலின் அவா அறுத்தல் வேண்டும்; உயிர் உடம்பை விட்டு நீங்கும் காலத்தில் அடுத்த வினையும் அதனால் கொண்ட அவாவும் உயிருடன் தொடர்ந்து பிறப்பிற் செலுத்தும் என்னும் திருவள்ளுவர் கருத்து எல்லாச் சமயங்களுக்கும் ஒத்ததாதலின் அவா அறுத்தல் பிறவாமையைத் தரும் என்றனர். ஒரு பொருளையும் அவாவினால் வேண்டாத வனுக்குப் பிறவாமை தானே வரும்[47] என்று கூறும் திருக்குறள் கருத்தின் வழி அவா நீங்கினால் வினைப்பயன் இல்லை. வினைப் பயன் நீங்கினால் பிறவியில்லை என்பது கருத்தாகும்.

உயிரின் முடிந்த நிலையும் பயனும் வீடுபெறுதலே என்றும் அவாவை அறுத்து, வினைநீக்கம் பெற்றுப் பிறவியை ஒழித்து வீடுபேற்றினை அடைய வேண்டுமென்றும் நூல்கள் கூறுகின்றன. நல்வினை, தீவினை என்பன துறக்கம், நரகம் ஆகியவற்றை அடையவும், மீண்டும் பிறப்பினையடையவுமே துணையாகின்றன. வினைகளிலிருந்து நீக்கம் பெறும் உயிரே வீடுபேற்றையடையு மாதலின், வினையிலிருந்து நீங்க அவா அறுத்தல் (பற்றினை விடுதல்-ஆசையைத் துறத்தல்) வேண்டும். இக்கருத்தினை,

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு[48]

என்னும் குறளின் வழி வள்ளுவர் வலியுறுத்துகிறார். ''அற்றது பற்றெனில் உற்றது வீடு''[49] என்னும் நம்மாழ்வாரின் கூற்று இங்கு ஒப்புநோக்கத்தக்கது. வீடுபேற்றினை, 'மற்றீண்டு வாரா நெறி'[50] என்றும் 'பேரா இயற்கைப் பெருநிலை'[51] என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

இம்மைப் பிறப்பின் நிலையாமையுணர்ந்து, பற்றினைத் துறந்து மெய்யுணர்வு பெற்று, உள்ளத்தால் நினைத்தலாகிய அவாவையும் அறுத்தவர்க்கு வினையின் விளைவாம் ஊழின் தொடர்பில்லையாதலின் வீடுபேற்றினையடைவது உறுதியென்று வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

திருவள்ளுவரின் ஊழ்க் கோட்பாடு :

திருவள்ளுவர் அறம் வலியுறுத்திய சான்றோராதலின் ஒவ்வொரு அறக் கொள்கையினைக் கூறும்போதும் அதன் சிறப்பியல்புகளைச் சொல்லி அதனையே வலியுறுத்துவது போலக் கூறியிருப்பது அவரது தனிச் சிறப்பு. ஆயினும் அறத்துப்பால் முழுதும் ஏனைய அறக் கருத்துக்களைச் சொல்லியிருப்பினும், இறுதியில் முடிவாக ஊழதிகாரத்தை அமைத்தது சிந்தனைக் குரியதாகும். ஊழதிகாரத்திலும் ஏனைய அதிகாரங்களிலும், உலகியலிலுள்ள முரண்பாடுகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் ஆராய்ந்து அவற்றைக் கொண்டே விளக்கிச் செல்வதையுணரலாம். இவ்வுலகம் பொருட் செல்வத்திற்கு முதன்மை கொடுப்பது. அவ்வுலக வாழ்விற்கு அருளும் இவ்வுலக வாழ்விற்குப் பொருளும் இன்றியமையாதவை என்பது வள்ளுவர் கருத்து.[52] இவ்வுலகில் ஒருவன் செல்வமுடையவனாக இருப்பதற்கும், பிறிதொருவன் வறியவனாக இருப்பதற்கும் அவ்வாறே அறிவில் வேறுபாடு உடையராயிருப்பதற்கும் உரிய காரணத்தை ஆராய்ந்து, முன்னோர் சொல்லிய ஊழ்க் கோட்பாட்டினைக் காரணமாகக் காட்டினார் வள்ளுவர்.

ஊழும் செல்வமும் :

ஊழ் என்பது ஒன்றேயாயினும் செயற்படும் நிலையில் ஆகூழ், போகூழ் என இரண்டாகக் கொள்ளப்படுகிறது.[53] நன்மையைத் தருவது ஆகூழ் என்றும் தீமையைத் தருவது போகூழ் என்றும் கூறப்படுகிறது. இவற்றை ஆகலூழ், போகலூழ் என்று குறித்தலும் காணப்படும். போகூழை இழவூழ் என்று குறித்தலும் காணப்படுகிறது. ஊழதிகாரத்தில் வள்ளுவர் பால் என்னும் சொல்லையும் ஊழ் என்னும் பொருளில் ஆண்டுள்ளார். ஊழ் என்பது முற்பிறப்பிற் செய்த வினைகளின் தொகுதியாதலின் அதன் பயனாக இம்மையிலேற்படும் விளைவுகளே ஊழதிகாரத்தில் பேசப்படுகின்றன.

இவ்வுலக வாழ்வில் ஒருவன் தான் இன்புற்று வாழவும், அறம் செய்து பிறருக்கு உதவி மற்றவரை இன்புறுத்தவும் வேண்டுவது பொருளே. இப்பொருளுக்கும் ஊழுக்கும் உள்ள தொடர்பினை இவ்வதிகாரத்தில் ஐந்து குறட்பாக்கள் விளக்கு கின்றன. ஒருவனுக்குப் பொருட்செல்வம் வேண்டுமேல் அவன் வருந்தி உழைக்க வேண்டும்; வலிய முயற்சி வேண்டும். அவ்வாறு அவன் உழைப்பதற்குரிய முயற்சியும் அவனுக்குக் கைப்பொருள் பெருகுவதற்குக் காரணமாகிய ஊழினாலேயே உண்டாகிறது

என்றும், பெருஞ்செல்வம் உடையவனும் உழைப்பின்றிச் சோம்பிக் கிடப்பானேயானால் அவன் பெற்ற செல்வம் அழிவதற்குக் காரணமாகிய போகூழால் அவனுக்கு மடி தோன்றும் என்றும் வள்ளுவர் விளக்கும் கருத்து,

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி[54]

என்னும் குறளால் அறிய முடிகிறது.

உலகில் செல்வத்தை ஈட்டும் நிலையில் எளிய முயற்சி உடையோர் பெருஞ்செல்வத்தினைச் சேர்க்கவும், பெரும் முயற்சி உடையோரும் எண்ணிய அளவு சேர்க்கவியலாமல் துன்புறவும் யாது காரணம் என எண்ணிய வள்ளுவர், ஊழினாலேயே ஒருவனுக்குச் செல்வம் சேரும் என்னும் முடிவுக்கு வந்தவராய், ஒருவன் செல்வத்தை ஈட்டும் முயற்சிக்கு அழிக்கும் ஊழ் உற்ற வழி நல்லவையெல்லாம் தீயனவாய் அழிதலும், ஆக்கும் ஊழ் உற்றவழித் தீயனவெல்லாம் நல்லனவாய் ஆக்குதலும் உண்டு என்ற கருத்தினை,

நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு[55]

என்னும் குறளால் விளக்குகிறார்.

ஒருவனுக்குச் சேரவேண்டிய பொருளின் அளவும் உரிமையும் ஊழினால் முடிவு செய்யப்படுகிறது என்பது வள்ளுவர் கருத்து. ஊழினால் தமக்குச் சேரவியலாத பொருள்களைத் தாம் எவ்வளவு வருந்திக் காப்பாற்றினாலும் தம்மிடத்து அவை நிற்கமாட்டா; ஊழினால் தமக்குரிய பொருள்களைப் புறத்தே கொண்டு போய்ச் சொரிந்தாலும் அவை தம்மை விட்டுப் போகா என்பது,

பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம[56]

என்னும் குறளால் விளங்குகிறது.

கோடிக்கணக்கில் செல்வத்தைச் சேர்த்து வைத்தவர்கள்கூட அச்செல்வத் தொகுப்பின் பயனைத் துய்க்க முடியாமல் அல்லற்படுவதையும், அவர்கள் சேர்த்த செல்வத்தை அவர்களேஅனுபவிக்க முடியாமல் மறைந்து போவதையும் உலகியலில் காணமுடிகிறது. எனவே திருவள்ளுவர் கோடிக்கணக்கில் பொருளைத் தொகுத்து வைத்தார்க்கும் ஊழ் வகுத்த வகையாலல்லது நுகர்தல் உண்டாகாது என்று வலியுறுத்துகிறார்.[57]

பொருளின்றி வறுமையில் துன்புறுவோர் ஊழினால் அவாவை விட்டவர்களாயின் துறவை எளிதில் மேற்கொள்வர்; அவர்களது ஊழ் அவர்களுக்குத் துன்பத்தை ஊட்டும் நிலையினைத் தருமானால் அவர்கள் எத்துணைத் துன்பமுற்று வறுமையில் வாடினும் துறவினை மேற்கொள்ளார்; உடல் உலகில் துன்பப் பட்டு வருந்த வருந்த இவ்வுலக வாழ்க்கையில் மேன்மேலும் காதலுடையதாக இருப்பது உயிரின் இயல்பு. எனவே ஊழ் ஒருவருக்குரிய துன்பத்தை ஊட்டும்போது வறுமையால் இன்ப நுகர்ச்சி இல்லையாயினும் அவர்களது ஆசையின் காரணமாகப் பின்வரும் நாளில் இன்பம் கிடைக்குமென்று எண்ணித் துறவினை மேற்கொள்ளாது துன்பத்தில் உழல்வர் என்ற கருத்தினை

துறப்பார்மன் துப்புரவு இல்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்58

என்னும் குறளால் அறியமுடிகிறது.

இவ்வாறு பொருளை ஈட்டும் முயற்சி அதனைக் காக்கும் வழி அப்பொருளைத் துய்க்கும் முறை ஆகியவற்றுக்கு ஊழ் எவ்வாறு காரணமாகின்றது என்பதை வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

ஊழும் அறிவும் :

மனிதன் கல்வி, கேள்வி, உலகியலனுபவம் ஆகிய பல வாயில் களால் அறிவைப் பெற வேண்டும். நூல்களால் மட்டும் பெறும் அறிவு முழுமையறிவாகாது. கல்வி கேள்வி முயற்சிகளால் பெறும் செயற்கையறிவு மெய்யறிவைப் பெறும் வாயிலேயொழிய, இவ்வறிவே மெய்யறிவாகாது. ஆகவேதான் சான்றோர் நூலறிவை மட்டும் பெறுவது போதாது என்னும் கருத்தினை வற்புறுத்தினர். இவ்வுண்மையை,

ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது

என்னும் பழமொழியும்,

நூறாக் கேட்கினும் நூலறிவு என்செய்யும்59

என்னும் மனோன்மணீய ஆசிரியர் கருத்தும் விளக்குகின்றன. ஊழதிகாரத்தில், திருவள்ளுவர், ஊழ்த் துணையல்லாத ஒருவன் நுண்ணிய பொருள்களையுணர்த்தும் நூல் பலவற்றையும் கற்பினும் அவனுக்குப் பின்னும் தன் ஊழானாகிய பேதைமை உணர்வே மேற்படும் என்றார். பிற வாயில்களால் பெறும் அறிவைவிட இயற்கையறிவு என்னும் நுண்ணறிவுதான் ஒருவனுடைய உயர்வுக்கு காரணமாக அமையும் என்பதை,

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்60

என்னும் குறளால் வள்ளுவர் கூறுகிறார். இன்னும் பல நூல்களைக்

கற்காமலும், உரிய முயற்சியுடன் பயிற்சியினால் பெறாமலும் உலகில் பலதுறைகளில் 'பிறவி அறிஞர்', 'பிறவிக் கலைஞர்' எனப்போற்றும்படியான வித்தகர்களைக் காணமுடிகிறது. அவ்வாறு அவர்கள் அவரவர் துறைகளில் மேலோங்கி நிற்பதற்குரிய சிறப்பினை அவர்களுக்கு வழங்கியது அவர்களுடைய இயற்கை அறிவாகிய நுண்ணறிவே ஆகும்.

நாட்டை ஆளும் அரசர்க்கு அறிவுரை வழங்கும் அமைச்சர் இயற்கையறிவாகிய நுண்ணறிவும் செயற்கையறிவாகிய நூலறிவும் உடையவராக இருத்தல் வேண்டுமென,

மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை[61]

என்னும் குறளால் வள்ளுவர் வலியுறுத்துகிறார். எனவே ஊழ் அதிகாரத்தில் 'உண்மையறிவு' என்றது ஊழின் காரணமாக உயிரோடு தொடரும் இயற்கையறிவினையேயாம். ஆன்மாவிற்குரிய மலம் ஆன்மாவை ஒட்டியே அடுத்த பிறவியிலும் வினையினால் தொடர்வதுபோல, ஒருவனுடைய இம்மைப் பிறப்பின் அறிவும் எழுமையிலும் தொடரும்[62] என்பது திருவள்ளுவர்க்கும் உடன்பாடாதலின், இங்கு உண்மையறிவென்று திருவள்ளுவர் வலியுறுத்துவது உயிருடன் தொடர்ந்து, முடிந்த பயனை நல்கும் இயற்கையறிவையே என்பதும், இவ்வறிவு ஊழ் துணையின்றி விளக்கம் பெறாது என்பதும் புலனாகும்.

ஊழும் உலகியற்கையும் :

ஒருவன் இவ்வுலகில் சிறப்புடன் வாழச் செல்வம், அறிவு ஆகிய இரண்டின் துணையும் வேண்டும். சிலரிடம் செல்வம் மிகுதியாகச் சேர்ந்தும் அறிவு அவர்களிடம் சிறப்படையவில்லை. சிலர் அறிவில் வல்லவர்களாயிருந்தும் செல்வமில்லாமல் இருக்கின்றனர்; மிகச் சிலரிடம் இரண்டும் சேர்ந்திருப்பதையும் காணமுடிகிறது. இவ்வாறான முரண்பட்ட உலகியல்பைத் திருவள்ளுவர் ஆராய்ந்து காண்கிறார்.

பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை[63]

என்னும் குறளால், ஒருவனுக்கு எல்லா அறிவும் இருப்பினும், அவன் கைப்பொருள் இழப்பதற்குக் காரணமாகிய ஊழ் வந்துற்றபோது அது அவனுடைய அறிவைக் கெடுத்துப் பேதையாக்கும்; அறிவு சுருங்கியிருப்பினும் அவனுடைய கைப்பொருள் பெருகுவதற்குக் காரணமான ஆகூழ் வந்தவிடத்து அது அவனுடைய அறிவை விரிவாக்கும் என்று விளக்குகிறார்.

செல்வத்தினாலும் அறிவினாலும் ஏற்றத்தாழ்வுள்ள நிலையை ஆராய்ந்த சான்றோர் இவ்வேறுபாட்டிற்குக் காரணம் ஊழ் என்று கூறினர். செல்வத்தை அறவழியில் ஈட்டுவதும், அதனைக் காப்பதும், பின் துய்ப்பதும் அறிவுடையாருக்கே எளிதாகலின் அறிவில்லார்க்கு இயலாதென்று கருதலாம். ஆனால் உலகில் செல்வம் அறிவில்லாரிடத்தும், அறிவு செல்வமில்லா ரிடத்தும் சேர்ந்திருப்பதற்குக் காரணம் ஊழ்தான் என்று கூறி, ஊழ் துணையிருப்பின் செல்வம் சேர்ப்பதற்கு அறிவு வேண்டிய தில்லையென்றும், அறிவைப் பெறுவதற்குச் செல்வம் வேண்டிய தில்லையென்றும்,

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு[64]

என்னும் குறளால் வள்ளுவர் வலியுறுத்துகிறார். மிகச் சிலரிடம் செல்வம், அறிவு இரண்டும் சேர்ந்திருப்பதைப் பற்றி வள்ளுவர் குறிப்பிடாததற்குரிய காரணம் புலப்படவில்லை.

உலகியலும் கருத்தியலும் :

இன்பமும் துன்பமும் அவரவர் வினையால் விளைவன என்னும் கருத்தினைக் கொண்டு நோக்குமிடத்து, நல்வினை செய்தவர் இன்பத்தையும் தீவினை செய்தவர் துன்பத்தையும் அனுபவிக்க வேண்டுமென்பதை அறியமுடிகிறது. இதற்கு மாறாக உலகியலில் நல்லவர் துன்பப் படுவதையும் தீயவர் இன்பம் அனுபவிப்பதையும் காணமுடிகிறது. இதனைக் கண்டு சிந்தித்த வள்ளுவர் இதற்குச் சரியான காரணம் காணும் வகையில், இவ்வுலகில் அழுக்காறுடையவன் வளமாகவும், செம்மை மனமுடையவன் வறுமையாகவும் வாழும் முரண்பட்ட நிலை ஆராயப்படும் என்ற கருத்தினை,

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமுஞ் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்[65]

என்னும் குறளால் விளக்குகிறார். இவ்வாறு அமையும் நிலைக்குக் காரணம் ஆகிய பழவினை யாது? என்று ஆராயப்படுதலின் நினைக்கப்படும் என்றார் என்று விளக்கம் கூறிய பரிமேலழகர், சிலப்பதிகாரத்தில் மாடல மறையோன் கோவலன் நிலைகண்டு,

இம்மைச் செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்துஇத்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது[66]

எனக்கூறிய கூற்றினை எடுத்துக்காட்டுகிறார். இம்மையில் கருணை மறவனாகவும், செல்லாச் செல்வனாகவும், இல்லோர் செம்மலாகவும் வாழ்ந்த கோவலனது துன்பத்திற்குக்

காரணம் அவன் முற்பிறப்பிற் செய்த வினையின் விளைவாம் ஊழ் என்றே இளங்கோ காட்டுகிறார். எனவே இப்பிறவியில் நல்லவராக இருப்பவர் துன்பம் அனுபவிப்பதற்கும், இம்மையில் தீயவராக இருப்பவர் இன்பம் அனுபவிப்பதற்கும் காரணம் அவர்கள் முற்பிறப்பிற் செய்த வினையின் விளைவாம் ஊழே என அறிவில் வல்ல சான்றோர்களால் ஆராயப்படுதலின் நினைக்கப்படும் என்று வள்ளுவர் கூறியதாகக் குறிப்பிடும் பரிமேலழகர் கருத்துஉலகியலுக் கேற்ப வள்ளுவர் கருத்துக்கு விளக்கமாக அமைகிறது.

ஊழும் தவமும் :

இப்பிறவியில் நாம் செய்யும் செயல்கள், அனுபவிக்கும் இன்ப துன்பங்கள் முதலான யாவும் ஊழால்அமைவன என்பது சான்றோர் கருத்து. இறைவனை இப்பிறவியில் வணங்கவும் அவனருள் வேண்டும் என்பதை மாணிக்கவாசகர்,

அவனருளாலே அவன்தாள் வணங்கி67

என்ற அடியில் விளக்குகிறார். அதுபோலவே தவம் செய்ய வேண்டு மாயின் முற்பிறவியில் நல்வினை செய்திருக்க வேண்டும் என்பதை,

தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது68

என்னும் குறளால் விளக்குகிறார். முன்தவம் இல்லாதவர் முயற்சி பயனில்லாதது என்பதும் முன்தவப்பயன் (ஊழ்) இப்பிறவியில் தவம் சிறக்க ஏதுவாகும் என்பதும் திருவள்ளுவர் கருத்தாகும். இக்கருத்திற்குத் திருநாவுக்கரசர் வரலாறு சான்றாகிறது. திருநாவுக்கரசரைச் சமண சமயத்திலிருந்து சைவத்திற்கு ஆட்கொண்டருளும் படியாக வேண்டிய திலகவதியாரின் கனவில் சிவபெருமான் தோன்றி, 'உன் தம்பி முற்பிறவியிலேயே எம்மையடைய முனிவ ராகித் தவம் செய்துள்ளான்; அவனை நான் தடுத்தாள்வன் நீ உன் மனக்கவலை ஒழிந்திரு' என்று அருளியதாக,

மன்னுதபோ தனியார்க்குக் கனவின்கண் மழவிடையார்
உன்னுடைய மனக்கவலை ஒழிநீஉன் உடன்பிறந்தான்
முன்னமே முனியாகி எமைஅடையத் தவம்முயன்றான்
அன்னவனை இனிச்சூலை மடுத்தாள்வம் எனஅருளி69

என்னும் பாடலில் சேக்கிழார் கூறுவது இங்குக் கருதத்தக்கதாகும். முற்பிறவித் தவம் உடையார்க்கு அவர்களது தவத்திற்கேற்ற ஆகூழ் இப்பிறவியில் துணையாகஇருந்து அவர்கள் மேற்கொள்ளும் முயற்சியுடன் கூடிய செயல்களுக்கு உரிய வெற்றியைத் தரும் என்பது சான்றோர் கருத்தாகும்.

ஊழும் உறவும் :

தலைவன் தலைவி இம்மையில் கூடியிருப்பதற்குக் காரணம் அவர்கள் பண்டைப் பிறப்பில் செய்த வினையின் பயனே என்பது பழந்தமிழர் நம்பிக்கை என்பதனை முன்னியலில் காண முடிந்தது. சங்க இலக்கியங்களை அடுத்துத் தோன்றிய திருக்குறளில் சங்கத் தமிழர் கருத்து வளங்களும் வாழ்வியல் உண்மைகளும் இடம்பெற் றிருப்பது போலவே. காதல் வாழ்வுக்கு ஊழ் காரணம் என்ற உண்மையும் இடம் பெற்றுள்ளது. காமத்துப் பால் களவியலுக்கு எழுதிய விளக்கத்தில்,

> .... தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவும் அன்றிப் பால் வகையால் தாமே எதிர்ப் பட்டுப்புணர்ந்து வருவது[70]

என்று பரிமேலழகர் ஊழைக் காரணம் காட்டியுள்ளார். தலைவன் தலைவி உறவு தெய்வத் தொடர்பினால் தோன்றுவது என்பதை, உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள தொடர்பினைப் போன்றது தலைவியோடு தமக்குள்ள நட்பு என்று தலைவன் கூற்றில் அழகிய உவமையுடன் திருவள்ளுவர்,

> உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
> மடந்தையொடு எம்மிடை நட்பு[71]

என்னும் குறளால் விளக்குகிறார்.

தெய்வப் புணர்ச்சி என்பது தொன்றுதொட்டுப் பல பிறவிகளில் தொடர்ந்து வருவது என்பது பழந்தமிழர் கருத்தாகும்.[72] திருக் குறள் புலவிநுணுக்கத்தில், தலைவன் ஒருவன் தலைவியிடம் கொண்ட காதல் மிகுதியால் இப்பிறவியில் உன்னைப் பிரியேன் என்று தலைவியிடம் சொல்ல, அதுகேட்ட தலைவி மகிழ்வதற்கு மாறாகக் கண்ணீர்விட்டு அழுதாள் என்பதனை,

> இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
> கண்நிறை நீர்கொண் டனள்[73]

என்னும் குறள் கூறுகிறது. இப்பிறவியில் பிரியேன் என்று தலைவன் கூறியதால் மறுபிறப்பில் பிரிவேன் என்று குறிப்பாகக் கூறியதாக எண்ணித் தலைவி அழுதாள் என்னும் குறிப்பினை இக்குறள் விளக்குவதுடன், மறுபிறப்பிலும் தலைவன், தலைவி உறவு தொடர வேண்டுமென்று தலைவி விரும்பினாள் என்ற கருத்தையும் புலப் படுத்துகிறது. இவ்வாறு மறுமையிலும் தலைவன் தலைவியராகக் கூடி வாழ ஊழ் காரணமாகும் என்னும் பழங்கருத்துத் திருவள்ளு வர்க்கும் ஏற்புடையதென்பது விளங்குகிறது.

துன்பத்தின் வித்து :

உலகில் பலர் துன்பத்தில் வருந்தியுழல்வதைக் காண முடிகிறது. துன்பம் பலவகை. ஒவ்வொருவர் ஒவ்வொரு வகையான துன்பத்தினை அனுபவிக்கின்றனர். ஒருவருக்குத் துன்பம் ஏற்படும்போது, அவருக்குரிய துன்பத்தினைத் தன் துன்பமாகக் கருதித் துன்புற்றவனுக்கு உதவி செய்து காக்கவில்லையாயின் ஒருவன் பெற்ற அறிவினால் ஆவதொரு பயனுண்டோ?[74] எனக் கேட்கும் வள்ளுவர், ஒருவன் துன்பம் அனுபவிப்பதற்குக் காரணம் பிறரில்லையென்பதையும் கூறுகிறார். துன்பம் பிறரால் வருவதாகக் கருதக்கூடாது. ஒருவன் முற்பகலில் பிறருக்குத் தீங்கு செய்வானாயின், அத்தீங்கினால் விளையும் துன்பம் பிற்பகலில் அவனை அடைந்து வருத்தும் என்ற கருத்தினை,

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்[75]

என்னும் குறளில் வலியுறுத்துகிறார். மேலும் ஒருவன் இன்னாதனவாய் அனுபவிக்கும் துன்பம் எல்லாம் பிறிதோர் உயிர்க்கு இன்னாதன செய்தமையாலேயேயாம். ஆதலின் தமக்குத் துன்பம் வரக்கூடாது என வேண்டுபவர் பிறிதோர் உயிருக்குத் துன்பம் செய்யாமல், தீங்கு செய்யாமல் இருத்தல் வேண்டும் என்னும் கருத்து,

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்[76]

என்ற குறளால் விளக்கப்படுகிறது. இக்குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர் சீவகசிந்தாமணியின்,

உயிர்நிலத்து வினைவித்து இட்டார்க்குவிளைவும் அதுவே[77]

என்னும் தொடரை எடுத்துக்காட்டுகிறார். நிலத்தில் விதை விதைத்தால் பயிர் வளர்ந்து விளைவாம் பயனை ஒருவர் அனுபவிப்பதுபோல உயிராகிய நிலத்தில் வினையை விதைத்தால் விளைவதும் வினையாகவே அமையும் என விளக்குகிறார். ஆதலின் ஒருவரது துன்பத்திற்கு வித்தாக அமைவது அவர் முன்னர் செய்த தீவினையேயாகும்' என்று வள்ளுவர் வலியுறுத்துகிறார்

ஊழும் துய்ப்பும் :

உலகில் ஒவ்வொரு மனிதனும் இன்பத்தைத் துய்க்க விரும்பியே உழைக்கிறான்; பெருந்துன்பங்களையும் தாங்கிக் கொண்டு முடிவில் இன்பம் வருமென்று எதிர்பார்த்தேமுயற்சியுடன் மேலும் மேலும் உழைக்கிறான்; துன்பத்துடன் போராடுகின்றான்;

துன்பம் கூட மனிதனது வாழ்க்கைப் போராட்டத்திற்குத் துணையாக அமைந்து அவனிடத்தில் அயராஉழைப்பைத் தூண்டிப் பெருவெற்றிக்குரியவனாகவும் மாற்றுகிறது. ஆகவே ஒவ்வொரு செயலின் முடிவிலும் மனிதன் இன்பத்தைத் துய்க்கவே விரும்பு கிறான். விதைத்துப் பயிரை வளர்த்த உழவன் அறுவடை செய்து பலனை அனுபவிக்க விரும்புவது உலகியற்கை, மனிதன் மட்டும் அல்லாமல் மற்றைய உயிர்களும் இயற்கையிலேயே இன்ப விழைவுடையன என்பதை,

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்துவருஉம் மேவற் றாகும்[78]

என்னும் தொல்காப்பியர் கூற்றினைக் கொண்டு அறியலாம். மனிதர் இன்பம் வரும்போது மட்டும் மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டு, துன்பம் வரும்போது அதனைக் கண்டு அஞ்சிப் புலம்புகின்றனர். இன்பம் வந்தபோது மகிழ்ந்து கூத்தாடும் மனிதர் துன்பம் வந்த போது துவண்டுவிடும் இயல்பினைத் திருவள்ளுவர் கண்டிக்கின்றார்.

இன்பமும் துன்பமும் ஊழான் வருவனவாதலின் அவற்றை நீக்குதலரிது. எவ்வாறேனும் அவற்றை ஏற்றே வாழவேண்டியது உலகியல்பு, அறிவில் தெளிந்த சான்றோர் இன்பத்தால் பெரிதும் மகிழ்தலும் துன்பத்தால் வருந்துதலும் இலர். அவர்கள் சம நிலையோடு அவற்றை ஏற்று வாழ்தலே இயல்பெனக் கருதி வாழ்வர். துன்பம் வரும்போது நகுதல் வேண்டும்; அவ்வாறு செய்தால் அத்துன்பத்தை எதிர்த்து வெல்லலாம்[79] என்றும், இன்பத்தை விரும்பாதவனாய்த் துன்பம் இயற்கையானது என்று தெளிந்திருப்பவன் துன்பம் வந்தபோது துன்பமுறுவது இல்லை என்றும் வலியுறுத்துகிறார்.[80]

வினையின் காரணமாகத் தனக்கு இன்பம் வந்தபோது அதனை மனத்தால் விரும்பி அனுபவிக்காதவன், துன்பம் வந்த போதும் அதனால் மனம் வருந்தித் துன்பப்படமாட்டான் என்ற கருத்தினை,

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்[81]

என்னும் குறளால் விளக்குகிறார். இவ்வாறு இடுக்கண் அழியாமை போன்ற வேறிடங்களிலும் இன்ப, துன்பங்களைத் துய்ப்பார் இரண் டினையும் ஏற்றுக் கொள்ளும் சமநிலையுடன் இருத்தல் வேண்டும் என்பதனை வலியுறுத்துகிறார். எனினும் உயிர்களின் துய்ப்பு ஊழினால் அமைவதாதலின் ஊழதிகாரத்தும் இதனை வலியுறுத்து கிறார். இத்தகைய சமநிலையுடைய சான்றோர்க்கு நன்மை தீமையால் வரும் பாதிப்பு இல்லையென்பதை வலியுறுத்தவே,

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்[82]

என்றகுறளில் நல்வினை விளையும்போது நல்லவை எனக்கருதிமகிழ்கின்றவர் தீவினை விளையும்போது துன்பப்பட்டுக் கலங்குவது ஏனோ? என்ற வினாவின்மூலம் கூறினார். இன்பத்தை எளிமையாக ஏற்றுக்கொள்ளும் மனம் துன்பத்தைத் தாங்கிக் கொள்வதில்லை. துன்பத்தைக் கண்டு அஞ்சி வருந்துவதால் பயனில்லை. தம்மால் வெல்ல முடியாத, மாற்ற முடியாத ஊழால் வருவனவற்றை வருந்துவதனால் வெல்லவும் மாற்றவும் முடியாது; அமைதியாக இருந்து அதனைத் துய்த்துக் கழிப்பதே அறிவுடைமை. எனவே இன்பத்தை எம்மனநிலையோடு ஏற்கிறோமோ அம்மனநிலையோடு துன்பத்தையும் ஊழால் வந்ததென்று கருதித் துய்க்க வேண்டுமென்பதே வள்ளுவர் கருத்தாகும்.

ஊழின் ஆற்றல் :

ஊழதிகாரத்தில் செல்வம், அறிவு ஆகியவற்றைப் பெறுவதற்கும், இன்ப, துன்பத் துய்ப்பிற்கும் ஊழ் காரணம் என வள்ளுவர் வலியுறுத்துகிறார் என்பது முன்னர் விளக்கப் பெற்றது. செல்வத்தை ஈட்டல், காத்தல், துய்த்தல் ஆகிய அனைத்துச் செயல்களுக்கும் ஊழ் காரணம் என்பதைக்கூறி ஊழின் ஆற்றலைத் திருவள்ளுவர் வலியுறுத்துகிறார். ஊழின் வலிமை குறித்து ஏனைய அதிகாரங்களிலும் ஊழதிகாரத்திலும் கூறியிருப்பினும், இவ் அதிகாரத்தின் இறுதியில் கூறப்பட்ட

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்[83]

என்னும் குறள் ஊழ்க்கோட்பாட்டின் முடிவாகக் கருதப்படுகிறது. ஊழை விட வலியுடையது வேறு யாது உள்ளது? என்ற வினாவையெழுப்பி, எவ்வகையிலாவது ஊழினை விலக்கி, வினைப்பயனைத் துய்க்காமல் பிழைத்துக் கொள்ளும் முயற்சியைச் செய்தாலும், ஊழ் பிறிதொரு வழியாக முற்பட்டு வந்து நின்று பயனை அளித்தே தீரும் என்பது வள்ளுவர் கருத்து. ஆகூழ், போகூழ் ஆகிய இருவகை ஊழும் ஊட்டும் காலத்தில் உரிய பயனை ஊட்டியே தீரும். ஊழின் பயனை மாற்றிக் கொள்ளவோ, விலக்கிக் கொள்ளவோ, முடியாது என்பதே ஊழ்க் கோட்பாடு உணர்த்தும் உண்மை. எனவே திருவள்ளுவர் ஊழைவிட மிக்க வலியுடையது வேறொன்றும் இல்லை என அதன் ஆற்றலை வலியுறுத்துகிறார்.

இருவினையும் ஊழும் :

மனிதன் செய்யும் செயல்களெல்லாம் நல்வினையாகவோ, தீவினையாகவோ அமையும் இயல்புடையனவே. திருவள்ளுவர் அறத்துப்பாலிலும் பொருட்பாலிலும் நல்வினைக்குக் காரணமாகிய நற்செயல்களாகப் பலவற்றைச் செய்ய வேண்டும் என்று விதி முகமாக வற்புறுத்துகிறார். விலக்கப்பட வேண்டிய தீவினைக்குக் காரணமாகிய தீயசெயல்கள் பலவற்றை எதிர்முகமாகவும் அறிவுறுத்துகிறார். அறத்துப்பால் முழுவதும் அறம் வலியுறுத்தப் பட்டிருப்பினும், அறன் வலியுறுத்தல் என்னும் தனியதிகாரத்தில் அறத்தின் சிறப்புரைத்தார்.

அறத்தாற்றின் இல்வாழ்க்கையாற்றுவதே சிறப்புடையது[84] என்றும், அவ்வாறு இல்லறம் செய்வோர் தவம் செய்பவரைவிட உயர்ந்தவர்[85] என்றும் கூறுகிறார். இல்லறத்திலிருப்போன் நல்லவாழ்க்கைத் துணைவியைப் பெற்றுவிட்டால் அதைவிடச் சிறப்புடையது ஒன்றுமில்லை என்று வாழ்க்கைத் துணைநலத்தில் வலியுறுத்துகிறார்.[86] அவ்வாறு மனையறம் காப்போர் நன் மக்களைப் பெறவேண்டுமென்றும்,[87] பிறரால் பழிக்கப்படாத நன் மக்களைப் பெற்றவரை வினைவயத்தால் பிறக்கும் பிறப்பு ஏழிலும் துன்பங்கள் சென்றடையமாட்டா[88] என்றும் புதல்வரைப் பெறுதலில் கூறுகிறார். இல்லறம் செய்வோர் அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல் ஆகிய அறப்பண்புகளைக் காத்தல் வேண்டும் என்கிறார்.

செய்ந்நன்றியறிதலில், நன்றியுணர்வுடைய நல்லோர் தமக்கு ஏற்பட்ட துன்பத்தினை நீக்கியவருடைய நட்பினைத் தம் ஏழுவகைப் பிறப்பினும் நினைப்பவர் என்பதனை,

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு[89]

என்னும் குறளால் விளக்குகிறார். ஒருவருக்குத் தீவினையால் கேடும் நல்வினையால் பெருக்கமும் முன்னே அமைந்துகிடந்த மையின் இவ்வுண்மையறிந்து நடுவு நிலைமையுடனிருப்பதே சான்றோர்க்கு அழகு என்பதனை,

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி[90]

என்னும் குறளில் கூறுகிறார். ஒருவன் மனம், மொழி, மெய் களால் தீநெறியில் செல்லாது அடக்கமுடையவனாயும், ஒழுக்கம் உடையவனாயும் இருத்தல் வேண்டுமென்கிறார். நல்லொழுக்கம் இம்மை, மறுமை இரண்டிலும் அறத்திற்குக் காரணமாய் இன்பம் பயக்கும் என்றும் தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் இருமையினும் துன்பம் பயக்கும் என்றும்,

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். 91

என்னும் குறளில் விளக்குகிறார். இவ்வாறே பொறையுடைமை, ஒப்புரவறிதல், ஈகை, புகழ், அருளுடைமை, தவம், வாய்மை, துறவு, மெய்யுணர்தல் ஆகிய அதிகாரங்களிலும் நல்வினைக்குக் காரண மாகிய நற்செயல்களைச் செய்ய வேண்டி விதிமுகமாகத் திருவள்ளுவர் வலியுறுத்துகிறார்.

பிறனில் விழைதல், புறங்கூறுதல், பயனில் சொல்லல், புலால் உண்ணல், கள்ளுதல், வெகுளுதல், இன்னா செய்தல், உயிர்க் கொலை, நிலையாமை, அவாவுதல் ஆகிய குற்றங்களை விலக்குவது தீவினை பற்றாதிருப்பதற்குரிய வழியென்று கூறுகிறார். சான்றோர் தீவினைகள் செய்வதற்கு அஞ்சுவர்; முன்செய்த தீவினையுடையவர் மேலும் தீவினை செய்ய அஞ்சமாட்டார் என்று கூறும் திருவள்ளுவர் 'தீவினை அச்சம்' என்னும் அதிகாரத்தில் உடம்பினால் செய்யும் தீவினைகளை விலக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார். பெரும் பகையினை உடையவரும் ஒரு வகையில் உய்வு பெறுவர்; தீவினை செய்தலால் ஒருவர் தேடிக் கொண்ட வினைப் பகை, அவர் எங்கு சென்றாலும் விடாது பற்றி வருத்திக் கொல்லும் 92 என்று கூறும் வள்ளுவர், ஒருவன் நிழல் நெடிதாகப் போயும் அவனை விடாது வந்து அடியின்கண் தங்கித் தொடர்வது போன்று தொடர்ந்துவந்து வருத்துவதனால் பிறருக்குத் தீவினை செய்தவர் தம் தீவினையி னாலேயே அழிவர் என்பதனை,

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந் தற்று 93

என்னும் குறளால் வலியுறுத்துகிறார்.

உயிர்களைக் கொல்லாமையே மிகச் சிறந்த அறமெனக் கூறி கொல்லுதல் பாவச் செயல்கள் எல்லாலற்றையும் தருமென்றும், அவ்வாறு கொலையால் விளையும் தீவினைத் துன்பம் பிற பாவங் களின் விளைவால் வரும் துன்பத்தையெல்லாம் விட மிகுதியாக இருக்குமென்றும் வலியுறுத்தும் 94 வள்ளுவர், எவ்வாறேனும் ஒல்லும் வகையாலெல்லாம் இடையறாது அறவினையாகிய நல்வினையையே செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்துகிறார். 95 இளைஞராக உள்ளவர், பிற்காலத்தில் செய்து கொள்ளலாம் என்று கருதாமல் அறத்தினை நாள்தோறும் செய்யவேண்டும்; அவ்வாறு செய்யும் அறமாகிய நல்வினை உடல் அழியும் காலத்தில் உயிருக்கு அழியாத் துணையாகும் என்று அறன் வலியுறுத்தல் அதிகாரத்தில் கூறுகிறார். 96

நல்வினைகளைச் செய்வதற்கு நாளைத் தள்ளிப் போடுதல் கூடாது என்பதனை மீண்டும் வள்ளுவர் வலியுறுத்துகிறார். மனிதனுக்கு இறப்பு எந்நேரத்திலும் வரக்கூடியது. அதனை முன்கூட்டி அறிந்துகொண்டு, வேண்டும்போது நல்வினை செய்யும் வாய்ப்பு மனிதனுக்கு இல்லை. ஆதலால் எந்நேரமும் சாவு வருமென்று கருதி உடலின் நிலையாமையுணர்ந்து உடலோடு உயிர் கூடியுள்ள காலத்தில் செய்ய வேண்டிய நல்வினைகளைச் செய்துவிட வேண்டும் என்னும் கருத்தினை,

நாச்சென்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்[97]

என்னும் நிலையாமை அதிகாரக் குறளில் வலியுறுத்துகிறார்.

இவ்வாறு தீவினைகளை விலக்கி, நல்வினைகளையே செய்ய வேண்டுமென்று வலியுறுத்தும் திருவள்ளுவர் இருவினையிலிருந்து நீங்கும்வழி பற்றியும் கூறுகிறார். நல்வினையால் துறக்கமெய்தலும், தீவினையால் நரகமெய்தலும் முன்னர் விளக்கப்பெற்றது. நல்வினையும் மீண்டும் பிறப்பதற்கு காரணமாகலின் அதனைப் பொன் விலங்கென்றும், தீவினையை இரும்பு விலங்கென்றும் பெரியோர் கூறுவர்.[98] எவ்வாறாயினும் இருவினைகளும் உயிரைத் தளைப்படுத்திப் பிறவியில் ஆழ்த்துவனவாதலின் அவற்றிலிருந்து நீக்கம் பெற வேண்டும்; வினை நீக்கத்திற்கு அடிப்படையாக அவாவினை அறுத்தல் வேண்டும். பிறப்பிற்குரிய வித்து அவா என்பதனை,

அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து[99]

என்னும் குறளில் விளக்கும் வள்ளுவர், தீராத இயல்பினையுடைய அவாவினை ஒருவன் நீக்குவானேயாயின் அவனது பற்றினை விடும் துறவே அவனுக்குப் பேரா இயற்கைப் பெருநிலையாகிய வீடு-பேற்றினைத் தருமென்று வலியுறுத்துகிறார்.[100] துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல் ஆகிய அதிகாரங்கள் இருவினை நீக்கத்தினை வலியுறுத்துகின்றன. இருவினையிலிருந்து நீங்கி இறைவனடி எய்துதலாகக் கூறப்படுகின்ற வீடுபேறடைவார்க்கு ஊழினால் வரும் இன்ப துன்பங்கள் இல்லையென்ற கருத்து வள்ளுவரால் பல இடங்களில் வலியுறுத்தப்படுகின்றது.

ஊழை வகுத்தான் :

கடவுளை ஏற்றுக் கொள்ளாத சமண, சாக்கிய சமயங்கள் ஊழ் தாமே செய்தவனைச் சென்றடையுமென்பர். நாலடியார் பாடல் இக்கருத்திற்குச் சான்றாகும்.[101] எனவே இவர்தம் கொள்கை வினை, வினைப்பயன், வினைசெய்தோன் என்னும் மூன்றுடன்

அமையும். சைவ சித்தாந்தம் வினை, வினைப்பயன், வினைசெய்தோன், வினைப்பயனை வினைசெய்தோனுக்குச் சேர்ப்பிக்கும் இறைவன் ஆகிய நான்கைக் கொண்டு நிறுவுகிறது. திருவள்ளுவர்,

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது[102]

என்னும் ஊழதிகாரக் குறளில் 'வகுத்தான்' என்று இறைவனைக் குறிப்பிடுகிறார். அவரவர் செய்த வினையின் பயனை அவரவர்க்கு உரிய வகையில் வகுப்பவன் வினையின் நீங்கியவனாக இருத்தல் வேண்டும். கடவுள் வாழ்த்திலேயே திருவள்ளுவர் இறைவனை 'இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்'[103] என்றது இங்கு நினையத்தக்கது. ஆகவே இறைவன் ஒருயிர் செய்த வினை, பிறிதோருயிர்க்குச் செல்லாமல் அவ்வுயிர்க்கே வகுப்பவன் என்னும் பொருளில் 'வகுத்தான்' என்றார்.

> அவ்வவ் வினையின் பயனை அவ்வவ் வினையைச் செய்த உயிரே நுகருமாறு காலம்பெற வகுத்து அமைக்கும் ஆற்றல் வினையின் வேறாய் உளது என்பதும், அது வகுத்த வகையே ஊழாவது என்பதும் எளிதில் விளங்கும். இங்ஙனம் கொள்ளுதலே பண்டைத் தமிழ் மரபு என்பது, இவ்வாற்றலை ஆசிரியர் தொல் காப்பியனார், 'பால்வரை தெய்வம்' என்றமை பற்றி உணரப்படும். ஆண்டுப் 'பால்' என்னும் கிளவி (Term of Expression) பகுப்பு என்னும் பொருள் தேற்றி, ஊழ் என்பதற்குப் பரியாயமாம். ஆகலின், 'வகுத்த வகை' என்னும் திருவள்ளுவர் தொடர் 'பால்' என்னும் தொல்காப்பியர்தம் சொற்பொருட் காரணம் தேற்றுதல் காண்க[104]

என்னும் க. வச்சிரவேல் முதலியார் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

எனவே, திருவள்ளுவர், ஊழதிகாரத்திலும் பிற அதிகாரங்களிலும் ஊழியல்பையும் வலிமையையும் வற்புறுத்தியதுடன், ஊழை வகுத்து உரியவர்க்கு ஊட்டும் இறைவன் ஒருவன் உளன் என்ற கோட்பாடும் உடையவர் என்பது புலனாகிறது.

ஊழும் ஆள்வினையும் :

திருவள்ளுவர் ஊழதிகாரத்தில் ஆகூழ், ஆகலூழ் என நல்வினைப் பயனையும், போகூழ், இழவூழ் எனத் தீவினைப் பயனையும் குறிப்பிட்டு, இருவகை ஊழே செல்வம், அறிவு, இன்ப துன்பங்கள் ஆகியவற்றிற்கு அடிப்படையாகும் என்பதை ஒன்பது குறள்களில் விளக்கி, இறுதிக் குறளில்,

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்[105]

என்று ஊழின் ஆற்றலை வலியுறுத்துகிறார் என்பது முற் கூறப்பட்டது. பொருட்பாடலில் ஆள்வினையுடைமை அதிகாரத்துள் முயற்சியின் சிறப்பினையும் ஆற்றலையும் விளக்கி இறுதியில்,

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்[106]

என்னும் குறளில், தாம் விரும்பிய பயனை அடைய முடியாமல் இடையில் நின்று விலக்குவதாகிய ஊழைக்கண்டு அஞ்சாது தம் வலிமையால் இடைவிடாது தொடர்ந்து நின்று முயற்சி மேற்கொள்பவர் அவ்வூழினைப் புறங்காண்பர் என்னும் கருத்தினை வலியுறுத்துகிறார். இவ்வாறு திருவள்ளுவர் ஒன்றைக் கூறும்போது அதனையே சிறப்பாக வலியுறுத்துவதுபோலக் கூறுவது அவர் அறம் வலியுறுத்தும் இயல்பாக அமைகிறது. ஒன்றோடொன்று உறவு உடைய ஒத்த மதிப்புடைய இரண்டைக் கூறும்போது முரண்படுவது போலத் தோன்றும். இதனை ஒப்பீட்டு மதிப்பீடு அல்லது உறழ் மதிப்பீடு (Relative Merit) எனக் கருதலாம். இத்தகைய அமைப்பு திருக்குறளில் பலவிடங்களில் இடம் பெற்றுள்ளது.

தவம் அதிகாரத்தில் முன்னர், முற்பிறப்பில் தவம் செய்து நல்லூழின் துணையைப் பெறாதவர்கள் இப்பிறப்பில் தவத்தை மேற்கொள்வது பயனில் முயற்சி என்ற கருத்தினை,

தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது[107]

என்னும் குறளில் விளக்குகிறார். பின்வரும் குறளில் வேண்டிய பயன்களை வேண்டியவாறே பெற இம்மையில் அறிவுடையோரால் தவம் முயலப்படும் என்பதை,

வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்[108]

என்னும் குறளில் விளக்குவது முரண்போலத் தோன்றும். ஆனால், ஒருவன் எய்த எண்ணிய பயனைஎய்துதற்கு முன்தவமாகிய நல்லூழ் துணையாக அமைந்து இம்மையில் செய்யும் தவத்திற்கு வலிமை சேர்க்கும்; முன்தவம் இல்லாதவர்கள் இப்பிறவியில் எண்ணிய பயனை அடைய முடியாவிட்டாலும், இம்மையில் செய்யும் தவத்தின் முயற்சியளவிற்குரிய பயன், மறுமையில் மேற்கொள்ளும் தவத்திற்கு நல்லூழாக அமைந்து துணை செய்யுமாதலின் அறிவுடையோர் இம்மையில் தவத்தை மேற்கொள்ள வேண்டும் என்னும் கருத்தில் முரணில்லையென்பது தெளிவாகும்.

கல்வியதிகாரத்தில், மணற்கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறுவது போல, மக்களுக்குப் பல நூல்களைக் கற்கும் கல்வியின் அளவிற்கு அறிவு பெருகும் என்பதனை,

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு[109]

என்னும் குறளால் விளக்குகிறார். இக்கருத்து ஊழதிகாரத்தில் இடம்பெற்ற,

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்[110]

என்னும் குறட்கருத்துடன் முரண்படுவதுபோலத் தோன்றுகிறது.

பல நூல்களைக் கற்பதனால் அறிவு பெருகும் என்பது உண்மை. ஊழின் துணையில்லாமல் நூலறிவு மேம்படாது என்பதே வள்ளுவர் கருத்தாகும். உண்மையறிவென்பது பல பிறவிகளில் சேர்த்த மதி நுட்பமாகிய உயிருடன் தொடர்ந்து வரக்கூடிய அறிவு என்றும், அவ்வறிவே ஊழின் துணையுடன் இம்மையில் மேம்படும் என்றும், போகூழ் உடையவர்க்கு நூலால் பெற்ற அறிவு துணை செய்யாது என்றும் திருக்குறள் குறிப்பிடுகிறது. பல நூல்களைக் கற்பதனால் கற்கும் அளவிற்கு அறிவு வளரும். இவ்வாறு வளரும் அறிவு ஆகும் ஊழை (எதிர்வினையை) நல்லூழாக மாற்றி ஒரு காலத்தில் நன்மையையே விளைக்கச் செய்யும். ஆகவே ஊழ்வழி எல்லாம் அமையும் என்று மடிந்திராது முயற்சி செய்யவேண்டும் என்றார் வள்ளுவர்.

ஒருவனுடைய முயற்சி அதன் அளவிற்கேற்ற பயனைத் தருதலில் தவறாது என்பதனை,

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்[111]

என்னும் குறளால் விளக்குகிறார். இக்குறளுக்குப் பரிமேலழகர், 'முயன்றவினை பால்வகையால் கருதிய பயனைத் தராதாயினும், முயற்சி தனக்கிடமாய உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியளவு தரும், பாழாகாது' என்று உரையெழுதியுள்ளார். ஒரு செயல் ஊழின் காரணமாக நிறைவேறாமல் போயினும், எடுத்துக்கொண்ட முயற்சி, உடம்பு வருந்திய வருத்தத்திற்கு ஏற்ற அளவு கூலியையாவது (பாடுபட்டதற்கேற்ற பயனை) கொடுக்குமாதலின் முயற்சியைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று கூறியிருப்பினும், தெய்வத்தான் ஆயவழித் தன் அளவின் மிக்க பயனைத் தரும் என்னும் குறிப்பினை உம்மையால் விளக்கியிருப்பது கொண்டு இவ்விடத்தும் ஊழின் வலியைத் திருவள்ளுவர் மறுக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது

ஒருவன் நேற்று செய்த செயல் இன்று அவனுக்கு வினைப் பயனாக மாறுகிறது; வினையின் விளைவாகிறது. ஒவ்வொரு செயலையும் செய்வதற்கு மனிதனின் முயற்சி வேண்டும். முயற்சி இல்லையெனில் மனிதன் செயலற்றவனாக, சோம்பலுடையவனாக இருப்பான். ஊழ், ஆள்வினை இரண்டினையும் விளக்குவதற்கு,

முன்னை வினைவரின் முன்னுண்டே நீங்குவர்
பின்னை வினைக்கணார் பேர்ந்தறப் பார்ப்பர்கள்
தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
நன்மையில் ஐம்புலன் நாடலி னாலே.

தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சைய விழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே[112]

என்னும் திருமந்திரப் பாடல்களைத் துணையாகக் கொள்ளலாம்.

இம்மையில் தன்னையறிந்து உணர்ந்து கொண்ட ஞானிகள் தம் எண்ணம், சொல், செயல் மூன்றிலும் தூய்மையுடையவராக இருந்து முன்னை வினையின் பயனைத் துய்த்துக் கழித்து விட்டு எதிர்வினை வாராமலே செய்து கொள்வர். முன்னை வினையின் முடிச்சையவிழ்ப்பர்கள் என்று திருமந்திரம் கூறுகின்றதேயொழிய, வினையினை மாற்றுவார்கள் என்று சொல்லவில்லையாதலின் யாவராயினும் ஊழை அனுபவித்தே கழிக்க வேண்டும். பல பிறவி களில் சேர்த்துக் கொண்டுவரப்பட்ட வினைமூட்டையின் முடிச்சை (வினைத் தொகுதியின் முடிச்சை) இம்மையில் அவிழ்த்துத் துய்த்துக் கழிப்பர். சென்னியில் வைத்த சிவனருளால், இம்மையில் செய்யும் செயல்களின் தூய்மையால் வருவினையை வாராமலேயே செய்து கொண்டு விடுவார்கள் என்பதே திருமந்திரத்தின் விளக்கமாகும்.

ஊழதிகாரத்தில் 'ஊழிற் பெருவலி யாவுள' என்பது ஒருவன் செய்த பழவினையின் பயனை வெல்ல முடியாது, அதனைத் துய்த்துக் கழிக்க வேண்டுமென்ற கருத்திலேயே ஆகும். இப்பழவினைப் பயனுக்குக் காரணமாக அமைந்தது எதுவென்று ஆராயின், ஒருவனது பொறி, புலன்களால் ஆள்வினையால் அவன் செய்த செயலே அவனுக்கு இம்மையில் நல்லூழாகவோ அல்லது தீயூழாகவோ அமைந்து பயனை நல்குகிறது. இவ்வாறு ஒருவனுக்கு அவனது பழவினைஊட்டும் பயனை அவன் துய்த்தே ஆகவேண்டும்; அதிலிருந்து தப்ப முடியாது. இதனையே திருவள்ளுவர், 'மற்றொன்று சூழினும் தான் முந்துறும்' என்றார்.

மெய்யுணர்வு பெற்றவர்கள் அவரவர் ஊழ்வினைக்கு அவரவரே காரணம் என்பதையறிந்து பழவினைப் பயனைத்

துய்க்கும் துன்பமின்றிச் சமநிலையிலிருந்து துய்த்தே கழித்தல் வேண்டுமென்ற உணர்வுடன் வினைப் பயனைத் தீர்க்கின்றனர். வருவினையைத் தம் முயற்சியால் நல்வினையாக மாற்றிக்கொண்டு விடுவர். பற்றற்ற நிலையில் செய்யும் செயல்கள் வினைப்பயனை நல்குவதில்லையென்பர் சான்றோர். திருக்குறளில் துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல் ஆகிய ஊழதிகாரத்திற்கு முற்பட்ட அதிகாரங்களில் 'பற்றற்று' வினையாற்றும் வழியையும், அந்நிலை அடைந்த சான்றோர் வினையின் நீங்கியதால் பெறும் இன்பத்தையும் வலியுறுத்தியுள்ளார். ஆதலின் வருவினையினைத் தம் ஆற்றலுள் அகப்படுத்திக்கொள்ளும் சான்றோர்க்கு ஊழ் வினையின் தொடர்பில்லையென்ற கருத்தில் நோக்கும் போது, 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்னும் கருத்துப் பின்வரும் ஊழை வாராமல் செய்து கொண்டு விடுவர் என்றும், 'ஊழிற் பெருவலி யாவுள' என்னும் கருத்துப் பழவினைப் பயனைத் துய்த்துத் தீர்க்க வேண்டுமென்ற நியதிப்படி உருத்து வந்தூட்டும் வலியுடையது ஊழ் என்றும் கொண்டால் திருவள்ளுவர் கருத்தில் முரணில்லையென்பது புலனாகும்.

பழந்தமிழரின் சிந்தனை வளர்ச்சியைத் தொடர்ந்து நோக்கு வார்க்குக் கணியன் பூங்குன்றனார், திருவள்ளுவர், திருமூலர் கருத்து மட்டுமன்றித் தமிழ்ச் சான்றோர் பலரும் சிந்தித்த கருத்து முடிவுகளே ஊழ் போன்ற கோட்பாடுகளாகிச் சிறந்தன என்பதை உணரலாம். ஊழும் ஆள்வினையும் முரண்படாதன என்பதும், ஆள்வினையின் விளைவே-பழவினைப் பயனே ஊழ் என்பதும், இவ்வூழை வெல்வதரிது என்பதும், எதிர்வரும் ஊழை ஆள்வினை யால் அமைத்துக் கொள்ளும் வாய்ப்பு மனிதனுக்கு உண்டு என்பதும் தெளிவாகும்.

திருவள்ளுவர் ஊழ்வழி உணர்த்தும் உண்மை :

திருவள்ளுவர் அறம் உரைக்கத் தோன்றிய ஆன்றோர்; மக்கட் சமுதாயம் கூடிவாழும் உலகியலில் கடைப்பிடிக்க வேண்டிய உயர் அறநெறிகளை உணர்த்தியவர். அறக்கோட்பாடுகளுள் ஒன்றான ஊழ் பற்றிய சிந்தனையும் நம்பிக்கையும் மிகப்பழைய நாகரிகமுடைய மனித இனங்களிடையில் ஆழமாக இருப்பதையறிய முடிகிறது. இச்சிந்தனையினைத் தமிழினம் பண்டுதொட்டுக் கொண்டிருந்தமையின் பழந்தமிழர் சிந்தனை வளர்ச்சியினைத் திருவள்ளுவர் தம் திருக்குறளில் எடுத்துக்காட்டியுள்ளார். கடவுளுண்மையை மறுப்பது போல ஊழையும் மறுத்து, இக்கருத்து மூட நம்பிக்கையின் பாற்பட்டது என்போர் அன்றும் இருந்தனர்; இன்றும் உள்ளனர். பெரும்பாலான சமய நெறிகள் கடவுள், ஊழ் போன்றவற்றில் நம்பிக்கையுடையனவேயாம்.

மனிதனால் செய்யப்படும் எந்தவொரு செயலுக்கும் அதற்கு நேரான எதிர் விளைவு உண்டு என்பதும் அறிவியலறிஞர் நியூட்டனின் விதிகூறும் உண்மை.113 ஆதலின் இவ்வடிப்படையில் அறிவியல் நோக்கில் ஊழ்க் கோட்பாட்டினைப் பார்க்குமிடத்து, ஊழின் ஆட்சி உலகில் எவ்வாறு நிலைபெற்றுள்ளது என்பதை அறியலாம்.

பொதுவுடைமைச் சிந்தனையாளர்கள், நாத்திகர்கள் ஊழ்க் கோட்பாட்டினால் மனித சமுதாயம் பாழாகிவிட்டது என்றும் இந்நம்பிக்கை தேவையற்றது என்றும் ஊழை மறுத்து ஆள்வினை உடைமையை எடுத்துக் கொண்டு மனித சமுதாயம் முயற்சி வழியில் உழைத்து முன்னேற வேண்டும் என்றும் கூறுவர். அவ்வாறு முன்னேறுவதற்குத் தடையாக இருப்பதுடன் மனிதனிடத்தில் சோம்பலை வளர்த்துவறுமையிலாழ்த்துவதும்இக்கோட்பாடென்பர். இக்கருத்தினடிப்படையிலேயே ருசிய மொழியில் மொழிபெயர்த்த திருக்குறள் பதிப்பில் ஊழதிகாரத்தை நீக்கிப் பதிப்பித்ததாகக் காரணம் கூறுவர்.114 இவ்வாறெல்லாம் இக்கோட்பாடு பற்றிய கருத்து வேறுபாடுகளும், ஊழ், முயற்சி பற்றிய இரு வேறுபட்ட கருத்துக்களும் அறிஞரிடையில் தொடர்ந்து சிக்கலுடையனவாகப் பேசப்பட்டு வருகின்றன.

ஊழ்க்கோட்பாட்டினைச் சிந்தித்துக் கூறிய முற்காலச் சான்றோர் அறிவாராய்ச்சியின் அடிப்படையிலேயே கூறினர் என்பதை நுணுகி ஆராய்வார் உணரலாம். திருவள்ளுவர் காலத்திற்கு முன்பே ஊழை உடன்படும் சிந்தனையும் மறுக்கும் சிந்தனையும் தமிழகத்தில் இருந்தன. தமக்கு முன்னே தமிழ்ச் சமுதாயத்தில் நிலவிய சிந்தனைகளுக்கு விளக்கம் தருவதாகத் திருவள்ளுவர் திருக்குறளை அமைத்தார். அவ்வகையில் ஊழின் ஆட்சி, ஆற்றல் பற்றிப் பலவிடங்களில் திருவள்ளுவர் வலியுறுத்துவது குறிப்பிடத்தக்கது.

இவ்வுலகில் எல்லாம் ஓர் ஒழுங்கு முறைக்குட்பட்டு நடந்து வருகின்றனவாதலின், அவ்வொழுங்கான ஆட்சிமுறையை ஊழ் எனச் சான்றோர் குறித்ததாகவும், திருவள்ளுவரும் ஊழதிகாரத்தில் மக்கள் வாழ்க்கையில் அதற்குள்ள ஆற்றலை விளக்கிக் கூறியுள்ள தாகவும் மு. வரதராசனார் கூறியிருப்பது கருதத்தக்கது.115

மனித முயற்சிக்கும் மேலாகச் செயற்படும் ஊழின் ஆற்றலைத் திருவள்ளுவர் ஏற்றுக்கொண்டாராயினும், ஊழை நம்பி உழைக்காமல் மடிந்திருக்க அவர் வழி காட்டவில்லை. தன்னுடைய முயற்சியினால் மனிதன் எதையும் சாதிக்க முடியும் என்று போதிக்க

வென்றே எழுதப்பட்டது; செயலற்ற சோம்பேறித் தத்துவங்களைத் கண்டித்து உழைப்பினைத் தூண்டிய நூல்; அந்தத் திருக்குறளிலே மனிதன் செய்யவேண்டிய எல்லா முயற்சிகளுக்கும் வழி சொல்லி விட்டுக் கடைசியாக நம்முடைய முயற்சிகள் எல்லாம் முடியாமற் போய்விடுகிறபோது, அது 'ஊழ்வினையின் விதி' என்று சமாதானப் படுத்திக்கொள்ள, 'ஊழிற்பெருவலி யாவுள' என்று திருவள்ளுவர் குறிப்பிட்டதாக நாமக்கல் கவிஞர் கூறியுள்ளார்.[116]

ஊழின் ஆட்சியை ஏற்றுக்கொண்டு ஊழ் நம்பிக்கையால் மக்கள் முன்னேற்றம் தடைப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக ஊக்கத்தை வள்ளுவர் வலியுறுத்துவதாகவும் குறிப்பிட்டு,

வள்ளுவர் ஊழ்வினையை மறுக்கவில்லை,
ஆனால் அதை எதிர்க்க வழிகாட்டுகிறார்[117]

என்னும் சாமி. சிதம்பரனார் கருத்து அறியத்தக்கது.

மொ. அ. துரையரங்கசாமி ஊழ் என்பதற்கு வினைப்பயன் எனப்பொருள்கொண்டு ஊழின் ஆட்சியையும் உடன்பட்டு,

> ஊழ் விலக்கும் விலக்கிற்கு இளையாது, வினையைத் தாழ்வறச் செய்தல் வேண்டுவது மக்களது தலையாய கடன் என்பதும், அவ்வாறு தாழ்வின்றி, இடைவிடாமல் முயல்வார், 'ஊழிற் பெருவலி யாவுள' என அஞ்சத் தக்கதாக ஊழ் ஓதப்பட்டதாயினும், அதை வெல்ல வல்லவராவர் என்பதும்,
>
> 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்பதால் திருக்குறள் கட்டுரைக்கின்றது. ஊழ் ஒருமுறை அல்லது இருமுறை யன்றி விலக்கலாகாமையின், பலமுறை முயன்று நல்வினையை இப்பிறப்பில் ஆற்ற வேண்டுமென்பது இக்குறளின் கருத்தாகும்; முயலுங்கால் இடுக்கண் வரின், அதற்குத் தளராது முயலும் முயற்சிப் பயனே, அடுத்த பிறப்புக்களில் துணையாகுமன்றி, வேறு பொருளோ, மனையோ, மனைவியோ, மக்களோ, பிறவோ துணையாதல் இல்லை[118]

என்று திருவள்ளுவர்தம் ஊழ், ஆள்வினை பற்றிய சிந்தனைகளுக் குரிய விளக்கம் அளித்திருப்பது குறிப்பிடத் தக்கது.

ஊழ், ஊழ் எனப் பேசிப் பாழாய்ப் போகும் மக்களைப் பார்த்துப் பதறித்தான் வள்ளுவர் ஊழையாராய்ந்து முயற்சி செய்யும்படிக் கூறி, முயற்சியினால் தோல்வியோ, அழிவோ வந்தாலும் கூட அவற்றால் பழியில்லை, முயற்சி செய்யாமல் இருப்பதே பழி என்று திருவள்ளுவர் குறிப்பிட்டதாக மு. கோவிந்த சாமி கூறும் கருத்துஅறியத்தக்கது.[119]

> இயற்கை, இன முதல்வனாகிய இறைவனே ஊழ் வடிவினன், ஊழ் முதல்வனும் ஆகும் இன முதலிலிருந்து இயற்கை, சமுதாயம், இனம் ஆகிய யாவும் ஊடுருவி இனவாழ்வின் முடிந்த குறிக்கோள் அளாவி நிற்கும் ஆற்றல் ஊழ். திருக்குறளிலேயே இதனைப் பால் என்றும், தெய்வம் என்றும் வள்ளுவர் குறித்து உள்ளார்.[120]

எனக் குறிப்பிட்ட கா. அப்பாதுரையார், ஊழும் வினைப் பயனும் வேறுவேறு ஆற்றல்கள் என்றும், இவை இரண்டிற்கும் ஒரு நொய்ய தொடர்புண்டு என்றும் கூறியுள்ளார். இது ஊழ் என்பதற்குப் புதிய விளக்கமாக அமைந்து ஆய்விற்குரியதாகிறது.

வ. சுப. மாணிக்கனார், ஊழ் என்பது உலகமுறை அல்லது உலகச் சூழ்நிலை, உலகத்தியற்கை எனப் பொருள்படும் என்றும் அது ஓர் ஒழுங்குக்கு உட்பட்டுத்தான் உருப் பெறுகின்றது என்றும், காரணப்பன்மைசான்ற ஊழ் நுண்ணிய பல பிரிவுகளாய் கிளைப்பது எனவும், தூய பேரறிவு இல்லா மக்கள் பலரின்கணிப்பிற்கு அப்பாற் பட்டது[121] என்றும் விளக்கமளிக்கிறார். போட்டியில் தொடக் கத்து விரைந்து ஓடுவான் முடிவில் தோற்பதுபோல், முதற்கண் விரைந்து தடைசெய்யும் ஊழ் தன் வலியிழந்து அயர்ந்து, ஒரு சீரான இடையறா முயற்சிக்கு முன் இறுதியில் தோல்விப்பட்டே தீருமென்று அளந்தறிந்து, வள்ளுவர் முயற்சியே வாழ்வு, வினையே உயிர் என்று வலியுறுத்தினார் என்றும் கூறினார்.[122] மேலும் திருக்குறள், ஊழ் தனியாட்சியுடையது என்பதைச் சொல்லவந்த நூலன்று என்றும், உலையா முயற்சியானும், கலங்கா அறிவானும் வாழ்வுக்கு ஊழை வயப்படுத்திக் கொள்ளும்படி வற்புறுத்துவது வள்ளுவப் பறையென்றும், மனித குலத்தை இடைவிடாத முயற்சியை நோக்கி அழைத்துச் செல்ல வந்த ஒப்பற்ற நூல் என்றும் குறிப்பிட்டிருப்பது கருதத்தக்கது.[123]

ஊழ் என்பதற்குச் சூழல்எனப் பொருள்கூறுவோர் கருத்தினை மறுத்து, சூழல் என்ற பொருளில் வள்ளுவர் ஆண்டிருப்பாரானால், தெய்வம், பால் ஆகிய சொற்களை ஊழின் இணைப்பொருட் சொற் களாக ஆண்டிருக்க மாட்டார் எனக் கூறி, வள்ளுவத்தின் ஊழ் அறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு கருத்து (Mystic Conception); அதில் இறைமை உண்டென்பது வள்ளுவரின் குறிப்பு; பல இயற்கை நிகழ்ச்சிகளின் முறைமையை விஞ்ஞான ரீதியாகப் புரிந்து கொள்ள முடியாத சமுதாயத்தில் தோன்றிய கருத்து; வள்ளுவத்தின் ஊழுக்கும் முற்பிறப்பு வினை இப்பிறப்பில் தொடர்ந்து வருவதாகக் கூறப்படும் கருத்துக்கும் சம்பந்தமில்லை. பூர்வீகப் பொதுவுடைமை சமுதாயத்தில் பாதீட்டை நிர்வகித்த பால்வரை தெய்வமே புதிய

பொறுப்புடன் இங்குக்காட்சி தருகிறது. அது எங்கும் நிறைந்து இருக்கும் இறைமை. உடையவர் இல்லாதவர்களுடன் பகிர்ந்து உண்ணும் பாதீடு அறத்தைப் பின்பற்ற வேண்டுமென்பது அதன் ஆணை. அது கொடுங்கோலாட்சி நடத்தும் அரசர்களைத் தண்டிப்பது போலவே, சுயநலச் செல்வர்களையும் தண்டிக்கும். உழைப்பவர்கள் இந்த தெய்வத்தைக்கண்டு அஞ்சத்தேவையில்லை; உழைப்பாளிகளின் விடாமுயற்சி. ஊழின் இடர்களையும் களைந்தெறியும் வல்லமைபடைத்ததுஎன்று எஸ் இராமகிருஷ்ணன் கூறும் கருத்து சிந்திக்கத் தக்கது.124

உயிர்கள், அவற்றின் செயல்களின்பயனையடைந்து அனுபவிக்கும்படிசெய்யும் நியதிக்கு ஊழ்என்று பெயர்; செடிகளில், மரங்களில் மலர் ஊழ்த்து வெளிப்படுவதைப்போல ஒருவனுடைய இன்ப துன்பங்கள் அவனுடைய வாழ்க்கையிலிருந்து ஊழ்த்து-உருவாகி வெளிப்படுகிறது என்றும், ஒருவன் ஆக்கத்திற்கும் அழிவிற்கும் புறச்சூழல் காரணமன்று, அவரவர்தம் எண்ணங்களும் - எண்ணங்களின் வழிப்பட்ட செயல்களுமேகாரணம் ஆதலின் ஊழை மாற்றும்வலிமை மனிதனுக்கு உண்டென்றும், காலப் போக்கில் ஊழின் ஆற்றல் மிகைப்படுத்தப்பட்டு, மனிதர்களை அடிமைப்படுத்திச் சுரண்டும் வர்க்கம் வளர்ந்ததால், மக்களிடையில் அறியாமையும் வறுமையும் வளர்ந்தது என்றும், தன்னுடைய வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கித் தவறுகளைத் திருத்திக் கொண்டு வாழும் இயல்பினருக்கு ஊழ் உறுதுணை செய்யும் என்றும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூறும் விளக்கம் உழைப்பைத் தூண்டி மனித குலத்தை முன்னேறச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் கூறப்பட்ட சிந்தனைக்குரியதாகக் கருதத்தக்கது.125

இவ்வாறு அறிஞர்களுக்கிடையில் திருவள்ளுவரின் ஊழ்க் கோட்பாடு பற்றி மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. பெரும்பான்மையான அறிஞர்கள், ஊழ் என்பதற்கு, 'இருவினைப் பயன் செய்தவனையே சென்றடைதற்கு ஏதுவாகிய நியதி' என்னும் பரிமேலழகர் கூற்றினை உடன்பட்டு,ஒருவனது இன்றைய செயலின் பயன் நாளைய ஊழாக இம்மையிலும் பயன்தரலாம்; இம்மையில் செய்த செயலின் பயன் மறுமையிலும் பயன்தரலாம். செய்தவன் செயலின் தன்மைக்கு ஏற்ப உரிய காலத்தில் உரிய பயனை அவனே நுகரும்படிச் செய்ய வல்லது ஊழ் என்றும், ஒருவன் செய்த முன்னைய செயல்களின் பயனாகிய பழவினையினைத் துய்ப்பதில் இருந்து அவன் விலக முடியாது என்றும், எதிர்வினையின் பயனை ஆள்வினையால் நல்லூழாக மாற்றிக் கொள்ளும் ஆற்றல் மனிதனிடம் உள்ளது என்றும், இக்கருத்தே திருவள்ளுவரால் வலியுறுத்தப்படுவதென்றும் கூறுகின்றனர்.

ஊழ் அதிகாரத்தின் மூலமும் பிற அதிகாரங்களின் வழியும் ஊழின் ஆற்றலைத் திருவள்ளுவர் வலியுறுத்தியிருப்பது, நிலையாமை போன்ற கருத்துக்களை வற்புறுத்தி மக்கள் அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்ற வேண்டுமென்ற நல்ல நோக்கிலேயே என்பது போல, ஊழின் ஆற்றலையுணர்ந்து மக்கள் அறம் தவறாது வாழ வேண்டுமென்ற நல்லெண்ணத்தினாலேயே எனவும், ஊழைக் கூட வெல்லும் ஆற்றல் முயற்சியுடைய மனிதர் கையில் உள்ளது எனவும் திருவள்ளுவர் உணர்த்துகின்றார். ஒருவனுக்கு ஊழ் உரியபயனைத் தராவிட்டாலும் பழியாகாது; அறிய வேண்டியவற்றையறிந்து, மேலும் ஊழைப் புறங்கண்டு வெல்லும் முயற்சியின்மையையே உலகம் பழிக்குமாதலின்126 பழவினையால் பல தடைகள் வரினும் முயற்சியால் அவற்றைக் கடந்து வெற்றிகொள்ளும் திறத்தினையே திருவள்ளுவர் உலகிற்கு ஊழ்க்கோட்பாடு மூலம் எடுத்துக் காட்டியுள்ளார் என்பதும் ஊழ் அதிகாரத்தின்வழி சோம்பலை வளர்க்கும் நூல் திருக்குறள் அன்று என்பதும் புலனாகின்றன. இவ்வுண்மையை உணர்ந்தால் ஊழ், ஆள்வினை பற்றிய முரண்பாடோ, தடுமாற்றமோ திருவள்ளுவரிடத்தில் இல்லையென்பதும், வழிவழியாகத் தமிழர் மரபில் தோன்றிய கருத்துக்களுக்கு விளக்கமாக அமையும் வகையில், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வ நிலையை அடைய வழிகாட்டும் நோக்கிலேயே மக்களுக்கு ஊழ்க் கோட்பாட்டினை அவர் தெளிவாக்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கவையாம்.

குறிப்புக்கள்

1. பார்க்க - இயல் இரண்டு, குறிப்பு-83.
2. க. த. திருநாவுக்கரசு, **திருக்குறள் நீதி இலக்கியம்** செ. ப. க., 1971, ப 38
3. க. த, திருநாவுக்கரசு, மு. நூ., ப, 277
4. சாமி சிதம்பரனார், வள்ளுவர் வாழ்ந்த தமிழகம், இலக்கிய நிலையம், சென்னை-24, 1964, ப. 58
5. திருக், 8, 10
6. திருக், 5.
7. திருக். 6
8. திருக். 7.
9. திருக். 8.
10. திருஞானசம்பந்தர் முதல் திருமறை, பா. எண். 2, 5.
    திருநாவுக்கரசர் 6ஆம் திருமுறை, பா. எண். 77, 671
11. திருக். 31,
12. திருக். 36.
13. திருக். 37.
14. திருக். 40.
15. திருக். 38.
16. திருக். 77.
17. திருக். 204.
18. திருக். 10.

19. புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்

திருவாசகம், சிவபுராணம், அடி. 26—31

20. திருக். 98.
21. திருக். 1042.
22. திருக். 62.
23. திருக். 107
24. திருக். 126.
25. திருக். 398.

26. திருக் 62.

ஊர்வ பதினொன்றாம் ஒன்பது மானுடம்
நீர்பறவை நாற்காலோர் பப்பத்துச் சீரிய
பந்தமாம் தேவர் பதினான்கு அயன்படைத்த
அந்தமில் சீர்த் தாவரம் நாலைந்து

— பரிமேலழகர் விளக்கம்.

27. திருக். 234
28. திருக், 290
29. திருக். 1323
30. திருக். 86.
31. திருக்.101.
32. திருக். 222.
33. திருக். 121.
34. திருக். 1073.
35. பார்க்க இயல் இரண்டு - குறிப்பு - 92, 93.
36. திருக். 1103.
37. திருக் 121.
38. திருக். 168.
39. திருக். 243.
40. திருக். 255.
41. திருக். 835.
42. திருக். 919.
43. திருக். 338.
44. திருக். 339.
45. திருக். 349.
46. திருக். 346.
47. திருக். 361, 362.
48. திருக். 350.
49. நம்மாழ்வார் - திருவாய்மொழி. 1-2-5.
50. திருக். 356.
51. திருக். 370.
52. திருக். 247.
53. திருக். 371.
54. திருக். 371.
55. திருக். 375.
56. திருக் 376.
57. திருக். 377.
58. திருக். 378.
59. பெ. சுந்தரம்பிள்ளை மனோன்மணியம், கழகம், 1967, அங்கம்1-களம்2, அடி-113.
60. திருக். 373.
61. திருக். 636.
62. திருக். 398.
63. திருக். 372.
64. திருக். 374.

65. திருக். 169.
66. சிலப். 15-91-93.
67. திருவாசகம், சிவபுராணம் அடி-18.
68. திருக். 262.
69. பெரியபுராணம், திருநாவுக்கரசர் புராணம் 48.
70. திருக். களவியல் பரிமேலழகர் உரைவிளக்கம்
71. திருக். 1122.
72. இறையனார் களவியலுரை, இரண்டாம் சூத்திரவுரை, கழகம், 1969, ப. 37.
73. திருக். 1315.
74. திருக். 315.
75. திருக் 319.
76. திருக். 320.
77. சீவகசிந்தாமணி-முத்தி-பா. 164
78. தொல். 1169.
79. திருக். 621.
80. திருக். 628,
81. திருக். 629.
82. திருக். 379.
83. திருக். 380.
84, திருக். 46.
85. திருக். 48.
86. திருக். 53.
87. திருக். 60, 61.
88. திருக். 62.
89. திருக். 107.
90- திருக். 115.
91. திருக். 138.
92. திருக். 207.
93. திருக். 208.
94. திருக் 321.
95. திருக். 33.
96. திருக். 36.
97. திருக். 335.
98. கி. லக்ஷ்மணன், **இந்திய தத்துவ ஞானம்** பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14, 1980, பக் 410-411.
99. திருக். 361.
100 திருக். 370.
101. நாலடி. 11-1
102. திருக். 377.
103. திருக். 5
104. க, வச்சிரவேல் முதலியார் **திருக்குறளின் உட்கிடை, சைவ சித்தாந்தமே.** திருவருள் தவநெறி மன்றம், மதுரை, 1953, ப. 10.
105. திருக். 380
106. திருக். 620.
107. திருக். 262.
108. திருக். 265,
109. திருக். 396.
110. திருக் 373.
111. திருக். 619.
112. திருமந். பா. எண் - 2610, 2611.
113. "For every action there is an equal and opposite reaction."
- Sir Issac Newton's III Law of Motion.
114. TM. Alif Ibrahimov, THIRUKKURAL IN COUPLETS WITH ILLUSTRATIONS, Progressive Publishers, Moscow, 1974, Introduction.

115. மு. வரதராசனார், **திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்**, பாரி நிலையம், சென்னை, 1956, ப. 410.

116. வெ. இராமலிங்கம் பிள்ளை, நாமக்கல் கவிஞர், **இலக்கிய இன்பம்**, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-5. 1964, பக். 142-143.

117. சாமி. சிதம்பரனார், **வள்ளுவர் வாழ்ந்த தமிழகம்**, இலக்கிய நிலையம், சென்னை-24, 1964, ப. 60.

118. மொ. அ. துரையரங்கசாமி, **பண்டைத் தமிழ் நெறி**, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-5, 1956, ப. 96.

119. மு. கோவிந்தசாமி, **குறள் மனம்**, பாரி நிலையம், சென்னை-1, 1958, ப. 74.

120. கா. அப்பாத்துரையார், **தென்னகப் பண்பு**, மலர் நிலையம், சென்னை-1, 1961, ப. 446.

121. வ. சுப. மாணிக்கம், **வள்ளுவம்**, பாரி நிலையம், சென்னை-1, 1956, ப. 321.

122. மேற்படி, பக். 137-138.

123. மேற்படி. பக். 323.

124. எஸ். இராமகிருஷ்ணன், **வள்ளுவர் குறிப்பிடும் ஊழ் : ஓர் ஆராய்ச்சி**, 'தாமரை' திங்களிதழ், சனவரி 1981.

125. தவத்திரு. குன்றக்குடி அடிகளார், **திருக்குறள் உரை-'ஊழ்'**, மக்கள் சிந்தனை திங்களிருமுறை இதழ் - 1-8-83, இதழ்.

126. திருக். 618.

6. சிலப்பதிகாரமும் ஊழும்

இந்நூல் கோவலன் கண்ணகியின் வரலாற்றின்வழி பல்வேறு கருத்துக்களையும் கோட்பாடுகளையும் மனிதகுலத்திற்கு உணர்த்துகிறது. ஆசிரியர் இளங்கோவடிகள், தத்துவக் கோட்பாடுகளுள் ஒன்றாகச் சிந்திக்கப்படும் ஊழ்க்கோட்பாட்டினை இக்காப்பியத்தின் மையக் கருத்துக்களில் ஒன்றாக வைத்துக் காப்பியத்தைப் படைத்திருப்பது ஆராயத்தக்கதாகும்.

முப்பெரும் உண்மைகளில் ஒன்று :

சிறந்த காப்பியங்களில் பல்வகைக் கருத்துக்கள் கூறப்படினும் அவற்றின் மையக் கருத்துக்களாகச் சிலவற்றையே காப்பியத்தின் உயர் குறிக்கோள்களாகப் படைப்பாசிரியர் வலியுறுத்துவது உண்டு. அவ்வாறு சிலப்பதிகாரத்தில் வலியுறுத்தப்படும் மூன்று கருத்துக்களை முப்பெரும் உண்மைகள் என்று அழைப்பது மரபு. சிலப்பதிகாரத்தின் பதிகம் அக்காப்பியத்தின் முழுமையான செய்தியையும் தொகுத்து வழங்குவது. பதிகம் இளங்கோவால் செய்யப்பட்டதன்று என்றும், பிற்காலத்தவரால் செய்யப்பட்டதென்றும் கூறப்படும் கருத்துண்டு. ஆயினும்.

பதிகக் கிளவி பல்வகைப் பொருளைத்
தொகுதியாகச் சொல்லுதல் தானே[1]

என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கேற்பச் சிலம்பின் பதிகம் அக்காப்பியத்தின் உட்பொருளைத் திறனாய்வு செய்து தொகுத்துக் கூறும் சிறப்புடையது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். எனவே,

அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற் றாவதூ உம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை உருத்துவந் தூட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்யுள்[2]

என இளங்கோவடிகள் கூறியதாகப் பதிகம் கூறுகிறது.

அரசியல்நெறி பிழைத்த பாண்டியன் தன்னுயிரைக் கொடுத்து அறத்தைக் காப்பாற்றினான். வல்வினை வளைத்த கோலை மன்னவன் செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோலாக்கியது ஆதலின் அறம் கூற்றுவனாகப் பாண்டியன் உயிரைக் கொண்டது என்கிறார் இளங்கோவடிகள். வேட்டுவச் சாலினி தெய்வமுற்று உரைத்தபோது,

இவளோ கொங்கச்செல்வி குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணி[3] ....

என்று கூறியதும், இடைக்குல மடந்தையாகிய மாதரியினிடத்தில் அடைக்கலமாகக் கண்ணகியைக் கொடுக்கும்போது கவுந்தியடிகள்,

இன்துணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்[4]

என்று கூறியதும் உரைசால் பத்தினியாகிய கண்ணகியின் பெருமை உயர்ந்தோரால் ஏத்தப்படும் சிறப்புடையது என்பதை உணரும் படியாக அடிகள் கண்ணகியின் பெருமை பேசுவது இரண்டாவது நோக்கமாகக் கூறப்படுகிறது. கோவலன் கண்ணகியின் தனி வாழ்விலும் பாண்டியனின் பொது வாழ்விலும் ஊழ்வினை உருத்து வந்தூட்டியதாகக் கூறுமிடத்தில் ஊழினாற்றல் மூன்றாவது குறிக்கோளாகக் குறிப்பிடப்படுகிறது.

மூன்று உண்மைகளில் முன்னைய இரண்டிலும் அரசியலறத் தினையும் பெண்ணின் கற்புத் திறத்தினையும் கூறிய அடிகள், மூன்றாவதாகத் தாம்சார்ந்த சமயத்தின் உயர்ந்த கோட்பாடாகவும் மனித குலம் முழுமைக்கும் பொதுமையானதும், செம்மை வாழ்வுக்கு அடிப்படையானதுமாகவும் விளங்கும். ஊழ்க் கோட்பாட்டினை விளக்குவது, அடிகளின் முடிந்த குறிக்கோளாகும் எனக் கொள்ள லாம்.

> மூன்று கோட்பாடுகளுள் அறங்கூற்றாதலும் உயர்ந் தோரேத்தலும் இளங்கோ நாட்ட எண்ணிய துணைக்கோள்களே. ஊழ்வினைக் கோள்தான் அவர் நிறுவ முனைந்த தலையாய பேரறம். 'வினை விளை காலம் என்றீர்; யாது அவர் வினை விளைவு' (பதிகம்) என்று சாத்தனார்பால் இளங்கோ மறித்துக் கேட்கும் வினாவால், அவர்க்கு இருந்த கொள்கைப் பற்று நன்கு விளங்கும்.[5]

என வ. சுப.மாணிக்கனார் கூறுவது கருதத்தக்கது. காப்பியத்தினை நடத்திச் செல்ல ஊழ் பெருந்துணையாக அமைகிறது.

> அடிகள் அமைத்த சிலப்பதிகாரம் என்னும் மணி ஆரத் தின் சரடாக வினை அமைந்திருக்கிறது என்றால் மிகை யாகாது. மணியாரத்தின் சரடு எங்கும் புலப்படாமல் இருமுனைகளும் கூடுமிடத்து புலப்பட்டு நிற்கும். ஒரு சில மணிகளினூடே அச்சரடு செல்லுங்கால் அம்மணி களின் நிறத்திற்கேற்ப மங்கிய நிறத்தில் புலப்படாமல்

> இருமுனைகளும் கூடுமிடத்துப் புலப்பட்டு நிற்கும். ஒருசில மணிகளினூடே அச்சரடு செல்லுங்கால் அம்மணி களின் நிறத்திற்கேற்ப மங்கிய நிறத்தில் புலப்படவும் கூடும். அவ்வாறே சிலம்பு நிகழ்ச்சிகளில் வெளிப்பட்டுத் தோன்றாது இறுதியில் வெளிப்பட்டு நிற்கும் வினையும் ஒரே வழி நிகழ்ச்சிகளின் வாயிலாகவும், ஆசிரியரின் புலமைத் திறத்தாலும் மங்கலாக ஆனால் உறுதியாகப் புலப்பட்டுக் காப்பியத்திற்குச் சுவையூட்டுகிறது.[6]

என்று அ. மா. பரிமணம் கூறும் கருத்து, சிலம்பில் ஊழ், மணிகளை இணைக்கும் கயிறுபோலக் காப்பியத் தொடர்ச்சிக்கும் முடிவுக்கும் இன்றியமையாத ஒன்றாக அமைந்துள்ளது என்பதைக் குறிப்படுகிறது. முப்பெரும் உண்மைகளில் 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்னும் மூன்றாவது குறிக்கோளை வலியுறுத்துவ தற்காகவே சிலப்பதிகாரம் செய்யப் பெற்றது என்பது அறிஞர் சிலரின் கருத்தாகும்.

> ஊழ்வினையின் வலிமையைக் கூறவும், முற்பிறப்பின் பலன்தொடரும் என்பதனை வலியுறுத்தவுமே இளங்கோ வடிகள் சிலப்பதிகாரக் காவியம் இயற்றினார் என்பது வெள்ளிடை மலை[7]

என்னும் பி. எஸ். ஜி. ஜி. கோவிந்தசாமியின் கருத்து இங்கு அறியத் தக்கது.

சிலப்பதிகாரப் பதிகத்தை மட்டும் பயில்கின்றவர்களும் அக் காப்பிய நிகழ்ச்சிகளிலும் முடிவிலும் ஊழின் ஆட்சி எந்த அளவில் இடம் பெற்றுள்ளது என்பதை நன்கு உணரமுடியும். கண்ணகி கோவலன் வரலாறு கூறிவந்த தண்டமிழ்ச் சாத்தனார் வினைவிளை காலமாதலின் யாவதும் சினையலர் வேம்பன் தேரானாகிச் செயல்பட்டதாகக் கூறியதைக்கேட்ட இளங்கோவடிகள் ''வினைவிளை காலமென்றீர், யாதவர் வினைவிளைவு'' என்று கேட்கின்றார். கோவலன் கொலையுண்ணக் காரணமான அவனுடைய பண்டை வினையின் வரலாற்றை, கொதியழற் சீற்றம் கொங்கையின் விளைத்த கண்ணகிக்கு, மதுராபதித் தெய்வம் வெளிப்பட்டு விளக்கிக் கூறியதை, தான் வெள்ளியம்பல மன்றப் பொதியிலில் நள்ளிரவில் இருந்தபோது நேரே கேட்டறிந்ததாகச் சாத்தனார் கூறுகிறார். கண்ணகி கோவலன் வாழ்க்கையில் விளையாடிய ஊழின் ஆற்றலைக் கேட்டறிந்த இளங்கோவடிகள் தாம் உலகிற்கு உணர்த்த விரும்பிய வினைக் கோட்பாட்டிற்குப் பொருத்தமாக இவ்வரலாற்றினைத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்கின்றார்.

> அவர் மக்கட்கு உணர்த்தவிரும்பிய முப்பேருண்மைகளில் மூன்றாவதாகத் திகழ்வது 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்பதாகும். இவ்வுண்மையை, ஏனைய அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தவர்கள் ஏத்துவர் என்னும் உண்மை களைப் போலவே - ஏன் அவற்றிலும் மேலாகவே தம் காப்பியத்தில் விளக்கி நிலைநாட்டியுள்ளார்.[8]

எனக் கூறும் அ. மா பரிமணம் வினைக்கோட்பாட்டினை வலியுறுத் துவதே இளங்கோவடிகளின் முதன்மை நோக்கம் என்று குறிப்பிடுகிறார். எனவே சிலப்பதிகாரத்தின் குறிக்கோள்கள் மூன்றனுள் ஊழ்வினைக் கோட்பாட்டினை இளங்கோவடிகள் சிறப்பாக உலகிற்கு உணர்த்துகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது

காப்பியப் போக்கில் ஊழ் :

தோற்றம்

மங்கல வாழ்த்தில் காப்பியம் தொடங்குகிறது. கண்ணகி கோவலன் திருமணச் செய்தியை வாழ்த்தில் கூறி, மனையறம் படுத்த காதையில் இருவரது மனைவாழ்வுச் சிறப்பினை காட்டு கிறார் ஆசிரியர். அரங்கேற்றுக் காதையில் ஆடல், பாடல், அழகு என்னும் மூன்றனுள் ஒன்றும் குறைபடாத மாதவியின் ஆடற் சிறப்பினையும், அவளது மாலையை வாங்குபவர் அவளுக்குக் கணவராவர் என்று கூறிய மானமர் நோக்கியாகிய கூனியின் கையிலிருந்து மாலையைப் பெற்ற கோவலன் கலை விருப்புடைய வனாதலின் மாதவியின் மனையை அடைந்து, விடுதலறியா விருப்பினனாகி வடுநீங்கு சிறப்பின் தன் மனைவியையும், மனை யையும் மறந்தான் என்பதையும் கூறுகின்றார். அந்தி மாலைச் சிறப்புச் செய் காதையில் கோவலனுக்கு இன்பம் அளிக்கும் மாதவியின் இன்ப நிலையையும், அவனைப் பிரிந்ததால், மங்கல அணியன்றிப் பிறிதணி அணியாமல் வருந்தியிருக்கும் கண்ணகியின் துன்ப நிலையினையும் விளக்குகிறார். அடுத்த காதையுள், சோழ நாட்டின் மிகப் பெரிய விழாவாகிய இந்திர விழா நடைபெறும் சிறப்பு, புகார் நகரச் சிறப்பு, அந்நகரில் அமைந்த கோட்டங்கள், கோயில்களின் சிறப்புக்கள் ஆகிய பலவற்றைக் கூறி, கண்ணகி கோவலனைக் கூடப் போகிறாளாதலின் அவளது இடது கண்ணும் மாதவி அவனைப் பிரியப் போகிறாளாதலின் அவளது வலது கண்ணும் துடித்தன என்று கூறுகின்றார். கடலாடு காதையில் கோவலனும் மாதவியும் விழாக்கோலம் கொண்ட கடற்கரைக்குச் சென்று, அங்குப் புன்னைமர நிழலில் புதுமணற்பரப்பில் தமக்கென

அமைக்கப்பட்ட இடத்தில் சித்திரத் திரையைச் சுற்றிலும் வளைத்து விதானித்து அமைத்த வெண்காற்கட்டிலில் ஏறியமர்ந்தனர். அமர்ந்தபின் வசந்த மாலையின் கையிலிருந்த யாழை மாதவி வாங்கினாள் எனக் கூறுகின்றார் ஆசிரியர்.

காப்பியத்தின் ஏழாவது காதையாகிய கானல்வரி காப்பியப் போக்கில் குறிப்பிடத்தக்கதாகும். வசந்த மாலையிடமிருந்து யாழினைத் தொழுது வாங்கிய மாதவி, பண்ணல் முதலிய எண் வகையாலும் இசையை எழுப்பி, வார்தல் முதலிய எட்டு வகை இசைக் கரணத்தாலும் ஆராய்ந்து செவியால் ஓர்த்து, பாணி யாது எனக் கூறிக் கோவலன் கையில் யாழினை நீட்ட, அவன் வாங்கி ஆற்று வரியும் கானல்வரியுமாகிய இசைப் பாட்டுக்கள் பலவற்றை யாழில் இசைத்தான். கோவலன் பாடிய பாடல்கள் அகப்பொருட் டுறையமைந்தனவாகலின்,அவற்றைக் கேட்ட மாதவி,'மன்னுமோர் குறிப்புண்டு இவன் தன்னிலை மயங்கினான்' எனக் கருதி ஊடல் கொண்டு தானும் ஓர் குறிப்பினையுடைவள்போல் வரிப்பாடல்கள் பலவற்றைப் பாடினாள்.9 நிலத்தெய்வம் வியப்பெய்த நீள் நிலத் தோர் மனம் மகிழப் பாடிய மாதவியின் பாடல் கோவலனுக்குச் சினத்தைத் தந்தது.

> கானல்வரி யான்பாடத் தானொன்றின்மேல் மனம் வைத்து
> மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள் பாடினாள்10

என்றான் கோவலன்.ஒருவரையொருவர் மகிழ்விப்பதற்காகப் பாடிய வரிப் பாடல்கள் இருவர் உள்ளங்களிலும் ஊடலும் சினமும் தோன்றக் காரணமாயின. இருவரும் கருத்து வேறுபாட்டுடன் பிரிவதற்குக் காரணமாக இளங்கோவடிகள் இவ்விடத்தேதான் முதல்முதலாக ஊழ்வினையைக் காட்டுகின்றார்.

> யாழிசைமேல் வைத்துத் தன்ஊழ்வினைவந் துருத்ததாகலின்
> உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை ஞெகிழ்ந்தன
> னாய்ப்
> பொழுதீங்குக் கழிந்ததாகலின் எழுதும்என் றுடனெழாது
> ஏவலாள ருடன்சூழ்தரக் கோவலன்தான் போனபின்னர்11

என அடிகள், கோவலனது பண்டை ஊழ்வினை உருத்துவந்து பயனளிக்கத் தொடங்குகிறது என்பதை இவ்விடத்து ஊழின் தோற்றத்தால் விளக்குகிறார். கண்ணகியிடம் இல்லாத கலை நலத்தினை விரும்பி மாதவியிடம் சென்றவன் கோவலன்; அவனது விருப்பத்திற்குரிய கலைக் கூறாகிய யாழிசையினைக் கருவியாகக் கொண்டு ஊழ்வினை வந்துஉருத்ததாக அடிகள் காட்டுகின்றார். இதன்பின்னர் கோவலன், கண்ணகியின் செயல்கள் அனைத்தும் ஊழ்வினையின் ஆட்சிக்கு உட்பட்டு, அதன் ஏவுதலால் நடைபெறு வனவாகவே அடிகள் குறிப்பிடுவது அறியத்தக்கது.

வளர்ச்சி :

கடற்கரையில் கோவலன் பிரிந்து சென்றபின், தனித்துத் தன்னில்லமடைந்த மாதவி, வேனிற்பருவத்தில் கோவலன் பிரிவால் துன்புற்று வருந்தி, மீண்டும் கோவலன் வருவான் என்ற நம்பிக் கையில் முடங்கலெழுதித் தன் தோழியாகிய வசந்த மாலையின் கையில் கொடுத்துக் கோவலனிடம் சேர்ப்பித்தாள். கோவலனோ சினந்தணியாதவனாகி, 'நாடக மகளாதலின் நடித்தல் அவளுக்கு இயல்பு' என்று முடங்கலை மறுத்தான்; இச்செய்தியை அறிந்து வருந்திய மாதவி 'மாலை வாராராயினும் காலை காண்குவம்' என்று கூறி உறக்கமின்றித் தவித்தாள் என வேனிற்காதையில் அடிகள் கூறுகிறார். மாதவியைப் பிரிந்த கோவலன் தன் இல்லம் அடைந்து கண்ணகியின் வாடிய மேனியின் வருத்தம் கண்டு, தான் இதுவரை மாதவியுடன் வாழ்ந்து, முன்னோர் தேடிய குன்றனைய செல்வத்தைத் தொலைத்த செயலுக்கு வருந்தினான். கண்ணகியின் சிலம்பினை முதலாகக் கொண்டு; இழந்த பொருளையெல்லாம் மதுரைக்குச் சென்று ஈட்டுவோம் என்றும், கண்ணகியையும் உடன் வருமாறு கூறினான் என்றும் கூறும் ஆசிரியர் முற்பிறப்பில் கோவலன் செய்த தீவினை நெடுங்காலம் நின்று நெஞ்சை ஒருப் படுத்த அவ்வினையினது ஏவலைக் கொண்டு மதுரைக்குச் செல்ல' பொழுது புலர்வதற்கு முன் கண்ணகியுடன் வீட்டினை விட்டுப் புறப் பட்டான் என்பதனை,

> வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குற்
> கனைசுடர் கால்சீயா முன்[12]

என்று கனாத்திறம் உரைத்த காதையுள் காட்டுகிறார். இவ்விடத்தில் வினையின் ஏவலால் மதுரைக்குக் கோவலன் புறப்பட்டான் என்று கூறும் அடிகள், இத்துடன் நின்றுவிடாது ஒவ்வொரு காதையிலும், ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கோவலனின் முடிவுவரை அவனை ஊழ்வினை செலுத்துவதாக,

> காரிருள் நின்ற கடைநாட் கங்குல்
> ஊழ்வினை கடைஇ உள்ளந் துரப்ப[13]

என்று நாடுகாண் காதை வரிகளால் காட்டுகிறார். காப்பியப் போக்கில் வினையாற்றலின் வளர்ச்சியைத் தொடர்ந்து அமைத்து உள்ளார்.

கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் செல்லும் வழியில் கவுந்தியடிகளைக் கண்டு, தாங்கள் மதுரைக்குச் செல்வதைச் சொல்லத் தாமும் மதுரைக்கு வரும் விருப்பினைத் தெரிவித்து அவர்களுடன் கவுந்தியடிகள் புறப்படுகிறார். வழியில் திருவரங்கச் சோலையுள் தங்கிய காலையில், மூவரும் அங்கு வந்தடைந்த

சாரணரைத் தொழுது 'பண்டைத் தொல்வினை பாறுக' என்று வணங்குகின்றனர்.[14] வணங்கிய இவர்களது நோக்கத்தினை அறியும் திறமுடையராயினும், விருப்பு வெறுப்பற்ற வீரராகிய சாரணர் இவர்களுக்குப் பின்வரும் துன்பத்தினைக் கூறாது, கவுந்தியடிகளின் பால்,

கழிபெருஞ் சிறப்பிற் கவுந்தி காணாய்
ஒழிகென வொழியா தூட்டும் வல்வினை
இட்ட வித்தின் எதிர்ந்துவந் தெய்தி
ஒட்டும் காலை யொழிக்கவு மொண்ணா[15]

என அறிவுறுத்துகின்றனர். எதிர்வரும் துன்பத்தையறியாத கவுந்தி அடிகள் இக்கூற்றினைப் பொது அறிவுரையாகவே கருதுகின்றார். யாவராலும் ஒழிக்க இயலாத தீவினை, வினைநிலத்திட்ட வித்துப் போல, நல்வினை வந்தடைந்து நற்பயனை நுகர்விக்கும் காலத்திலும் மாற்ற முடியாததாய்த் தன் பயனாகிய துன்பத்தை நுகர்வித்தே தீரும் என்பதை இவ்வரிகளால் இளங்கோவடிகள் வலியுறுத்துகிறார்.

மதுரைப் புறஞ்சேரியில் தங்கிய கோவலன் தன் மனைவி துயருழக்குமாறு, சிறுமையுற்ற தன் நிலையைக் கூறக்கேட்ட கவுந்தியடிகள் அவனுக்கு ஆறுதல் கூறும் வாயிலாக,

தீதுடை வெவ்வினை உருத்த காலைப்
பேதமை கந்தாப் பெரும்பே துறுவர்
ஒய்யா வினைப்பயன் உண்ணுங் காலைக்
கையாறு கொள்ளார் கற்றறி மாக்கள்[16]

எனக் கூறி இராமன், நளன் வரலாற்றை எடுத்துக் காட்டி அவர்களைக் காட்டிலும், கோவலன் தன் மனைவியைப் பிரியாத வாழ்க்கையையுடையவனாய் இருப்பது மன அமைதி தருவது என்று எடுத்துக் கூறுமிடம், காப்பியத்தில் ஊழின் ஆற்றலை மிகுதிப் படுத்திக் காட்டும் இளங்கோவடிகளின் திறனை வெளிப்படுத்துவதாகும்.

மாடல மறையோன், புறஞ்சேரியில் கோவலன் கண்ணகியைக் கண்டு,கோவலனின் நிலைக்கு இரங்கிக் கருணை மறவன்,செல்லாச் செல்வன், இல்லோர் செம்மல் என்றெல்லாம் கோவலனின் செயற்கருஞ் செயல்களைப் பாராட்டிப் பேசி, இப்பிறவியில் செய்தனவெல்லாம் நல்வினையாகவே இருக்கக் கோவலன் இந்நிலைக்கு வந்ததற்குப் பழவினையே காரணமாக இருத்தல்வேண்டும் என்று

இம்மைச் செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி யுழந்தித்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது[17]

என்னும் அடிகளால் கூறியதாக இளங்கோவடிகள் அமைத்திருப்பது கோவலன் பின்னர் அடையப்போகும் முடிவினைக் காப்பிய மாந்தரும், படிப்போரும் தாங்கிக் கொள்ளும் வகையில் ஊழின் ஆற்றலைப் படிப்படியாக வளர்ச்சி நிலைக்குக் கொண்டு செல்வதற் காகவே எனக் கொள்ள வேண்டியுள்ளது.

மாதரிமனையில் கோவலனும் கண்ணகியும் தங்கியிருந்த ஒரு நாள் மனையறம் மிகச் சிறப்பாக ஆசிரியரால் காட்டப்படுகிறது. கண்ணகி படைத்த உணவை உண்ட கோவலன், பெற்றோரையும் சுற்றத்தையும் விட்டுக் காட்டு வழியில் கண்ணகியுடன் மதுரைவர நேர்ந்த துன்ப நிலையினை எண்ணி வருந்தும்போது,

மாயங் கொல்லோ வல்வினை கொல்லோ
யானுளங் கலங்கி யாவதும் அறியேன்[18]

எனத் தன்னிலைக்கு ஊழ்வினைதான் காரணமோ என்று கண்ணகி யிடம் கூறிப் புலம்புவதாக, ஆசிரியர் காட்டுகின்றார். இவ்வாறு, யாழிசையால் மாதவியிடமிருந்து கோவலன் பிரிவதற்குக் காரண மாகச் சொல்லப்பட்ட இடத்தில் தோன்றிய ஊழ், காப்பிய வளர்ச்சி யினைத் தொடர்ந்து வளர்ந்து செல்வதை உணர முடிகிறது.

முதிர்ச்சி :

மாதரிமனையில், கோவலன் கண்ணகியை அருகே அழைத்துத் தான் இதுவரை அவளுக்குச் செய்த தீமையினைக் கூறி வருந்தி, 'கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி' எனத் தன் வாயினாலேயே அவளைப் புகழ்ந்து, ஆறுதல் கூறி,

சீறடிச் சிலம்பின் ஒன்றுகொண் டியான்போய்
மாறி வருவன் மயங்கா தொழிக[19]

எனக் கூறிச் சிலம்பு விற்கச் செல்கிறான். சென்றவன் அரண்மனைப் பொற்கொல்லனைக் கண்டு, விற்பதற்குத் தான் கொண்டு வந்த சிலம்பினைக் காட்டினான்; அப்பொற்கொல்லன் அரசியின் சிலம் பொன்றைக் கவர்ந்தவனாதலால், தனது களவு வெளிப்படும் முன் இச்சிலம்பால் தன்மீது உண்டாகும் ஐயத்தைத் தவிர்க்கலாமெனத் துணிந்து, கோப்பெருந்தேவி அணிதற்கேற்ற இச்சிலம்பினை நான் அரசனுக்கு காட்டி வரும்வரை இவ்விடத்திருப்பீர் எனத் தன் மனையின் பக்கத்தில் உள்ள கோவிலில் இருக்கச் செய்து அரசனிடத்துச் சென்றான். கோப்பெருந்தேவியின் ஊடலைத் தணிப்பதற்காக அந்தப்புரம் சென்று கொண்டிருந்த அரசனை வழியில் கண்டு சிலம்பினைத் திருடிய கள்வனைத் தன் குடிலில் வைத்துள்ளதாகப் பொற்கொல்லன் கூறக் கேட்ட அரசன்,

வினைவிளை கால மாதலின் யாவதும்
சினையலர் வேம்பன் தேரா னாகி

ஊர்காப் பாளரைக் கூவி ஈங்கென்
தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கைய தாகில்
கொன்றச் சிலம்பு கொணர்க .. 20

எனக் காவலரிடத்தில் ஆணையிட்டதாக அடிகள் காட்டுகின்றார். இவ்விடத்தில் கோவலன் பண்டை வினையும் பாண்டியன் பழ வினையும் பயனளிக்கும் காலம் வந்தது என்பதனைக் காட்டவே ஆசிரியர் 'வினைவிளை காலம்' என்று கூறுகிறார்.

பொற்கொல்லனுடன் சென்ற காவலர் கோவலனிடம் சென்ற போது, கோவலன் தீவினையாகிய முதிர்ந்த வலையில் அகப்பட்டு இருந்தான் என்பதை இளங்கோவடிகள் தம் கூற்றாகவே,

தீவினை முதிர்வலைச் சென்று பட்டிருந்த
கோவலன்21

எனக் கூறுகிறார். கோவலனின் ஊழ்வினை பொற்கொல்லன் வாக்கினைத் துணைக் கொண்டு விரைந்து, கல்லாக் களிமகன் கைவாளின் வழித் தன் பலனை ஊட்டி விடுகின்றது. கோவலன் வெட்டுண்டு வீழ்ந்தபோது மண்ணக மடந்தை மிக்க துன்பத்தினை யடையவும், பாண்டியன் செங்கோல் வளையும் வண்ணம் முன்னைத் தீவினை முதிர்தலால் கோவலன் வீழ்ந்தான் என்பதை,

மண்ணக மடந்தை வான்றுயர் கூரக்
காவலன் செங்கோல் வளைஇ வீழ்ந்தனன்
கோவலன் பண்டை ஊழ்வினை யுருத்தென்22

என ஆசிரியர் விளக்குகிறார்.

கோவலன் கொலையுண்டதைக் கேட்ட கண்ணகி அழுது புலம்புகிறாள்; தன் கணவன் கள்வனோ எனக் கதிரவனை வினவுகிறாள்; கள்வனல்லன் என்றும், அவ்வாறு கூறிக் கொலைப் படுத்திய இவ்வூர் எரியுண்ணும் என்றும் ஒரு குரல் விண்ணிலிருந்து ஒலித்தது. ஒலியைக் கேட்ட கண்ணகி, 'என்னுறுவினை' ஈர்வதோர் வினை, 'உண்பதோர் வினை' என வினையை நினைந்து புலம்பு கிறாள் 23 கணவனது கொலைக்கு காரணமான முன்வினையை யாரேனும் காட்டிக் கூறுவார்களாவென்பதைக் கற்புடைப் பெண்டிரையும், சான்றோரையும், தெய்வத்தையும் அழைத்துப் புலம்பு கிறாள்; அவளது புலம்பலை மிகுதியாகக் காட்டும் ஊர்சூழ்வரி காப்பியத்தின் அவலச் சுவையினை மிகுதியாகக் காட்டுமிடமாகும். துன்ப மிகுதியால் புலம்பியவள் கொலையுண்ட கணவனது உடம்பினைத் தழுவிக் கொள்ள, அவ்வளவில் அவன்எழுந்து நின்று, கண்ணகியின் மதிமுகம் வாடியது என்று கூறி அவள் கண்ணீரைத் துடைக்கிறான்; அவள் கணவனுடைய திருவடிகளை வணங்குகிறாள்

அப்பொழுது அவன், 'எழுதெழில் மலஃருண்கண் இருந்தைக்க'[24], எனக் கூறி, அமரர் குழாத்துடன் துறக்கம் செல்கின்றான். இவ்வாறு கணவன் உயிர்பெற்று உரையாடியது மாயமோ? மருட்டும் தெய்வத்தின் செயலோ? என்று கூறியவள் சினந் தணிந்தாலன்றிக் கணவனைக் கைகூடேன் என்றும், கொடுங்கோலரசனிடத்தில் அறங்கேட்பேன் என்றும் சொல்லிப் பாண்டியன் அரண்மனை நோக்கிச் செல்கிறாள்; பாண்டியன், முன் நின்ற கண்ணகியை நோக்கி, 'நீ யார்' என வினவிய அரசனுக்கு மறுமொழியாக, சோழரின் செங்கோல் சிறப்பினையும் புகாரின் பெருமையினையும் சொல்லி, அந்நகரின் சிறப்புமிக்க தன்கணவனது குடிப்பெருமையைச் சாற்றி

வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர் புகுந்தீங்கு
என்காற் சிலம்புபகர் தல்வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி[25]

எனத் தன்னைப் பற்றி விளக்குகிறாள். இவ்விடத்தில் மதுரைக்கு வணிகம் செய்து வாழ்க்கை நடத்துவதற்காக, ஊழ்வினை செலுத்துவதால் வந்தோம் என்று கண்ணகி வாயினால் ஊழ்வினையின் ஆற்றலை இளங்கோவடிகள் புலப்படுத்துகிறார்.

வழக்குரைத்த கண்ணகியின் வாய்மொழி கேட்ட பாண்டியன் கள்வனைக் கொல்லுதல் கடுங்கோலன்று என்று கூற, அவன் ஆராயாது கொன்றான் என்பதை வலியுறுத்தித் தன்காற் சிலம்பு மாணிக்கப் பரலுடையது எனக் கூறுகிறாள் கண்ணகி. கோப்பெருந்தேவியின் சிலம்பு முத்துப் பரலுடையது எனக்கூறிய மன்னன் கோவலனிடமிருந்து பொற்கொல்லன் கைப்பற்றிய சிலம்பினைக் கொண்டுவருமாறு ஆணையிடுகிறான். தன் அழகிய மணிச் சிலம்பு வந்ததும் அதனை எடுத்துக் கண்ணகி உடைக்கிறாள்; அதனின்றும் வெளிப்பட்ட மாணிக்கப் பரல் பாண்டியன் முகத்திடத்துத் தெறிக்கிறது; ஆராயாது கோவலனைக் கொன்ற தான் அரசனில்லை, தான் கள்வனே என்றும், குடிமக்களைக் காக்கும் தென்னவர் ஆட்சி தன்னால் தவறியது என்றும் கூறி உயிர் விடுகிறான்;[26] 'கணவனை இழந்தோர்க்கு காட்டுவது இல்'லென்று கூறிக் கோப்பெருந்தேவியும் உயிர்விடுகிறாள்.[27] கோவலன் கொலைப் படுவதுடன் ஊழ்வினை முடிந்து விடுவதில்லை. கோவலனுக்குக் கொலைத் தண்டனை வழங்கிய பாண்டியனும், பாண்டிமாதேவியும் இறக்கும் போதுதான் காப்பியத்தில் ஊழ்வினை முதிர்ச்சியினை - முடிவினையடைகிறது என்று கூறலாம்.

பாண்டியன் இறப்புக்குக் காரணமான ஊழ்வினையை வழக்குரை காதையில் இளங்கோவடிகள் காட்டவில்லை; பின்வரும் காதைகளில் காட்டுகின்றார். கோப்பெருந்தேவி வீழ்ந்ததைக் கண்ட கண்ணகி

தேவியிடம் பாண்டியன் இறப்பிற்கு, அவன் கோவலனைக் கொலை செய்த தீவினையே காரணமாயிற்று என்னும் கருத்தில்

முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண்[28]

என்று கூறியவள், தன் கணவன் கொலையுண்டதற்கு ஊழ்வினை காரணம் என அமைதியுறாமல், 'ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையும்' எனக் கூறி எரிக்கின்றாள் கண்ணகி மதுரையை எரித்ததற்கு அவளை மட்டும் குற்றம் சொல்ல இயலாதவாறு, இளங்கோ அடிகள், மாபத்தினியாகிய கண்ணகிக்குப் பிழை செய்த நாளில் மதுரைமூதூர் எரியூட்டப்படும் என்று முன்பே ஓர் ஏவலுண்டு எனத் தீக்கடவுளே சொல்லும்படியாக அமைத்துள்ளார். ஆதலின் மதுரை எரியூட்டப் பட்டதற்குப் பழைய சாபம் கண்ணகியின் சினத்தைக் கருவியாகக் கொண்டு செயற்பட்டதாகக் கருதமுடிகிறது. மதுரையை எரியூட்டிய கண்ணகியின் சினம் தணியாமையைக் கண்ட மதுராபதித் தெய்வம், அவள் முன்னர் வர அஞ்சிப் பின்னே வந்து நெஞ்சம் வருந்தி,

தோழிநீ ஈதொன்று கேட்டியென் கோமகற்கு
ஊழ்வினை வந்தக் கடை
மாதராய் ஈதொன்று கேளுன் கணவற்குத்
தீதுற வந்த வினை[29]

எனக் கூறி, பாண்டியன் இறப்பிற்குரிய அவனது ஊழ்வினையையும் கோவலன் இறப்பிற்குரிய அவனது ஊழ்வினையையும் தெளிவு படுத்துகிறது. மேலும் பாண்டிய மன்னரின் அறம் வழுவாத அரசு முறையினை எடுத்துக் கூறி, இவ்வாறு கோன்முறை தவறியதற்கு,

ஆடித் திங்கள் பேரிருட் பக்கத்து
அழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று
வெள்ளி வாரத்து ஒள்ளெரி யுண்ண
உரைசால் மதுரையோடு அரைசுகே டுறுமெனும்
உரையு முண்டே[30]

என்னும் பழைய சாபத்தினைக் காரணமாக எடுத்துக் கூறுகிறது.

இதுபோலவே கோவலன் கொலையுண்டதற்கும், அவன் முற்பிறப்பில், வசு என்னும் சிங்கபுரத்து வேந்தனுக்கு அரசுப் பணியாளனாகப் பரதன் என்னும் பெயருடன் விளங்கித் தன் எதிரி நாடாகிய கபிலபுரத்திலிருந்து வணிகத்திற்காக வந்த சங்கமன் என்பானை ஒற்றன் எனக்கருதிக் கொன்றான் என்ற செய்தியையும் கொலைப்பட்ட சங்கமன் மனைவி நீலியின் சாபத்தால் வந்த ஊழ்வினையே காரணமாகும் என்பதனையும் மதுராபதித் தெய்வம் கூறுகிறது.

மேலும் அத்தெய்வம்,

உம்மை வினைவந் துருத்த காலைச்
செம்மையி லோர்க்குச் செய்தவ முதவாது[31]

என்னும் வரிகளில், இம்மையில் செம்மையில்லோர்க்கு ஊழ்வினை வந்து பயனளிக்கும்போது தவமும் உதவாது என்னும் கருத்தினை விளக்கி ஊழ்வினையின் வலிமையினைக் கண்ணகிக்குப் புலப்படுத்து கிறது; பழவினைப் பயனைத் துய்த்தே தீர்க்க வேண்டும் என்பது வினைக் கோட்பாடாதலின் யாவராயினும் ஊழ்வினை உருத்துவந்து பயனளிக்கும் வேளையில் அதன் பயனிலிருந்து தப்ப இயலாதென் பதை வலியுறுத்தி, 'இன்னும் பதினான்கு நாள் கழிந்தபின் நின் கணவனைத் தேவர் வடிவத்துக் காண்பாய்' என்று மதுராபதித் தெய்வம் கூறியது என்பதனை

மதுரைமா தெய்வம் மாபத் தினிக்கு
விதிமுறை சொல்லி அழல்வீடு கொண்டபின்[32]

என்னும் வரிகளில் ஆசிரியர் கூறுகிறார். ஊழ்வினையின் இயல் பினை, முடிவினை மதுரைமாதெய்வம் எடுத்துக் கூறியதைக் கேட்ட பிறகே கண்ணகி ஆறுதலடைகிறாள். காப்பியத்தில் ஆசிரியர் கோவலன் கொலைப்படுதல், பாண்டியனும் அவன் தேவியும் உயிர் துறத்தல், மதுரை மாநகர் எரியூட்டப் படுதல் ஆகியவற்றுக்குக் காரணமாக ஊழ்வினையை வலியுறுத்துகிறார்.

இவ்வாறு கானல்வரியில் மாதவியின் யாழிசைமேல் தோன்றிய ஊழ், காப்பியத்தின் தொடர்ச்சிக்கேற்ப வளர்ந்து, ஒவ்வொரு நிலையிலும் ஆசிரியரால் வலியுறுத்தப்பெற்று, கதைத் தலைவன் தலைவியின் முடிவில் பேராற்றலுடையதாகக் காட்டப்படுவது குறிப்பிடத் தக்கதாகும்.

ஊழோடு உறவுடைய செய்திகள் :

அறமும் ஊழும் :

காப்பியத்தின் மூன்று உண்மைகளுள், 'அரசியல் பிழைத் தோர்க்கு அறங்கூற்றாவதும்' ஒன்றாக வலியுறுத்தப்படுகிறது. 'அறம் செய்வதால் நல்வினையும், அல்லன செய்வதால் தீவினையும் விளையுமென்ற கருத்துக்கள் காப்பியம் முழுவதும் காணப்படு கின்றன. காப்பிய மாந்தர்களில் முற்பிறப்பில் அறமல்லன செய்தமையின் அத்தீவினைகளுக்குரிய பயன் ஊழ்வினையாக இப் பிறப்பில் வந்து உரியவர்களை வருத்துவதாகவும், அவ்வூழ் வினையே காப்பியத்தின் தொடர் நிகழ்வுகளுக்குக் காரணமாக அமைவதாகவும் ஆசிரியர் காட்டுகின்றார். இக்காப்பியத்தில் இடம் பெறும் சான்றோர்கள் ஊழின் பயனை எடுத்துக்காட்டி அறம் செய்ய வேண்டுமென்றே வற்புறுத்துகின்றனர், அருகதேவன்.

'அறிவன், அறவோன் அறிவுவரம் பிகந்தோன்'[33] எனப் போற்றப் படுகின்றான். காப்பிய முடிவிலும் இளங்கோவடிகள் நல்லறங்களைச் செய்து நல்வினைகளையே அடைய வேண்டு மென்று வலியுறுத்துகிறார்.[34]

மறுபிறப்பும் ஊழும் :

இக்காப்பியத்தின் கதை மறுபிறப்பு உண்டு என்னும் அடிப்படையிலேயே செல்கிறது. தலைவன் தலைவியராகிய கோவலன் கண்ணகி இருவரையும் முற்பிறப்பில் வினைப்பயனே இப்பிறவியில் உருத்துவந்து வருத்துவதாக ஆசிரியர் காட்டுகிறார். கவுந்தியடிகள், கோவலன், கண்ணகி மூவருக்கும் மதுரைக்குச் செல்லும் வழியுரைக்கும் மாங்காட்டு மறையோன் புண்ணிய சரவணம், பவகாரணி, இட்டசித்தி என்னும் மூன்று பொய்கைகள் பற்றிக்கூறி, அவற்றுள் பவகாரணியில் மூழ்கியாடினால் இப் பிறப்பிற்குக் காரணமாகவுள்ள முற்பிறவியினை உணரலாம் என்று கூறியதாக இளங்கோவடிகள் விளக்குகின்றார்.[35] மாடல மறையோன், கோவலன் வீட்டை விட்டுப் பிரிந்து கண்ணகியுடன் வந்ததற்குக் காரணமாக, இம்மையில் நல்வினையே செய்தா னாகலின், அவனது முற்பிறப்பின் வினையே இப்பொழுது வந்து உருத்தது என்று கூறுகிறான்.[36] எட்டி சாயலன் மனைவியின் தானச் சிறப்பினாலும் அவள்அளித்த அடைக்கலத்தாலும் குரங்காக இருந்து, பின் மத்திம நன்னாட்டு உத்தரகௌத்தற்கு மகனாகி அறம்பல செய்து முப்பத்திரண்டாம் வயதில் இறந்து, பின் தேவர் வடிவத்தினையடைந்த ஒரு தெய்வ குமாரன் வரலாறு கூறுவது கொண்டு மறுபிறப்பு பற்றிய செய்தியை அறியமுடிகிறது.[37] வரந்தரு காதையில் காப்பிய மாந்தர் பலரது முற்பிறப்பு வரலாறு கூறப்படுகிறது. பாசண்டச் சாத்தன் வாக்கினால் கூறியபடி, அரட்டன் செட்டியின் சிறுமியர் மேல் மாடலன் கரகநீரைத் தெளித் ததும், சிறுமியர் இருவரும் பழம் பிறப்புணர்வு பெற்றுப் பெரியவர் களைப் போலக் கண்ணகியைக் குறித்து அரற்றினர். இருவரும் கண்ணகியின்மேல் பெரிதும்அன்புடையவர்களாகிய அவளது தாயும், கோவலன் தாயுமாதலின் துறக்கம் செல்லாது அரட்டன் செட்டிக்குச் சிறுமியராகத் தோன்றினர் என்னும் செய்தி வெளிப்படுகிறது.[38] சேடக் குடும்பியின் சிறுமியின்மீது நீரைத் தெளித்தபோது கண்ணகி யிடத்து முற்பிறவியில் பொருந்திய அன்பின் காரணமாகவும், திருமாலை முற்பிறப்பில் வணங்கியதனாலும் அரவணையில் பள்ளி கொண்டவனுக்குத் தொண்டு செய்யும் குடும்பத்தில் புதல்வியாகப் பிறந்தாள் என்று இடைக்குல மடந்தை மாதரியின் முற்பிறப்பு வரலாற்றையும் கூறி, இவ்வாறு நல்லறத்தின் வகைகளை விரும்பிச்

செய்தோர் பொன்னுலகம் அடைதலும், ஒருவர்பால் அன்புமிக்க உள்ளமுடையோர் இந்நிலத்துத் தாம் அன்பு வைத்த இடத்தே பிறத்தலும், ஒருவன் செய்த அறத்தின் நற்பயன் அவனுக்கு உண்டாதலும், பாவத்தின் தீப்பயன் உண்டாதலும், இவ்வுலகில் தோன்றியோர் மறைதலும், மறைந்தோர் தோன்றலும் புதியன வல்ல, தொன்றுதொட்டே நிகழும் வழக்காகும் என்று மாடலன் வாயிலாக,

நற்றிறம் புரிந்தோர் பொற்படி யெய்தலும்
அற்புளஞ் சிறந்தோர் பற்றுவழிச் சேறலும்
அறப்பயன் விளைதலும் மறப்பயன் விளைதலும்
பிறந்தவ ரிறத்தலும் இறந்தவர் பிறத்தலும்
புதுவ தன்றே தொன்றியல் வாழ்க்கை39

என ஆசிரியர் முற்பிறப்புப் பற்றிக் கூறுவதன் வழிப் பிறப்புப் பல என்னும் நம்பிக்கைபற்றிய தமிழர்தம் கருத்துப் புலனாகிறது.

துறக்கமும் நரகமும்:

துறக்கம், நரகம் பற்றிய செய்திகள் நூலின்கண் இடம் பெற்றுள்ளன. காப்பியத் தலைவனாகிய கோவலனும் கண்ணகியும் துறக்கவுலகம் அடைந்தனர் என்பதை,

அமரர்க் கரசன் தமர்வந் தேத்தக்
கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு
வான வூர்தி ஏறினள் மாதோ
கானமர் புரிகுழற் கண்ணகி தானென்40

என்னும் வரிகளால் ஆசிரியர் காட்டுகின்றார். கோப்பெருந்தேவி துறக்கவுலகம் செல்ல வேண்டுமென்றும் கண்ணகிக்குக் கோயில் எடுத்து வணங்க வேண்டுமென்றும் சேரன்மாதேவி அரசனிடம் உரைத்ததாக ஆசிரியர் கூறுகின்றார். தீவினை செய்தவர் நரகடைவர் என்பதனை ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இந்திர விழவூரெடுத்த காதையில், பொய்த்தவ வேடமுடையவர், தீநெறியில் மறைந்தொழுகும் பெண்டிர், கீழறுக்கும் அமைச்சர், பிறர் மனைவியை விரும்புவோர், பொய்ச்சான்று பகர்வோர், புறங் கூறுவோர் ஆகியோர் பூதத்தால் புடைத்துண்ணப்படுவர் எனக் கூறுகின்றார்.41 அடைக்கலக் காதையில் மாடலன் வாயிலாகக் கோவலன் பெருமை கூறும்போது, பொய்ச்சாட்சி சொல்லியவனது தாயின் துன்பத்திற்காக இரங்கிப் பூதத்திடம் சென்று, தன்னுயிர் கொண்டு, பொய்ச்சாட்சி சொல்லிய பாவிக்கு விடுதலை வேண்டிய கோவலனிடத்தில்,

நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி இழக்கும் பண்பீங் கில்லை42

எனப் பூதம் கூறியதாக வரும் வரிகளால் நரகம் பற்றிய செய்தியும் அவனவன்செய்த வினையின் பயனை அவனவன் துய்க்கவேண்டுமே யன்றி, ஒருவனுக்குரியதனை இன்னொருவன் துய்க்க இயலாது என்னும் ஊழ்க் கோட்பாடும் ஆசிரியரால் உணர்த்தப்படுகின்றன.

வீடுபேறும் ஊழும் :

காப்பிய மாந்தருள் சிலர் ஊழ்வினையினால் மாற்றப்படாத வராய் நல்வினை செய்து வீடுபேறு எய்தியதாக ஆசிரியர் காட்டு கின்றார். எட்டி சாயலன் அவன் மனைவி வரலாற்றினைக் கூறும் இளங்கோவடிகள்,

சாரணர் கூறிய தகைசால் நன்மொழி
ஆரணங் காக அறந்தலைப் பட்டோர்
அன்றப் பதியுள் அருந்தவ மாக்களும்
தன்தெறல் வாழ்க்கைச் சாவக மாக்களும்
இட்ட தானத் தெட்டியும் மனைவியும்
முட்டா இன்பத்து முடிவுல கெய்தினர்43

என்று கூறுவதுகொண்டு எட்டி சாயலன், அவன் மனைவியும் அவர் களுக்கு முன்னர்க் கூறப்பட்ட அறவோர், தவமுடையோர், உலக நோன்பிகள் ஆகியோரும் குறைவிலா இன்பத்தினையுடைய வீடு பேற்றினையடைந்தனர் என்பதை அறிய முடிகிறது. வீடுபேறு 'முட்டா இன்பம்' என்று கூறப்படுகிறது.

கனவும் ஊழும் :

இக்காப்பியத்தில் இயற்கையிறந்த நிகழ்ச்சிகளாகப் பல வருகின்றன; காப்பியச் சுவைக்காக இளங்கோவடிகள் இவற்றைக் கூறுகிறார் என்று மட்டும் சொல்லிவிட முடியாது; கனவின் பலன், நிமித்தம் (சகுனம்), புனித நீராடல் பற்றிய நம்பிக்கை, சாபமளித் தல், சாப விடுதலையருளுதல் ஆகியவை பற்றிப் பழந்தமிழரிடத்தில் நிலவிய நம்பிக்கையினையே ஆசிரியர் காட்டுகிறார் எனக் கொள்ள வேண்டும். காப்பியத்தில் கனாத்திறம் உரைத்த காதை, கண்ணகி கண்ட தீக்கனவினைக் கூறுகிறது. பின்னால் கோவலனுக்கு ஊழ்வினையால் நேரவிருக்கும் துன்பத்தைக் கண்ணகி கனவில் கண்டதாகவும், அதனைத் தோழியாகிய தேவந்தி யிடம் கூறியதாகவும் ஆசிரியர் காட்டுகின்றார்.44 அடைக்கலக் காதையில் மாடலன் கோவலனிடம் இவ்வாறு கண்ணகியுடன் நாட்டை விட்டு வரப் பழவினை காரணமாகும் என்று கூறியபோது, கோவலன் தான் கண்ட தீக்கனாவினை,

நனவுபோல நள்ளிருள் யாமத்துக்
கனவு கண்டேன் கடிதீங் குறுமென45

என மாடலனிடம் கூறி வருந்துகிறான். கோப்பெருந்தேவி பாண்டியன் ஆட்சிக்கு நேரும் துன்பம்குறித்துக் கண்ட தீக்கனாவை மன்னனிடம் கூறியதாக ஆசிரியர் காட்டுகிறார்.[45]-அ ஊழினால் பின்னர் வரப் போவதைக் குறிப்பாக அறிவிப்பதாகக் கனாவை ஆசிரியர் படைத்துள்ளார்.

நிமித்தமும் (சகுனம்) ஊழும் :

நன்னிமித்தம் (நல்ல சகுனம்), தீநிமித்தம் (தீய சகுனம்) என இரண்டாகக் கூறுவர். நிமித்தமும் பின்னர் நடக்கவிருப்பதை முன்னர் உணர்த்துவதாகக் கருதப்படுகிறது. இ ந் தி ர வி ழா நடைபெறும் வேளையில் கண்ணகிக்கு இடது கண்ணும் மாதவிக்கு வலது கண்ணும் துடித்தன என்பதை,

கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்
உண்ணிறை கரந்தகத் தொளித்துநீ ருகுத்தன
எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன[46]

எனக் கூறுகிறார் இளங்கோவடிகள். பெண்களுக்கு இடக்கண் துடிப்பது நன்னிமித்தம் என்றும், வலக்கண் துடிப்பது தீநிமித்தம் என்றும் கருதப்படுகிறது. பிரிந்த கணவனைக் கூடும் வாய்ப்பு கண்ணகிக்குக் கிட்டப் போவதை அவளதுஇடக்கண் துடிப்பினாலும் மாதவி கோவலனைப் பிரியப் போகிறாள் என்பதை அவளது வலக் கண் துடிப்பினாலும் ஆசிரியர் புலப்படுத்துகின்றார். கோவலன் சிலம்பினை எடுத்துக் கொண்டு விற்க மாதரி மனையிலிருந்து புறப் படும் போது, தன்னை எதிர்த்து ஆனேறு பாய வந்ததனைத் தீநிமித்தமாக உணரும் தகுதியின்றிச் சென்றான் என்பதனை,

இமிலே றெதிர்ந்த திழுக்கென அறியான்
தன்குலம் அறியுந் தகுதியன் றாதலின்[47]

என ஆசிரியர் குறிப்பிடுவதை அறிய முடிகிறது. ஆய்ச்சியர் குரவை யுள் குடத்துப்பால் உறையாமையும், ஆனேற்றின் கண்களில் நீர் உகுப்பதும், உறியில் வைத்த முதல் நாளைய வெண்ணெய் உருக வைத்தன உருகாமையும், ஆட்டுக் குட்டிகள் துள்ளி விளையா டாமையும், பசுக்கள் நின்று அழுவதும், அவற்றின் கழுத்தில் கட்டிய மணிகள் அற்று நிலத்தில் வீழ்வதும் தீங்குவரப் போகிறது என்பதை உணர்த்தும் நீநிமித்தங்களாகக் காட்டப்படுகின்றன.[48] இவ்வாறு இத்தீநிமித்தங்கள் ஊழ்வினையால் நடக்கவிருக்கும் தீமையினை முன்னர்க் குறிப்பாலுணர்த்துவனவாகக் காட்டப்படுகின்றன.

புனித நீராடலும் ஊழும் :

ஆறுகள், குளங்கள் ஆகியவற்றில் சிலவற்றைப் புனிதமாகக் கருதி, அப்பொய்கைகளில் நீராடுவார்க்கு வினையினால் வரும்

பயன் இல்லாது போகும் என்னும் நம்பிக்கை இந்நாட்டில் பன்னெடுங் காலமாக உண்டென்பதை இக்காப்பியம் காட்டுகிறது. கண்ணகியைப் பிரிந்து மாதவியிடம் சென்ற கோவலனை மீண்டும் அடைவதற்கு அவள் தோழியாகிய தேவந்தி சோம குண்டம், சூரிய குண்டம் ஆகிய துறைகளில் மூழ்கிக் காமவேள் கோட்டத்தினை வணங்க வேண்டுமென்று கூறுகிறாள். ஆனால் கண்ணகி 'அது பெருமை தருவதன்று' என மறுத்துவிடுகிறாள்.49 கவுந்தியடிகள் கோவலன், கண்ணகி மூவருக்கும் மதுரைக்குச் செல்லும் மூவழி களைக் கூறும் மாங்காட்டு மறையோன், புண்ணிய சரவணம், பவகாரணி, இட்ட சித்தி ஆகிய பொய்கைகள் பற்றியும் அவற்றில் நீராடினார் பெறும் பயனைப் பற்றியும் கூறக்கேட்ட கவுந்தியடிகள், அவனது கூற்றினை மறுத்து,

இறந்த பிறப்பின் எய்திய வெல்லாம்
பிறந்த பிறப்பிற் காணா யோநீ
வாய்மையின் வழாது மன்னுயி ரோம்புநர்க்கு
யாவது முண்டோ எய்தா அரும்பொருள்50

என்று கூறுகிறார். முற்பிறப்பிலே செய்த ஊழின் பயன் இப் பிறப்பிலே நம்மையடையும் என்பதைக் கவுந்தியடிகள் கூறி, உண்மை நெறியின் பிழையாது பிற உயிர்களைப் பேணுவார்க்கு அடையக் கூடாத அரிய பொருள் சிறிதேனும் உண்டோ? என்னும் சமண சமயத்தின் ஊழ்வினைக் கொள்கையினை வலியுறுத்திப் பொய்கைகளில் படிந்து நீராடிப் பாவ நீக்கம் செய்ய வேண்டியது இல்லை என்பதை விளக்குகிறார்.

சாபமும் ஊழும் :

நிறைமொழி மாந்தர் சொல்லும் சொற்கள் மறைமொழியாய்ப் பயனளிக்க வல்லன என்பது நூல்களின் முடிவு.51 பெரியோர்கள் சினந்து சொல்லும் சொற்கள் சாபமாகப் பற்றிக் கொண்டு உரிய பயனைத் தருகின்றன. சிலப்பதிகாரத்தில் சிலவிடங்களில் சாபம் பற்றிய செய்திகள் வருகின்றன. அரங்கேற்றுக் காதையில் மாதவி யைப் பற்றிக் கூறும் ஆசிரியர் தேவருலகில் அகத்தியரிடம் சாபம் பெற்று மண்ணில் தோன்றிய உருப்பசியின் (ஊர்வசி) மரபில் வந்தவள் என்று கூறுகிறார்.51-அ விண்ணுலகில் உருப்பசி பெற்ற சாப வரலாற்றைக் கடலாடு காதையிலும் விரிவாகக் குறிப்பிடு கிறார்.52 கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் மதுரை நோக்கிச் செல்லும் வழியில் திருவரங்கச் சோலையில் சாரணரைக் கண்டு அவர்தம் அறிவுரை கேட்டுக் கவுந்தியடிகள் அருகனை வாழ்த்தியபின், ஓடத்தின் வழிக் காவிரியின் தென்கரைப் பொழிலை அடைகின்றனர். அப்பொழுது அங்கு வந்த பரத்தையும் தூர்த்தனும்

கவுந்தியடிகளை நோக்கிக் காமனும் தேவியும் போல உடன்வந்த இவர்கள் யாரென்று வினவ, அடிகள், 'இவர்கள் காமனும் தேவியும் அல்லர் என் மக்கள்' என்று கூறுகிறார். பரத்தையும் தூர்த்தனும் உடன்வயிற்றோர்கள் கணவன் மனைவியாகக் கூடிவாழ்வதுண்டோ எனக் கேட்கின்றனர். இத்தீமொழியைக் கேட்ட கவுந்தியடிகள் செவிகளைப் பொத்திக் கொண்டு

எள்ளுநர் போலுமிவர் என்பூங் கோதையை
முள்ளுடைக் காட்டின் முதுநரி யாகுக[53]

எனச் சாபமிடுகிறார். அவர்கள் இருவரும் ஊளையிட்டுக் காட்டில் ஓடுவதைக் கண்ட கண்ணகியும் கோவலனும் நடுங்கி, நெறியின் நீங்கியோர் தீயவற்றைக் கூறினும் அறியாமையால் கூறியது எனப் பெரியோர் உணர்தல் வேண்டும்; 'செய்தவத்தீர்! நும் திருமுன் பிழை செய்தோர்க்கு உய்திக் காலத்தை மொழிந்தருளுவீர்' என்று வேண்டிய கண்ணகி கோவலனுக்கு விடையாக, 'உறையூர்க் காட்டில் திரிந்து பன்னிரண்டு திங்கள் துன்பத்தினால் வருந்திய பின்னர் முன்னை வடிவத்தினை இவர்கள் பெறுவார்களாக' என்று கவுந்தியடிகள் சாப விடுதலையும் வழங்குகிறார்.[54] பரத்தையும் தூர்த்தனும் சொல்லிய தீச்சொல் பயனே ஊழ்வினையாகி அவர் களைத் துன்புறுத்துமாயினும், பெரியோராகிய கவுந்தியடிகள் உள்ளம் சினந்து கூறியசொல் சாபமாகப் பற்றியதையும், அவ்வாறு சாபமாக விடுக்கப்பட்ட சொற்களைக் கவுந்தியடிகள் அவரது தவத்தின் ஆற்றலால் ஊழ்வினையாக மாறிவிடாதபடித் திரும்பப் பெற்றுச் சாபவிடையும் அருளியதாக அறிய முடிகிறது. இவ்வாறு ஊழோடு உறவுடைய செய்திகள் பல சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

ஆசிரியர் கூற்றாகவும் கதைமாந்தர் கூற்றாகவும் உணர்த்தப்படும் ஊழ்வினையின் ஆற்றல் :

இளங்கோவடிகள் தாம் வலியுறுத்த எண்ணிய ஊழ்க்கோட் பாட்டினைத் தற்கூற்றாகவும், காப்பியக் கதை மாந்தர் கூற்றாகவும் குறிப்பிட்டுள்ளார். கதைமாந்தர் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் ஊழ் எவ்வாறு இடம்பெற்று இயக்குகிறது என்பதையும் விளக்குகிறார். கானல் வரியில் ஊழின் தோற்றம் பற்றிக் கூறுகின்ற இளங்கோ-வடிகளே, யாழிசைமேல் வைத்து ஊழ்வினை வந்துருத்துவதாக தற் கூற்றில் கூறியுள்ளார்.[54-அ] கோவலன் கண்ணகியை மதுரைக்குச் செல்ல அழைத்துப் புறப்படுமிடத்தில், 'வினையின் கட்டளையினை, ஏவலையேற்றுச் செல்கின்ற கோவலன்'[55] என்று கூறிய ஆசிரியர் ஊழ்வினை கோவலன் கண்ணகி வாழ்க்கையினை செலுத்திவருவது

இயக்குவது என்பதனை 'ஊழ்வினை கடைஇ உள்ளந் துரப்ப'56 என்றும் அடியினால் விளக்குகிறார். பொற்கொல்லன் சொற்கேட்டு, ஆராயாமல் கோவலனைக் கொலை செய்ய ஆணையிடும் வேந்தன் செயலுக்கு,

வினைவிளை கால மாதலின் யாவதும்
சினையலர் வேம்பன் தேரா னாகி57

வினையின் விளைவாகிய ஊழின் பயனே காரணமென இளங்கோ காட்டுகின்றார். மேலும் அரசனுடைய ஆணையினைப் பெற்ற பொற்கொல்லன் தான் எண்ணியதை முடித்தற்காகக் கோவலனை அடைந்தான் என்பதைக் குறிப்பிடும் ஆசிரியர், கோவலனது பண்டைய ஊழ்வினை முதிர்ச்சியடைந்து வலைபோல அவனை அகப்படுத்தியிருந்தது என்பதை, 'தீவினை முதிர்வலைச் சென்று பட்டிருந்த கோவலன்'58 என்னும்தொடரால் புலப்படுத்துகிறார். கல்லாக்களிமகனால் கோவலன் வெட்டப்பட்டு வீழ்வதைக் கோவலன் பண்டை ஊழ்வினை உருத்துவந்து பயனளித்ததால் பாண்டியன் செங்கோல் வளையும்படியாக வீழ்ந்தனன்என ஆசிரியர் தம் கூற்றாக ஊழ்வினையின் ஆற்றலைக் குறிப்பிடுகிறார்.58-அ

கொலைக்களக் காதையில் கோவலன் வாயிலாகவும்,59 ஊர்சூழ்வரி, வழக்குரை காதை, வஞ்சினமாலை ஆகிய காதைகளில் கண்ணகி வாயிலாகவும்60 ஊழின் வலியுணர்த்தப்படுகிறது. நாடுகாண் காதையில், கவுந்தியடிகள், கோவலன், கண்ணகி மூவருக்கும் ஊழ்வினையின் வலிமையினைச் சாரணர் கூறுவதாக ஆசிரியர் காட்டுகின்றார்.61 கவுந்தியடிகள் காடுகாண் காதையில் புண்ணியத் துறைகளில் மூழ்கச் சொல்லிய மாங்காட்டு மறையோனிடத்தில் ஊழின் இயல்பைக் கூறுகிறார்.62 ஊர்காண் காதையில் மதுரைவணிகர்க்குத் தன்னிலையுணர்த்தி வரும்வரை கண்ணகிக்குப் பாதுகாப்பாக இருக்கும்படி வருந்தி வேண்டிய கோவலனுக்குக் கவுந்தியடிகள் ஆறுதல் கூறுகிறார். அறிவுடைய சான்றோர் மறத்துறையின் நீங்கி நல்லறம் செய்க,வல்வினை ஒழியாது ஊட்டும் என்று வாய்ப்பறையால் இடைவிடாது எடுத்துக் கூறினும், அறியாமையுடையோர் கேட்பதில்லை; தீவினைப் பயனை ஊட்டும் போது உரியவர்கள் தம் அறியாமை காரணமாக மயக்கமடைகின்றனர். வினையின் பயனை இயல்பாகத் துய்க்க வேண்டும் என்பது சான்றோர் வலியுறுத்தும் கொள்கை.

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்63

என்னும் திருக்குறள் இன்பத்தை விரும்பாதவனாய்த் துன்பம்

இயற்கையானது என்று தெளிந்திருப்பவன் துன்பம் வந்தபோது துன்பமுறுவது இல்லையென்று விளக்குகிறது. ஆதலின் அறிவுடையோர் வினைப்பயனை அனுபவிக்குங்கால் வருத்தமுறுவது இல்லை; காமம் காரணமாக துன்பத்தினை உழந்தோர் பலராவர் என்பது தொன்றுதொட்டு வரும் உண்மையாகும் என்று கவுந்தியடிகள் கூறுகிறார்;

தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துய ருழந்தோன்
வேத முதல்வற் பயந்தோன் என்பது
நீயறிந் திலையோ நெடுமொழி யன்றோ?[64]

என இராமனது வரலாற்றை எடுத்துக்காட்டும் கவுந்தியடிகள்,

அடவிக் கானகத் தாயிழை தன்னை
இடையிருள் யாமத் திட்டு நீக்கியது
வல்வினை யன்றோ[65]

என நளனது வரலாற்றையும் கூறிக் காதலியைப் பிரியாத வாழ்க்கையையுடையவனாகக் கோவலன் இருப்பது ஆறுதலுக்குரியது என்று கூறுகிறார். இவ்விடத்தில் இராமன், நளன் போல எத்துணை உயர்ந்தோராயினும் ஊழ்வினையினை வெல்ல முடியாது என்னும் உண்மையினைக் கவுந்தியடிகள் வாயிலாக ஆசிரியர் வலியுறுத்தி உள்ளார்.

காப்பியத்தில் ஊழ்வினையின் வலிமையை வற்புறுத்தும் மாந்தருள் மாடலன் குறிப்பிடத் தக்கவன். அடைக்கலக் காதையில் கோவலனது இப்பிறப்பின் நற்செயல்களையெல்லாம் எடுத்துச் சொல்லி, அவன் கற்பின் கொழுந்தாகிய கண்ணகியுடன் ஊரை விட்டு வந்ததற்குப் பழவினைப் பயனே காரணம் என்று மாடலன் கூறுகிறான்.[66] இதனால் நல்வினையின் பயனையும் தீவினையின் பயனையும் தனித்தனியே துய்க்க வேண்டும் என்பதும் ஒன்றற்கொன்று மாற்றன்று என்பதும் விளங்கும். நீர்ப்படைக் காதையுள் சேரன் செங்குட்டுவனை வணங்கிய மாடலன்,

வாழ்க எங்கோ மாதவி மடந்தை
கானற் பாணி கனக விசயர்தம்
முடித்தலை நெரித்தது முதுநீர் ஞாலம்
அடிப்படுத் தாண்ட அரசே வாழ்க[67]

என வாழ்த்துகிறான். பின்னர்க் கோவலன் கண்ணகி வரலாற்றையும், அவர்தம் பெற்றோர் வரலாற்றையும், பாண்டியர், சோழர் நாட்டுச் செய்திகளையும் எடுத்துக் கூறுமிடத்தில், கோவலன்,

மாதவியின் வாடற் காலத்தில் ஊழ்வினை உருத்தெழப் பிரிந்து கண்ணகியுடன் மதுரை வந்தான் என்றும், ஊழ்வினைப் பயனால் கொலைப்பட்டான் என்றும் மாடலன் கூறுகின்றான். நடுகற் காதையில் செங்குட்டுவனுக்கு நிலையாமையையுணர்த்தி வேள்வி செய்யும்படி வற்புறுத்துமிடத்தில், நாடக மாந்தர் ஏற்கும் வேடத்திற்கு ஏற்ப மாறுவதுபோல அரிய உயிர் ஓரிடத்தும் நிலைபெறாது தான் செய்த நல்வினையின் வழியில்செல்லும் என்னும் கருத்தினை,

ஆடுங் கூத்தர்போல் ஆருயிர் ஒருவழிக்
கூடிய கோலத் தொருங்குநின் றியலாது
செய்வினை வலித்தாய் உயிர்செலு மென்பது
பொய்யில் காட்சியோர் பொருளுரை யாதலின்[68]

என்னும் வரிகளால் மாடலன் கூறுவது கருதத்தக்கது.

கட்டுரை காதையில் மதுராபதித் தெய்வம் தோன்றிக் கண்ணகியிடம் கோவலன் கொலை, பாண்டியன் இறப்பு ஆகியவற்றுக்கு ஊழ்வினையே காரணம் என்றும், மதுரை நகர் எரிவதற்கு, முன்னரே ஒரு சாபம் உண்டென்றும் கூறுகிறது. மேலும் கோவலன் கண்ணகி முற்பிறப்பு வரலாறு உரைத்து,

உம்மை வினைவந் துருத்த காலைச்
செம்மையி லோர்க்குச் செய்தவ முதவாது[69]

என்னும் வரிகளால், ஊழ்வினையின் ஆற்றலை வலியுறுத்துகிறது. ஒருவர் இம்மையில் நல்வினை செய்திருப்பினும் அவர்தம் ஊழ்வினை வந்து பயனளிக்கும் வேளையில் உறுதியுடன்கூடிய செம்மையுள்ளம் இல்லாதவர்க்குச் செய்த தவமும் (நல்வினையும்) பயன்தராது என்று கூறப்படுகிறது. ஒருவன்செய்த நல்வினை தீவினைகள் தம் பயனை நுகர்விக்குங்கால், தம்முள் ஒன்று நிற்கும்போது மற்றொன்று நில்லாது; தனித்தனியே நின்று நுகர்விக்கும் என்பதும் நல்வினையால் தீவினைப் பயனை ஒழிக்க இயலாது என்பதும் அறியத் தக்கனவாம்.

கோவலன் கண்ணகி வரலாற்றையும் பாண்டியன் இறப்பையும் தண்டமிழாசான் சாத்தனார் சொல்லக்கேட்ட சேரன் செங்குட்டுவன் தம்மைப் போன்ற மன்னனாகிய பாண்டியன் மறைவிற்கு வருந்தி, எம்மை ஒத்த அரசர்க்குப் பாண்டியன் செங்கோல் வழுவியதால் உண்டாகிய பழிச்சொல் சென்றடைவதற்குமுன் உயிரை விட்டமையின், முன்னைத் தீவினை உருத்துவந்து வளைத்த செங்கோலைத் தம் உயிரைக் கொடுத்து நிமிர்த்தினான் எனப் பாண்டியனைப் பாராட்டுமிடத்தில்,

வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது[70]

என ஆசிரியர் காட்டியுள்ளார். இவ்விடத்தில் ஊழின் ஆற்றலை

வெல்ல்முடியும் என்பது போல காட்டியிருப்பினும் ஊழ்வினை உரிய பயனைத் தந்தே தீரும் என்பதைத்தான் பாண்டியன் முறைதவறிய செயலால் செங்கோல் வளைந்தது எனக் காட்டப்படுகிறது. அதற்கு மேல் வளைந்த செங்கோலைத் தம் உயிரைக் கொடுத்துத் தான் நிமிர்த்த முடிகிறதேயொழிய உயிருடன் இருக்கும்காலத்தில் ஊழின் பயனை விலக்க முடியவில்லையென்பதால் ஊழ்வினையின் வலிமை இவ்விடத்தும் வற்புறுத்தப்படுகிறது என்றே கொள்ள வேண்டி யுள்ளது. இவ்வாறு ஆசிரியர், காப்பியத் தொடர்ச்சி கெடாமல் இருக்கவும், உலகோர்க்கு உணர்த்தும் வகையிலும் வேண்டிய இடங்களிலெல்லாம் தற்கூற்றாகவும், கதைமாந்தர் வாயிலாகவும் ஊழ்வினையின் ஆற்றலைப் புலப்படுத்துகிறார்.

சிலம்பும் சமணக் கோட்பாடும் :

சிலப்பதிகாரக் காப்பியத்தில் பல சமயத்தவரின் கடவுள், வழிபாடு, கோட்பாடுகள் ஆகியவை பேசப்படுகின்றன. ஞாயிறு, திங்கள், மழை முதலிய இயற்கை வழிபாடும், சிவன், திருமால், கொற்றவை, முருகன், இந்திரன் முதலான கடவுள் வழிபாடும், இவ்வழிபாட்டினடிப்படையில் தோன்றிய சமயக் கோட்பாடுகளும் கூறப்படுகின்றன. மேலும் சமணம், ஆசீவகம், பௌத்தம் ஆகிய சமயக் கொள்கைகளையும் கூறும் இளங்கோவடிகள் சமயப் பொறை யுடையவராகத் திகழ்ந்து எல்லாச் சமயத்தவருக்கும் இடந்தரு கிறார். ஆயினும் அடிகள் சார்ந்த சமயம் சமணமாகவே இருக்க வேண்டுமென்பதனை, அவர் காப்பியம் முழுமையும் சமணக் கொள்கைகளை வலியுறுத்துவது கொண்டு தெளியலாம். காப் பியத்தில் கவுந்தியடிகளையும் சாரணர்களையும் படைத்தது சமண சமய உண்மைகளை விளக்குவதற்காகவே என்பது அறிஞர் பலரது கருத்தாகும்.[71]

கனாத்திறமுரைத்த காதையில் கண்ணகி வைதீக சமயத் தேவந்தியிடம் பொய்கையில் நீராடி பாவ நீக்கம் செய்வதை மறுப்பதும், காடுகாண் காதையுள் மாங்காட்டு மறையவன், கவுந்தி அடிகள், கோவலன், கண்ணகி ஆகிய மூவரிடமும் மதுரைக்குச் செல்லும் வழியுரைத்துப் புண்ணிய சரவணம், பவகாரணி, இட்ட சித்தி ஆகிய பொய்கைகளில் மூழ்கச் சொல்லும்போது, கவுந்தி யடிகள் சமணரது வினைக் கொள்கையை எடுத்துக்காட்டி மறுப்பதும் சமணக் கொள்கையை வலியுறுத்தவேயாகும். சாரணர் வருகை இல்லாவிடினும் காப்பியத் தொடர்பு கெடாது; இளங்கோவடிகள் தம் சமய உண்மையை வலியுறுத்தவே சாரணர் தோற்றம் கூறி அவர்கள் வாயிலாகச் சமண சமயத்தின் சிறப்புக் கொள்கையாகிய வினைக் கொள்கையினை வலியுறுத்துகிறார். மேலும் அவர்கள் வாயிலாகவே தம் சமயக் கடவுளாகிய அருகதேவனின் பல நாமங் களை வாழ்த்தி அவனை அடைந்தாலல்லது வீடுபேற்றினையடைய

வழியில்லையென்று வற்புறுத்துகிறார். கோவலன் கவுந்தியடிகளிடம் தன் செயல் நினைந்து வருந்தும்போது அடிகள்,

> ஒய்யா வினைப்பயன் உண்ணுங் காலை
> கையாறு கொள்ளார் கற்றறி மாக்கள்72

என்று சமண சமய உண்மைகளையும் துறவின் மேன்மையையும் கூறி அவனுக்கு ஆறுதல் தருகிறார்.

இல்லறத்தார் கடைப்பிடித்தற்குரிய நெறிகளை அனுவிரதம் என்றும், துறவறத்தார் பின்பற்றற்குரியவற்றை மகாவிரதம் என்றும் சமண நூல்களில் வரையறுக்கப் பட்டுள்ளன எனவும், சமணச் சான்றோர் கூறுவனவற்றைக் கேட்டு நடப்பாராதலின் சிராவகர் என்று இல்லறத்தார்க்கு வழங்கியசொல் பாகதச் சிதைவாகத் தமிழில் சாவகர் என வழங்கும் என்றும், சாவக நோன்பிகள், உலக நோன்பிகள் என்பது இல்லறச் சமணரையும், பட்டினி நோன்பிகள் என்பது மகாவிரதமுடைய சமணத் துறவிகளையும் குறிப்பனவாகும் என்று சோ. ந. கந்தசாமி குறிப்பிடுகின்றார்.73 மாதரி, கோவலன் கண்ணகியை ஆயர் மகளிர்க்கு அறிமுகப் படுத்தும்போது, 'சாவக நோன்பிகள் அடிகள் ஆதலின்' எனக் கூறுவதன் வாயிலாகக் காப்பியத் தலைவனும் தலைவியும் இல்லறச் சமணர் என்பதனை ஆசிரியர் உணர்த்துகின்றார். மேலும் கொல்லாமை, நிலையாமை, வினைக் கொள்கை ஆகிய சமண சமயத்தின் சிறப்புக் கொள்கைகள் காப்பியத்தில் பலவிடங்களில் வற்புறுத்தப்படுகின்றன. வரந்தரு காதையில் இளங்கோ அறிவுரை கூறும் முகமாக,

> தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
> பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
> ....
> இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
> உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது
> செல்லும் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
> மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென்74

எனக் கூறும் கொள்கைகள் பலவும் சமண சமயத்தின் செல்வாக்கினை உணர்த்துவனவேயாகும். இறுதியில் மூன்று நிலையாமைகளைக் கூறி, ஊழினால் நமக்கு வரையறுக்கப்பட்ட வாழ்நாள் கழியாது, நம்மையடைய வேண்டிய துன்பமும் அடையாமல் நீங்காது ஆதலின், நல்வினையைச் செய்து மறுமைப் பேற்றிற்கு உறுதுணை தேடுங்கள்என்று சமணக் கொள்கையாகிய ஊழ்வினைக் கொள்கையை முடிவாகக் கூறி மக்களை வாழ்த்தி இளங்கோவடிகள் காப்பியத்தினை முடிக்கிறார்.

சிலம்பில் ஊழும் அறிஞர் கருத்தும் :

சிலப்பதிகாரத்தில் ஊழ்வினை என்பது முற்பிறப்பில் செய்த பழவினை என்னும் பொருளிலேயே ஆட்சிபெற்றுள்ளது. முன்செய்த வினைப் பயனை இப்பிறப்பில் செய்யும் நல்வினைகளால் மாற்றிக் கொள்ள முடியாது என்பதையே கோவலன் வரலாறு காட்டுகிறது. மாடலன் வாயிலாகக் கோவலன் இம்மையில் செய்த செயல்களை யெல்லாம் கூறிப் புகழும் அடிகள் பழவினைப் பயன் உருத்துவந்து பயனை ஊட்டும் வேளையில் அதனைத் துய்த்தே தீரவேண்டும் என்பதையே காட்டுகிறார் என்பதனை,

> இவ்வளவு தாண்டி பழைய நிகழ்வுகளைக் கோவலன் மடிவுக்கு முன் புகழச் செய்யும் ஆசிரியர் நோக்கம் கோவலன் கொலைப்பட்டது பழவினையின் பயன் என்றும், எடுத்த பிறப்பில் எவ்வளவு நல்வினைகள் செய் திருந்தாலும் ஈடுபடுத்திக் கொள்ள முடியாது என்றும், ஊழ்வினை உருத்துவந்தூட்டியே தீரும் என்றும் நிறுவுதல் அறிக[75]

எனக் கூறும் வ. சுப. மாணிக்கனார் கருத்து அறியத்தக்கது.

முற்பிறப்பின் வினைப்பயனை மறுபிறப்பில் நுகர்ந்தாக வேண்டும் என்பது இந்திய நாட்டுச் சமயங்கள் அனைத்தும் வற்புறுத்தும் பொதுக் கொள்கையாகும். ஆயினும் வினைக் கொள் கையை வற்புறுத்துவதில் சமணரே சிறப்பாக ஈடுபட்டனராதலின் சமண சமயத்தைச் சார்ந்தவராகிய இளங்கோவடிகளும் தம் காப்பியத்தில் மாதவியிடம் கோவலன் மனம் மாறுபட்டுப் பிரிவதற்கு காரணமாகக் காட்டப்படும் ஊழ்வினை, கோவலன் கொலை, பாண்டியன் வீழ்ச்சி வரை ஒவ்வொன்றாகச் செலுத்தும் (இயக்கும்) ஆற்றலாகக் காட்டப்படுகிறது. ஊழ்வினையைக் காரணமாகக் காட்டாவிடினும் காப்பியத் தொடர்பு கெடாமல் கொண்டுசெல்ல முடியும். ஆயினும் இளங்கோவடிகள் தம் ஊழ்வினைக் கோட் பாட்டினை வற்புறுத்தவேஅவ்வாறு ஊழ்வினையை எல்லா நிகழ்ச்சி களுக்கும் காரணமாகக் காட்டுகிறார் என்பது அறிஞர் கருத்தாகும்.

> வினைக் கொள்கைக்கு அரண்செய்யும் வகையில் முற் பிறப்புக் கதையை அமைத்துக் கொள்வதிலும் பௌத்தரைப் போலவே சமணரும் மிகுந்த ஆர்வம் காட்டினர். கோவலன் கொலையுண்டதற்குக் காரணம் காட்டும் முறையில், அவனது முற்பிறப்புக் கதையைக் கண்ணகியிடம் மொழிகிறது மதுராபதித் தெய்வம். சமுதாயச் சூழலும் பாத்திரங்களின் பண்பு நலன்களுமே கதை நிகழ்ச்சியை உருவாக்குவதாகச் சித்திரிக்கிறார் கலைஞர் இளங்கோ. ஆனால் கோயிலுக்குக் கட்டிய

> தோரணங்களே போல், வினையைப் பற்றிய குறிப்புக்களை ஆங்காங்கே பெய்து செல்கிறார் ஜைனர் இளங்கோ, எனவே, அந்தக் குறிப்புக்கள் கதையோடு ஒட்டாது நிற்கின்றன.[76]

என்னும் எஸ். இராமகிருஷ்ணன் கருத்து இளங்கோவடிகளின் குறிக்கோளை வற்புறுத்துவதாக அமைகிறது.

சமணர்க்கு முழுமுதற் கடவுள் உடன்பாடில்லையாதலின், ஊழ்வினை தானே உருவெடுத்துக் கருத்தாவைப் பயன்நுகரச் செய்யும் என்பது இளங்கோவடிகள் கொள்கை என்பதைச் சாரணர் கூறும் 'ஒழிகென ஒழியாது ஊட்டும் வல்வினை' என்னும் பகுதியைக் கொண்டு நிறுவி,

> ஒருவர் புரியும் செயல்களின் விளைவு அவர்க்கு வந்து சேருங்கால் யாவராலும் நீக்கமுடியாது என்பதும், எதை விதைக்கிறோமோ அதுதான் விளையும் என்பதும் அழகாகக் கூறப்பட்டுள்ளன. 'வல்வினை' என்றதால் வினையின் வலிமையும், 'ஒழிக்கவும் ஒண்ணாது' என்ற தால் அதன் பிடியினின்றும் தப்ப முடியாது என்பதும் சமணத்தின் கொள்கையாதல் காணலாம்.[77]

என்று சோ. ந. கந்தசாமி கூறும் கருத்துச் சிலப்பதிகாரத்தில் ஊழ் வினையின் பேராற்றல் வலியுறுத்தப் படுவதற்குச் சான்றாகிறது.

இளங்கோவடிகள் தமது சமயத்தை உலகத்தவர் அறிந்து கொள்ளவே காவியத்தில் ஜைன சமயக் கொள்கைப்படி இல்லறம், துறவறம் ஆகியஇரண்டு பேரறங்களையும், யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை ஆகியவைகளோடு, மக்கள் கதித் துன்பம், விலங்கு கதித் துன்பம், நரககதித் துன்பம், தேவ கதித் துன்பம் ஆகிய நாற்கதித் துன்பங்களையும், தானம், தவம், சீலம், அறிவர் சிறப்பு ஆகிய நான்கின் பயன்களையும் விளக்கியுள்ளார். மேலும், ஊழ்வினையின் செயலைப் பற்றிப் பேசுங்காலை,

> வினையை செலுத்தும் கர்த்தா ஒருவன் உண்டெனும் சைவ சமயக் கோட்பாட்டிற்கு மாறாக வினையானது தற்செய்த கிழவனை தானே வந்தடையும் இயல்பினை யுடையதென்னும் ஜைன சமய தத்துவப்படி 'ஊழ்வினை யுருத்து வந்தூட்டும்' என்று பதிகத்திலும், 'யாழிசை மேல் வைத்துத் தனூழ்வினை வந்துருத்ததாகலின்' என்று கானல்வரியில் மாதவியைக் கோவலன் பிரிந்த நிலையினையும் குறித்துப் பேசுகின்றார்.[78]

என்று டி. எஸ். ஸ்ரீபால் கூறும் கருத்து இளங்கோவின் ஊழ்க் கோட்பாட்டினை விளக்குகிறது.

சிலப்பதிகாரக் காப்பியக் கட்டமைப்புக்குப் பெரிதும் உதவுவதும், காப்பிய நோக்கம் மட்டுமன்றிக் கதைத் திருப்பத்திற்கு உரிய நிகழ்ச்சிகளுக்கும் ஊழ்வினையே முதற்காரணமாகின்றது என்றும், ஊழின் ஆணையின்றி எதுவும் நடப்பதில்லையென்றும் ஆ. செபரத்தினம்,79 ச. வே சுப்பிரமணியன் 80 ஆகியோர் குறிப்பிடுகின்றனர்.

சிலப்பதிகாரத்தில் ஊழ் தகுந்த ஓர் இடத்தைப் பெற்றுள்ளது உண்மைதான் என்றும், பதிகத்தில் கூறியுள்ளபடி ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதைக் காட்டுவதற்காக இக்காப்பியம் தோன்றிற்று என்று கூறுதல் காப்பிய இலக்கணம் அறியாதார் கூற்றேயாகும் என்று கூறும் அ. ச. ஞானசம்பந்தம் இதற்குரிய காரணமாகப் பதிகம் இளங்கோவினால் செய்யப்பட்டதில்லை என்றும் பிற்காலத்தில் வந்தோர் செய்தது என்றும் வலியுறுத்துகிறார்.81 ஆயினும் இளங்கோவின் ஊழ்க் கோட்பாட்டினை ஏற்றுக்கொண்டு,

> விதியின் வலிமையைத் (inexarable fate) தடுத்து நிறுத்தல் சாதாரண மக்கட்கு இயலாத காரியம். எந்த வினாடியில் தொடங்குகிறதோ அதிலிருந்து அக்காரியம் முடிகின்றவரை விதியினால் உந்தப் பெறுபவர்கள் செயல்கட்கு அவர்கள் பொறுப்பாவதில்லை. மனைவி சிலம்பைக் காட்டியவுடன் அதையே முதலாகக் கொண்டு மதுரை சென்று பொருளீட்ட வேண்டும் என்ற எண்ணத்தை அவனுக்கு உண்டாக்கியதே விதிதான்82

என்று விளக்கமளிக்கும் இவர் இளங்கோவடிகள் சிலம்பில் ஊழ் வினையைக் குறிப்பிடும் இடங்களை எடுத்துக்காட்டி முடிவாக,

> அர்த்தமற்ற சாதாரணச் செயல்கட்கும் அறிவினால் ஆராய்ந்து பார்த்துக் காரண காரிய விளக்கம் தரக்கூடிய நிகழ்ச்சிகட்கும் இளங்கோ ஊழைக் காரணம் காட்ட வில்லை. மனித அறிவின் எல்லையில் நின்று ஆராய்ந்து பார்த்தாலும் காரண காரியத் தொடர்போ, விளக்கமோ தர முடியாத நிகழ்ச்சிகளைக் கூறும் பொழுதுதான் விதி அழைக்கப்படுகிறது, கணித நூலார் காட்டும் Law of Probability-க்கும் அப்பாற்பட்டதையே விதி என அடிகள் குறிக்கின்றார் என்பதை அறிய முடிகிறது. சிலம்பில் ஊழ் பலகாலம் பலகாலும் சிந்தித்துத் தெளிவு பெற வேண்டிய ஒரு பகுதியாகும்.83

என்று குறிப்பிடுவது கருதத்தக்கது.

> நமது சிலப்பதிகாரக் காப்பியம், ஊழினைச் சிறப்பாகக் கொண்ட பண்டைக் கிரேக்க நாட்டு அவல நாடகங் களுக்கும் ஆளுமைகளைச் சிறப்பாகக் கொண்ட இக்கால அவல நாடகங்களுக்கும் இடைப்பட்ட நாடகக் காப்பியம்84

என்று குறிப்பிடும் மொ. அ. துரையரங்கசாமி எல்லாம் ஊழ் காரணமாகவே விளையும் என்று கூறினால் உயிராற்றலுக்கு இடமில்லை என்பதைக் கூறிச் சிலம்பில் முயற்சிக்கு இடமுண்டு என வலியுறுத்துகிறார். சமூக அழிவிற்கு ஒப்பாரி வைக்கும் அரற்றொலி மிகச் செய்வதாக ஊழ் மிகைப்படுத்தப்படுகிறது என்றும் தலைமுறை தலைமுறையாகச் சமூகம் ஆற்றி வந்த செயல்களின் விளைவு, படிப் படியாக வளர்ந்து முதிர்ந்த முதிர்வே ஊழாக உருவெடுத்தலால் அதற்குரிய தனிச் சிறப்பும் சமூகச் செயலின் பயனேயாம் என்றும் ஊழ் பற்றி விளக்குகிறார். மேலும்,

> 'ஊழிற்கு முன்னால் நம்மால் ஆவதொரு செயலில்லை' என்பது போன்ற செய்தி இக்காப்பியத்தில் இல்லாமல் இல்லை. ஆனால், இதுவே முடிந்த முடிபாகக் கொண்டு விடுவோமானால், மணற் பொற்றையை மலையழுத்தி விடுவது போன்று, அது நம்மை அழுத்தி, ஆற்றவும் அஞ்சத் தக்கதாக நிலைபெற்று விடும். அப்போது ஆக்கக் கேடுகளின் குறிப்பிற்கு இடமேஇல்லை.கண்ணகியால் ஏற்பட்ட சமூக மறுமலர்ச்சி ஒன்றே, மக்கள் முயற்சிக்கு வெற்றியுண்டு என்பதை உறுதியாக்கி, நமக்கு ஆறுதலளிக்கும் ஊற்றிடமாகத் திகழ்கின்றது[85]

என்னும் இவர் சிலப்பதிகாரம் ஊழ்வினையின் ஆற்றலை மட்டும் வலியுறுத்தி, மனித முயற்சியைத் தாழ்வுபடுத்தும் காப்பியம் அன்று என விளக்குகிறார்.

கோவலன் கொலைப்படுவதற்கும் கண்ணகி கடுந்துயர் உற்றதற்கும் காரணம் நீலி இட்ட வழுவில் சாபம் என்று, ஊழின் வலியை எடுத்துக்காட்டும் ஆசிரியர் தம் வாழ்வில் ஊழ்வினையை எதிர்த்து வெற்றி கொள்வதாகக் கே. பி. சங்கர்லால் கூறுகிறார். வரந்தரு காதையில் இளங்கோவடிகளின் வரலாற்றைப் பத்தினிக் கோட்டத்தில் விண்ணவர் மகளாகிய கண்ணகி தேவந்தி மூலம் உரைத்தாள் என்று அடிகளே கூறுமிடத்தில் 'அரசி வீற்றிருக்கும் திருப்பொறி உண்டென்று,கணியன் கூறிய சொல்லைப் பொய்யாக்க வேண்டித்தாம்;துறவறம் மேற்கொண்டு ஊழை வெற்றி கொள்கிறார் என்பது கே. பி சங்கர்லால் கருத்தாகும் 86

இவ்வாறு சிலப்பதிகாரம் ஊழ்க்கோட்பாட்டினை வலியுறுத்துவதையே முதன்மை நோக்கமாகக் கொண்டதென்றும், மற்றைய குறிக்கோளைப் போன்றேஊழும் வலியுறுத்தப்பட்டுள்ளதாகையால் ஊழ் முதன்மை நோக்கமன்று என்றும், ஊழை வெல்லும் மனித முயற்சிக்கு இடமளிக்கிறது என்றும், அறிஞரிடையில் வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. கோவலன் கண்ணகி வரலாறு பெண்ணின் பெருமை பேசவும், அரசியலறம் உணர்த்தவும் மட்டுமன்றி, ஆசிரியரின் சமய மெய்ப் பொருட் கோட்பாடாகிய ஊழ்க்கோட் பாட்டினை உலகிற்கு வலியுறுத்தவும் பயன்பட்டது. உலகமக்கள்

தீவினைகளை விலக்கி நல்வினைகளைச் செய்து நற்கதி அடைய வேண்டுமென்ற அருளுள்ளத்தின் காரணமாக இளங்கோவடிகள் வலியுறுத்தும் உயர் குறிக்கோளே ஊழ்க்கோட்பாடு என்பது புலனாகிறது.

குறிப்புகள் :

1. தொல். எழுத்து. நூ. 414
2. சிலப் பதிகம் வரி-55-60.
3. சிலப். 12 - வரி, 47-50.
4. சிலப். 15 - வரி, 142-144.
5. வ. சுப. மாணிக்கம், **எந்தச் சிலம்பு**, பேகன் பதிப்பகம், காரைக்குடி, 1971, ப. 15.
6. அ. மா. பரிமணம், **ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்**, கட்டுரைப் பொழில் மணிவிழா மலர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை, 1973, ப. 114,
7. பி. எஸ். ஜி. ஜி. கோவிந்தசாமி, **சிலப்பதிகாரத்தில் ஊழின் வலிமை**, மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோவை-1, 1966, ப. 4
8. அ.மா.பரிமணம், மு.நூ.மு.ப
9. சிலப் 7 - பா. 25-51.
10. சிலப். 7 - பா. 52.
11. சிலப். 7 - பா 52.
12. சிலப். 9 - வரி 78-79.
13. சிலப். 10 - வரி 3-4,
14. சிலப், 10 - வரி 164
15. சிலப். 10 - வரி 170-173.
16. சிலப். 14 - வரி 31-34
17. சிலப். 15 - வரி 91-93.
18. சிலப். 16 - வரி 61-62
19. சிலப். 16 - வரி 92-93
20. சிலப். 16 - வரி 148-153.
21. சிலப். 16 - வரி 156.157.
22. சில்ப். 16 - வரி 215-217.
23. சிலப். 19 - வரி 42, 46, 50
24. சிலப். 19 - வரி 67.
25. சிலப் 20 - வரி 59-62.
26. சிலப். 20 - வரி 75.78.
27. சிலப். 20 - வரி 79-81.
28. சிலப். 21 - வரி 3-4.
29. சிலப். 23 - வரி 27-30
30. சிலப். 23 - வரி 133-137.
31. சிலப். 23 - வரி 171.172.
32. சிலப். 23 - வரி 177-178.
33. சிலப். 10 - வரி 176.
34. சிலப். 30 - வரி 185-202.
35. சிலப். 11 - வரி 93-94.
36. சிலப். 15 - வரி 91-93.
37. சிலப். 15 - வரி 151-195.
38. சிலப். 30 - வரி 49-50
39. சிலப். 30 - வரி 136-140.
40. சிலப் 23 - வரி 197-200.
41. சிலப். 5 • வரி 128-134.
42. சிலப். 15 - வரி 84-85
43. சிலப். 15 - வரி 192-197.
44. சிலப். 9 - வரி 45-54.
45. சிலப். 15 - வரி 105-106.

45\. அ. சிலப். 20 - வரி 1-21.

46. சிலப். 5 - வரி 237-239.
47. சிலப். 16 - வரி 100-101
48. சிலப். 17 உரைப்பாட்டு மடை 1-3.
49. சிலப். 9 - வரி 59-64
50. சிலப். 11 - வரி 156-159.
51. தொல். பொருள், நூ. 480

51\. அ. சிலப். 3 - வரி 1-7.

52. சிலப். 6 - வரி 20-25

53. சிலப். 10 - வரி 231-232.
54. சிலப். 10 - வரி 241-245.
54. அ. சிலப். 7 - பா. 52.
55. சிலப். 9 - வரி 78.
56. சிலப். 10 - வரி 4.
57. சிலப். 16 - வரி 149-150
58. சிலப் 16 - வரி 156-157.
58. அ. சிலப். 16 - வரி 216-217.
59. சிலப். 16 - வரி 61-62.
60. சிலப். 19-42, 46, 50; 20-59; 21-3-4.
61. சிலப். 10 - வரி 170-175.
62. சிலப். 11 - வரி 156-159.
63. திருக். 628.
64. சிலப். 14 - வரி 46-49.
65. சிலப். 14 - வரி 54-56.
66. சிலப். 15 - வரி 91-93.
67. சிலப். 27 - வரி 49-52.
68. சிலப். 28 - வரி 165-168.
69. சிலப். 23 - வரி 171-172.
70. சிலப். 25 - வரி 98-99
71. அ. சோ. ந. கந்தசாமி, **தமிழும் தத்துவமும்,** மணிவாசகர் நூலகம், சென்னை-1, 1976, ப. 42.
71. ஆ. எஸ். இராமகிருஷ்ணன், **இளங்கோவின் பாத்திரப் படைப்பு,** மீனாட்சி புத்தக நிலையம், மதுரை-1, 1975, பக். 24-25.
72. சிலப். 14 - வரி 33, 34.
73. சோ. நா. கந்தசாமி, மு. நூ. பக். 66-76.
74. சிலப். 30 - வரி 185-202.
75. வ. சுப. மாணிக்கம், **இரட்டைக் காப்பியங்கள்,** செல்வி பதிப்பகம், காரைக்குடி, 1960, ப. 46.
76. எஸ். இராமகிருஷ்ணன், மு. நூ. பக். 26-27.
77. சோ. நா. கந்தசாமி. மு. நூ., பக் 81-82.
78. டி. எஸ். ஸ்ரீபால், **இளங்கோவடிகள் சமயம் யாது ?** பாரி நிலையம், சென்னை-1, 1957, பக்-36-37.
79. ஆ. செபரத்தினம், **இலக்கிய ஒளி,** 100, பெருமாள்புரம், திருநெல்வேலி-7, 1962, ப. 67.
80. ச. வே. சுப்பிரமணியன், **சிலம்பும் சிந்தாமணியும்,** தமிழ்ப் பதிப்பகம், அடையாறு, சென்னை-20, ஆ. இ., ப. 94
81. அ. ச. ஞானசம்பந்தம், **சிந்தனைச் சிலம்பு.** பத்தினிக் கோட்டப் பதிப்பகம், பூம்புகார் மேலையூர், 1977, பக், 31-32
82. மேற்படி, ப. 150.
83. மேற்படி, ப. 153.
84. மொ. அ. துரையரங்கசாமி, **பண்டைத் தமிழ்நெறி** பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-1, 1956, ப. 142.
85. மேற்படி, பக். 153-155.
86. கே. பி. சங்கர்லால், **சிலம்பில் திறனாய்வு,** ஐ எ. எஸ். வெளியீடு, மதுரை-9, 1973, பக். 31-32.

7. மணிமேகலையும் ஊழும்

சமய தத்துவக் கோட்பாடுகளைத் தருக்க முறையில் தெளிவு படுத்தும் மணிமேகலை ஆசிரியர் ஊழ்க் கோட்பாட்டினைப் பெரிதும் வலியுறுத்தியுள்ளார்.

மணிமேகலையில் ஊழின் ஆட்சி :

சிலப்பதிகாரத்தில் முப்பெரும் உண்மைகளில் ஒன்றாக ஊழ் வினை வலியுறுத்தப்பட்ட செய்தியை முன்னியலில் காண முடிந்தது. சிலப்பதிகாரக் காப்பிய நிகழ்ச்சிகளுக்கு ஊழ் காரண மாகக் காட்டப்பட்டது போலவே, மணிமேகலையின் கதை நிகழ்ச்சி களுக்கும் ஊழ்வினையே காரணமென்பதைச் சாத்தனார் பல இடங் களில் வற்புறுத்துகின்றார். எனவே ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்னும் கோட்பாடு இரட்டைக் காப்பியங்களுக்குப் பொதுவானதாகிறது.

> சிலப்பதிகாரத்தின் முத்திறக் கொள்கைகளுள் அரசியல் பிழைத்த அரசன் அழிவான்; பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்பவை இரண்டும் அந்நூற்கே உரியன. ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்பது இரட்டைக் காப்பியங்கட்கும் உரியது[1]

என்னும் வ. சுப. மாணிக்கனார் கருத்து இவ்விடத்து எண்ணத் தக்கது.

மணிமேகலைக் காப்பியம், விழாவறை காதையில் இந்திர விழாவுடன் தொடங்குகிறது. விழாவில் மாதவியும் மணிமேகலையும் வாராமையால் மனம்வருந்திய சித்திராபதி மாதவியின் தோழியாகிய வயந்தமாலையை அழைத்து ஊரார் கூறும் அலரை எடுத்துக் கூறு மாறு உரைக்கின்றாள். வயந்தமாலை மாதவியிடம் சென்று, நாடக மகளிர்க்கு உரிய கலைகள் பலவும் கற்றுத் துறைபோகிய நீ விழாவிற்கு வாராமல், மரபிற்கொவ்வாத தவவொழுக்கம் பூண்டு இருத்தல் பற்றி ஊரார் பலரும் கூறும் பழிமொழிகள் நாணுந் தகையன என்று கூறுகிறாள். அதுகேட்ட மாதவி அவளை நோக்கிக் 'காதலனுற்ற கடுந்துயர் பொறாது காவலன் பேரூர் கனையெரி யூட்டிய மாபெரும் பத்தினியாகிய கண்ணகியின் மகள் மணிமேகலை தவநெறிச் செல்லுதற்குரியளன்றி, இழிந்த பரத்தைமைத் தொழிலுக் குரியளல்லள்; ஆதலின் அவள் அங்கே வாராள்;

> மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை
> அருந்தவப் படுத்தல் அல்ல தியாவதும்
> திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்[2]

என்று கூறித் தானும் அறவண அடிகளின் அடிமிசை வீழ்ந்து

காதலன் உற்ற கடுந்துயரைக் கூறி வருந்துகிறாள். அவரும் ஐவகைச் சீலங்களை வற்புறுத்தி அறம் உரைக்கிறார். அதுகேட்ட மாதவி தன் உய்விற்குரிய வழியாவது புத்த தருமத்தின் வழித் துறவில் நிற்பதே எனக் கூறி, இச்செய்தியையெல்லாம் தோழியர்க்கும் தாய் சித்திராபதிக்கும் நீ சென்று சொல்வாயாக என்று கூறி விடுகிறாள்.

வயந்தமாலையிடம் மாதவி உரைத்த துன்பமொழிகளைக் கேட்ட மணிமேகலை வருந்துகிறாள். வருந்தும்போது மணிமேகலையின் நல்வினை சிறந்தமலரிடத்து நாற்றம் முற்பட்டுத் தோன்றுவதுபோல் பயன் கொடுத்தற்குத் தோன்றியது எனக் கூறும் சாத்தனார்,

மாமலர் நாற்றம்போல் மணி மேகலைக்கு
ஏது நிகழ்ச்சி எதிர்ந்துள தாதலின்[3]

என்னும் அடிகளால் புலப்படுத்துகின்றார். இங்குதான் ஊழ் முதன் முதலாகக் குறிப்பிடப் படுகிறது.

வினையின் வந்தது வினைக்கு விளைவாயது :

மணிமேகலை உவவனத்திற்கு மலர் பறிக்கச் சென்றதைக் கேள்வியுற்ற உதயகுமரன் அவளையடைய வேண்டுமென்ற விருப்புடன் அங்குச் செல்கிறான். அவன் வருவதையறிந்து சுதமதி சொல்லியவாறு பளிக் கறையின் உள்ளே புகுந்து மணிமேகலை தாழிட்டுக் கொள்கிறாள்; அவளைக் காணாத உதயகுமரன் 'நின்னுடன் மணிமேகலை வந்தாள் என்பதையறிந்தேன்; அவள் பெருந்தவத்தோர் இடத்தை விட்டு ஏன் இங்கு வந்தாள்? கூறுக' எனச் சுதமதியிடம் கேட்கிறான்[4] அவனது சொற்களைக் கேட்டு நோக்கத்தினைப் புரிந்துகொண்டு வருந்திய சுதமதி, அவனுக்கு அறிவுரைகளைக் கூறுகிறாள். 'இவ்வுடம்பு முன்செய்த வினையின் பயனாலே வந்து வாய்த்தது;இதுவே இனிவரும் நல்வினை தீவினைகளாகிய புண்ணிய பாவங்கட்கும் உரிய விளைநிலமாக அமைந்தது; புனையப்படும் ஆடையணிகள், மணப் பொருட்களை நீக்கிவிட்டால் புலால் எனப் புறத்தே எறியப்படுவது; மூப்பும் இறப்பும் உடையது; கொடிய நோய்க்கும் பற்றுக்களுக்கும் இருப்பிடமாகவும், குற்றங்கட்குக் கொள்கலமாகவும் உள்ளது; புற்றில் அடங்கியிருக்கும் பாம்பினைப் போன்று சினத்திற்கு இடமாவது; துன்பம், மனக் கவலை, செயலற்ற தன்மை, நீங்காத வருத்தம் முதலிய நான்கும் நீங்காத உள்ளத்தினையும் தன்னகத்தே கொண்டிருப்பது; நீ புகழ்ந்து போற்றிய மக்கள் உடம்பின் தன்மை இதுவேயாகும் என்பதை நீ உள்புறமாகுமாறு ஆராய்ந்து பார்' என அறிவுறுத்துகின்றார். இதனை,

வினையின் வந்தது, வினைக்குவிளை வாயது;
புனைவன நீங்கின் புலால்புறத் திடுவது;
மூப்புவிளி வுடையது; தீப்பிணி இருக்கை;
பற்றின் பற்றிடம்; குற்றக் கொள்கலம்
... .
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்கோய்; இதனைப் புறமறிப் பாராய்[5]

என்னும் அடிகள் விளக்குகின்றன. உயிர்கள் தாம் முற்பிறப்பில் செய்த ஊழ்வினையின் பயனுக்கேற்பவே இப்பிறவியில் அவற்றுக் குரிய உடம்பும் உடம்பினால் அனுபவிக்கும் இன்பதுன்பங்களும் அமைகின்றன என்பதும்; இப்பிறவியில் உயிர்கள் செய்யும் வினை எதிர்வினையாகி அதன்பயனை அடுத்த பிறவியில் தவறாது நல்கும் என்பதும் ஊழ்க் கோட்பாடாதலின், சாத்தனார் இவ்விடத்தில் மனித வாழ்வின் நிலையாமையைக் கூறி, தீவினைகளுக்குக் காரணமாக அமையும் இவ்வுடம்பு வினையின் வந்தது வினைக்கு விளைவாயது எனத் தம் ஊழ்வினைக் கோட்பாட்டினை வலியுறுத்துகிறார்.

ஊழ்தரு தவத்தள் :

சுதமதியின் அறிவுரையைக் கேட்டும் அமையாத உதயகுமரன் பளிங்கு மண்டபத்தைச் சுற்றிச்சுற்றி வந்தவனாக மணிமேகலை எத்தன்மையுடையவள் என்பதை எனக்குக் கூறுக என்று சுதமதியை மீண்டும் கேட்கிறான். அவனுரை கேட்ட சுதமதி, முருகனைப் போன்ற அழகுடைய உன் இளமைச் செவ்வியைத் தன் கண்களால் முகந்து பருகாதவள் மணிமேகலை; அவளது ஊழ்வினைப் பயனானது வந்து அடையச் செய்யுமோர் தவ நெறியினையே உடையவள்; அத்துடன் சாபமிடுதலாகிய கணையினையும் தனக்கு பாதுகாவலாக உடையவள் என்று மணிமேகலையின் இயல்பினைக் கூறுகின்றாள்

குருகுபெயர் குன்றங் கொன்றோன் அன்னநின்
முருகச் செவ்வி முகந்து, தன்கண்ணால்
பருகாள்; ஆயினிப் பைந்தொடி நங்கை
ஊழ்தரு தவத்தள்; சாப சரத்தி;
காமற்கடந்த வாய்மையள்[6]

என்பது அவள் கூற்று. ஒருவர் இம்மையில் தவம் செய்ய வேண்டு மாயின் அவர் முற்பிறப்பில் நல்வினை செய்தவராய் இருத்தல் வேண்டுமென்பதும் ஊழின் துணையில்லாது ஒருவர் தவம் மேற் கொள்வது பயன்தராது என்பதும் திருவள்ளுவர் கருத்து.[7] சாத்தனார், மணிமேகலை இம்மையில் துறவு மேற்கொண்டு தவம் செய்வதன் காரணமாகப் பிறருக்குச் சாபமிடும் வலிமையைப் பெற்று

உள்ளாள் என்றும், அவ்வலிமைக்குரிய தவம் அவளது முற்பிறப்பின் வினைப் பயனால் அவளுக்கு அமைந்தது என்றும் வலியுறுத்து மிடத்தில் ஊழ்க் கோட்பாட்டினைத் தெளிவுபடுத்துகிறார்.

கதைத் தொடர்பும், ஊழும் :

உதயகுமரன் சென்றபின் மணிமேகலை பளிங்கு மண்டபத்தை விட்டு வெளியில் வந்து, அவன் தன்னை இகழ்ந்தவனும் விரும்பியவனுமாக இருப்பினும் அப்புதியவன் பின்னர்த் தன் நெஞ்சம் சென்றது; காமத்தியல்பு இதுவோ? என்று சுதமதியிடம் கூறித் தன்னெஞ்சம் செடுக என்று உறுதி ஏற்கிறாள். பின் மணிமேகலா தெய்வம் மணிமேகலையையும் சுதமதியையும் சக்கர வாளக் கோட்டத்திற்குச் செல்லும்படிச் சொல்லி அக்கோட்டத்தின் சிறப்பினைக் கூறுகிறது. அங்கு, இரவு வரவும் சுதமதி உறங்கிவிட மணிமேகலையை வான்வழியே எடுத்துக் கொண்டு மணிபல்லவத் தீவில் தெய்வம் சேர்த்தது. மீண்டும் புகாருக்குத் திரும்பி அரச குமாரனுக்கு அறிவுரை கூறி, சுதமதிக்குத் தன்னைப் பற்றியும் கூறுகிறது இரவில் அஞ்சி நடுங்கிய சுதமதி அக்கோட்டத்துள் உள்ள உலகவறவியை அடைகிறாள்; கந்திற்பாவை சுதமதியின் முற்பிறப்பு வரலாற்றைக் கூறியதுடன் மணிமேகலை பற்றியும் அஞ்சாதிருக்கக் கூறுகிறது. சுதமதி காலையில் மாதவிபாற் சென்று நிகழ்ந்ததை உரைக்கவும் அவள் மிகுந்த கவலை அடைகிறாள். மணிபல்லவத்தில் தனியாக விடப்பெற்ற மணிமேகலை, கண் விழித்ததும் தன் தனிமையினைஅறிந்து துன்புற்று அழத் தொடங்கு கிறாள். அவள்முன் தரும பீடிகை ஒன்று அவ்வேளை தோன்று கின்றது. மணிமேகலை, அந்தப் பீடிகையை வணங்கிப் போற்றித் தன் முற்பிறப்பின் வரலாற்றை அறிகின்றாள்; அதன்பின் தன் முற் பிறப்பின் கணவனையறியும் ஆவலுடன்வணங்கி எதிர்பார்த்திருக்க மணிமேகலா தெய்வம் வந்துதோன்றி, இராகுலனே உதயகுமரன் எனவும், தாரையும் வீரையுமே மாதவியும் சுதமதியும் என உரைத்து மூன்று மந்திரங்களையும் மணிமேகலைக்கு அருளி மறைகிறது.

மந்திரம் பெற்று நின்ற மணிமேகலையின் முன்னர்க் கடவுட் கோலமுடைய தீவதிலகை என்பாள் தோன்றுகிறாள்; தான் அத்தீவிலுள்ள பழுதற்ற தோற்றமுடைய நன்மை தருகின்ற இந்த மாணிக்கப் பீடிகையைத் தேவர் கோமானின் ஏவலினாலே காவல் செய்திருக்கும் பணியினை மேற்கொண்டவள் என்று கூறுகின்றாள்; மணிமேகலையும் தீவதிலகையும் கோமுகிப் பொய்கையை வலஞ்செய்து வணங்கி நிற்கும் போது தொழும் சிறப்புடைய அப்பாத்திரம் மணிமேகலையின் கையிற் சென்றது. அதனைப் பெற்ற அவளுக்குத் தருமம் செய்வதன் சிறப்பினைத்

தெய்வம் கூறுகிறது. பின்னர் மணிமேகலையும் வான்வழியே வந்து புகாரையடைந்து தன் தாயையும் தோழியையும் காணுகிறாள்; இருவரது பழம்பிறப்புக்கூறி மானிடயாக்கையிலேயே தீவினைகளை அறுத்துப் பேறடையும் தகைமை உங்களுக்கு வாய்ப்பதாக என்று வாழ்த்திய மணிமேகலை அதற்குரிய தவநெறிகளை அறவண அடிகளைக் கேட்டு அறிந்துகொண்டு அதன்படியே செய்வீராக என்று கூறுகின்றாள் மூவரும் சென்று அறவண அடிகளை வணங்குகின்றனர்.

அறவண அடிகளிடம், மணிமேகலை உவவனத்திற்கு மலர் பறிக்கச் சென்றது, உதயகுமரன் வந்தது, மணிமேகலா தெய்வம் மணிபல்லவத் தீவிற்குக் கொண்டு சென்றது, அங்குப் புத்தபீடிகை மணிமேகலையின் பழம்பிறப்புணர்த்தியது, தெய்வம் மூன்று மந்திரங்களை அருளியது ஆகியவற்றிற்குப் பின் மீண்டும் புகார் வந்து தாயைச் சந்தித்தது வரை கூறுகிறாள். மேலும், 'நின் தமக்கையராக அப்பிறப்பிலே விளங்கிய தாரையும் வீரையும் கொடிய ஊழானது வந்து ஊட்டுதலாற் கேடுற்று மாதவியாகவும் சுதமதியாகவும், அழகிய கூந்தலையும் மென்சாயலையும் உடைய நின்னோடும் வந்து சேர்ந்தனர்; அவர்கள் உய்யும் திறத்தினை, நங்கையே! அறவண அடிகளிடம் கேட்பாயாக!' என்று மணிமேகலா தெய்வம் கூறியதாக அறிய முடிகிறது.

தவ்வையர் ஆகிய தாரையும் வீரையும்
வெவ்வினை உருப்ப விளிந்துகே டெய்தி,
மாதவி யாகியும், சுதமதியாகியும்
கோதையஞ் சாயல் நின்னொடும் கூடினர்
ஆங்கவர் தந்திறம் அறவணர் தன்பால்
பூங்கொடி நல்லாய் கேள்[8]

என்னும் வரிகளால் அறவண அடிகளுக்கு மணிமேகலை மொழிகிறாள். அடிகளும் மகிழ்ந்து, மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்குக் கூறியதல்லாமல், அரிய வினைகளைக் கழுவிப் போக்கும் ஆதிமுதல்வனாகிய புத்த பிரானின் திருவடிகளாகிய பீடிகை பொருந்தியிருந்த பாதபங்கய மலையினைப் போற்றப் பின்னரும் தான் அடிக்கடி சென்றபோது, ஒரு சமயம் கச்சய நாட்டினையாண்ட துச்சயன் என்பவனை ஒரு பொழிலிடத்தே கண்டதாகவும், அப்பொழுது, அவன் அறவணரிடம், தன் மனைவியருள் மூத்தவளாகிய வீரையென்பாள் மதுவுண்ட மயக்கத்தினால் புதிதாகக் கொண்டுவரப்பெற்ற ஒரு யானையின் முன்பாகச் சென்று அதனால் இறந்ததும் அதுகேட்டு, இளையவளாகிய தாரை, ஒரு நிலா முற்றத்தே ஏறிநின்று கீழே வீழ்ந்து சாவுற்றதுமாகிய மிகப்பெருந்துன்பச் செய்தியைச் சொன்னதாகவும்

அம்மன்னனிடம் 'அது அவர்களுடைய முன்வினைப் பயனினாலே நேர்ந்தது; நீ அது குறித்து வருந்தாதே' எனத் தாம் ஆறுதல் கூறியதாகவும் சொல்கிறாள். இவ்வாறு மணிமேகலையும் அறவணரும் உரையாடுமிடத்தில் ஊழ்வினை பற்றிக் கூறப் படுவது அறியத்தக்கது [9]

ஆபுத்திரன் வரலாறும், ஊழும் :

அறவண அடிகள், ஆபுத்திரன் வரலாற்றையும், அவனுக்கு அமுதசுரபி என்னும் பாத்திரம் கிடைத்த வரலாற்றையும் மணி மேகலை, மாதவி, சுதமதி மூவருக்கும் கூறுகிறார். சிந்தாதேவி யிடமிருந்து அமுதசுரபியைப் பெற்ற ஆபுத்திரன், மக்கள், விலங்குகள், பறவைகள் ஆகிய உயிரினங்களுக்கெல்லாம் உண வளித்தான். ஆபுத்திரனது அறச் செயலால் நடுக்கமுற்ற இந்திரன் ஆபுத்திரன் முன்னர்த் தோன்றி 'அறத்திற்குரிய பயனாக யாது நீ விரும்புவது' எனக் கேட்கிறான். அதுகேட்ட ஆபுத்திரன் நகைத்து நோக்கி,

ஈண்டுச் செய்வினை ஆண்டுநுகர்ந் திருத்தல்
காண்தகு சிறப்பின்நும் கடவுளர் அல்லது
அறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
நற்றவஞ் செய்வோர், பற்றற முயல்வோர்
யாவரும் இல்லாத் தேவர் நன் னாட்டுக்கு
இறைவ னாகிய பெருவிறல் வேந்தே[10]

எனக் கூறுகிறான். இக்கூற்றில் இவ்வுலகத்தில் செய்யும் நல்வினை களின் பயன்களைத் தேவருலகில் நுகர்ந்திருத்தல் தேவர்களுடைய சிறப்பாகும் என்றும், மண்ணில் அறஞ்செய்வோர், ஏழைகளைப் பாதுகாப்போர், தவஞ்செய்வோர், இருவினைக்குக் காரணமாகிய பற்றினையறுத்துக் கொள்ள முயல்வோர் ஆகிய யாவரும் இல்லாத நாடு தேவர்நாடு என்று புகழ்வது போல இகழ்ந்து கூறுவது அறிய முடிகிறது. நல்வினைப் பயன் துய்ப்பிற்குரியது தேவருலகம் என்றும், வீடுபேறு அடைவதற்குரிய இருவினைப் பயன் துய்ப்பும் வினைநீக்கமும் மண்ணுலகிற்கே உரியன என்றும், தேவரும் மனித ராகப் பிறந்துதான் வீடுபேறடைய வேண்டுமென்றும் வினைக் கோட்பாடு கூறுகிறது. ஆதலின் இன்பத் துய்ப்பினை மட்டும் உடைய தேவருலகினை விட இருவினைகளையும் அனுபவிக்கும் மண்ணுலக வாழ்வே மேலானது என்னும் கொள்கை வலியுறுத்தப் படுகிறது.

ஆதிரையின் வரலாறும், ஊழும் :

அமுதசுரபியில் பத்தினிப் பெண்டிர் இடும் பிச்சையினை முதலில் ஏற்றலே பெருமையுடையது' என மணிமேகலை கூறக்

கேட்ட காயசண்டிகை ஆதிரையின் வரலாற்றையும் கற்பின் சிறப்பையும் கூறுகிறாள். ஆதிரையின் கணவனாகிய சாதுவன் என் போன் பரத்தையொழுக்கத்தில் செல்வமெல்லாம் இழந்து பரத்தையும் கைவிட்டநிலையில் பொருளீட்டக் கருதி மரக்கலம் ஏறி வேற்று நாடு செல்கிறான். அவனுடன் சென்று உடைந்த கலத்திலிருந்து உயிர் பிழைத்து வந்தவர்கள், இறந்து போனவர்களுள் சாதுவனும் ஒருவன் என்று கூறக் கேட்ட ஆதிரை உள்ளம் வருந்தி ஊரினரை அழைத்து ஒள்ளழல் ஈமத்தினைத் தனக்குத் தருமாறு வேண்டுகிறாள்; அவ்வாறே சிலர் சுடலைப் புறங்காட்டில் குழிதோண்டித் தீமூட்டுகின்றனர். அப்பொழுது ஆதிரை 'சிறந்த என் கணவன் தன் வினைப்பயன் வந்தடைய இறந்தவிடத்து யானும் உயிர்நீத்து அவனுடனேசெல்வேன்' எனக்கூறி அந்தத்தீயினுள் இறங்குகிறாள். அவளுக்காக வைத்த அந்நெருப்பு அவள் படுக்கையையும் ஆடையையும் பற்றாது போயிற்று; ஆதலின் தீயும் கொல்லாத தீவினை உடையவள் ஆயினேன்; யாது செய்வேன் என்று ஏங்கிப்புலம்புகிறாள் என்பதனை,

> மிக்கவென் கணவன் வினைப்பயன் உய்ப்பப்
> புக்குழிப் புகுவேன் என்றவள் புகுதலும்
> படுத்துடன் வைத்தபாயற் பள்ளியும்,
> உடுத்த கூறையும், ஒள்ளெரி உறாஅது
> ....
> தீயுங் கொல்லாத் தீவினை யாட்டியேன்
> யாது செய்கேன் என்றவள் ஏங்கலும்'11

என்று ஆசிரியர் விளக்குகிறார். இவ்விடத்தில் ஆதிரையின் கணவனாகிய சாதுவன் அவனது தீவினை செலுத்தியதால் இறந்தான் என்றும், தீயும் கொல்லமுடியாத அளவுக்குத் தான் தீவினையுடையவள்என்று அவள்வருந்துவதாகவும் காட்டப்படினும் பின்னர் சாதுவன் இறக்கவில்லையெனவும், ஆதிரையும் தீவினையுடையளன்று, நல்வினையும் கற்புச் சிறப்புமுடையவள் எனவும் அசரீரி வாக்காகக் கூறப்படுமிடத்தில் ஊழின் ஆற்றல் காட்டப்படுகிறது.

நோயும் பழவினைப் பயனும் :

நன்னெறியில் ஈட்டிய நல்லவன் செல்வம் நாளும் வளர்வது போலப் பத்தினியாகிய ஆதிரையிட்ட பிச்சையானது பெருகி வற்றாது சுரப்பதாயிற்று; வந்தோர்க்கெல்லாம் மணிமேகலை உணவு வழங்கினாள்; வழங்குதலால் வாங்குவோரின் கைகள் வருந்தினவேயன்றி, அவள் பல்லுயிர்க்கும் அளித்தபோதும் அப் பாத்திரம் தன்னிடத்தே குறைவில்லாததாக விளங்கிற்று. அதன்

சிறப்பினையறிந்த காயசண்டிகை, இராமன் இலங்கைக்குச் செல்வதற்காக ஆணையிட்ட போது, குரங்குகள் பெருமலைகள் பலவற்றையும் கொணர்ந்து கடலுள் எறிந்தனவாயினும் அம்மலைகள் எல்லாம் கடலின் வயிற்றில்புகுந்து மறைந்து போயின; அங்ஙனமே 'இட்ட உணவுப் பொருள்கள் எவ்வளவு ஆனாலும் தணியாது மேலும் கொடும்பசி என்னை வருத்துகின்றது; என் பழவினைப் பயன் காரணமாக யானும் அந்நோயிலே சிக்கியுள்ளேன் என் பசியையும் போக்கியருள்வாய்' என வேண்டுவதாக,

இட்ட தாற்றாக் கட்டழற் கடும்பசிப்
பட்டேன், என்றன் பழவினைப் பயத்தால்;
அன்னை; கேள்நீ ஆருயிர் மருத்துவி;
துன்னிய என்னோய் துடைப்பாய்;*12*

என்னும் இடத்தில் ஆசிரியர் காயசண்டிகையின் பழவினையால் அவளுக்கு யானைத்தீ என்னும் பெரும்பசி நோய் வந்ததாகக் காட்டுகிறார்.

முனிவன் சாபமும் காயசண்டிகையின் ஊழும் :

மணிமேகலை உணவளித்தபின் காயசண்டிகையின் பசிநோய் நீங்குகிறது; நீங்கியபின் அவள் தன் பழவினை உருத்துவந்தது பற்றிக் கூறுகிறாள். வடதிசையிலுள்ள வித்தியாதரர் உலகில் காஞ்சனபுரம் என்னும் ஊரினளாகிய தான் தன் கணவனாகிய விஞ்சையனுடன் பழவினை வந்து உருத்தியதனால் பொதிய மலையைக் காணும் வேட்கையுடன் வந்து, கணவனுடன் அருவியில் நீராடி மகிழ்ந்திருந்த வேளையில், விருச்சிகன் என்னும் முனிவன் கருநாவற் கனியொன்றினைத் தேக்கிலையில் வைத்துவிட்டு நீராடச் சென்றான்; அப்போது தன் தீவினைப் பயன் வந்து உருத்தியதாதலின் செருக்குடன் சென்று நாவற்பழத்தினைக் காலினால் சிதைத்ததாகவும், திரும்பிய முனிவன், 'வான்வழி செல்லும் மந்திரத்தினை இழந்து யானைத்தீ என்னும் பசி நோயினைப் பெற்று இன்றையிலிருந்து பன்னிரண்டாம் ஆண்டின் பின் பழுக்கின்ற அந்நாவற் கனியினைத் தான் உண்ணும் நாளில் அவளும் அவளையடைந்த நோய் நீங்கப் பெறுவாள்' என விடுத்த சாபத்தின் காரணமாகத் தனக்கு இந்நோய் வந்தது என்று கூறுகிறாள்.

விஞ்சையன் தன்னொடு வெவ்வினை உருப்பத்
தென் திசைப் பொதியில் காணிய வந்தேன்
... ...
தீவினை உருத்தலின் செருக்கோடு சென்றேன்
காலால் அந்தக் கருங்கனி சிதைத்தேன்*13*

என ஆசிரியர் விளக்குகிறார். பின்வரும் காதையிலும், முன்செய்த தீவினைப் பயனினாலே மிக்க தவமுடைய முனிவன் இட்ட சாபம் கழியும் காலமாகிய பன்னிரண்டாவது ஆண்டு வந்து விட்டதாதலின் காஞ்சனன் காயசண்டிகையைத் தேடிவந்தான் என்பதை,

மறைசூழ் குடுமிப் பொதியிற் குன்றத்துக்
கழைவளர் கான்யாற்றுப் பழவினைப் பயத்தால்
மாதவன் மாதர்க்கிட்ட சாபம்
ஈரா றாண்டு வந்தது[14]

என்னும் வரிகளால் குறிப்பிடும் ஆசிரியர் முனிவன் காயசண்டிகைக்கு இட்ட சாபத்தை மீண்டும் குறிப்பிடுகிறார். இவ்விடங்களில் காய சண்டிகை செய்த தீவினை பற்றியும் தீவினைக்கேற்ற விருச்சிக முனிவன் சாபம் பற்றியும் கூறி, இத்தகைய ஊழ்வினையினாலேயே அவள் துன்புற நேர்ந்தது என்பதைக் கூறி ஊழினாற்றலை வலியுறுத்துகிறார். வலிமையுடைய ஊழ் தன் பயனை ஊட்டும் நிலையில், பெரியோர் இடும் சாபமும் அவ்வூழ்வினைக்குத் துணை யாக, கருவியாக அமையும் என்பது இதன்மூலம் அறிய முடிகிறது.

திருவும் ஊழும் :

மணிமேகலை பிக்குனிக் கோலம் பூண்டு பிச்சையேற்றதைக் கேட்ட சித்திராபதி பெரிதும் சீற்றங்கொண்டு நாடகக் கணிகை யரிடத்தில் 'மணிமேகலையின் துறவினையும் அவளுடைய அற வொழுக்கத்தையும் தீர்ப்பேன்' என்று கூறுகிறாள். மேலும் கோவலன் இறந்தபின், 'மாதவியும் மணிமேகலையும் துறவு கொண்டது நகைப்பிற்குரியது; அவ்வாறு துறவு கொள்ள நாம் பத்தினிப் பெண்டிரல்லேம்' என்றும், பலருடைய பொருளைப் பெற்று உண்டு வாழும் வாழ்க்கைக்கு உரிமையுடையவரன்றோ' என்றும் கூறுகிறாள். மேலும் பரத்தையர்குல ஒழுக்கம் பற்றிக் கூறும்போது, தன்னை மீட்டி இசைக்கின்ற பாண்மகன் இறந்து போனவிடத்துத் தானும் அழிந்துபோகாத் தன்மையுடைய யாழினத் தைப் போல இயல்புடையோம் அல்லாமலும் மணமுள்ள பூந்தா தினை உண்டு பயனாகிய தேன் அற்றுப் போனவிடத்து வறிதாகிப் போன அம்மலரினைக் கைவிட்டுச் செல்லுகின்ற வண்டினைப் போன்றவரும் நாம் ஆவோம்; நல்வினை ஒருவனை விட்டு நீங்கிய காலத்திலே, செல்வத்தின் தலைவியாக திருமகளும் நீங்கிவிடுவது போல, நாமும் செல்வம் நீங்கிய காலத்தில் ஆடவரைக் கைவிடும் இயல்புடையோம்; அவ்வாறன்றி நாம் துறவுக் கோலம் கொள் வது நகைப்பிற்குரியது என்னும் கருத்துக்களைச் சித்திராபதி கூறுவதை,

பாண்மகன் பட்டுழிப் படூஉம் பான்மையில்
... ...
வினையொழி காலைத் திருவின் செல்வி
அனையே மாகி ஆடவர்த் துறப்பேம்[15]

என்ற வரிகளால் அறிய முடிகிறது. இவ்விடத்தில் குற்றமே குண மாகக் கொண்டு வாழும் சித்திராபதியும் கூட வினை பற்றியும் அதன் விளைவு பற்றியும் பேசுவதையும், ஒருவனிடம் செல்வம் சேர்வதும், அவனை விட்டு அச்செல்வம் நீங்குவதும் அவனுடைய நல்வினை, தீவினையாகிய ஊழ்வினைப் பயனாலேயே என்னும் ஊழ்க்கோட்பாட்டினையும் சாத்தனார் வலியுறுத்துகிறார்.

நற்பிறப்பும் நல்வினையும்:

மணிமேகலை காயசண்டிகை வடிவுகொண்டு மன்னனிடம் சென்று சிறைக் கோட்டத்தை அறக் கோட்டமாக்குமாறு வேண்டு கிறாள். மன்னன் ஆணையினால், நரகக் கொடுமையை உடைய தாக இருந்த சிறைக் கோட்டமானது பழைய நிலை நீங்கப்பெற்று அறக்கோட்டமாகியது. அந்த இடம் தீய பிறப்பினையடைந்து வருந்தினோர், தாம் செய்த நல்வினைகளின் பயனால் அதற்கேற்ற உறுதியுடைய நல்ல பிறப்பினை மீண்டும் பெற்றனர் என்பதுபோல, அறவோனான புத்தன்கோயிலும், உயிர்களுக்கு அருள்புரியும் உள்ளத்தையுடைய அறவோர் தங்குமிடங்களும், சோறாக்கும் இடமும், சோறுண்போர் இடமும் ஆகியவை பலவும் அமைந்ததாகி, உறுதியுடைய செல்வக் காவலையுடையதோர் சிறந்த இடமாக மாற்றம் பெற்றது என்பதை,

தீப்பிறப் புழந்தோர் செய்வினைப் பயத்தால்
யாப்புடை நற்பிறப் பெய்தினர் போல[16]

என்னும் உவமை வாயிலாக விளக்குகிறார் ஆசிரியர். இதனால் தீப்பிறப்புற்றுத் துன்பத்தில் வருந்தியவர்களும் இப்பிறப்பில் முயற்சி யுடன் நல்வினை செய்வார்களாயின் அந்நல்வினைப் பயனால் மறுமையில் நற்பிறப்பினை அடைவர் என்னும் ஊழ்க் கோட்பாடு விளக்கப்படுகிறது.

ஊழ்வினை உருத்து வந்தது:

மணிமேகலை காயசண்டிகையின் வடிவினைக் கொண்டு உலகவறவிக்குச் சென்று பசித்தோர்க்கு உணவளிக்கிறாள்; அவளை அடைய வேண்டி, உதயகுமரன் உலகவறவிக்குச் செல்கிறான்; முனிவன் சாபம் முடியும் வேளை என்பதால் காயசண்டிகையைத் தேடி அவள் கணவன் காஞ்சனனும் அங்கு வந்து சேர்கிறான்; மணி மேகலையைத் தன் மனைவி காயசண்டிகை எனத் தவறாக எண்ணி அவளிடம் பேசுகிறான்; அவள் அவனை ஏற்றுக் கொள்ளாதவளாக

இருக்கிறாள்; மணிமேகலை அறியாதவாறு அவளைப் பின் தொடர்ந்து செல்கிறான்; உதயகுமரன் அவள்மேல் விருப்பம் கொண்டிருப்பதை அறிகிறான்; பகையுணர்ச்சியுடன் கையில் வாளுடன் ஒளிந்திருக்கிறான். ஊர் மக்களனைவரும் உறங்கும் அவ்வேளையில் அம்பலம்புகும் உதயகுமரன் செயலைக் கூறப் புகும் ஆசிரியர் அவன் அவ்வேளையில் ஆண்டுப் புகுதற்கு அவன் முன்வினையே காரணம் என்பாராய்,

ஊழடி யிட்டதன் உள்ளகம் புகுதலும்[17]

எனக் கூறுகின்றார். உதயகுமரன் புகுந்ததும் முன்னரே ஆங்கு இருந்த காஞ்சனன் தன் வாளினால் உதயகுமரனின் தோள்கள் துண்டுபடுமாறு வெட்டி வீழ்த்துகிறான்; வீழ்த்தியபின் காயசண்டிகையைக் கைக்கொண்டு அவன் நாட்டிற்குச் செல்ல விரும்பி அவளைநெருங்கியபோது கந்திற்பாவையாகிய தெய்வம் அவனைத் தடுத்து, மணிமேகலை காஞ்சனை வடிவில் உள்ளாள் ஆதலின் அவளை நெருங்கவேண்டாம் எனக் கூறுகிறது [18] மேலும், கடும் பசி நீங்கப்பெற்ற காயசண்டிகை விந்தியமலையைத் தாண்டுகையில் அவளை விந்தா கடிகை தன் வயிற்றகத்தே அடக்கிக் கொண்டனள் என்னும் செய்தியை தெய்வம் காஞ்சனனுக்குச் சொல்லும்பொழுதும் ஊழ்வினையின்ஆற்றலை வற்புறுத்துகிறது.[19] ''ஊழ்வினையானது உருத்துவந்து,உதயகுமரனது ஆருயிரை உண்டது; ஆயினும் நீயும் அவனைக்கொலை செய்த கொடிய செயலினைச் செய்தாய்; அந்த வினையானது உன்னைவிட்டு நீங்காது வந்து பயனைக் கொடுக்கும்'' என்ற கருத்தினை,

கைம்மை கொள்ளேல் காஞ்சன ! இதுகேள்
ஊழ்வினை வந்திங்கு உதய குமரனை
ஆருயிர் உண்டது ஆயினும் அறியாய்
வெவ்வினை செய்தாய் விஞ்சைக் காஞ்சன
அவ்வினை நின்னையும் அகலாது ஆங்குறும்[20]

என்ற அடிகளால் தெய்வம் தெளிவுறுத்துகிறது. உதயகுமரன் கொலை, காயசண்டிகையின் முடிவு ஆகியவற்றுக்கு ஊழ்வினை உருத்துவந்து பயனை ஊட்டியதே காரணம் என்பதும், அவ்வாறே உதயகுமரனைக் கொலை செய்த காயசண்டிகையின் கணவனாகிய காஞ்சனனையும் தீவினை ஊழ்வினையாகப் பின் வரும் பிறவியில் வந்து வருத்தும் என்பதையும் அறிய முடிகிறது. இவ்விடத்தில் ஆசிரியர் ஊழ்க்கோட்பாட்டினைப் பெரிதும் வலியுறுத்துவது அறிய முடிகிறது.

வினையின் விளைவும், மணிமேகலையின் தெளிவும்

உதயகுமரன் கொலையுண்டதையறிந்த மணிமேகலை காயசண்டிகையாக இருந்த வடிவை ஒழித்துத் தன் வடிவே

கொண்டு, அவனை நினைத்துப் புலம்பத் தொடங்கினாள்; அதனைக்கண்டகந்திற்பாவை காஞ்சனனுக்கு உரைத்ததுபோலவே மணிமேகலைக்கும் ஊழ்வினையின் விளைவை உணர்த்தி மணி மேகலையின் எதிர்வரும் செயல்கள், முடிவு ஆகியவைபற்றியும் உணர்த்தித் தெளிவு பெறச் செய்கிறது.[21]

உதயகுமரன் வெட்டுண்டு கிடப்பதைக் கண்ட மணிமேகலை முற்பிறப்பில் தன் கணவனாகிய இராகுலன் திட்டிவிடம் என்னும் பாம்பு கடித்து இறந்ததால் தானும் ஈமத்தீயில் விழுந்து உடனுயிர் விட்டதையும், தன் பழம் பிறப்பின் கணவனாகிய இராகுலன் உதயகுமரனாக வந்தானாதலின் உவவனத்திடைக் கண்டபோதே அவன்பின் சென்ற தன் உள்ளத்தையும் எடுத்துக்கூறுகிறாள்; புத்த பீடிகையைக் கண்டு தன் பழம்பிறப்பினை உணர்ந்த காரணத்தி னால் தன்முன் தோன்றிய உதயகுமரனுக்கு, பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும், அறந்தரு சால்பும், மற நெறியால் விளையும் துன்பமும் சொல்லி அவனது தீவினைகளை நீக்கும் பொருட்டாக இந்தக் காயசண்டிகையின்வடிவை ஏற்றதாகவும்கூறி,

வைவாள் விஞ்சையன் மயக்குறு வெகுளியின்
வெவ்வினை யுருப்ப விளிந்தனை யோவென[22]

அழுதுபுலம்பி அயாவுயிர்த்து எழுகிறாள்; அவள் அவன் உடலை நெருங்கப் போகிறாள் என்பதையுணர்ந்த கந்திற்பாவையாகிய தெய்வம் அவளை அங்குச் செல்ல வேண்டாமென்று தடுத்து, மணி மேகலைக்கு அவன் கணவனாகவும், அவனுக்கு அவள் மனைவி யாகவும் பிறந்த முன்னைய பிறப்புக்கள் பற்பலவென்றும் இவர் களது தொடர்பு முற்பிறப்பில் கணவன் மனைவியாகப் பிறந்த ஒன்று மட்டிலுமன்று என்றும் எடுத்துக் கூறி, ஆசையுடன் கூடிய பிறவிகளை ஒழிப்பதற்குத் தவம் முயலும் மணிமேகலை அவன் சாவிற்காகப் பெருந்துயரம் கொள்ளக் கூடாதென்றும் அறிவுரை கூறுகிறது.[23]

கற்புத் தானிலள் நற்றவ உணர்விலள்
வருணக் காப்பிலள் பொருள் விலையாட்டி[24]

என்று இகழ்ந்தோன் என்றும் எண்ணாது, புதுவோன் பின்னர்த் தன் உள்ளம் சென்றதற்குக் காமத்து இயற்கையே காரணம் என்று மணிமேகலை கருதினாள். 'இதுவோ அன்னாய் காமத்தியற்கை'[25] என்று வியந்தாள். எனினும், உதயகுமரனுடைய காமத்திற்கும் மணிமேகலையின் மனம் தடுமாறியதற்கும் தாம்தாம் காரணமாக அமையவில்லை என்றும் முன்வினைத் தொடர்பே அடிப்படை யென்றும் சாத்தனார் தெளிவுபடுத்துகின்றார்.

கந்திற்பாவையின் அறிவுரைக் கேட்ட மணிமேகலை, முற் பிறப்பில் அவன் பாம்பு கடித்து இறக்கவும்,இப்பிறவியில் கொலைப்

படவும் காரணம் யாதெனக் கந்திற்பாவையிடம் கேட்கிறாள்; பாவையும், காயங்கரை என்னும் பேரியாற்றின் அடைகரையில் புத்த தேவன் பெருமையினைச் சொல்லி அறம் உரைத்த பிரம தருமன் என்பவனை இவர்கள் இருவரும் வழிபட்டதும் அவனுக்கு இவர்கள் அடுத்த நாள் அமுது படைக்க விரும்பி விண்ணப்பித்ததும், அவ்வாறே அமுதூட்டும் வேளையில் சமையற்காரன் நடைதவறித் தளர்வுற்றுத் தன் கையில் எடுத்துவந்த சோற்றுப் பாத்திரம் கீழே விழுமாறு போட்டுத் தானும் வீழ்ந்ததும் அறிந்து தவத்தோர்க்குச் செய்யும் கடனில் பிழைத்தோமென்று கருதி அடங்காத சினத்துடன் சமையற்காரனைத் தோளும் தலையும் வேறாகுமாறு வெட்டி வீழ்த்தியதும் ஆகிய இராகுலனது கொடுஞ்செயல் இப்போது வினையின் விளைவாகியது என்பதை,

தோளும் தலையும் துணிந்துவே றாக
வாளிற் றப்பிய வல்வினை யன்றே
விராமலர்க் கூந்தல் மெல்லியல் நின்னோடு
இராகுலன் தன்னை யிட்டக லாதது26

எனக் கூறுகிறது. மேலும் தாம் செய்த தீவினையின் விளைவால் வரும் துன்பப் பயன் வந்துறாதவாறு கடவுள் காத்தருள்வார் என்று சொல்லுபவர் அறியாமையுடையவர்களாவர்; அறத்தினைச் செய்கின்ற விருப்பத்தினாலே எழுந்த அன்பின் காரணமாகவே யானாலும் தீவினை செய்யப்பட்டுள்ளதானால் அத்தீவினை தன் வலிய வினைப்பயனை ஊட்டாமல் ஒழியாது; அத்தீவினை வந்து அணுகுகின்ற பொழுதிலே உயிர் துன்பத்தினையடையும்; ஆயினும் தான் இம்மையில் செய்யும் நல்வினைகளின் காரணமாகப் பின்வரும் பிறப்புக்களில் உய்திபெற்று வீடுபெறுதலும் கூடும்; அத்தகைய வினையின் பயன்தான் உதயகுமரனுக்கு இவ்விடத்தே வந்து வாய்த்து இத்தகையதொரு துன்பத்தைத் தந்து போயிற்று என்பதை,

தலைவன் காக்கும் தன்பொருட் டாக்கிய
அவல வெவ்வினை ....
மறஞ்செய் துளதெனின், வல்வினை யொழியாது;
ஆங்கவ் வினைவந் தணுகுங் காலைத்
தீங்குறும்; உயிரே செய்வினை மருங்கின்
மீண்டுவரு பிறப்பின் மீளினும் மீளும்;
ஆங்கவ் வினைகாண் ஆயிழை கணவனை
ஈங்குவந் திவ்விடர் செய்தொழிந் தது27

என்னும் அடிகளால், கந்திற்பாவை, தன் வரலாறு கூறி, மணிமேகலைக்குப் பின்வரும் முடிவையும் உணர்த்தி அவளைத் தெளிவுபடுத்துகிறது. கடவுட் கோட்பாடுடைய வைதிக சமயத்தவர்தம்

வினைக் கொள்கையைச் சாத்தனார் இவ்விடத்தே மறுத்து, வினையே பயனளிக்கும் ஆற்றலுடையது என்னும் பௌத்தக் கொள்கையை நிலைநாட்டுகிறார்.

இவ்விடத்து நடைபெற்ற நிகழ்ச்சிகள் வினையின் விளைவால் நடைபெற்றன; அவரவர் செய்த வினையின் பயனை அவரவரே அனுபவிக்க வேண்டும்; ஒருவன் செய்த வினையின் பயனை கடவுள் மாற்றுவான் என்பது அறியாமையுடையவர் கூறும் கருத்து;வலிமையுடைய வினை தன் பயனை ஊட்டாது கழியாது; முற்பிறப்பின் தீவினைப் பயனால் இப்பிறப்பில் துன்பம் அனுபவிக்கும் உயிர்கள் செய்யும் நல்வினை காரணமாக நற்பிறப்பினையடைந்து வீடுபெறுவதற்கு வாய்ப்புண்டு என்னும் ஊழ்க் கோட்பாட்டிற்குரிய கருத்துக்களைச் சாத்தனார் வலியுறுத்துவது குறிப்பிடத் தக்கதாகும்,

முனிவர் உணர்த்தும் முன்வினை :

காஞ்சனனால் உதயகுமரன் கொல்லப்பட்டான் என்பதை மன்னனிடத்தில் சக்கரவாளக் கோட்டத்தில் தங்கியிருந்த முனிவர்கள் மன்னனைக் கண்டு வாழ்த்தி நடந்த செய்தியைக் கூறுகின்றனர். அவ்வாறு வாழ்த்தும்போது,

நினக்கென வரைந்த ஆண்டுகள் எல்லாம்
மனக்கினி தாக வாழிய வேந்தே[28]

என்னும் அடிகளில் ஊழ்வினையால் வரையறுக்கப்பட்ட ஆண்டுகள் எல்லாம் நீ இனிதே வாழ்வாயாக என்று வாழ்த்துகின்றனர். பின், உதயகுமரன் மறைவு பற்றி நேரடியாகக் கூறாமல், காமத்தால் பத்தினிப் பெண்டிரையடைய விரும்பிச் சென்று நெருங்கியும், நல்ல தவநெறி மேற்கொண்ட பெண்களின்மீது உள்ளத்தைச் செல்ல விட்டும், செய்த தீவினைப் பயன் வந்து உருப்ப உயிருக்கு இறுதி செய்து கொண்டோர் இன்று மட்டுமன்று முற்காலத்திலும் பலராவர் என்று கற்புடைய மருதி, விசாகை ஆகியோர் மீது ஆசை வைத்த ககந்தனின் இரண்டு மகன்களும் ககந்தனாலேயே வெட்டப்பட்டுத் தண்டனை வழங்கப் பட்டனர் என்று கதைகளைக் கூறிப் பின்னர் உதயகுமரன் செயலைக் கூறுகின்றனர்.[29] அவ்வாறு கூறும் போது, 'ஆங்கவன் தீவினை யுருத்ததாகலின்' விஞ்சையனால் உதயகுமரன் வெட்டப்பட்டான் என்று முனிவர்கள் கூறுகின்றனர்.[30] இவ்வாறு ஆசிரியர் உதயகுமரன் இறப்பிற்கு ஊழ்வினையே காரணமென்பதைப் பல இடங்களிலும் வலியுறுத்துகிறார்.

பாசமும், ஊழும் :

மன்னன் ஆணையின் வண்ணம் மணிமேகலை சிறையில் வைக்கப்படுகிறாள்; அரச குடும்பத்திற்கு அறவுரை கூறக் கூடிய

தகுதிபெற்ற வாசந்தவை என்னும் நரை மூதாட்டி அரசியிடம் சென்று மகனை இழந்த அரசியின் துன்பத்தை மாற்றுவதற்குப் பல ஆறுதல் மொழிகளைக் கூறியும், அரசி வருத்தம் நீங்காமல் வஞ்சனையாக எண்ணத் தொடங்குகிறாள்; மன்னனிடம் சென்று துறவு கொண்டு அறவழிப்பட்ட மணிமேகலையை சிறையில் வைப்பது நன்றன்று என்று கூறி, அவளை விடுதலை செய்து தன்னுடனே வைத்துக் கொள்ள விரும்புவதாக வேண்டுகின்றாள்; அவ்வாறே விடுதலை செய்வித்துத் தன்னிடத்திற்கு அழைத்துச் சென்று, மணிமேகலைக்கு மருந்து ஊட்டியும், கல்லா இளைஞன் ஒருவனை ஏவிக்கெடுக்க முயன்றும், உணவு கொடாதும் துன்புறுத்து கிறாள். தான் கற்ற மந்திரங்களின் துணையுடன் ஆணுருப் பெற்றும், பசியொழித்தும் நலமுற இருக்கிறாள்; அதனையுணர்ந்த அரசி வியப்புற்று உள்ளம் நடுக்கமுற்றுத் தான் செய்த பிழைக்காக மணிமேகலையிடம் வருந்திப் பொறுத்தருள வேண்டுகிறாள். அப்பொழுது மணிமேகலை முற்பிறப்பில் நீலபதி வயிற்றில் பிறந்த இராகுலன் இறந்த நாளில் அரசி எங்கிருந்து அழுதாள் என்று கேட்கிறாள்; மேலும், 'மகனின் உடலுக்காக நீ அழுதாயோ? உயிரின் பொருட்டு அழுதாயோ? உன் மகனின் உடலைப் புறங் காட்டில் இட்டவர்தாம் யாவரோ? உயிருக்காக நீ அழுதாயானால் செய்வினையின் வழியே அவ்வுயிர் மீளவும் புகுகின்ற இடத்தைத் தெரிந்து உணர்தலோ நினக்கு அரிய செயலாகும். அந்த உயிரிடத்தில் நீ அன்புடையவள் என்றால் அஃது எவ்வுடலில் இருக்கும் என்பதைஅறியாத நீ, எல்லா உயிர்களிடத்துமே இரக்கங் கொண்டவளாக விளங்குதல் வேண்டும்; முற்பிறப்பில் சமையல் காரனை இராகுலன் கொன்றதாகிய வலிமையுடைய ஊழ்வினை உருத்துவந்து, இப்பொழுது விஞ்சையனின் வாளினால் அவனை வெட்டி வீழ்த்தியது' என மணிமேகலை கூறியதாக,

உடற்கழு தனையோ உயிர்க்கழு தனையோ
உடற்கழு தனையே லுன்மகன் தன்னை
எடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே
உயிர்க்கழு தனையேல் உயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையால் தெரிந்துணர் வரியது
... ...
மடைக்கலம் சிதைய வீழ்ந்த மடையனை
உடற்றுனி செய்தாங்கு உருத்தெழும் வல்வினை31

என்னும் அடிகளால் சாத்தனார் விளக்குகிறார். மேலும் உவவனம் சென்றது முதலாகக் கந்திற்பாவை கூறியது கேட்டுத் தான் தெளி வுற்றது ஈறாக நிகழ்ந்ததெல்லாம் கூறுகிறாள். வான்வழி செல்லல், அயலுருக் கொள்ளல் ஆகிய ஆற்றல் பெற்றிருந்தும் அவ்வாறு

செல்லாது அரசி கொடுத்த துன்பங்களைத் தாங்கியது, சென்ற பிறவியில் தன் கணவனின் தாயாக இருந்தவள் அரசியாதலின் அவளது கொடுஞ்செயல்களை மாற்றித் திருத்தவேயாகும் என்று சொல்லிக் காமம், கொலை, கள், பொய், களவு ஆகிய குற்றங்களின் கேட்டினைக் கூறி அரசிக்கு அறிவுரை வழங்குகிறாள். அதன்பின் அரசி மனத் தெளிவு பெற்று மணிமேகலையை வணங்க, அதனைப் பொறாத மணிமேகலை தன் முற்பிறப்புக் கணவனை இப்பிறப்பில் ஈன்ற தாயும் அரசியுமாதலின் தான் வணங்குவதே முறையென்று கூறி வணங்கியதாகவும் ஆசிரியர் கூறுகிறார்.32

இவ்விடத்தில் மன்னன் அறநெறிக்கும் செங்கோன்மைக்கும் முதன்மை தந்து மகன் சாவு பற்றிக் கவலை கொள்ளவில்லை யென்பதையும், அரசியின் தாயுள்ளம் தன் மகன்மேல் கொண்ட பாசத்தின் காரணமாக மணிமேகலையின் காழ்ப்பாகப் பழி தீர்த்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடுகின்றாள்; மணிமேகலை தான் தப்பிச் செல்லுதற்கேற்ற வாய்ப்பிருந்தும் அரசியைத் தெளிவிக்கும் நல்ல நோக்கத்துடன் அரசி கொடுத்த துன்பங்களைத் தாங்கியும் அவளது தீய செயல்களினால் பற்றப் படாதவளாகித் தன் ஆற்றலை உணருமாறு காட்டி அரசி அஞ்சிப் பணியவும், அறநெறியினை உணர்த்தி அவளைத் தெளிவிக்கின்றாள். பாசத்தின் காரணமாகப் பாவம் செய்த அரசியின் கொடிய மனத்தினை, ஊழ்வினையின் வலிமை யினை எடுத்துக் காட்டித் திருத்தித் தெளிவிப்பதின் வழி, ஊழின் இயல்புணர்ந்தால் பாசத்தை நீக்கலாம் எனவும் பாச நீக்கத்திற்கு ஊழ் துணையாகும் எனவும் சாத்தனார் குறிப்பிடுகிறார்.

அறவணர் அறிவுரையும் ஊழும்:

மணிமேகலைக்கு நேரிட்டதையெல்லாம் கேள்வியுற்ற மாதவி வருத்தமுற்று வந்து அறவணர் திருவடிகளில் வீழ்ந்து வணங்குகிறாள்; பின் அறவணர் மாதவியுடன் அரசமாதேவியைக் காண வருகிறார்; அரசி தன்னுடைய நல்வினைப்பயன் அறவணரைத் தன்னிடம் அழைத்து வந்ததாகக்கூறி வரவேற்றுப் போற்றுகிறாள். அறவணர் யாவருக்கும் அறிவுரை கூறும்போது பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம், வினைப்பயன் ஆகிய பன்னிரு நிதானங்களின் இயல்பறிந்தோர் பெரும்பேறாகிய நிருவாணநிலையடைவர் அறியாதோர் நரகத்தினையடைவர் என்று கூறுகின்றார். மேலும் மேல், கீழ் நடு, என்னும் உலகம் மூன்றனுள்ளும் உயிர்களுக்கான உலகம் (சேதனப் பிரபஞ்சம்) தன்னளவிலே அளவற்ற பகுப்பு உடையதாகும்; பல்வேறு உயிர் வகைகளான மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்கின் தொகுதிகள், பேய்த் தொகுதிகள் என அறுவகைப்பட்டனவாம்; உயிர்கள் தாம் செய்த நல்வினை, தீவினை

என்னும் இரண்டினால் மேற்சொல்லப்பட்ட உயிர் வகைகளுள் தமக்குரியதான ஒரு கருவினுள்ளே சென்று பிறந்து, வினைப்பயன் வந்து விளைகின்ற காலத்தில் அவையவை செய்த வினைகளுக்கு ஏற்றபடியே மனப்பேரின்பமும் கவலையும் காட்டும் என்கிறார்[33]

தீவினைகளாவன, உடலில் தோன்றும் கொலை, களவு, காமம் என்னும் மூன்றும், சொல்லில் தோன்றும் பொய், கோள், கடுஞ்சொல், பயனில்சொல் என்னும் நான்கும், மனத்தில் எழுவன வாகிய வெஃகுதல், வெகுளல், மயக்கம் என்னும் மூன்றும் ஆகிய பத்து வகையானும் நிகழ்வனவாம். வினையின் பயனைத் தெரிந்த அறிவுடையோர் இத்தீய வழிகளில் செல்லார்; அங்ஙனம் செல்லு பவர் விலங்கும் பேயும் நரகருமாய்க் கலக்கமுற்ற உள்ளக் கவலையில் சிக்கி உழல்பவராவர்;[34]

நல்வினைகளாவன, பத்து வகைத் தீவினைகளிலிருந்தும் நீங்கி, நல்லொழுக்கத்தினை மேற்கொண்டு, தானம் செய்தலில் ஈடுபட்டு உயர்வுடையன என்று சான்றோரால் வகுக்கப்பட்ட மூவகையினையுடைய தேவரும் மக்களும் பிரமரும்ஆகிப் பொருந்திய உள்ள மகிழ்ச்சியாகிய நல்வினைப் பயனை அனுபவிப்பர். ஆதலின் இவ்வுலகில் நல்லறமே செய்தற்குரியது எனக் கூறிய அறவணர் அறிவுரை, பிறப்பிற்கே காரணமானது ஊழ்வினை என்பதையும், நல்வினை, தீவினைகளுக்குரிய பிறப்புப் பற்றியும், வினைகளுக் கேற்பவே இன்ப துன்பங்கள் அமைகின்றன என்பதையும் வற்புறுத்துவதாக அமைந்துள்ளது.[35]

பத்தினிக் கடவுளும், ஊழ்வினையும் :

மணிபல்லவத்திலிருந்து வான்வழியே மணிமேகலை வஞ்சி மாநகரையடைகிறாள். கற்புத் தெய்வமாகிய தாய் கண்ணகிக்கும் தந்தை கோவலனுக்கும் தெய்வமாக எழுதியமைக்கப்பட்ட கோட்டத்திற்குச் செல்கிறாள்; இருவரையும் வணங்கி ‘அன்புடைய கடமையில் நிலைபெறாமலும், நல்ல தவநெறியை மேற்கொள்ளா மலும், கற்பாகிய கடமையினையே மேற்கொண்டு நுமது பிறவிக் கடனை முடித்தீர். அதன் காரணத்தை எனக்கு அருளிச் செய்தல் வேண்டும்’ என்று கண்ணகிப் படிமத்தின் முன்னின்று கேட்கின் றாள்.[36] கண்ணகி, கோவலனுக்கு நேர்ந்த துன்பம் தாங்காமல் சினங்கொண்டு மதுரைநகரை எரித்தநாளில், மதுராபதித் தெய்வம் தன்பால் வந்து முற்பிறவி வரலாற்றை எடுத்துக் கூறியும் சினந் தணியாது மதுரை நகரை சிதைத்த செய்தியும், முன்செய்த நல்வினையின் காரணமாக விண்ணுலகம் சென்றதாகவும், வினைப் பயனை அங்கு அனுபவித்து முடித்தபின், தான் மதுரையை அழித்த தீவினை தன்னை எவ்வகையானும் அடையாமற் போகாதுஆதலின்,

இவ்வுலகில் மீண்டும் பல பிறப்புக்களை எடுத்து எவ்விடத்தும் இரு வினைகளினாலே செலுத்தப்பெற்றுப் பிறவிக் கடலிடை நீந்திப் பிறந்தும் இறந்தும் உழலப் போவதாகவும் கூறிய செய்தியை,

மேற்செய்நல் வினையின் விண்ணவர்ச் சென்றேம்
அவ்வினை இறுதியின், அடுசினப் பாவம்
எவ்வகை யானும் எய்துதல் ஒழியாது
உம்ப ரில்வழி யிம்பரிற் பல்பிறப்பு
யாங்கணும் இருவினை உய்த்துமைப் போல
நீங்களும் பிறவிக் கடலிடை நீந்திப்
பிறந்தும் இறந்தும் உழல்வோம்[37]

என்னும் அடிகளால் அறிய முடிகிறது. இவ்வாறு பிறவிகளில் உழன்றபின் புத்தர் அருளிய தானம், சீலம், பொறை, வீரியம், தியானம், உணர்ச்சி, உபாயம், அருள்,வலி, ஞானம் என்னும் பத்து வகை ஒழுக்கங்கள், துயரம், துயரத் தோற்றம், துயர நீக்கம், துயர நீக்க நெறி என்னும் நால்வகை வாய்மைகள், பேதைமை முதல் வினைப்பயன் ஈறான பன்னிரு நிதானங்கள் ஆகியவற்றில் ஒழுகி இந்திரவிகாரம் ஏழினையும் வணங்கிய நல்வினையால் மீண்டும் பிறவாமல் இறுதியில் வீடுபேறடைவோம் என்று பத்தினித்தெய்வம் கூறி மணிமேகலைக்கு வேண்டிய அறிவுரையும் வழங்கியதாகச் சாத்தனார் கூறுகிறார்[38]

பத்தினிக்கடவுளே வினைப்பயனால் தான்மீண்டும் பிறப்பில் உழல வேண்டுமென்று கூறுவதுகொண்டு, யாவரேயாயினும் ஊழ் வினையின் பயனிலிருந்து தப்பமுடியாது என்பதும் செய்தவினையின் பயனைத் துய்த்து, நல்லறம் செய்து வினைநீக்கம் பெற்றே வீடு பேறடைய இயலும் என்னும் ஊழ்க்கோட்பாட்டினைச் சாத்தனார் வலியுறுத்துவதை உணரமுடிகிறது.

சமயக்கணக்கரும், ஊழும்

மணிமேகலை பத்தினிக் கோட்டத்தில் தெய்வத்தை வணங்கி அறிவுரை பெற்றுத் தவமுனிவன் வடிவம் தாங்கி வஞ்சி நகரில் வாழும் சமயக் கணக்கராகிய அளவைவாதி, சைவவாதி, பிரமவாதி, வைணவவாதி, வேதவாதி.ஆசீவகவாதி.நிகண்டவாதி, சாங்கியவாதி, வைசேடிகவாதி, பூதவாதி ஆகிய பலரையும் கண்டு அவரவர் சமயத்துக் கூறப்பட்ட உண்மைப் பொருள்களை உரைக்குமாறு கேட்டறிகிறாள்.[39] பத்துவகைச் சமயநெறிகளை கூறினும், 'ஐவகைச் சமயமும் அறிந்தனள் ஆங்கென்'[40] எனச் சமயக் கணக்கர் தந்திறங்கேட்ட காதை இறுதியில் ஆசிரியர் கூறிய தனால், அளவை வாதம் முதல் வேத வாதம் ஈறாகியவற்றை ஒன்றாகவும், ஆசீவகம், நிகண்டவாதம் இரண்டையும் ஒன்றாகவும், ஏனைச் சாங்கியம், வைசேடிகம், பூதவாதம் மூன்றாகவும் கொண்டு ஐவகைச் சமயம் என்றார் என்பர் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை[41]

> சாத்தனார் மொழிந்துள்ள பத்து தத்துவங்களையும் வைதிக தரிசனம் அல்லது ஆத்திக தத்துவம் என்றும், அவைதிக தரிசனம் அல்லது நாத்திக தத்துவம் என்றும் இருபெரும் பிரிவுக்குள் அடக்கிக் கூறலாம், ஆசீவகம், நிகண்டம், பூதவாதம் என்ற மூன்றும் வேதங்களைப் புறக்கணித்த நாத்திக தத்துவங்களாகும். எஞ்சியன ஆத்திகம் சார்ந்தன[42]

என்று சோ. ந. கந்தசாமி கூறுகிறார்.

அளவைவாதி பொருள்களின் உண்மைகளை ஆராய்ந்து காண்பதற்குரிய அளவைகளைப் (பிரமாணங்கள்) பற்றி மட்டும் பேசுபவன். நியாயம் எனப்படும் நையாயிகம் வைதிக தத்துவங்களுள் முதலில் நிற்பது. இந்நெறிக்குத் தனியே தத்துவம், அறிவியல், மதவியல் முதலிய துறைகள் இருப்பினும் அளவையியல் ஒன்றையே ஆழ்ந்து நோக்குவதுஇச்சமயத்தின் சிறப்பியல்பாதலின் சாத்தனார் நையாயிகரின் அளவையியல் கருத்துக்களை மட்டும் தம் நூலில் கூறுகிறார் என்பர் சோ. ந. கந்தசாமி.[43]

சைவவாதி, உயிர்கட்கு உடலும் கருவியும் உலகும் பிறவும் படைத்தளித்துக் காத்தலும், அவ்வுயிர்கட்கு உண்டாகும் இளைப்பு முதலிய நீங்குதற் பொருட்டு ஒடுக்குதலும் செய்து, அவ்வுயிர்கள் செய்யும் வினைக்கேற்ப, இன்பமும் துன்பமும் ஆகிய பயன்களை முறைசெய்து வழங்குதலும் செய்தலின் தன் இறைவனாகிய சிவனே முதல்வன் என்றுரைத்தவிடத்து, உயிர்களுக்கு அவற்றின் ஊழ் வினைக்கேற்ப இன்ப துன்பங்களை அம்முதல்வன் ஊட்டுவான் என்னும் சைவ சமயத்தின் ஊழ்க் கோட்பாடு விளக்கப்படுகிறது.[44] அடுத்து பிரமவாதி, வைணவவாதி, வேதவாதி, சாங்கியவாதி, வைசேடிகவாதி ஆகியோரது வினைக் கொள்கையினைச் சாத்தனார் குறிப்பிடவில்லை என்பது அறியத் தக்கது.

ஆசீவகர்கள் அணுக் கொள்கையினர்; நியதிக் கோட்பாட்டினையுடையர்; நல்ல பயன்களைப் பெறுதலும், பல்வேறான இடையூறுகள் வந்து நேரிடுதலும் சேர்ந்துள்ள இடத்தில் தானே அடைந்திருத்தலும், துன்பமும் இன்பமும் அனுபவித்தலும், அவை நீங்கப் பெறுதலும், பிறத்தலும் இறத்தலும் ஆகிய அனைத்துமே ஓர் உயிரானது கருவிற்பட்ட பொழுதே அதனைச் சார்ந்து விடுவனவாகும்; இன்பமும் துன்பமும் ஆகிய இவையனைத்தும் அணுவெனவே கூறத் தக்கவையாம். முற்பிறப்பில் செயலின் பயனாலாகிய ஊழ்வினையே பின்வரும் பிறப்பிலும் அவ்வுயிரினையடைந்து அவ்வவ் வினைகளுக்கு ஏற்ற பயனை அவற்றுக்கு நுகர்விப்பது என மற்கலிகோசர் உரைத்த கருத்தினை ஆசீவகன் மணிமேகலைக்கு,

பெறுதலும் இழத்தலும் இடையூறு உறுதலும்
... .
இன்பமும் துன்பமும் இவையும் அனுவெனத் தகும்
முன்னுள ஊழே பின்னுறு விப்பது
மற்கலி நூலின் வகையிது வென்ன45

என்னும் அடிகளால் கூறியதாக அறிய முடிகிறது.

நிகண்டவாதிகள் என்போர் சமண சமயத்தினர். அருகபரமேட்டி இவர்தம் இறைவன். அவன் உரைத்த நூற்பொருள் தன்மாத்திகாயம், அதன்மாத்திகாயம், காலம், ஆகாயம், குற்றமற்ற சீவன், பரமாணுக்கள், நல்வினை, தீவினை அவ்வினையால் பெறும் கட்டு, வீடு என்னும் பத்துமாகும். நல்வினையும் தீவினையுமாகிய அவை இரண்டையும் நிகழ்த்தும் இன்பதுன்பமாக, அவை வரும் வழி இரண்டையும் மாற்றி,முன்செய்த அரிதான வினைகளின் பயன்களை ஒருங்கே அனுபவித்துக் கழிப்பதாகிய அதுவே வீடு பேறாகும் என்பதை நிகண்டவாதி கூறுவதனால் பிறப்பிற்கும் இன்ப துன்பங்களுக்கும் ஊழ் காரணமாக அமைகிறது என்னும் உண்மை விளங்கும்.46

உயிரும் உடம்பும் பிறத்தற்கு ஏற்ற பூதக் கூறுகளின் வழியாகவே அவை தோன்றுகின்றன என்பதும் காட்சியளவை மட்டுமே உண்மையென்பதும் பூதவாதியின் கருத்துக்களாம். இம்மைப் பிறப்பும் இம்மைப்பயனும் ஆகிய எல்லாம் இப்பிறப்புடனேயே அழிவனவாகும். மறுபிறப்பு என்ற ஒன்றும் மறுமையில் வினைப் பயனை அனுபவித்தல் என்பதும் பொய்யேயாகும் என்று பூததத்துவ வாதி (உலோகாயதவாதி) கூறுகிறான். இவ்வாறு எல்லாச் சமயங்களின் உண்மையையும் கேட்ட மணிமேகலை, 'முற்பிறப்பை அறிந்தார் உண்டோ' எனக் கேட்ட பூதவாதிக்கு, 'தாய் தந்தையரை அனுமானத்தினாலல்லது எவ்வாறு அறிய முடியும்' என்ற வினாவைக் கேட்டு, அதுபோலவே வினைப் பயன், அதனால் தோன்றும் பிறப்பு ஆகியன பற்றியும் அனுமானத்தால் அறிய வேண்டுமென்று மணிமேகலை கூறியதாகச் சாத்தனார் வற்புறுத்துகிறார். இவ்வாறு பல்வகைச் சமய நெறியினர் ஊழ் பற்றிக் கொண்டிருந்த கொள்கையினைச் சாத்தனார் சமயக்கணக்கர்தம் திறம்கேட்ட காதையுள் குறிப்பிடுகின்றார்47

காப்பிய முடிவும் ஊழும் :

வஞ்சி மாநகரில் சமயக் கணக்கரிடம் பல சமய நெறிகளின் உண்மையை அறிந்த மணிமேகலை பௌத்தப் பள்ளியினை அடைகிறாள்; அங்குத் துறவு பூண்டு மாதவம் செய்துவரும் கோவலன் தந்தையாகிய மாசாத்துவானைக் காண்கிறாள்;'அவனைக் கண்டது

தன் நல்வினைப் பயன்' என மாசாத்துவான் கூறுகிறான். மேலும், 'தீவினையானது வந்து உருத்தலினால் உன் தந்தையாகிய கோவலன் மதுரைக்குச் சென்றான்; தான் முன்செய்த நல்வினைப் பயனால் தேவருலகத்து வாழ்வினைப் பெற்றிருப்பவனாயினான்; அவ்விடத்தே அவன் வினைப் பயன் கழிந்த பின் மீளவும் பிறந்து தீவினையின் பயன்களையெல்லாம் இன்னும் அவன் அனுபவித்து, போதிநாதன் அறிவுரை கேட்டுத் தவநெறி தாங்கித் தன் மனைவியான கண்ணகியோடும் முன்வினைத் தவப் பேற்றினாலே வீட்டு நிலையடைவான்' என்று அறவணர்[48] கூறியதைத் தான் கேட்டதாகவும், இவ்வுண்மையெல்லாம் அவளுக்கும் கந்திற்பாவை உரை மூலம் தெரியுமெனவும், அறவணர், மாதவி, சுதமதி ஆகிய மூவரும் மணிமேகலையின் அறத்திற்கு ஏதுவாகிய இடம் காஞ்சி நகரமே ஆதலின் அங்குச் சென்று தங்கியுள்ளனர் என்றும் மாசாத்துவான் கூறுகிறான். அவனிடம் விடைபெற்று மணிமேகலை காஞ்சி மாநகரம் வந்து சேர்கிறாள்; வறுமையுற்றிருந்த நாட்டில் மக்களின் பசிப் பிணியைப் போக்கி, அறவணர், மாதவி, சுதமதி மூவரையும் வணங்குகிறாள். அறவணர், தவத் திறம் பூண்டு தருமம் கேட்ட காதை, பவத் திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை இரண்டிலும் முழுவதுமாக புத்த சமய உண்மைகளை மணிமேகலைக்கு உரைக்கிறார்.

> பவமெனப் படுவது கரும ஈட்டம்
> தருமுறை இதுவெனத் தாந்தாம் சார்தல்[49]

எனவரும் அடிகளால், பவம் என்று சொல்லப்படுவது கருமங்களின் தொகுதி என்றும், அக்கருமத் தொகுதி தன்பயனை விளைவித்துக் கொடுக்கும் முறைமை இதுவெனக் கருதி, விளைவு துன்பமாயினும் அதனை அனுபவிப்பதற்கு உடன்பட்டு அமைதல் வேண்டுமென்று கூறும் சாத்தனார், அறவணர் கூறிய புத்த தருமம் முழுவதும் கேட்டு மணிமேகலை ஞானச் சுடரைப் பெற்றவளாகி, தவநெறிகளுக்குரிய மரபுகளை மேற்கொண்டு, 'என் பிறப்புக்குக் காரணமாகிய குற்றங்கள் (தீவினைகள்) நீங்குக' என உள்ள உறுதியுடன் நோன்பு இயற்றுவாளாயினள் என்பதை,

> தவத்திறம் பூண்டு தருமங் கேட்டுப்
> பவத்திறம் அறுகெனப் பாவை நோற்றனளென்[50]

என்று சாத்தனார் காப்பியத்தை முடிக்கிறார். அவ்வாறு முடிக்கும் போதும் ஊழ்வினைக்குக் காரணமான தீவினைகள் நீங்குக எனக் கூறுவதுகொண்டு ஊழ்க் கோட்பாடு மணிமேகலைக் காப்பியத்தில் பெறும் சிறப்பிடத்தினை அறிய முடிகிறது.

முற்பிறப்பும் மறுபிறப்பும் :

மணிமேகலைக் காப்பியம் முழுவதும் முற்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்பு, நல்வினை, தீவினை, புத்த தருமம் முதலான அறக் கோட்பாடுகள் வலியுறுத்தப் படுகின்றன. இக்காப்பியத்தின் தலைவியாகிய மணிமேகலை, மணிமேகலா தெய்வத்தால் மணி பல்லவத் தீவிற்குக் கொண்டு செல்லப் படுகிறாள். அத்தீவில் உள்ள தரும பீடிகை என்னும் புத்த பீடிகை (அறத்தகையாசனம்) யினை அவள் வணங்கி எழுகிறாள், எழும்போது அவளது பழம்பிறப்பை யுணர்ந்து கொள்கிறாள். அசோதரம் என்னும் நகரில் அரசாண்டு வந்த இரவிவர்மன் என்பவனுக்கும் அவனுடைய மனைவி அமுதபதி என்பவளுக்கும் மகளாகப் பிறந்து இலக்குமி என்னும் பெயருடன் வாழ்ந்தவள் மணிமேகலை. அத்திபதி என்னும் அரசனுக்கும் நீலபதி என்னும் அரசமாதேவிக்கும் பிறந்தவன் இராகுலன். அவ்விரா குலனே மணிமேகலையின் முற்பிறப்புக் கணவனாக இருந்தான்; அவன் சமையற்காரனைக் கொன்ற ஊழ்வினையின் காரணமாகத் திட்டிவிடம் உண்ணப்பட்டு இறந்தான்; மணிமேகலை ஈமத்தீயில் உடனுயிர் துறந்தாள்; அவளது தமக்கையராக இருந்த தாரை, வீரை இருவரும் கச்சயம் என்னும் நாட்டையாண்ட துச்சயன் மனைவியராக இருந்து இறந்தனர். அவர்களே மறுபிறப்பில் முறையே மாதவியாகவும், சுதமதியாகவும் பிறந்தனர். மணிமேகலை மேல் காதல்கொண்ட உதயகுமரன் அவளது முற்பிறப்புக் கணவ னாகிய இராகுலனேயாவான். இவனது ஊழ்வினையின் காரணமாக விஞ்சையனால் வெட்டப்பட்டு இறக்கின்றான். விஞ்சையனாகிய காஞ்சனன் மனைவி காயசண்டிகையின் முற்பிறப்பு அவள் விருச்சிக முனிவரால் பெற்ற சாபம், அவ்வூழ் வினையினால் அவள் பெற்ற துன்பம் ஆகியவை உணர்த்தப் படுகிறது.

கோவலன் கண்ணகியின் முற்பிறப்பு வரலாறு சிலப்பதி காரத்தில் கூறப்பட்டது போலவே இக்காப்பியத்திலும் கூறப் படுகிறது. இளங்கோவடிகள் கூறாத கண்ணகியின் மறுபிறப்பினைச் சாத்தனார் கூறுகின்றார். இளங்கோவடிகள் பத்தினியைத் தெய்வ நிலையில் காட்டினாராதலின் அவளுக்கு மறுபிறப்புண்டு எனக் காட்ட விரும்பவில்லை போலும். புகாரில் கோவலனுடனே இந்திர விகாரத்தைத் தொழுத நல்வினைப் பயனால் புத்தன் பிறந்து சொல்லும் அறத்தைக் கேட்டுப் பிறவி அறுவார்கள் என்று சாத்தனார் வெளிப்படுத்துகிறார். தம் காவிய மக்களின் மறு பிறப்பை இளங்கோகூறாது அப்பொறுப்பைச் சாத்தனார்க்கு விட்டு விட்டனரா? என வினாவையெழுப்பி,

> சிலப்பதிகாரம் நாடகமாதலின் கண்ணகி தெய்வமாய
> உச்சநிலையோடு நிறுத்துவதுதான் ஒக்கும். பத்தினித்

> தெய்வம் மறுபிறப்பு எடுத்தது; பிறப்பில் உழன்றதுஎனக் கதையை வளர்ப்பது சுவைக்கசப்பாய் நாடக வீழ்ச்சி யாய் முடியும். இப்பண்பினை நினைத்துப் போலும் இளங்கோ உம்மை, இம்மை மறுமைகளை மிகுதியாகக் கூறும் சாத்தனார்க்கு விட்டுவிட்டார். இதனை உட் கொண்டு போலும் 'மணிமேகலைமேல் உரைப்பொருள் முற்றிய சிலப்பதிகாரம்' என்று இளங்கோ நூலிறுதியில் சொல்லவேண்டியதாயிற்று ... ... மதுரை அழிவிற்கும் கோல் வளைவிற்கும் கோவலன் ஊழ்வினையே காரணம் என்பது இளங்கோவிற்கும் உடன்பாடாதலின், கண்ணகி தன்தீவினையால் மீண்டும் பிறப்பாள் என்னும் சாத்தனார் கொள்கையையும் உடன் பட்டிருப்பார் என்றே துணியலாம்51

என்று வ.சுப. மாணிக்கனார் கூறுவதுஇவ்விடத்தில் கருதத்தக்கது.

காப்பிய மாந்தர் பலரது முற்பிறப்பு மறுபிறப்புப் பற்றிய செய்திகள் சாத்தனாரால் ஊழ்வினைத் தொடர்புடன் கூறப்படு கின்றன. ஆபுத்திரன் வரலாறு, அவனது முற்பிறப்பு, இம்மைப் பிறப்பு ஆகியவை ஊழ்வினையுடன் தொடர்புடையனவாகவும், பிறப்பிற்குக்காரணம் ஊழ்ஆதலின் ஊழ்வினையினை விலக்குவதற்கு நல்லறம் செய்ய வேண்டுமென்று வலியுறுத்துவதற்காகக் காப்பியத்தில் பலவிடங்களில் பழம்பிறப்பினையும், இப்பிறப்பினை யும் கூறி வினைக்கோட்பாட்டினை ஆசிரியர் புலப்படுத்தியுள்ளார்.

கதை மாந்தர் வாயிலாக விளக்கப்படும் உண்மை

இக்காப்பியத்தில் வரும் கதை மாந்தருள் குறிப்பிடத்தக்கவர் அறவண அடிகள். தொடக்கத்தில் மாதவிக்கு அறிவுரை கூறித் துறவு கொள்ளச் செய்ததும். இறுதியில் தவத்திறம் பூண்டு, தருமங் கேட்டுப் பவத்திறம் அறுக எனப் பாவை நோற்பதற்குரிய அறிவுரைகளைக் கூறியவரும் அறவண அடிகளேயாவர்.

> பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
> பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்
> பற்றின் வருவது முன்னது; பின்னது
> அற்றோர் உறுவது அறிக52

என்னும் அடிகளில், இவ்வுலகில் பிறவி அடைந்தவர் அடைவ-தெல்லாம் மிகுதியான துன்பங்களேயாகும், இங்குமீளவும் பிறவாத நிலையினை அடைந்தவர் எவரோ அவர் அடைவதே மிகப் பேரின்பமாகும். முன்னதாகிய பிறவி பற்றின் காரணமாக வருவது, பின்னதாகிய பிறவாப் பெருநிலையோஅப்பற்றினை அற்றோர்கள்

மட்டுமே அடையக் கூடியது என்று அறவணர் கூறியதாகச் சாத்தனார் கூறுவர்.

சுதமதியை நோக்கி உதயகுமரன் மணிமேகலையுடன் நீ வந்தது ஏனோ? அதனைச் சொல்வாயாக! எனக் கேட்டான். அவனுக்குத் தன் வரலாறு கூறும்போது, பழைய ஊழ்வினைப் பயன் காரணமாகப் பிழைமணம் (தவறான திருமணம்) எய்தியதாக கூறுகிறாள்.[53] சக்கரவாளக் கோட்டத்தில் சார்ங்கலன் என்னும் பார்ப்பனச் சிறுவன் பேயினால் பற்றப்பட்டு உயிர்விட்டான், அவனது தாய் கோதமை என்பாள் சம்பாபதித் தெய்வத்தை நோக்கிப் புலம்பி அழுகிறாள்; அவள் முறையீட்டிற்கு இரங்கிய தெய்வம்,

அணங்கும் பேயும் ஆருயிர் உண்ணா
பிணங்குநூல் மார்பன் பேதுகந் தாக
ஊழ்வினை வந்திவன் உயிருண்டு கழிந்தது
மாபெருந் துன்பம்நீ ஒழிவாய்[54]

எனக் கூறியவிடத்தில் சார்ங்கலன் இறப்பிற்கு ஊழ்வினையே காரணம் என்பது வலியுறுத்தப்படுகிறது. துச்சயன் மனைவியராகிய வீரையும் தாரையும் இறந்தது குறித்து வருந்திய துச்சயனுக்கு அறவண அடிகள், 'பழவினைப் பயன் நீ பரியல் வேண்டாம்' என்று அறிவுரை கூறுமிடத்தில ஊழ்வினை குறிப்பிடப்படுகிறது.[55] காப்பியத் தலைவியாகிய மணிமேகலை, மணிமேகலா தெய்வம், கந்திற் பாவை, கண்ணகித் தெய்வம், காய சண்டிகை, ஆபுத்திரன், மாசாத் துவான் ஆகிய கதை மாந்தர் பலர் வாயிலாக ஊழ்வினை வலியுறுத் தப்படுவது இக்காப்பியச் சிறப்பாகும்.

மணிமேகலையும் பௌத்தக் கோட்பாடும் :

இக்காப்பியம் முழுவதும் பௌத்த மதக் கோட்பாடுகளும், ஊழ்வினைக் கோட்பாடும் வலியுறுத்தப் பெறுகின்றன. ஆயினும் தவத்திறம் பூண்டு தருமங்கேட்ட காதை, பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை இரண்டும் புத்தரின் கோட்பாடுகளை விளக்குவதற்காகச் சாத்தனாரால் படைக்கப்பட்டன என்று கருத வேண்டியுள்ளது. மணிமேகலை, முற்பிறப்பில் தனக்கு நிகழ்ந்த தனை அறிந்த பேற்றினையும் ஞானப் பரிபக்குவத்தையும் உடையவள். சீலங்களின் வழிநின்று, புத்தன், தருமம், புத்த சங்கம் ஆகியமூன்றையும் வணங்கிப் புத்த சங்கத்தையே அடைக்கல மாக அடைந்தாள்.[56] துக்கம், துக்க நீக்கம், துக்கத் தோற்றம், துக்க நீக்க நெறி என்னும் நான்கு வாய்மைகள், பேதைமை முதலாக வினைப்பயன் ஈறாகச் சொல்லப்பட்ட பன்னிரு நிதானங்கள், மூன்று

உலகங்கள், ஆறுவகை உயிரினங்கள், நல்வினை, தீவினை பற்றிய விளக்கங்கள் ஆகிய புத்த மதக் கொள்கைகள் அறவணரால் இக் கதையில் விளக்கப்படுகின்றன.

வினையின் காரணமாகப் பிறவி தோன்றுகிறது என்பது பௌத்த மதத்திற்கு உடன்பாடான கொள்கையாகும். வேட்கை, பற்று ஆகியவை பவத்திற்கு காரணமாகின்றன.

பவமெனப் படுவது கரும ஈட்டம்
தருமுறை இதுவெனத் தாந்தாம் சார்தல்[57]

என்னும் அடிகள், முன்செய்த வினைகளின் தொகுதி பவம் என்றும், அது தன் பயனை விளைவித்துக் கொடுக்கும் முறைமை இதுவாகு மென்று கருதி கருமத்தைச் செய்தோர் அப்பயனை உடன்பட்டு அமைய வேண்டும் என்றும் விளக்குகின்றன. பிறப்பு என்று சொல்லப் படுவது செய்த வினைகளின் தன்மைக்கேற்ப ஏனைய வற்றோடு மிகவும் சேர்ந்திருக்கும் உள்ளமானது, சார்போடு ஏற்ற கதிகளில் காரண காரியமாய்ப் பொருந்தும் உடம்புகளினிடத்தே சென்று தோன்றுவது[58] பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று இவையெல்லாம் ஒன்றை யொன்று சார்பாகக் கொண்டு தோன்றுவனவாம். பற்றினைச் சார்பாகக் கொண்டு கருமத் தொகுதி தோன்றும்; கருமத் தொகுதி காரணமாகப் பவமும் பிறப்பும் தோன்றும்; பிறப்பினைச் சார்பாகக் கொண்டு மூப்பு பிணி, சாக்காடு, அவலம், அரற்று, கவலை, கையாறு என்னும் நீங்காத துன்பங்கள் தோன்றும். பேதைமை முதலாக வரும் இவையெல்லாம் முடிவில்லாத மண்டில முறையாக மீண்டும் மீண்டும் தொடர்ந்து பிறவிகளைச் சூழ்ந்து நிற்பன என்பதனை,

பேதைமை சார்வாச் செய்கை யாகும்
....
பற்றிற் றோன்றும் கருமத் தொகுதி
கருமத் தொகுதி காரணமாக
வருமே ஏனை வழிமுறைத் தோற்றம்
தோற்றம் சார்பின் மூப்புப், பிணி சாக்காடு
அவலம் அரற்று கவலை கையாறு எனத்
தவலில் துன்பந் தலைவரும் என்ப,
ஊழின்மண் டிலமாச் சூழும் இந்நுகர்ச்சி[59]

எனக் கூறும் சாத்தனார் ஊழ்வினையினால் பிறப்பும், பிறப்பினால் துன்பங்களும் தொடரும் என்று கூறுகிறார். பின்வரும் அடிகளில் துன்ப மீட்சிக்கு வழிகூறும் அவர், பேதைமை முதலாகச் சொல்லப் பட்டவற்றில் ஒவ்வொன்றிலிருந்தும் நீங்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார்.[60]

இவ்வாறு அறவணர் பௌத்தக் கோட்பாடுகள் பலவற்றையும் மணிமேகலைக்கு எடுத்துக் கூறி, கட்டும், வீடும் பற்றியறிந்து கொண்டு, காமம், வெகுளி, மயக்கம் கடிந்து, அநித்தம், துக்கம், அநான்மா, அசுசி என ஆராய்ந்து பார்த்து பற்றறுத்திட்டு, மைத்திரி பாவனை, கருணை பாவனை, முதிதைப் பாவனை, அசுப பாவனை, உபேட்சா பாவனை ஆகியவற்றையறிந்து சினத்தை நீக்கி, சுருதி' சிந்தனை, பாவனை, தரிசனை என்னும் நான்கையும் கருதி மன மயக்கத்தைப் போக்குக'[61] என்று ஞானச் சுடரைக் காட்டியதாகச் சாத்தனார் கூறுகிறார். பௌத்த சமயக் கோட்பாடுகளுள் கருமத் தொகுதி, கரும ஈட்டம், கரும பலன், வினைப் பயன் எனக் கூறப்படும் ஊழ் வினைக் கோட்பாடு மணிமேகலையில் சிறப்பிடம் பெறுகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

மணிமேகலையில் ஊழும் அறிஞர் கருத்தும் :

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்துள் வலியுறுத்தியது போலவே சாத்தனாரும் மணிமேகலையில் ஊழ்க் கொள்கையை பெரிதும் வற்புறுத்தியுள்ளார்.

> மணிமேகலையின் துறவைக் காக்க அவன் வெட்டப்படுவதைத் தவிர வேறு வழியில்லை. ஊழ்வினை விஞ்சையன் வாள்கொண்டு உதயகுமரனை ஒழிக்கின்றது, எனவே மணிமேகலை காமங்கொண்ட தன் உள்ளத்தைத் தெய்வத் துணையால் வென்றாள்; காமத்தோடு வந்தானை ஊழ்துணையால் வென்றாள்.[62]

என வ. சுப. மாணிக்கனார் கூறும் கருத்து மணிமேகலையில் ஊழின் செல்வாக்கினைக் காட்டுவதாகிறது.

ஊழ் என்பது ஆசீவகர்களின் நியதிக் கோட்பாட்டினைக் குறிப்பது எனவும், ஊழ்க் கொள்கையும் வினைக் கொள்கையும் வெவ்வேறானவையெனவும் கூறும்[63] ர. விஜயலெட்சுமி, சைன சமயக் கர்மக் கொள்கையை வினையென மொழி பெயர்த்தது போலவே பௌத்தர்களின் கர்மக் கொள்கையும் வினையெனவே மணிமேகலையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்பதை 'வினைப் பயன்', 'தீவினை', 'நல்வினை' என மணிமேகலையில் வரும் இடங்களை எடுத்துக் காட்டுகிறார். மேலும் பௌத்தக் கொள்கைகளை விளக்குமிடங்களில் வினையென்ற சொல்லுடன் கருமம், கன்மம் என்ற சொற்களும் ஒரு பொருள் குறிக்கும் சொற்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைக் கரும ஈட்டம், கருமப் பெற்றி, கருமத் தொகுதி, கன்மக் கூட்டம், கன்ம ஈட்டம் என்னும் இடங்களை மேற்கோளாகக் காட்டிச் சாத்தனாரின் ஊழ்வினைக் கொள்கையினைத் தெளிவாக்குகிறார்.[64]

பாவம் செய்பவன் இம்மையிலும் மறுமையிலும் துன்புறுகிறான்; இரு உலகிலுமே அவன் துயரமடைகிறான்; தான் செய்த தீவினைகளின் விளைஙவக் கண்டு வருந்திக் கலங்குகிறான்; புண்ணியம் செய்பவன் இருமையிலும் இன்பம் அடைகிறான்; தான் செய்த புண்ணியத்தின் விளைவுகளைக் கண்டு அகம்மகிழ்ந்து சிரிக்கிறான்; மேலும் மேலான கதியையடைந்து இன்பத்தைப் பெறுகிறான் என்று தம்மபதம் நல்வினை, தீவினை, புண்ணிய பாவங்களைச் செய்தோர் அடையும் இன்ப துன்பம் பற்றிக் கூறுகிறது.[65] மேலும்,

> இரும்பிலிருந்தே உண்டாகி, துரு இரும்பையே தின்று விடுகிறது; அதுபோல எல்லை மீறி நடப்பவனை, அவன் செய்யும் தீய செயல்களே அவனைத் தீய நிலைக்குத் தள்ளி விடுகின்றன.[66]

என்னும் தம்மபதக் கருத்து அவரவர் வினையே அவரவர் அடையும் நன்மை தீமைகளுக்குக் காரணம் என்பதை விளக்குகிறது. மணிமேகலை பௌத்த தருமத்தை விளக்க எழுந்த நூலாதலின் புத்தர் கூறிய உண்மைகளடிப்படையில் சாத்தனார் ஊழ்வினைக் கோட்பாட்டினை விளக்குகிறார் என்பதை அறியலாம்.

> கரும விதி - வினைப் பயன் என்பது வெளியிலிருந்து யாரோ விதிப்பதன்று, ஒவ்வொருவனும் தன் கரும விதியைத் தானே நிர்ணயித்துக் கொள்கிறான். முந்திய பிறவியில் செய்த கருமத்தின் பயனை இந்தப் பிறப்பில் அனுபவிக்கிறான்; இந்தப் பிறப்பில் செய்த கருமத்தின் பயனை அடுத்த பிறவியில் அனுபவிக்கிறான்.[67]

என்பது பௌத்த சமயத்தின் வினைக் கொள்கைகள் பற்றிய ப. இராமஸ்வாமியின் கருத்தாகும்.

இதுகாறும் கண்டவற்றால் பௌத்த சமயம் கண்ட அறக் கோட்பாடுகளை வலியுறுத்தத் தோன்றிய தமிழ்க் காப்பியம் மணிமேகலையென்பதும், அக்காப்பியத்துள் அனைத்துச் சமயங்களுக்கும் பொதுவான ஊழ்க் கோட்பாடு சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதும் புலனாகின்றன.

குறிப்புக்கள் :

1. வ. சுப. மாணிக்கம், மு. நூ., ப. 56-57
2. மணி. 2 - வரி 55-57
3. மணி 3 - வரி 3-4
4. மணி. 4 - வரி 103-104.
5. மணி. 4 - வரி 113-121
6. மணி 5 - வரி 13-17
7. திருக். 262
8. மணி 12 - வரி 15-20
9. மணி. 12 - வரி 35-50
10. மணி. 14 - வரி 38-43
11. மணி. 16 - வரி 27-36

12. மணி. 17 - வரி 13-16
13. மணி. 17 - வரி 23-35
14. மணி. 20 - வரி 22-25
15. மணி. 18 - வரி 17-22
16. மணி. 20 - வரி 3-4
17. மணி. 20 - வரி 101
18. மணி. 20 - வரி 111-112
19. மணி. 20 - வரி 114-121
20. மணி. 20 - வரி 122-126
21. மணி. 21 - வரி 175-179
22. மணி. 21 - வரி 23-24
23. மணி. 21 - வரி 27-35
24. மணி. 5 - வரி 86-87
25. மணி. 5 - வரி 90
26. மணி. 21 - வரி 59-62
27. மணி. 21 - வரி 63-71
28. மணி. 22 - வரி 17-18
29. மணி. 22 - வரி 40-160
30. மணி. 22 - வரி 190-195
31. மணி. 23 - வரி 67-83
32. மணி. 23 - வரி 144-147
33. மணி. 24 - வரி 115-122
34. மணி. 24 - வரி 123-134
35. மணி 24 - 135 -140
36. மணி. 26 - வரி 6-8
37. மணி 26 - வரி 35-41
38. மணி. 26 - வரி 42-67
39. மணி. 27 - வரி 1-277
40. மணி. 27 - வரி 289
41. ஔவை. சு. துரைசாமி பிள்ளை, **மணிமேகலை உரை**, கழகம், சென்னை-1 1969, ப. 446.
42. சோ. நா. கந்தசாமி, **தமிழும் தத்துவமும்** பக். 159-160
43. சோ. நா. கந்தசாமி மு. நூ., பக். 209
44. மணி. 27 - வரி 90-95
45. மணி. 27 - வரி 159-165
46. மணி. 27 - வரி 198-201
47. மணி. 27 வரி 269-287
48. மணி. 28 - வரி 138-144
49. மணி. 30 - வரி 93-94
50. மணி. 30 - வரி 263-264
51. வ. சுப. மாணிக்கனார், மு. நூ. பக். 56
52. மணி. 2 - வரி 64-67
53. மணி 5 - வரி 34-36
54. மணி 6. - வரி 150-153
55. மணி. 12 - வரி 50
56. மணி 30 - வரி 1-6
57. மணி 30 - வரி 93-94
58. மணி. 30 - வரி 95-97
59. மணி 30 - வரி 104-118
60. மணி. 30 - வரி 120-133
61. மணி. 30 - வரி 250-262
62. வ. சுப. மாணிக்கம் மு. நூ. பக். 61
63. ர. விஜயலெட்சுமி, **தமிழகத்தில் ஆசீவகர்கள்**, உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1988, ப. 41
64. மேற்படி, ப. 63
65. அ. லெ. நடராஜன், (மொ.) **புத்தர்பிரான் அருளிய தம்மபதம்**, கஸ்தூரிபாய் காந்தி கன்யா குருகுலம், வேதாரணியம், 1979, பக். 4-5
66. மேற்படி. ப. 112
67. ப. இராமஸ்வாமி, பௌத்த தருமம், ஹிலால் பதிப்பகம், திருநெல்வேலி, 1956, ப. 127

8. அறநூல்களும் ஊழும்

அறநூல்களாகிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அகம் பற்றியன, புறம் பற்றியன, அறம் பற்றியன எனப் பகுத்துக் கூறப்படினும், இவ்வியலில் திருக்குறள் நீங்கலான ஏனைய நூல்களில் அறம் பற்றிய நூல்களனைத்தையும் கொள்ளாது, ஊழ்க் கோட்பாடு வலியுறுத்தப்பட்டுள்ள நூல்கள் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

நாலடியாரும் பழவினையும் :

சமண சமயக் கோட்பாடுகளுள் சிறப்பான ஒன்றாக வலியுறுத் தப்படும் ஊழ்க் கோட்பாடு நாலடியாரில் மிகுதியாக வலியுறுத்தப் படுகிறது. ஊழ் எனத் திருவள்ளுவர் அதிகாரம் வகுத்ததற்கு இணையாக நாலடியார் பழவினை என்னும் தனியதிகாரம் படைத் துள்ளது. பழவினை என்பது நாலடியாருக்கு முன்தோன்றிய நூல் களில் ஊழ் எனப் பேசப்பட்ட கருத்திற்குத் தெளிவூட்டும் வகையில் அமைந்துள்ளது.

சைவம் முதலான வைதிக சமயங்கள் ஊழை உயிர்களுக்கு ஊட்டுவான் ஒரு முதல்வன் உளன் என்னும் கோட்பாட்டினை வற்புறுத்துவதால் ஊழுக்கு முதன்மை தராது இறைவனுக்கு முதன்மையைத் தருகின்றன. ஆனால் சமணம், பௌத்தம் ஆகிய இரு சமயங்களும் கடவுள் நம்பிக்கையை மறுத்து, ஊழே செய்த வனைச் சென்றடையும் எனக் கூறுவதால் ஊழ்க் கோட்பாட்டிற்கு முதன்மை தருகின்றன. முற்பிறப்பிலும், முற்பிறப்பில் செய்த வினை களின் பயனிலும் பெரிதும் நம்பிக்கையுடைய சமண சமயக் கோட் பாடுகளை வலியுறுத்தும் நாலடியார் பழவினையாகிய ஊழ் தானே செய்தவனைச் சென்றடையும் என வற்புறுத்துகிறது. பல பசுக்களின் இடையில் செலுத்திவிடப் பட்டாலும் பசுக்களின் இளங்கன்று தன் தாய்ப் பசுவினைத் தெரிந்து அடையும் வல்லமையுள்ளதாகும். அது போல ஒருவன் முற்பிறப்பில் செய்த வினையும் பிறவிதோறும் தொடர்ந்து வந்தாலும் தன்னைச் செய்தவனைச் சென்றடையும் இயல்புடையது என்பதனை,

பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத் - தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு[1]

என்னும் அழகிய பாடலால் நாலடியார் ஊழின் ஆற்றலை வலியுறுத் துகிறது. இக்கருத்து, மாபாரதக் கதையில் வீடுமர் தருமனுக்குப் பல அறங்களை எடுத்துச் சொல்லும்போது ஒருவனது பழவினை

மறுபிறப்பில் நிழல்போலத் தொடர்ந்து அவனுக்குப் பயன் கொடுக்கும் என்றும், கன்றானது ஆயிரம்பசுக்களின் நடுவிலிருக்கும் தன் தாயை எப்படி அடைகிறதோ அதுபோல முற்பிறப்பில் செய்யப் பட்ட கர்மமானது செய்தவனை அடைகிறது[2] என்றும் கூறிய தாகக் குறிப்பிடும் கருத்துடன் ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

இவ்வுலகில் உருவம், இளமை, பொருட்செல்வம், மதிப்பு ஆகியன எல்லாரிடமும் ஒரே நிலையில் அமைவதில்லை. அவ்வாறு அமையாமல் அவை வேறுபடுவதற்குக் காரணம் முற்பிறவியில் அவரவர்செய்த பழவினைப் பயனேயாகும் என்றுகூறும் நாலடியார் மேற்கண்டவற்றைப் பெறுவதற்கு மட்டுமல்லாமல் பிறவியைப் பயனுடையதாக்குவதற்காகவாவது யாதானும் ஒருவகையில் நல்வினை செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறது.[3]

ஒருவனுடைய வாழ்க்கையனுபவம் போலப் பிறிதொருவர் வாழ்க்கையனுபவம் அமைவதில்லை. இவ்வுலகில் இன்ப துன்ப நுகர்வுகள் அவரவர் செய்த முன்வினையின் படியே ஊழினால் வரையறுக்கப் பட்டுள்ளன என்பது ஊழ்க் கோட்பாடு. வளமான வாழ்வையும் அதனால் கிட்டும் இன்பத்தையும் விரும்பாதவர் இவ் வுலகில் யாருமில்லை. துன்பத்தை வெறுப்பதும் இன்பத்தை விரும்புவதும் உலகியல்பு. ஆனால் இன்பமும் துன்பமும் ஒருவரது விருப்பத்திற்கேற்ப அமைவதில்லை. விளங்காயை உருண்டை வடிவமாகவும், களம் பழத்தைக் கரிய உருவிலும் யாரும் செய்திட வில்லை; இயற்கையிலேயே அவ்வாறு அமைய வேண்டிய இயல்பு அவற்றுக்கு இருப்பது போலவே, உயிர்களின் வினைப் பயனுக் கேற்ப வரையறுக்கப்பட்ட வாழ்வுடைய மனிதர் வளமும் இன்பமும் அடைய விரும்பினால் நல்வினை செய்தல்வேண்டும் என்னும் ஊழ்க் கோட்பாட்டினை,

வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போகம் அவரவர் ஆற்றால்
விளங்காய் திரட்டினார் இல்லை களங்கனியைக்
காரெனச் செய்தாரும் இல்[4]

என்னும் பாடல் வலியுறுத்துகிறது.

மழை பெய்யாத காலத்து அதனைப் பெய்விப்பாரும், மிகப் பெய்யுங் காலத்து அதனைத் தணித்துத் தடுப்பாரும் உலகில் இல்லை; அதுபோல் ஊழ்வினை உருத்துவந்து துன்பத்தை ஊட்டும்போது அதனை அனுபவிக்காமல், விலக்குவாருமில்லை; ஊழ் இன்பத்தை ஊட்டும்போது ஆற்றலுடைய பெரியோரானாலும் அதனைத் தடுப்பாருமில்லை என்பதனால் எவ்வாறேனும் அவ்வூழ் உரிய பயனை அளித்தே தீருமென்று நாலடியார் குறிப்பிடுகிறது.[5]

சான்றோர் தம் நிலைக்குத் தாழ்வு வந்த காலத்தில் உயிரை விட்டுவிடுவர். பனையளவு உயர்ந்த வாழ்க்கையுடைய சான்றோர் சிலர் தம் உயர்வுக்குச் சிறுமை வந்துற்றுத் தினையளவினராய்ச் சிறுத்துக் குறைந்த காலத்தும் தம் பழைய காலத்து உயர்வையும் உள்ளத்தில் அடக்கிக் கொண்டு உயிர் பொறுத்திருப்பதற்குக் காரணம் பழவினைப் பயனே என்னும் கருத்திலிருந்து எத்தகைய பெரியோரானாலும் முன்னைத் தீவினையும் நல்வினையும் உருத்து வந்து பயனைக் கொடுத்தே தீரும் என்னும் ஊழ்க் கோட்பாடு வலியுறுத்தப் பெறுகிறது.[6]

இவ்வுலகில் பரந்த நூலறிவுடைய கற்றோராகிய சான்றோர் குறைந்த வயதிலேயே இறந்து விடுவதையும், கல்லாதார் நீண்ட காலம் வாழ்வதையும் எண்ணிப் பார்க்கும் நாலடியார், கூற்றுவன் கற்றோரிடம் அறிவென்னும் பிழிவு இருப்பதால் அவர்களைக் கொண்டு, கல்லாதாரைக் கோது என நீக்கி விடுவான் எனக் கூறும் கருத்தில் பழவினைப் பயனைக் காரணமாகக் காட்டுகிறது,[7] மக்களில் சிலர் பலருடைய பெரிய வீடுகளின் தலைவாயிலில் நின்று பிச்சையேற்று உழல்வதற்குக் காரணம் அவர்கள் முன்செய்த வினையின் பயனேயாகும்.[8] மக்களுள் சிலர் நூலறிவு, உலகியல் அறிவு ஆகிய எல்லாம் அறிந்தவராயிருந்தும் அவர்கள் பழியோடு கூடிய தீச்செயல்களைச் செய்தல் அவர்கள் முற்பிறவியில் செய்த தீவினையால் நேர்வதாகும்.[9]

மக்களியல்பு இன்பத்தையே விரும்புவதாகும் ஆதலின் துன்பத்தைத் தரக்கூடிய தீயவற்றை யாரும் விரும்ப மாட்டார்கள்; எல்லாரும் இன்பந்தரக் கூடிய நல்லவற்றையே விரும்புவார்கள்; ஆனால் அவர்கள் விரும்புவது அமைந்து விடுவதில்லை. அவர்கள் விரும்பினும் விரும்பா விடினும் அவர்கள்பால் வந்து பொருந்துதற் குரிய பழவினைப் பயன் இருக்குமானால் நல்வினையாயினும் தீவினையாயினும் உறுதியாக வந்தே தீரும். ஆதலின் பின்வரும் வினைவிளைவினைக்கருதி யாவரும் நல்வினைகளையே செய்துவரல் வேண்டும் என்று நாலடியார் வற்புறுத்துகிறது.[10]

ஊழின் பயனை அனுபவிக்காமல் மாற்றவோ, விலக்கவோ இயலாது என்பதும், எவ்வாறேனும் ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் பயனை நுகர்ந்தே தீர்க்கவேண்டும் என்பதும் ஊழ்க் கோட்பாடாகும். இவ்வுண்மையை நாலடியார் விளக்குகிறது. ஊழ் என்பது உயிரோடு ஒட்டிவரும் இயல்பினையுடையது பல பிறவிகளானாலும் எப்பொழுது பயன் கொடுக்க வேண்டுமோ அதுவரை உயிரோடு ஒட்டியிருந்து வெளிப்படும் நேரம் வந்துற்ற போது பயனை நல்குவது. அத்தன்மையுடைய முற்பிறப்பின் ஊழ்

வினைகள் குறையவும் மாட்டா; மிகவும் மாட்டா; முறை மாறிப் பிறரிடம் சென்று பொருந்தவும் மாட்டா; உதவியாகும் காலத்தில் உதவியாகும்; துன்பம் வர வேண்டிய காலத்தில் வந்தே தீரும் ஆதலின் ஊழின் இயல்பையறியாமல் துன்பம் வரும்போது மட்டும் ஏன் வருந்தவேண்டும் என்னும் கருத்தினை,

> சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
> உறுகாலத் தூற்றாகா ஆமிடத்தே ஆகும்
> சிறுகாலைப் பட்ட பொறியும் அதனால்
> இறுகாலத் தென்னை பரிவு[11]

என்ற பாடலால் நாலடியார் வற்புறுத்துகிறது,

பழவினையதிகாரம் முழுவதும் ஊழின் இயல்பு, ஆற்றல், அது பயனை நல்கும் முறை, அதை அனுபவிக்கும்போது மக்கள் கொள்ள வேண்டிய மனநிலை ஆகியவை பற்றிக் கூறி எவ்வாறேனும் ஊழ்வினையை நுகர்ந்தே தீர வேண்டுமாதலின் தீவினைகளை விலக்கி நல்வினைகளையே செய்ய வேண்டுமென்று நாலடியார் வலியுறுத்துகிறது,

நாலடியாரின் பிற அதிகாரங்களும், ஊழும் :

இந்நூல் மிகச் சிறந்த அறநூல் என்பதற்கு இந்நூலின் அமைப்பே சான்றாகும். அறத்துப் பாலை முதலாகக் கொண்ட இதன்கண் துறவறவியல் முதலியலாகவும், செல்வம் நிலையாமை முதலதிகாரமாகவும் சொல்லப்பட்டுள்ளது. செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை மூன்றும் அறக்கொள்கைகளில் சிறப்பிடம்பெறுவன. இவைஉலகில் நிலையாமையுணர்த்தி நிலைபேறுடைய வீடுபேற்றினை அடைவதற்குரிய முயற்சியில் மக்களைச் செலுத்துவன. செல்வம் நிலையில்லாதது என்பதைக் கூறும் இந்நூல் பட்டத்து யானையின் மீது உலாச் செல்லும் அரசராயினும் தீவினை வந்து உருத்துமானால் தன் மனைவியையும் மாற்றார் கொள்ளும்படியான வறிய நிலையையடைவர் எனக் கூறுகிறது.12 மேலும் ஊழ்வினையால் உடலோடு கூடி வாழ வரையறுக்கப்பட்ட வாழ்நாள் அளவு கடவாது; இறுதி நாள் வரும் போது கூற்றுவனிடமிருந்து பிழைத்திருப்பவர் யாருமில்லை யாதலின் சாப்பறை கொட்டுவதற்குமுன் நல்வினைகளைச் செய்திட வேண்டும் என்று ஊழை வலியுறுத்துகிறது.13 பழுத்த பழங்கள் மட்டுமல்லாமல் வேகத்துடன் வீசும் கோடைக் காற்றில் காய்களும் கூட உதிர்வது உண்டு ஆதலின், நல்வினையை நாளைச் செய்வோம் என்று கருதாமல் இளமைப் பருவம் இருக்கும்போதே செய்ய வேண்டும்;14 இப்போதுதான் ஒருவன் நின்றான், இருந்தான்

படுத்தான், உறவினர் கூடி அலறி அழ இறந்தான் என்று சொல்வது உலகியல்பாதலின், புல்லின் நுனியில் நிற்கும் நீர்த்துளி போன்று நிலையில்லாதது யாக்கை எனக் கருதி அறவினைகளை இப்பொழுதே செய்யவேண்டும்15 எனக் கூறுமிடங்களில் ஊழ்க் கோட்பாடு நிலையாமையின் வழி வலியுறுத்தப்படுகிறது.

முற்பிறப்பில் செய்த தவத்தின் பயனால்-ஊழ்வினைப் பயனால் பெற்ற செல்வத்தில் மகிழ்ந்திருந்து மறுபிறப்பிற்கு வேண்டிய தவத்தினை - அறவினைகளைச் செய்யாதவர் மறுபிறப்பில் வறுமையுற்று வாடுவர்.16 அறியாமையுடையவர் முன்செய்த தீவினைப் பயன் வந்து இப்போது தாக்கினால் வருந்தி ஊக்கம் கெடுவர்; அறிவால் ஆராய்ந்து தொல்வினைப் பயனால் வந்ததென்று அதற்கேற்ப ஒழுகுவோரே துன்பத்தினைக் கடந்தவராவர் என்பதனை,

வினைப்பயன் வந்தக்கால் வெய்ய உயிரா
மனத்தின் அழியுமாம் பேதை - நினைத்ததனைத்
தொல்லைய தென்றுணர் வாரே தடுமாற்றத்
தெல்லை இகந்தொருவு வார்17

என்னும் பாடலால் அறிய முடிகிறது.

இவ்வுடம்பு உயிருடன் உள்ள போதே, கரும்பினை ஆட்டிச் சாறு கொள்வது போல, மறுமைக்கு வேண்டிய அறப்பயனைச் செய்துகொண்டுவிட வேண்டும்,18 மக்கட் பிறப்பினால் செய்யத் தக்க நல்வினைகள் எவ்வளவோ இருக்கும்போது, மறுமை இன்பம் நுகர்தற் பொருட்டு உயிருக்கான அந்நல்வினைகளைச் செய்யாது உடம்பிற்கே உதவி செய்து வாழ்வது பயனற்ற வாழ்வென்றும்.19 சிறிய ஆலம் விதை பெரிய மரமாக உண்டாவதைப் போல அறச் செயல்களின் பயனான புண்ணியத்தைத் தரும் பொருள் சிறிதாயினும் பெரியோர் கையில் சேர்ந்தால் பெரும் புண்ணியப் பயனைத் தரும்20 எனக் கூறப்படும் இடங்களில் அறத்துடன் ஊழையும் சேர்த்து வலியுறுத்துவதை அறிய முடிகிறது.

ஆசையுடன் செயல்களைச் செய்யும்போது அச்செயல்கள் துன்பத்தைத் தரும் தீவினைகளாகின்றன. அவாவினை அறுத்துத் துறவுள்ளத்துடன் வாழும் சான்றோர் தீவினைகளை விலக்கிவிடுவர். விளக்கொளிவர இருள்நீங்குவதுபோலத் துறவுபூண்ட சான்றோரின் தவத்தின்முன் தீவினைகள் நில்லா; விளக்கின் நெய் குறையும் போது இருள் சூழ்வது போல, நல்வினை நீங்குமிடத்தில் தீவினை சூழ்ந்துவிடும் என்பதனை,

விளக்குப் புகவிருள் மாய்ந்தாங் கொருவன்
தவத்தின்முன் நில்லாதாம் பாவம் - விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாம் தீது21

என்னும் பாடலால் அறியமுடிகிறது.

இவ்வுலகில் ஒருவர் செய்த தீய செயல்களுக்கு ஈடாக, அச் செயலால் தாக்குற்றவர் தீய செயல்களைச் (பழிக்குப் பழியாக) செய்ய எண்ணுவது மனிதர் இயல்பு. மாறாக இன்னா செய் தார்க்கும் இனியவே செய்தல் சான்றோர் பண்பு.[22] உண்மைத் துறவுடைய உயர்ந்தோர், காரணமின்றித் தம்மைப் பிறர் இகழ்ந்த போது, அதனை பொறுத்துக் கொள்வதோடல்லாமல், இங்ஙனம், எம்மை இகழ்ந்த தீவினைப்பயனால், மறுமையில் நரகத்தில் வீழ்வரோ என்று தீவினையாளருக்காக இரங்கும் உள்ளம் உடையவ ராவர் என்னும் விழுமியக் கருத்தினைக் கூறுவது,

தம்மை இகழ்ந்தமை தாம் பொறுப்ப தன்றிமற்
றெம்மை இகழ்தல் வினைப்பயத்தால் - உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉம் சான்றோர் கடன்[23]

என்னும் அழகிய பாடலாகும். துறவில் ஒழுகும் சான்றோர் ஊழ் வினையால் துன்பம் வரினும் அதனை இன்பமாகக் கருதித் தவம் செய்பவராதலின், துன்பத்தால் வருந்தும் இயல்பு அவர்க்கில்லை யென்பதும், தாம் தீவினைகளிலிருந்து நீங்குவதுடன் பிறர் தமக்குச் செய்த தீவினையையும்பொறுத்துக் கொண்டு,செய்தவர் மறுமையில் ஊழ்வினையால் துன்பப்படுவர் என்பதற்காக இரங்கும் உள்ளம் உடையவர் என்பதும் கூறும் இப்பாடல்களால் ஊழ்வினைக் கோட் பாடு வலியுறுத்தப் பெறுகிறது.

ஈதல் மிகச்சிறந்த அறங்களுள் ஒன்றாகச் சான்றோரால் போற்றப்படுவது. ஈதலால் ஒருவனுக்கு வரும் நல்வினைப் பயன் இம்மை மறுமை இரண்டிலும் நன்மையும் இன்பமும் தரும். ஒருவனுக்குச் செல்வம் சேர்வதற்குரிய நல்லூழ் துணையாக இருப்பின் பிறருக்கு எவ்வளவு கொடுத்தாலும் குறைவுபடாமல் மேலும் மேலும் அவனது செல்வம் பெருகும்; நல்லூழ் இல்லாத போது அச்செல்வத்தை எவ்வளவுதான் இறுக்கிப் பிடித்தாலும், நில்லாமல் அவனை விட்டு நீங்கும் என்பதைக் கொண்டு. செல்வம் நிலைப்பதற்கும் நீங்குவதற்கும் காரணம், இறுக்கிப் பிடித்தலும், பிறருக்குக் கொடுத்தலும் அன்று எனவும் ஊழ்வினையே காரணம் எனவும் கூறும் பாடல்,

நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தாம் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்
மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்[24]

என்பதாகும். இவ்வுலகில் சமைத்தலில்லாத அடுப்பினையுடைய வறியவர்கள் முற்பிறப்பில் பிறருக்கு ஒன்றும் உதவாமையினால் வந்த வினைப் பயனைத் தற்போது அனுபவிப்பவர்கள்; ஆதலின் 'இம்மியரிசி' எனப்படும் சிறிய அளவையாவது நாள்தோறும் ஒருவனால் இயன்ற அளவு பிறருக்குக் கொடுத்து உண்பவன் மறுமையில் நல்வினையால் வரும் இன்பத்தையடைவான்[25]

ஒருவனிடம் உள்ளபொருள் மிகச் சிறிதென்று கருதாமலும் இல்லையென்று மறுத்துவிடாமலும் எப்போதும் பயனுடையதான அறத்தை அனைவரிடத்தும் செய்து வருவானாகில், வாயில்கள் தோறும் பிச்சையெடுக்கும் தவசியின் உண்கலம் மெல்லமெல்ல நிறைந்து விடுவதுபோல் அவனுக்கு அறத்தின் பயனாகிய புண்ணியம் நிறைந்து விடும்[26] முரசினது ஒலியை ஒருகாத எல்லையிலுள்ளோர் கேட்பர்; இடியின் ஒலியை ஒரு யோசனை அளவிலுள்ளோர் கேட்பர்; தக்கவரால் 'இவர் உதவி செய்தவர்' என்று புகழ்ந்து கூறப்படும் சொல்லை மூவுலகிலுள்ளாரும் கேட்பர்[27] இவ்வாறு பிறருக்குக் கொடுத்தலால் வரும் பயன் இம்மை மறுமைகளுக்குரிய நல்லூழாக விளையும் என்பதை நாலடியார் வற்புறுத்துகிறது.

இவ்வுலகில் நிறைந்த பொருள்களைப் பெற்று அவ்வளத் தினால் வாழ்வோர் தன் உடம்பிற்குச் செய்யும் ஒப்பனைகளும் உடம்பும் பயனில்லாமல் போய்விடும்;எவ்வகையால் ஆராய்ந்தாலும் ஒருவன் செய்த நல்வினை தீவினைகளல்லாமல் அவனுடைய உயிரோடு தொடர்ந்து வருவது எப்பிறப்பிலும் பிறிதெதுவுமில்லை என்பதைத்

தாம்செய் வினையல்லால் தம்மோடு செல்வதுமற்
றியாங்கணும் தேரின் பிறிதில்லை[28]

என்னும் பாடல் வலியுறுத்துகிறது.

தீவினையச்சம் அதிகாரத்துள் ஊழ்வினைக்குக் காரணமாகிய தீவினைகளை விலக்க வேண்டுமென்று நாலடியார் கூறுகிறது. நோய்களுள் மிகக் கொடியதும் மக்கள் கண்டு வெறுக்கக்கூடியதும் தொழுநோய் ஆகும். இத்தொழுநோய், நண்டின் புலாலை விரும்பி உண்டவர்களுக்கு வரும் என்பதை,

அக்கேபோல் அங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோய் எழுபவே - அக்கால்
அலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்[29]

என்னும் பாடல் காட்டுகிறது.

நெய் தீயுடன் சேர்ந்தால் எரிந்துவிடுவதுபோல நல்லவர் தீயவருடன் சேர்ந்தால் தீவினைகளைச் செய்து விடுவாராதலின், தீவினையாளர்த் தொடர்பை விலக்க வேண்டுமென்றும்[30] நல் வினைகளே உயிருக்குத் துணையாதலின் மனைவி, மக்கள் மேல் கொண்ட பாசத்தினை விட்டுத் தீவினைகளை விலக்கி நல்வினை களைச் செய்யவேண்டுமென்றும்[31] நாலடியார் வலியுறுத்துகிறது.

சமண முனிவர்கள் ஊழ், முற்பிறப்பு, மறுபிறப்பு, துறக்கம், நரகம் பற்றிய நம்பிக்கையுடையவர்களாதலின் இவை பற்றிய கருத்துக்களை இந்நூலின்கண் மிகுதியாகக் காணமுடிகிறது. கல்வி இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் நல்குவதுடன் அறியாமையைத் தீர்க்கும் மருந்தாகுமென்றும்[32] நிலையில்லாத உடம்பு உள்ளபோதே மறுமைக்கு வித்தாகிய நல்வினையைச் செய்தல் வேண்டுமென்றும் இந்நூல்[33] வலியுறுத்துகிறது.

அறிவைப் பெறுவதற்கு முன் வினைப் பயன் துணை செய்ய வேண்டுமென்பது பழந்தமிழர் கருத்தாகும் என்று முன்னைய இயல்களில் விளக்கப்பட்டது. பலநாள் பாலினால் கழுவி உலர்த்தி னாலும் கரிய நிறமுடைய கரி வெண்ணிறம் அடையாது;அவ்வாறே முற்பிறவித் தவம் செய்யாத-ஊழ்வினைப் பயன் இல்லாத உடம்பில் எவ்வாறு உறுத்தினும் அறிவுஏறாது என்று குறிப்பிடுகிறது[34]

உலக நடைமுறையில் இப்பிறவி முழுவதும், நல்வினைகளைச் செய்வோர் வறுமையுற்றுத் துன்புறுவதையும், தீவினைகளைச் செய்தோர் வளத்துடன் இன்பம் அனுபவிப்பதையும் கண்ட பண்டைய சான்றோர் இதற்கு யாது காரணமெனச் சிந்தித்தனர். நல்லது உணர்ந்து நல்வினை செய்வார் வளமின்றியிருக்க, அவ் வுணர்வும் செயலுமில்லாத தீவினையுடையவர்கள் பட்டும் உயர்ந்த ஆடைகளும் அணிந்து வாழ்கின்றனர்[35] மேலும் உயர்ந்த அறிவுடன் நற்செயல்களைச் செய்யும் இனிமையுடைய சான்றோர் வளமின்றியிருக்கின்றனர்;இனிமையும் கல்வியறிவுமில்லாக் கீழோர் செல்வ வளத்துடன் வாழ்கின்றனர். இவ்வேறுபாட்டிற்குரிய காரணம் எவ்வகையில் ஆராயினும் வினைப்பயனைத் தவிர வேறு இருக்க முடியாது;[36] அவரவர் செய்தமுற்பிறவி வினைப்பயன் காரணமாக இம்மையில் இருக்கும் நிலைக்கு மாறான நிலையை அடைகின்றனர் என்னும் நாலடியார் கருத்து 'இம்மைச் செய்தன யானறி நல்வினை உம்மைப் பயன் கொல்'[37] என்னும் சிலப்பதிகாரக் கருத்துடன் ஒப்பு நோக்கத்தக்கது.

பழமொழி நானூறும் ஊழும் :

இந்நூல் திருக்குறளைப் போலவே ஊழ் என்னும் தனி அதிகாரம் வகுத்து ஊழ்வினையின் ஆற்றலை வலியுறுத்துவது குறிப்பிடத்தக்கதாகும். ஊழ், முயற்சி ஆகிய இரண்டனுள் ஊழே பேராற்றல் மிக்கது என்பது முன்றுறையரையனார் கருத்து. இதனை பேரரசனுடன் போர் செய்யப் புகுந்த குறுநிலத் தலைவனுடைய ஆற்றலைக் கொண்டு விளக்குகிறார்[38] அறிவுடையவர்கள் என்று பிறரால் போற்றப்படும் கற்றவரிடத்தும் குற்றங்கள் காணப் படுவது அவர்களது பழவினையாலேயே என்றும்[39] நல்லறி வினையுடையாரையும் அவர்களது இழவூழ் பேதையாக்கும்[40] என்னும் திருக்குறள் கருத்தினைப் போலவே பழமொழியின் கருத்தும் ஊழ்வலியை உணர்த்துவது கருதத்தக்கது.

ஒருவனுக்கு ஊழின் காரணமாக வரவேண்டியது வந்தே தீருமாதலின். யாவரேயாயினும் அவர் செய்த வினைப்பயனால் வருந் துன்பங்கள் விடாது வந்து பற்றி நின்று வருத்தும்போது வருந்துதல் கூடாது என்பது முன்றுறையரையனார் கருத்து[41] ஒருவனுக்கு ஊழினால்வரவேண்டிய நன்மைகள் அவன்விரும்பினும் விரும்பாதொழியினும் தவறாமல் வந்தடையும்[42] செல்வம் எவ்வளவுதான் பாதுகாத்தாலும், ஊழினால் தனக்கு ஆகாததாயின் காப்பவனுக்குப் பயன்படாது யாரிடம் சேரவேண்டுமோ அவரிடம் சென்று சேரும்.[43] இவ்வுலகில் செல்வம் ஈட்டுவதற்கு முதல் வேண்டும்; முற்பிறப்பின் நல்வினையும் துணை செய்ய வேண்டும். இப்பிறப்பில் நல்வினையாகிய செல்வத்தைச் சேர்க்காதவர் மறுபிறப்பிற்குரியமுதலின்மையின் அப்பிறப்பில் பெருஞ்செல்வத்தை பெறவியலாது[44] ஒருவன் செல்வமுடையவனோடு சேர்ந்திருப்பின் தானும் செல்வம் சேர்ப்பான் என்று கருதலாம். ஆனாலும் ஊழ் துணையில்லையாயின் அச்செல்வம் ஒருவனுக்குச் சேராது என்பதை அரசனது அருகிருந்து பணி செய்யும் வாய்ப்பு ஒருவனுக்கு இருப்பினும் அவனுக்குச் செல்வம் கூடும் வாய்ப்பு ஊழினால் உண்டாயின் சேரும்; இல்லையெனில் சேராது[45] அரக்கு மாளிகை யினுள் வைக்கப்பட்ட பாண்டவர் ஐவரும் தீயினின்றும் பிழைத்து வெளியேறியதுபோல, பிறரால் பிணைத்துச் சிறைப்பட்டவர் கூட ஊழ் துணையினால் பிழைப்பர்; ஊழ் துணையுடையார் எத்தகைய இடையூறு உறினும் உய்வர்[46] ஊழின் துணை யுடையார்க்குத் தீங்கு தரும் என்று சொல்லப்படும் செயல்களும் நல்லதாகவே முடியும்; ஆதலால் முன்செய்த நல்வினையுடையார்க்கு தீய நாட்கள் என்பது இல்லை.[47] அறிவில்லாராயினும் நல்வினை யுள்ளார்க்குச் செல்வம்உள்ளதாம்; அரசர்களேயானாலும் நல்வினை யில்லார் விரும்பி முயன்றாலும் கருதிய செல்வம் கைகூடுவது

இல்லை;48 செல்வத்தை ஆக்கும் ஆகூழ் வந்தெய்தும் காலம் நெருங்கியவர்கள் யாதொரு முயற்சி செய்யா விடினும் அவர்களிடத்துச் செல்வம் வந்து சேரும்; செல்வத்தைப் போக்கும் போகூழ் வந்தெய்தும் காலம் நெருங்கியவர்களுக்குச் செல்வத்தை நிலைநிறுத்த அவர்கள் செய்யும் எத்தகைய முயற்சியும் பயனளிக்காமல் போகும்.49

பிறர். தம்மைத் துன்புறுத்துவது தாம் முற்பிறவிகளில் செய்த பழைய தீவினைப்பயனே என்றறிந்து துன்புறுத்துவாரை நோவாது ஒழிதல் வேண்டும்.50 பகைவர் மூட்டிய தீயினால் கொளுத்தப் பட்டு அதனின்றும் உயிர் பிழைத்துச் சென்ற சோழன் மகனாகிய கரிகாலன், தன் மாமனாகிய இரும்பிடர்த் தலையாரைத் துணையாகப் பெற்று பிற்காலத்தில் குற்றமற்ற செங்கோலைச் செலுத்தினான்;ஆதலால் உயிருடையார் அடையமுடியாததொரு நல்வினைப் பயன் இல்லை; என்றாயினும் நன்மையை அடைவர்.51 ஊழாற் செலுத்தப்படும் அம்புகள் குறிக்கு இலக்கானவனைச் சென்று சேர்தலன்றி நிலத்தின்மேல் வீழ்தல் இல; மிகவும் அஞ்சத்தக்க அவ்வம்புகள் தம்மீது வந்தால், செய்கின்றதன் நன்மை தீமையை அறிவார், அவற்றால் தமக்கு உண்டாகும் துன்பத்திற்கு அஞ்சுதல் இலர்.52

இவ்வாறு செல்வம், அறிவு ஆகியவை சேர்வதற்கும், நீங்குவதற்கும் இன்பம், துன்பம், நன்மை, தீமை ஆகிய பயன்களுக்கும் ஊழ்வினையே காரணம் என்பதனைப் பழமொழி நானூறு அழுத்தமாக வலியுறுத்துகிறது. ஊழால் நடப்பது நடக்கும், வருவது வந்தே தீரும்; ஊழின் பயனை மாற்ற இயலாது; துய்த்தே தீர்க்க வேண்டுமென்பன போன்ற ஊழ்க் கோட்பாட்டுக் கருத்துக்கள் ஊழ் அதிகாரத்தில் முன்றுறையரையனாரால் வற்புறுத்தப்படுகின்றன.

பழமொழியின் பிற அதிகாரங்களும் ஊழும் :

நாலடியாரைப் போலவே பழமொழி நானூறும் பிற அதிகாரங்களிலும் ஊழ்க் கோட்பாட்டினை வலியுறுத்துகிறது. ஒவ்வொரு செயலுக்கும் விளைவுண்டு என்பதும் செயலின் பயன் உடனடியாகவோ அல்லது காலம் கடந்தோ செயலுக்கு உரியவனைத் தவறாமல் அடையும் என்பதும் ஊழ்க் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்தாகலின், ஒருவன் முற்பகலில் தீங்கினைச் செய்யின் அத் தீவினைக்குரிய பயனைப் பிற்பகலில் தப்பாமல் அடைவான் என்பதனை,

முற்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் கண்டு விடும்53

என்னும் அடிகளால் முன்றுறையரையனார் வலியுறுத்துகிறார்.

ஒருவன் செய்த வினையின் பயன் அவனையே அடையும் என்பது ஊழ்க்கோட்பாடு. அரசன் தன் விருப்பமான செயலைச் செய்து முடிக்குமாறு ஒருவனை ஏவினாலும், செயலின் பயன் மன்னனைச் சேராது செய்தவனையே சேரும் என்பதை மன்னரைச் சேர்ந்தொழுகல் அதிகாரத்தில் விளக்குமிடத்தில், பனையின்பழம் முதிர்ந்தால் தாய்ப்பனையின் தாளின்மேலேயே வீழ்வது போல ஒருவன் செய்த வினை முதிர்ச்சிபெறுமானால் அதன் பயன் செய்தவனையே சேரும் என்னும் ஊழ்க்கோட்பாட்டினைக் குறிப்பிடும் முன்றுறையரையனார் கருத்து அறியத்தக்கது[54]

அறச்செயல்கள் எல்லாம் நல்வினைகளுக்கு காரணமாவதால் இம்மை, மறுமை இரண்டின்பங்களையும் தரும் அறத்தினை நாள் தோறும் தவறாமல் செய்யவேண்டுமென்று இந்நூல் கூறுகிறது[55] ஊழினைப் பிற அதிகாரங்களிலும் வலியுறுத்தும் இந்நூலின் இறுதி அதிகாரம் வீட்டுநெறி என்பதாகும். வினைநீக்கம் பெற்ற உயிர்கள் வீட்டு நெறியினை அடையும் என்பது முன்னைய இயல்களிலும் விளக்கப்பட்டது. ஒருவனுடைய வாழ்நாள் எல்லை முடிந்ததும் அவனுடைய உயிரைக்கொள்ளவருகின்ற கூற்றுவன் செல்வம், புகழ், வலிமை, அழகு, இளமை, குடிப்பிறப்பு இவற்றை மதித்து, இவை யுடையவன் என்பதற்காக விட்டுவிடுவதில்லையாதலின் உடம்பு மறைவதற்குமுன் துறவுபூண்டு வீட்டுநெறிக்குரிய தவத்தைச் செய்ய வேண்டும் என்று இந்நூல் வற்புறுத்துகிறது[56] பலபிறப்புக்களில் ஈட்டியதீவினைகளை ஒருவன் தன்னால் ஈட்டப்பட்டவையே அவை எனக்கருதி அவற்றின் விளைவை இயைந்து அனுபவிக்கவேண்டும். அனுபவித்துக் கழிப்பதே வினை நீக்கத்திற்கு உரிய வழியாதலின் இப்பிறப்பில் மூவகை வினைச் சார்புகளையும் அறுத்துப் பிறவி யிலிருந்து நீங்குவதே வீடு பேறாகும்[57] எனக்கூறி உயிர்கள் வீடு பேற்றையடையும் நெறியினில் ஒழுகவேண்டும் என்று இந்நூல் வலியுறுத்துகிறது. இவ்வாறு பழமொழி நானூறு, ஊழ்அதிகாரத் திலும் பிறஅதிகாரங்களிலும் ஊழ்க்கோட்பாடு பற்றிய கருத்துக்களை வலியுறுத்துவது அறியத் தக்கது.

நான்மணிக் கடிகையும் ஊழும் :

ஒருவனுடைய நல்வாழ்வுக்குத் தாய்தந்தையர் மட்டுமன்றிப் பிறருடைய உதவியும் வேண்டும். தாயைப் போலத் துணைசெய்வது பழவினை என விளக்குகிறார் ஆசிரியர். ஒருவனுக்கு நல்லியல்பில் லாதவர் அயலார்; நல்லியல்புடையவர் அன்பர்; மேலான தந்தை யெனப் படுபவன் ஆசிரியன்; 'தாயென்பாள் முந்துதான் செய்த வினை'[58] என்னும் அடியினால் ஒருவனுடைய வாழ்வில் தாயின்

பரிவுடைய செயல்கள் எவ்வாறு துணை செய்யுமோ அவ்வாறு நல்லூழ் துணை செய்யும் என்று கூறப்பட்டிருப்பது அறியத்தக்கது. ஒருவனுக்கு ஐம்பொறிகளால் இன்பமும் துன்பமும் வருகின்றன. புலனடக்கமில்லாதவன் தீவினைகளைச் செய்வான், ஐம்புலன்களை தம் அறிவு வழியில் செலுத்தும் சான்றோர்க்குத் தீவினைகள் தாமாகவே ஒழியும் என்பதனை 'ஐவரால் தானேவினை கெடும்'[59] என்னும் அடியினால் அறிய முடிகிறது.

மக்களுடைய வாழ்வு உயர்வதற்கு அவர்களுடைய நல்வினைகளே காரணமாக அமையுமென்பதைத், 'தீதில் வினையினான் நந்துவர் மக்களும்'[60] என்னும் அடி விளக்குகிறது. ஒருவன் முற்பிறப்பில் செய்த ஊழ்வினைப் பயன் இப்பிறப்பில் வந்து வருத்தும் என்பதை, 'முன்னை ஒருவன் வினை சுடும்'[61] என்னும் அடி வலியுறுத்துகிறது. ஒருவனுடைய முற்பிறப்பின் நல்வினை மிகுதியானால் இப்பிறப்பில் தீவினை குறைந்து அவனுக்கு இன்பம் கிட்டும். முற்பிறப்பின் தவம் (நல்வினை) குறைவானால் இப்பிறப்பில் தீவினை மிகுந்து அவனை வருத்தும் என்பது 'மேலைத் தவம் சிறிதாயினும் வினையூரும்'[62] என்பதனால் விளங்கும். ஆகவே மேலே காட்டிய இடங்களால் நான்மணிக் கடிகை ஊழ்க் கோட்பாட்டினை வலியுறுத்துவது கருதத் தக்கது.

திரிகடுகமும் ஊழும்,

ஒருவன் பிறருக்குப் பொருளைத் தாமாகக் கொடுத்தலாலும், மானங்கெடாத நல்லொழுக்கத்தாலும் பொருள் மேலே சிந்தனை ஒழிந்திருப்பதாலும் நல்வினைகளே மேன்மேலும் செய்யலாம்[63] தாம் சினந்தால் தம்மை எதிர்த்துப் பேசும் மனைவியும், ஒழுக்கமில்லாத ஏவலாளும், பகையுடன் கூடிய சுற்றமும் ஆகிய மூன்றும் முற்பிறப்பிற் செய்த பழவினையாகி முதுமைப் பருவம் வரை வந்து வருத்தும்;இம்மூன்றினாலும் வருந்துவார் துன்பத்திற்கு மாற்றாகச் செய்யக் கூடியதொன்றுமில்லையென்பதை,

எதிர்நிற்கும் பெண்ணும் இயல்பில் தொழும்புஞ்
செயிர்நிற்கும் சுற்றமு மாகி – மயிர்நரைப்ப
முந்தைப் பழவினையாய்த் தின்னும் இவைமூன்றும்
நொந்தார் செயக்கிடந்த தில்[64]

என்னும் பாடலால் அறிய முடிகிறது. அறிவைக் கெடுக்கும் பசி நோயும், நல்லவர் நெருங்க முடியாதபடி உண்டாகும் விருப்பமும், பகைவரது கொடிய மொழிகளைப் பொறுத்துக் கொள்ளாத சினமும் ஒருவனை நல்வினை செய்ய முடியாதவாறு நீக்கும் படைக்கருவிகளாம்.[65] இவ்வாறு நல்வினை செய்தலின் இன்றியமையாமை, நல்வினை செய்யாதாரை முன்வினை வந்து வருத்தும் உண்மை, நல்வினைக்குத் தடையாவன ஆகியவற்றைக் கூறி ஊழ்க் கோட்பாட்டினைத் திரிகடுகம் வலியுறுத்துகிறது.

ஏலாதியும், ஊழும்.

இந்நூல் வீடடைதற்குரிய நெறியாகப் பலவற்றைக் கூறி, வீட்டு நெறி பற்றிய செய்திகளைப் பல பாடல்களில் குறிப்பிடு கிறது.[66] அறியாமையால் குற்றங்களுண்டாகும்; நூலுணர்ச்சி யால் நல்வினைகள் விளையும்; அறிவு நூல்களையுணராதவன் செயல்கள் பிறப்பையுண்டாக்கும்;பிறப்பால் அறியப்படாத, ஒன்பது பெரிய துன்பங்கள் தொடர்ந்து வரும்; அதனால் அடிக்கடி அப் பிறவிச் சூழலில் சுழல வேண்டியிருக்கும் என்னும் கருத்துக்களை

உணராமை யால்குற்றம் ஓத்தால் வினையாம்
உணரான் வினைப்பிறப்புச் செய்யும் - உணராத
தொண்டிருந் துன்பந் தொடரும் பிறப்பினால்
மண்டிலமு மாகு மதி[67]

என்னும் பாடலில் வலியுறுத்துகிறது.

இல்லற வாழ்க்கையும் சிறந்த தவவொழுக்கம் ஆகிய துற வறமும் சிறந்தநல்வினைகள்செய்வதற்குரிய வாழ்க்கையாகக்கருதப் படுவன.[68] என்னும் நல்வினை தீவினை பற்றிய கருத்துக்களில் இம்மை மறுமை,வீடுபேறு முதலானவற்றுடன் ஊழ்க் கோட்பாடும் வலியுறுத்தப் படுவதை அறிய முடிகிறது.

திணைமாலை நூற்றைம்பதும் ஊழும்:

அகப் பொருள் பற்றிய இந்நூல் ஐந்திணை ஒழுக்கங்களையும் அழகுபடக் கூறுவது. ஒருவனிடம் செல்வம் பெருகுவதற்கும் குறை வதற்கும் காரணமாக அமைவது அவனது நல்வினையே என்னும் கருத்து பழந்தமிழிலக்கியங்களிலேயே இடம் பெற்றது என்பது முன்னியல்களில் விளக்கப்பட்டது. இந்நூற்பாடல், நல்வினையால் செல்வம் பெருகும் என்பதை விளக்குகிறது.[69]

ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்ட தலைவியொருத்தித் தன்னைக் காப்பாற்றிக் கரைசேர்த்த தலைவனிடம் கொண்ட காதலால் வருந்துதல் தெரியாமல் தலைவியின் தாய் வேலன் வெறி யாட்டிற்கு ஏற்பாடு செய்தாள்; இதையறிந்த தோழி, தலைவியின் நோய் ஊழின் காரணமாகத் தலைவன்மேல் கொண்ட காதலால் விளைந்தது என்று கூறி செவிலியினிடத்தில் அறத்தொடு நின்ற தாகக் கூறப்பட்ட இடத்தில் தலைவன் தலைவியின் காதல் உறவுக்கு காரணமாவது ஊழ் என்னும் கருத்து வலியுறுத்தப் படுகிறது.[70]

தலைவனைப் பிரிந்திருந்த தலைவியை, இனிய இசைக் கருவி யாகிய வேய்ங்குழல் துன்புறுத்தியதால், அச்செயலுக்குரிய விளை வாக அக்குழல் சுடப்பட்டுத் துன்புறுத்தப் பட்டதாகக் (குழல்

நெருப்பால் சுடப்பட்டு துளையிடப் படுவது) கருதிக் கொண்டு, தலைவி கூறுமிடத்தில், அறியாதார் இப்பிறப்பில் செய்யும் தீவினை மறுபிறப்பில் பயன்தருமென்பர்; மாறாக இப்பிறப்பிலேயே தீவினை தன்விளைவைத் தருமென்பது உண்மையாம் என்று கூறியதாக அறிய முடிகிறது. இப்பிறப்பின் வினை இப்பிறப்பிலேயோ அல்லது மறுபிறப்பிலேயோ பயனைத்தரும் என்னும் ஊழ்க் கோட்பாட்டினை இந்நூலால் அறியமுடிகிறது.[71]

இன்னிலையும், ஊழும் :

அழகிய புறாவின் குரல்போலக் கூறியழைத்து அப்புறாவாகிய பறவையைப் பிடித்துக் கூட்டிலடைத்தவன் மறுபிறப்பில் காலில் விலங்கு பூட்டப்பட்டுச் சிறையில் கிடந்து புலம்புவான் என்று தீவினை செய்வதைக் கண்டிக்கிறது.[72] முற்பிறப்பில் ஒருவன் செய்த வினையை இப்பிறப்பிலும், இப்பிறப்பில் செய்த வினையை மறுபிறப்பிலும் அடைய வேண்டும். இவ்வாறு மூன்று பிறவிகளில் உண்மையை அறிந்தவரே செல்வமுடையவராய் விளங்குவர்; அறியாதவர் துன்பத்தின் மயங்கிநின்று பாசத்தினை அறுக்க மாட்டார். ஆதலின் முக்காலங்களையும் அறிந்து பிறவியை நீக்கியவரே முத்தியடைவர்.[73]

வினைகள் இருக்கும்வரை பிறப்பும் இறப்பும் வந்துகொண்டே இருக்கும். வினையை முட்டோடு ஒழித்தால்தான் பிறப்பு ஒழியும். ஒருவன் செய்த வினை அவனை மறுபிறவியிலும் விட்டு நீங்காது. பசுவின் மடியிலுள்ள சீம்பால் பிதுக்கப் பிதுக்க வெளிவருவதுபோல ஊழ்வினைகளின் காரணமாகப் பிறப்பும் இறப்பும் மாறி மாறி வரும்; ஆதலின் வினையை ஒழிப்பதே மாந்தர்தன் கடன் என்பதை

தாமீட் டருவினைகள் தண்டா உடம்பொன்ற
நாமீட் டொறுக்கொணா ஞாங்கரடிப்பட்ட சீம்பால்
பிதுக்கப் பெயல்போற் பிறப்பிறப்பும் போகா
கதுப்போ டிறுத்தல் கடன்.[74]

என்னும் உவமையழகுடைய பாடலால் அறிய முடிகிறது. இவ்வாறு விலக்க வேண்டிய தீவினைகள் பற்றியும் வினைகளின் காரணமாகத் தோன்றும் பிறப்புக்கள் பற்றியும், வினைகளை முற்றாக நீக்குவதே பிறவியறுத்தற்குரிய வழியென்றும் ஊழ்க் கோட்பாடு பற்றிய கருத்துக்களை இன்னிலை வலியுறுத்துகிறது.

ஊழும் முயற்சியும் :

ஊழ்க் கோட்பாடு மனித முயற்சிக்கு எவ்வகையிலும் தடை இல்லையென்பது 'திருக்குறளும் ஊழும்' என்ற இயலிலும் விளக்கப் பட்டது. ஊழ் நம்பிக்கை முயற்சியைத் தடைப்படுத்திச் சோம்பலை

வளர்த்து மனித வாழ்வைப் பின்னுக்குத் தள்ளிவிடும் என்னும் கருத்து வளர்ந்தது இக்கோட்பாட்டினைப் பிழையாக உணர்ந்தமை யாலேயேயாகும். ஆதலினால்தான் திருக்குறளைப் போலவே நாலடியார், பழமொழி நானூறு போன்ற அறநூல்களும் இக்கோட் பாடு பற்றிய தெளிவான கருத்தினை வலியுறுத்துகின்றன.

ஒருவன் மேற்கொண்ட செயல் ஊழ்வினையினால் எளிதில் கூடி வாராதாயினும், அவ்வூழ் இப்பிறவியில் வழிசெய்து விட்ட ஒரு வகையினால், தளராமல் நின்று முயல்வதே ஆடவர்க்குரிய ஆண்மைப் பண்பாகும்; அல்லாமல் ஊழ் கட்டுதலால் ஒரு செயல் எளிதிற்கூடி வருமாயின் பெண்மக்களும் அதனைமுடித்துப் பெருமை யடையாரோ? என நாலடியார் கேட்கிறது.

இசையா தெனினும் இயற்றியோ ராற்றால்
அசையாது நிற்பதாம் ஆண்மை - இசையுங்கால்
கண்டல் திரையலைக்குங் கானலந் தன்சேர்ப்ப;
பெண்டிரும் வாழாரோ மற்று[75]

என்ற பாடலின்வழி, இம்மையில் ஊழ்வினையின் காரணமாக முயற்சிக்குரிய பயனில்லையாயினும் அம்முயற்சி உடனடியாகப் பயன் தராது பின்னொரு காலத்தில் உறுதியாகக் கொடுக்கும் எனக் கருதி ஊழ்வினையைக் கண்டு அஞ்சித் தளர்ந்து விடாது ஊக்கத்துடன் செயல்களைச் செய்வதே ஆண்மையுடையவர் தம் கடன் என்பதைத் தாளாண்மையதிகாரத்தில் நாலடியார் வலியுறுத்துகிறது.

உலகம் முழுவதையும் முன்னே உண்டாக்கியவன் நமக்காக அல்லலையும் படைத்தான் என்று நினைத்து இஃது அவனாலேயே நீங்கும் போலும் என்றுஎண்ணி அவனையே தொழுதுகொண்டு முயற்சியின்றியிருப்பின் துன்பம் நீங்குமோ? முதலில் ஓலையைப் பழுதுபட எழுதியவன் அப்பழுதினையே பாதுகாத்துக்கொள்ளாது அதனை நீக்கிவிட்டு வேறு ஓலை எழுதி வைத்துக்கொள்வதுபோல ஊழ்வினையால் துன்பம் வரினும் கடவுளைத் தொழுது அத் துன்பத்தை நீக்கிக்கொள்ள முடியாது. ஓருயிர் செய்த வினையின் பயன் பிறிதோருயிர்க்குச் செல்லாது செய்த உயிர்க்கே வருக்கும் செயலுடையனவாக இறைவன் கூறப்படுகிறானேயொழிய மாற்று கிறவனாகக் காட்டப்படவில்லை. ஆதலின் அவரவர் செய்த வினையினை அவரவர் அனுபவித்துக் கழித்துக்கொண்டே, இனி வரும் காலத்திற்குரிய நல்வினைகளை அயரா முயற்சியுடன் செய்ய வேண்டுமென்பதே சான்றோர் முடிவென்பதை,

முழுதுடன் முன்னே வகுத்தவன் என்று
தொழுதிருந்தக் கண்ணே ஒழியுமோ அல்லல்

இழுகினா னாகாப்ப தில்லையே முன்னம்
எழுதினான் ஓலை பழுது[76]

என்னும் பாடலால் பழமொழி நானூறு வலியுறுத்துகிறது.

இவ்வாறு அறநூல்கள் ஊழின் ஆற்றலைப் பலவாறு வலியுறுத்தியிருப்பினும், மனிதனுடைய ஆள்வினையை-முயற்சியை-தாளாண்மையைச் சிறிதும் குறைவாகக் கூறவில்லையென்பதும், மனிதன் வலியுணர்ந்து ஊக்கத்துடன் உழைக்கவேண்டும் என்பதையே வற்புறுத்தின என்பதும் குறிப்பிடத்தக்கன.

குறிப்புக்கள் :

1 நாலடி. 11 - பா. 1
2 கணபதி சாஸ்திரிகள் (மொ) மகாபாரதம், சாந்திபருவம் ம.வீ.இராமனுஜாசாரியார் (பதி), 1916, பக். 617-618
3. நாலடி. 11 - பா. 2
4. நாலடி. 11 - பா. 3
5. நாலடி. 11 - பா. 4
6. நாலடி. 11 - பா. 5
7. நாலடி. 11 - பா. 6
8. நாலடி. 11 - பா. 7
9. நாலடி. 11 - பா. 8
10. நாலடி. 11 - பா. 9
11. நாலடி. 11 - பா. 10
12. நாலடி. 1 - பா. 3
13. நாலடி. 1 - பா. 6
14. நாலடி. 2 - பா. 9
15. நாலடி. 3 - பா. 9
16. நாலடி. 4 - பா. 1
17. நாலடி. 4 - பா. 3
18. நாலடி. 4 - பா. 4
19. நாலடி. 4 - பா. 7
20. நாலடி. 4 - பா. 8
21. நாலடி. 6 - பா. 1
22. திருக். 987
23. நாலடி. 6 - பா. 8
24. நாலடி. 10 - பா. 3
25. நாலடி. 10 - பா. 4
26. நாலடி. 10 - பா. 9
27. நாலடி. 10 - பா.10
28. நாலடி. 12 - பா. 10
29. நாலடி. 13 - பா. 3
30. நாலடி. 13 - பா. 4
31. நாலடி. 13 - பா. 10
32. நாலடி. 14 - பா. 2
33. நாலடி. 19 - பா. 3
34. நாலடி. 26 - பா. 8
35. நாலடி. 27 - பா. 4
36. நாலடி. 27 - பா. 5
37. சிலப். 15 - வரி 91-92
38. பழ. நா. 24 - பா. 1
39. பழ. நா. 24 - பா. 2
40. திருக். 372
41. பழ. நா. 24 - பா 3
42. பழ. நா. 24 - பா. 4
43. பழ. நா. 24 - பா. 5
44. பழ. நா. 24 - பா. 6
45. பழ. நா. 24 - பா. 7
46. பழ. நா. 24 - பா. 8
47. பழ. நா. 24 - பா. 9
48. பழ. நா. 24 - பா. 10
49. பழ. நா. 24 - பா. 11
50. பழ. நா. 24 - பா. 12
51. பழ. நா. 24 - பா. 13
52. பழ. நா. 24 - பா. 14
53. பழ. நா. 6 - பா. 4
54. பழ. நா. 27 - பா. 5
55. பழ. நா. 32 - பா 4

56. பழ. நா. 34 - பா. 5
57. பழ. நா. 34 - பா. 10, 11
58. நான்மணி. பா. 44
59. நான்மணி. பா. 45
60. நான்மணி. பா. 49
61. நான்மணி. பா. 51
62. நான்மணி. பா. 101
63. திரிகடுகம். பா. 23
64. திரிகடுகம். பா. 67
65. திரிகடுகம். பா. 95
66. ஏலாதி. பா. 21, 22, 24
32, 33, 64, 65, 76, 77.
67. ஏலாதி பா. 72
68. ஏலாதி பா. 73
69. திணைமாலைநூற்றைம்பது
பா. 5
70. திணைமாலைநூற்றைம்பது
பா. 12
71. திணைமாலை நூற்றைம்பது
பா. 123
72. இன்னிலை பா. 3
73. இன்னிலை பா. 6
74. இன்னிலை பா, 7
75. நாலடி. 20 - பா. 4
76. பழ. நா. 17 - பா. 12

9. ஊழ்க் கருத்து வளர்ச்சி நிலை – ஒரு பார்வை

மெய்யியற் கோட்பாடுகளுள் ஊழ்க் கோட்பாடு மிகச் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. இது சிந்தனையாளர்களால் பல காலமாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இக்கோட்பாடு உலகம் தழுவிய உயர் கருத்தினை அடிப்படையாகக் கொண்டது என்பதும் பழந்தமிழர் மட்டுமன்றித் தொல்லுலக மாந்தர் அனைவரது சிந்தனையிலும் விளங்கியது என்பதும் முன்னர் விளக்கப்பட்டன. பழந்தமிழர் சிந்தனையில் உருவாகிய ஊழ்க் கருத்து, காலப் போக்கில் பெற்ற வளர்ச்சி இங்கு நிரல்படக் காட்டப்படுகிறது.

நியதிக் கொள்கையும், ஊழ்க் கருத்தும் :

ஊழ் என்னும் சொல் தொடக்க நிலையில் உலகியற் பொருளிலேயே இடம்பெற்றது என்றும், பின்னர் இயற்கைப் பொருளில் இருந்து, மனித ஆற்றலுக்கு மேம்பட்ட ஆற்றலையுணர்த்தும் கருத்துப் பொருளை ஏற்றது என்றும், ஊழ்த்தல் என்னும் சொல் மலர்தல், முதிர்தல், வெளிப்படுதல், தோன்றுதல், பயனளித்தல் என்ற பொருளில் இயற்கைப் பொருள்களைக் குறித்துப் பின் மனிதன் செய்த செயலின்விளைவு முதிர்ந்து வெளிப்படும் நிலையில் (துய்க்கும் நிலையில்) ஊழ்க் கருத்தினை-கொள்கையினை விளக்குவதாக மாற்றம் பெற்றது என்றும் முன்னியலில் விளக்கப்பெற்றது.

> சங்க இலக்கியங்களில் ஊழ் என்ற சொல் வினைப் பொருளில் ஆளப்பெறவில்லையென்பதைக் கூறி ஊழ்க் கொள்கை வினைக் கொள்கையன்று[1]

எனக் கு. ச. ஆனந்தன் குறிப்பிடும் கருத்து ஆய்வுக்குரியது.

வினைக் கொள்கையைப் பழந்தமிழர் அறியாதவரல்லர்; அறியாதவர் எனக் கொண்டால் உலகம் தழுவிய இக்கோட்பாடு நாகரிகப் பழைமையுடைய தமிழர்க்குத் தெரியாதது என்னும் குறைவு ஏற்படும். சங்க இலக்கியங்கள் பழவினை, தொல்வினை, பால், நற்பால், நோய்ப் பால் ஆகிய சொற்களால் வினைக் கொள்கையை வலியுறுத்துகின்றன. தொடக்கத்தில் ஊழ் என்பது இயற்கை நியதியைக் குறிப்பதாகவே விளங்கியது. இயற்கை நிகழ்வுகளால் ஏற்படும் இன்ப துன்பங்கள், மனித ஆற்றலுக்கு மேம்பட்ட நிலையில் காரணம் காண முடியாத நிலையில் விளையும் இன்ப துன்பங்கள் பிறப்பு, இறப்பு ஆகியவற்றுக்குரிய காரணம் யாதெனச் சிந்தித்த மக்கள் மனித ஆற்றலிலும் மேலான வலிமையுடைய ஆற்றல் ஒன்று உண்டெனக் கொண்டு அவ்வாற்

றலை நியதி என்ற சொல்லால் குறித்தனர். அவ்வாற்றலால்தான் இப்பேருலகம் (Universe) இயங்குகிறது; அண்டங்களும் கோள் களும் விண்மீன்களும் பகல் இரவு முதலான காலங்களும் பருவங் களும் உயிர்களின் இயக்கமும் ஆகிய அனைத்தும் அவ்வாற்றலின் வரையறுக்கப்பட்ட ஒழுங்குக்கு உட்பட்டே இயங்குகின்றன என்பது நியதிக் கோட்பாட்டாளர் கருத்து. ஆசீவகச் சிந்தனையாளர்கள், செயல்கள் நிகழும் முன்னரே அவைஅவ்விதம் நிகழவேண்டும் என்று தீர்மானிக்கும்-வரையறுக்கும் ஆற்றல் உண்டென்று கூறி அதனை நியதி என்று அழைத்தனர் என்பது அறிஞர் கருத்து.[2] இந் நியதியே ஊழ் எனவும் தெய்வம் எனவும் தமிழ் நூல்களில் கூறப் பட்டதாக ர. விஜயலட்சுமி கூறுகிறார்.[3]

> நியதிக் கொள்கையும் வினைக்கொள்கையும் வேறுவேறு என்று அறிந்து கொள்ளுதல் வேண்டும். இவ்விரண்டு கொள்கைகளுமே வேதங்களில் காணப்படவில்லை. ஆதலின், இவை ஆரியர் வருகைக்கு முன்னர் இந்தியா வில் வாழ்ந்த திராவிடப் பெருமக்களுக்கு உரியன என்று மேலை நாட்டு இந்தியச் சிந்தனையாளர்கள் (Indologists) ஆய்ந்துரைத்துள்ளனர்.[4]

என்று சோ. ந. கந்தசாமி கூறும் கருத்தும்,

> ஊழ் என்ற சொல்லும் வினையென்ற சொல்லும் இன்றைய வழக்கில் ஒரு பொருளையுடையனவாக வழங்கப்படினும், தொடக்க நிலையில் தெளிவான இரு வேறு கோட்பாடுகளைக் குறிப்பதாயமைந்தன[5]

என்னும் ர. விஜயலெட்சுமியின் கருத்தும் ஆசீவகர்களின் நியதிக் கொள்கையும் வினைக் கொள்கையும் வேறுவேறானவை என்பதைக் குறிப்பிடுகின்றன. ஆசீவகர் கூறும் நியதியே ஊழ் எனவும், ஊழ் என்ற கொள்கை ஆசீவகராலேயே முதன்முதலில் தெளிவாகக் கோட்பாட்டுருவில் வெளிப்படுத்தப்பட்டாலும், இக்கருத்து இந்திய நாட்டில் பண்டைக் காலந் தொட்டு மக்களிடையே அவர்கள் எண்ணத்திற் கலந்திருந்ததாகவும் ர. விஜயலட்சுமி கூறும் கருத்து சிந்திக்கத் தக்கது.[6] வேத சமயங்களை எதிர்த்துத் தோன்றிய அவைதிகச் சமயங்களாகிய ஆசீவகம், சமணம், பௌத்தம் மூன்றும் அடிப்படைப் பொதுத் தன்மைகளில் ஒப்புமையுடையன. வட நாட்டில் தோன்றிய மற்கலி கோசலர், மகாவீரர், புத்தர் மூவரும் முறையே மூன்று நெறிகளின் முதல்வர்களாகக் கூறப்படுகின்றனர். வடக்கிருந்து ஆசீவகத்தின் நியதிக் கொள்கை தமிழகத்திற்கு வந்து ஊழ்க் கோட்பாடு உருப்பெறும் வரை இங்கிருந்த கொள்கை யாது? ர. விஜயலட்சுமி கூறியவாறு இந்திய நாடு முழுவதிலும் நிலவிய இக்கருத்துத் தமிழ்நிலத்திலும் வேறு பெயரில் இருந்ததா? இல்லை

யானால் தமிழர் நியதிக் கொள்கை போன்ற சிந்தனையில்லாதிருந்தனர் என்று சொல்வதா? என்ற வினாக்கள் ஆய்வாளருக்குத் தோன்றுகின்றன. மற்கலி கோசலரது நியதி வாதம் தமிழ் நிலத்திற்கு வருவதற்கு முன்னரே, மனித ஆற்றலுக்கு மேம்பட்ட ஆற்றலால் இவ்வுலகம் இயங்குகிறது எனவும், அவ்வாற்றல் அறம் பிறழாத, வரையறுக்கப்பட்ட ஒழுங்கினை உடையதாக அமைந்து உள்ளது எனவும்கூறும் கருத்துக்கள் சங்க இலக்கியங்களில் நிறைய உள்ளன. ஊழ் என்ற சொல் அவ்வாற்றலைக் குறித்துச் சங்க இலக்கியங்களில் மிகுதியாக வழங்கப்படவில்லையாயினும் பால், பால்வரை தெய்வம், முறை ஆகிய சொற்கள் நியதிக் கொள்கைக்கு இணையான கருத்துடையனவே.

> வாழ்தல் வேண்டும் இவண் வரைந்தவைகல்[7]
> வரைந்துநீ பெற்ற நல்லூழியையே[8]
> பால்வரைந்தமைத்தலல்லது அவர்வயின்
> சால்பளந்தறிதற்கு யாம் யாரோ[9]
> ஆருயிர் முறைவழிப் படூஉம்[10]

என்பன போன்ற இடங்களில் வரையறுப்பது, முறையாவது எது என்ற வினா எழுகிறது. இதனை இயற்கையாற்றல் (நியதி) என்று ஆசீவகர் போன்றோரும், இறையாற்றல் என்று வேத நெறியாளர்களும் கூறுகின்றனர். சமணர், பௌத்தர் இவ்விரு சாராரையும் மறுத்து ஊழ்வினையின் ஆற்றலே இம்மை வாழ்வினை வரையறுப்பது என்று கூறுகின்றனர். கணியன் பூங்குன்றனாரின் புறப் பாடலை (192) எடுத்துக்காட்டி, நியதிக் கொள்கைக்குரியதாக இப் பாடல் அமைந்திருக்கிறது என்றும், 'முறை' என்ற சொல் 'நியதி' என்ற வடசொல்லுக்குரிய அழகு தமிழ்ச் சொல்லென்றும், ஆரியர் வருகைக்கு முன் திராவிடரால் பின்பற்றப்பட்ட இக்கொள்கை அக் காலத்து ஆசீவகர்களால் கொள்ளப்பெற்றது எனக் கருதுவது ஆய்வு நெறிக்கு ஒத்தது[11] என்றும் சோ ந. கந்தசாமி கூறுவதுகொண்டு நியதிக் கொள்கை தமிழ் மண்ணிற்கு வருவதற்கு முன் அக்கொள் கைக்குரிய கருத்து இங்கிருந்தது என்றும், அது எல்லாவற்றுக்கும் மேம்பட்ட இயற்கைப் பேராற்றலைக் குறிக்கும் ஊழ்க் கருத்தாக இருந்திருக்க வேண்டுமென்றும் கருத முடிகிறது.

வினைக் கொள்கையும் ஊழ்க் கருத்தும் :

சமயக் கொள்கைகளுக்கு மிகுதியும் இடமளிக்காத சங்கத் தமிழ் நூல்களில், சமயக் கொள்கைகளை விளக்குவதற்காகவே பின்னர்த் தோன்றிய மணிமேகலை போன்றவற்றில் அமைந்த மெய்யியற் கோட்பாட்டு விளக்கங்களைக் காணவியலாதாயினும், இக் கோட்பாடுகளுக்குரிய சிந்தனை தமிழர்களுக்கு இருந்தது என்பதை

மறுக்கவியலாது. ஆகவே முறை என்னும் சொல் உலக முறை உலகியற்கை எனவும், பால், பால்வரை தெய்வம்என்பன உலகை வகுத்து இயக்குவது எனவும் வழங்கப் பெற்று, ஊழ் என்ற சொல் லையும் இப்பொருள்களில் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு உலகியற்கையை, இயற்கைப் பொதுமைப் பேராற்றலைக் குறித்த ஊழ் என்னும் சொல், உயிர்கள் செய்யும் செயல்களின் விளைவுகளைப் பகுத்து அவ்வுயிர்களுக்கு வகுத்து ஊட்டும் ஆற்றலைக் குறிப்பதாக மாற்றம் பெற்றிருக்கலாம் எனக் கருத முடிகிறது.

தொல்காப்பியத்திலேயே வினை, வினைநீக்கம்[12] பற்றிய கருத்துக்கள் இடம் பெற்றிருப்பதையும், சங்க இலக்கியங்களில் ஐங்குறுநூற்றிலும், பட்டினப் பாலையிலும்[13] ஊழ் என்ற சொல்லே பழவினைப் பொருளில் இடம் பெற்றதாகக் கருதலாம் என்பதும் முன்னியல்களில் விளக்கப் பெற்றன. மேலும் சங்க இலக்கியங்களில், பழவினை, தொல்வினை, பால், நற்பால், நோய்ப் பால் முதலான வினைக் குறிப்புடைய சொற்கள் இடம் பெற்றுள்ள செய்தியும், இவற்றால் பழந்தமிழர் வினைக் கொள்கையில் பெரிதும் நம்பிக்கையுடையவராக விளங்கினர் என்பதையும் அறிய முடிந்தது. ஆனால் அறிஞர் சிலர், வினைக் கொள்கையால் மனித முயற்சியும் உழைப்பும் தடைப்படுத்தப்படுகின்றன என்பதாகக் கருதி, வினைக் கொள்கை என்பது வைதிகம், சமணம், பௌத்தம் போன்ற சமயங்களால் வற்புறுத்தப் பெற்றது என்பர். திருவள்ளுவர்தம் ஊழ்க்கொள்கை பற்றி விளக்கி, அது உலக முறை அல்லது உலகச் சூழ்நிலை எனக் கூறி,

> வள்ளுவர்தம் ஊழ்க் கொள்கை முற்பிறப்புக் குறிப்போ பழவினைக் குறிப்போ, அவ்வுலகக் குறிப்போ தினையளவும் அற்றது[14]

என வ. சுப. மாணிக்கம் குறிப்பிடுகின்றார்.

இக்கருத்தை அப்படியேஏற்றுக் கொள்ளும் கு.ச. ஆனந்தன், ஊழ் வேறு, ஊழ்வினை வேறு எனவும், ஊழ்வினை என்ற சொல் சங்கப் பாடல்களிலோ திருக்குறளிலோ பயன்படுத்தப்படவில்லை யாதலின், ஊழ்வினைக் கொள்கை பிற்காலச் சமய வளர்ச்சிக் கொள்கையெனவும் கூறுகிறார். மேலும்

> தமிழகத்திலிருந்த பல சமயங்களிலும் அக்கொள்கை விரிந்து பரந்து பரிமேலழகர் காலத்தில் எல்லாச் சமயங் களும் ஏற்றுக் கொண்ட ஒரு கலப்புக் கொள்கையாகி விட்டது. ஆனால் அது திருவள்ளுவரின் ஊழ்க் கொள்கை அன்று[15]

எனவும், திருவள்ளுவர் கூறும் ஊழ், பால்வரை தெய்வம், தெய்வம் ஆகியன அன்று எனவும் கூறி, ஊழ் என்பது முறைமை, உலகத் தியற்கை, உலகச் சூழல், உலக இயல் நிகழ்ச்சிகள், (Natural Phenomena) மனித முயற்சிக்கு ஒரு வகையான எதிர்த் தாக்குதல். சலியா உழைப்பினால் அதனை வெல்லலாம் என்றும் இவர் குறிப்பிடுகிறார்.

வ. சுப. மாணிக்கம், கு. ச. ஆனந்தன் ஆகியோர் கருத்துக்களைப் புதிய விளக்கங்களாகக் கொள்ளலாமே தவிர வள்ளுவர் கருத்துக்கு ஏற்புடையனவா என்பது ஆய்விற்குரியது. ஊழ் என்பதற்குச் சூழல் என்னும் இவர்களது கருத்தை எஸ்.இராம கிருட்டிணன் மறுத்து, அவ்வாறு வள்ளுவர் ஆண்டிருப்பாரானால். தெய்வம், பால் ஆகிய சொற்களை ஊழின்இணைப் பொருட் சொற் களாக ஆண்டிருக்க மாட்டார் எனக் கூறுகிறார்.[16]

தொல்காப்பியம், சங்க இலக்கியங்களில் பழவினை குறித்த பால், தெய்வம் ஆகிய சொற்கள் திருக்குறளில் இடம் பெற்றிருத் தலின் வள்ளுவர் காலத்திற்கு முன்னரே ஊழ், பால், தெய்வம் ஆகிய சொற்கள் ஒரு பொருளைக் குறிக்கத் தொடங்கி விட்டன என்பதும், இவை நற்பால், நோய்ப்பால் என்பனவாக நல்வினை, தீவினை குறித்து வழங்கின என்பதும் கருதத் தக்கனவாம். இவை வினைக் கொள்கையைக் குறிப்பிட்டதாலேயே திருவள்ளுவருக்குப் பின்வந்த இளங்கோவடிகள், சாத்தனார் ஆகியோர் ஊழ் என்ற சொல்லை முதிர்ந்தது-பழைமையானது என்ற பொருளில் வினை யுடன் சேர்த்துப் பழவினையையும், பழவினைப் பயனையும் குறிக்க 'ஊழ்வினை' என வழங்கினர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

வினைக் கொள்கை என்பது சமண சமயத்தினுடைய சிறப்புக் கொள்கை. வினையைச் செலுத்துவான் ஒரு முதல்வன் உளன் என்னும் வைதிகச் சமயக் கருத்துக்களை மறுத்து வினையையே முதலாகக் கூறுவது என்பது முன்னரும் விளக்கப் பெற்றது.

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்[17]

எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும்[18]

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று[19]

என்பன போன்ற வினைக் கொள்கை பற்றிய கருத்துக்களையும், உயிர்,பல பிறப்புக்கள்,துறக்கம், நரகம் பற்றிய பல்வேறு சிந்தனை களையும் கூறும் திருவள்ளுவர்தம் ஊழ்க் கொள்கையை வினைக் கொள்கையிலிருந்து வலிந்து வேறுபடுத்திக் காட்ட வேண்டிய தில்லை என்பதும் ஊழ்க் கொள்கையும் வினைக் கொள்கையாக மாற்றம் பெற்றது என்பதும் ஆய்வாளர் கருத்தாகும்,

> சமணச் சிந்தனையின் சிறப்புக் கூறுநான் வினைக் கொள்கை.........பௌத்த தத்துவத்தின்படி இப்புவனத் தில் உள்ள ஒரே மெய்ம்மை தனி மனிதன் அநுபவிக்கும் ஊழ்வரிசைகளேயாகும்;ஒருமன நிலைக்கும் இன்னொரு மன நிலைக்கும் உள்ள காரண காரியத் தொடர்பை விளக்குவதற்காகவே ஊழ்என்கிற கருத்தைப் பௌத்தர் கள் புகுத்தினார்கள்.[20]

என்று அ. சக்கரவர்த்தி நயினார் கூறுகிறார். மேலும் இவ்வுடம்பு நீங்குவதாலேயே வினையாக்கையும் நீங்கி விடுவதில்லையென்றும் இந்த வினையுடம்பு எப்படி அமைகிறது; இது எப்படித் தூய ஆன்மாவைப் பாதிக்கிறது; இதனால் தான்மை அல்லது ஆன்மா எப்படி பாதிக்கப்படுகிறது, இதன் அதிகாரத்தில் தான்மை எப்படி அடங்கிக்கிடக்கிறதுஎன்பதையெல்லாம் விளக்குகிற கொள்கைக்குத் தான் வினைக் கொள்கை அல்லது கருமக் கொள்கை என்று சைன மதத்தில் பெயர் என்றும் அவர் குறிப்பிடுவது கருநத்தக்கது.[21] இவ்வாறு சமண பௌத்த சமயங்களின் செல்வாக்குடைய கொள்கை யாக ஊழ்க் கொள்கைவளர்ச்சி பெற்றுள்ளது.

பால் என்னும் சொல் பழந்தமிழ்ச் சமுதாயத்தில், வேட்டை யாடி வரும் பொருள்களையும், போரில் வெற்றிக்குப்பின் கொண்டு வரும் பொருள்களையும், வீரர்கள் கவர்ந்துவரும் ஆநிரைகளையும் வீரர்களுக்குக் குழுவின்தலைவன் சமமாகப் பகுத்தளிப்பது,உணவுப் பொருளைப் பாதீடு செய்தளிப்பதுஆகிய பொருள்களில் வழங்கியது. அக்காலச் சமுதாயத்தில் கூட்டுத் தொழில், கூட்டுடைமை, கூட்டு உணவு ஆகியவை இருந்தன; நிலம் பயன்படுத்துவதற்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டதேயொழிய உரிமையாக, உடைமையாகக் கொடுக்கப்படவில்லை என்னும் கருந்துக்களைப் பண்டைய கிரேக்கச் சமுதாயத்துடன் ஒப்பிட்டுக் காட்டுகிறார் க. கைலாசபதி. மேலும் பகுத்தலை அடிப்படையாகக் கொண்ட பால் என்பது வேற்றுமையின்றிச் சமமாகப் பகுக்கும் ஆற்றலை, மனித ஆற்ற லுக்கு மேம்பட்டதாகக் குறிப்பிடும் பால்வரை தெய்வமாகக் கருதப் பட்டதால், இச்சொல் பொருளுலகிலிருந்து கருத்துலகத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டதாகவும், இதற்கு ஒப்புமையாக 'மொய்ரை' என்னும் கிரேக்க ஊழணங்கினைப் பற்றிய கருத்தையும் எடுத்துக் காட்டுகிறார். சங்க இலக்கியங்களில் உறுதியான தன்னம்பிக் கையை உணர்த்திய இக்கருத்துப் பின்னர் தன்னப்பிக்கை யின்மைக்குச் சென்று தனக்கு மேம்பட்ட ஒன்றை உணர்த்துவதாக மாற்றம் பெற்றது என்றும், இக்கொள்கை இந்துக்களின் 'விதி', சைனர்களின் 'ஊழ்', ஆசீவகர்களின் 'நியதி' ஆகியவற்றுடன் தொடர்புடைய கர்மக் கொள்கை அடிப்படையை உணர்த்தத் தொடங்கியது என்றும்,பழந்தமிழ்ச் சமுதாயத்தில் பொதுவுடைமைச்

சமநிலையில் வழங்கிய பால் என்னும் கருத்து, சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கும், தனி மனிதனுடைய கடைத் தேற்றத்திற்கும் நியாயம் கற்பிப்பதாக மாற்றம் பெற்றது என்றும் அவர் கூறும் கருத்துக்கள் பால், ஊழ் ஆகிய சொற்களின் கருத்து வளர்ச்சியைக் காட்டுகின்றன.[22]

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இலக்கியங்களிலும், அற நூல்களிலும் ஊழ் என்பது முதிர்ச்சி என்னும் பொருளில் முற்பிறப்புக் குறிப்பினையுடையதாகி முற்பிறப்பின் வினை, வினை விளைவு, வினைப் பயன் என்பதைக் குறிக்கத் தொடங்கி,

> பிற்கால இலக்கியங்களில் ஊழுக்கும் வினைக்கும் வேறுபாடே அற்ற நிலை உருவாகி விட்டது[23]

என்று ர. விஜயலட்சுமி குறிப்பிடுவதுபோல் ஊழும் வினையும் ஒரே கொள்கையைக் குறிப்பதாக மாற்றம் பெற்றது என்பது கருதத் தக்கது.

ஊழ்க் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துக்கள் :

இன்றைய நிலையில் ஊழ்க் கோட்பாடென்பது வினைக்கோட்பாடாகவே கருதப் படுகிறது. நல்லூழ் என்பது நல்வினையையும், தீயூழ் என்பது தீவினையையும் குறிப்பன. ஒவ்வொரு மனிதனுடைய செயலுக்கும் விளைவுண்டு; வினைப் பயன் என்பது அவரவர் செயல்களால் விளைவனவே; முற்பிறப்பின் வினைப் பயனுக்கு ஏற்பவே இப்பிறவி அமைகிறது. இப்பிறவியின் வினைப்பயனுக்கு ஏற்பவே மறுபிறவியும் அமையும்.

இப்பிறவியில் துய்ப்பனவாகிய இன்பம், துன்பம், செல்வம், அறிவு வளம் யாவும் முற்பிறவியில் செய்த நல்வினை, தீவினைகளாகிய ஊழின் விளைவாகும்; ஊழின் பயனை மாற்றவோ விலக்கவோ, அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவோ முடியாது என்பன அடிப்படைக் கருத்துக்களாகும். இக்கருத்துக்களடிப்படையில் பழந்தமிழிலக்கியங்களில், வாழ்க்கையின் அடிப்படைக்குரிய காரணமாகவும், ஆண் பெண் உறவு, பொருள், அறிவு வளர்ச்சி ஆகியவற்றுக்குக் காரணமாகவும் ஊழ்க் கோட்பாடுகள் விளக்கப் பெற்றன. இன்பதுன்ப உணர்வுகளின் தாக்கங்களில் ஆறுதல் அளிப்பதாகவும், தனி மனித ஆக்கம், அழிவு மட்டுமின்றிச் சமுதாயத்தின் ஆக்கம், அழிவு ஆகியவற்றுக்கும் ஊழ் காரணமாக உள்ளதென்றும் இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

ஒருவன் செய்த வினையின் பயனை அவனே அனுபவித்துக் கழிக்க வேண்டும். அவனுக்காக மற்றொருவன் அனுபவிக்கவோ, செய்தவன் தப்பிக்கவோ முடியாது.

> தான்செய்த பாவ கருமத்தின் விளைவுகளிலிருந்து எந்த மனிதனாலும் தப்ப முடியாது; அவர்களுக்கு இவ்வுலகத் திலும் இடம்இல்லை;விண்ணுலகத்திலும் இடம்இல்லை; கடல் நடுவிலும் இடமில்லை; மலைக் குகைகளிலும் இடமில்லை.24

என்பது புத்தரின் தம்மபதம் வலியுறுத்தும் கருத்தாகும்.

ஒவ்வொருவனும் தன் ஊழினை - கரும நியதியைத் தானே நிர்ணயித்துக் கொள்கிறான். ஆதலின் இம்மையில் மனித முயற்சிக்கும் உழைப்புக்கும் ஊழ் தடையாகாது;பழவினைப் பயனை அனுபவிக்கும் ஒருவன் இம்மையில்செய்யும் செயல்களின் விளைவுகள் மறுமையில் அவனுக்கு உரிய ஊழ்வினையாக மாறுகின்றன. முன் வினை ஒருவனுடைய பிறவியையும், அவன் நுகரும் பலனையும் முடிவு செய்கிறதேயன்றி, அவன் செய்ய விரும்பும் செயல்களை முன்னரே முடிவு செய்வதில்லை; அவற்றை அவன் தானே தன் விருப்பப்படி செய்கிறான்;திருடுதல் ஒருவன் செயல்; திருடாமலிருந் தும் திருடியதாகத் தண்டனை பெறுதல் வினைப்பயன்; நற்செயல் செய்வதற்கும் தீச்செயல் செய்வதற்கும் சுதந்திரமுடையவனா யிருத்தலால் தீச்செயல் செய்து எதிர்வினை மூட்டையைத் (ஆகா மியம்) தேடிக் கொள்ளாமலிருத்தல் ஒவ்வொருவருக்கும் முடியும் என்று டீ. டி. தாதாச்சாரியார் கூறுவர்.25

ஒருவன் இப்பொழுது அனுபவிப்பது முற்பிறப்பின் வினைப் பயனால் முடிவு செய்யப்பட்டுள்ளதாயினும், அவன் தன் எதிர் காலத்தை உருவாக்கிக் கொள்ளவும், பழவினைப்பயனை அனுபவித்துத் தீர்த்துக் குறைத்துக்கொள்ளவும் உரிமையுடைய வனாவான்; நிகழ்காலம் முன்னரே முடிவு செய்யப்பட்டது; எதிர் காலம் அவனுக்கு வரையறைக்கு (நிபந்தனைக்கு) உட்பட்டதாகும் என்று கூறும் டி. ஜி கல்கட்கியின் கருத்து, நிபந்தனையினைத் தனிமனித முயற்சியால் மாற்றலாம் என்று குறிப்பிடுகிறது26

ஆதலின் நேற்றைய செயல் ஒருவனுக்கு இன்றைய வினை யாதலின், இன்று, இப்பிறவியில் துன்பம் அனுபவிப்பவனும், துன்பத்தைத் தாங்கிக்கொண்டு தீவினை செய்யாது நல்வினை செய்து வருவானேயானால் நாளைய வாழ்வு, மறுமை இன்பம் அவன் கையில் இன்று உள்ளதைப் பொறுத்தது. ஆகவே ஒவ்வொருவரும் நாளைய இன்பம் கருதி இன்று தீயூழுக்குரிய வினைகளைச் செய்யாது நல்வினை செய்யவேண்டுமென்பது கருத்தாகும்.

ஊழ்க்கருத்தும் உழைப்பும்

மனித முயற்சிக்கும் உழைப்பிற்கும் ஊழ்க்கொள்கை எவ் வகையிலும் தடையாக இருப்பதில்லை. இக்கருத்தடிப்படையில் திருக்குறளும் ஊழும் என்னும் இயலில், ஊழ், ஆள்வினை இரண்டினையும் திருவள்ளுவர் முரண்படச் சொல்ல வில்லையென்பதும் உண்மையிலேயே ஊழ், ஆள்வினை இரண்டிற் கும் முரணில்லையென்பதும் விளக்கப்பெற்றது. உயிர்களின் இயல்பு உழைத்தல். உழைப்பின்றிச் சோம்பியிருத்தல்உயிரியற்கையாகாது, உயிர் உடம்புடன் கூடியுள்ளவரை இயக்கமுடையதாக இருப்பது தான் மனித இயல்பு. இதற்கு மாறாக உழைக்காமல் பிறருடைய உழைப்பில் வாழ்வோர் வினைக் கொள்கையைத் தங்களுக்குத் சார்பாக்கிக் கொண்டு தவறான கருத்தைப் பரப்பி விட்டார்கள். அவரவர் செய்த செயலின் பயனை அவரவரே அனுபவித்தல் வேண்டும் என்று சொல்லும் ஊழ்க்கருத்திலேயே உழைப்பின் இன்றியமையாமை உணர்த்தப்பெறுகிறது.

> மனிதனிடம் தோன்றும் நிகழ்ச்சிகள் எல்லாம் அவனுடைய நிழல்போல் தொடர்ந்து வருகின்றன. பின் தொடந்துவரும் விதிப்பயனிடமிருந்து எவ்வளவு முயன்றாலும் அவனால் தப்ப முடிவதில்லை. வழி பாடுகள் செய்தாலும் அதனைத்தவிர்க்க முடிவதில்லை27

என்பது ஜேம்ஸ் ஆலன் கூறும் கருத்தாகும்.

ஊழின் பயனைக் கடவுளாலும் மாற்ற இயலாது என்பது தான் இக்கொள்கையின் அறிவார்ந்த முடிவு. கடவுள் வினையை அழிப்பான் என்று சொல்லிய வைதிகசமயக் கருத்துக்களை மறுத்து சமண, பௌத்த சமயங்கள் கடவுளைப் பற்றிக்கவலைப்படாது கரும நியதிக்கு முதன்மை கொடுத்த காரணம் ஊழின் பயனை உரியவனே அனுபவிக்க வேண்டும் என்ற முடிவை வலியுறுத்தவே ஆகும். சைவ சித்தாந்தம் போன்ற கொள்கைகள் கடவுளை, மனிதனுடைய வினைகளுக்கேற்ற பயனைக் கூட்டுவிப்பவனாக, அவரவர்க்குரியதை வகுத்துச் செலுத்தும் ஆற்றலுடைய பொருளாகவே காட்டுகின்றன.கடவுள் வினைப்பயனைமாற்றுவான் என்ற தவறான கருத்தினால், செய்த தீவினைகளுக்குப் 'பிராயச் சித்தம்' செய்யும் பொருந்தாக் கொள்கைகள் வற்புறுத்தப்பட்டன. கடவுட் கொள்கையால், வழிபாட்டினால், இம்மையில் கைக் கொள்ளும் நல்லொழுக்கத்தால் மனத்தைச் சரியான வழியில், மடைமாற்றம் செய்து பழக்கித் தீவினை வழியில் செல்லாது இனிமேல் செய்யும் செயல்களை நல்வினைகளாகச் செய்ய இயலும். அவ்வாறு கடவுள் வழிபாடுடையோர் வினைப்பயனை உணர்ந்து,

அதனை அனுபவிக்கும்போது மனத்தளவில் துன்பமின்றித் தாங்கிக்கொள்ளும் ஆற்றலைப்பெற்று நல்வினைகளைச்செய்வர் என்பதுதான் கடவுள் வழிபாட்டின் உண்மைப்பயன் என்பது முன்னோர் கூற்று. அறிவொடு பொருந்திய இக்கருத்திற்கு மாறாக வற்புறுத்தப்பட்டனவெல்லாம் கற்பனைக் கதைகள் ஆகும். அறம், ஒழுக்கம், அறிவு வழியலமைந்த கட்டுப்பாடு, தவம் இவற்றை உறுதியுடன் வலியுறுத்திய சமண, பௌத்தர் கடவுள்நம்பிக்கையில்லாமலேயே மனிதன் இம்மையில்பழவினையை அனுபவித்து, மறுமைக்கு வேண்டிய நல்வினைகளைச் செய்ய முடியும் என்றனர். ஆதலால் வினைசெய்தவனே வினைப்பயனை அனுபவிக்கவேண்டும்; பின்வரும் பிறப்பிற்குரிய வினையையும் அமைத்துக்கொள்ளவேண்டும் என்பதன்மூலம்உயிரின் உழைப்பிற்கு உரிய முழுஉரிமையும் ஊழ்க்கோட்பாடு கொடுக்கிறது.

ஒரு மனிதனுடைய செயல்களின் தொகுப்பு அவனிடமே வந்து சேர்கின்றது. உற்சாகத்துடன் உழைப்பவன் மேலும் மேலும் உயர்வடைகிறான். கடமையை உணராது மன நிறைவின்றி வேலை செய்தால் தொழில் குறுகி முன்னேற்றம் தடைப்படுகிறது. பலதிறப்பட்ட வாழ்க்கை நிலைகளைக் காணும்போது அவைகள் எல்லாம் முன்வினையின் விளைவுகள் என்பதும் ஒருவனுடைய எண்ணங்களிலும் செயல்களிலும் இருந்து தோன்றுகின்றன என்பதும் பெறப்படும். இஃதே போன்று விதைக்கப்பட்ட வினைகள் வளர்ந்து முற்றிப் பல்வேறு குணங்களாகத் தோன்றுவதும் நமக்குத் தெரிகின்றது. இப்பிறவியில் மட்டுமின்றித் எண்ணுதற்கு அரிய கணக்கற்ற பிறப்பு இறப்புக்களைக் கடந்து வரும் முற் பிறவிகளிலும் எல்லையற்ற எதிர்காலத்திலும் வினையின் பயன் களைத் துய்க்கின்றோம். ஒருவன் தன் செயல்களின் பயன் இனிமையாக இருந்தாலும் கசப்பாக இருந்தாலும் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டி இருக்கின்றது[28] என்னும் ஜேம்ஸ் ஆலன் தருக்கநூல் முறைப்படி ஒரே நேரத்தில் வலியுடையவனாகவும் வலிவற்றனவாகவும் இருக்கமுடியாது ஆதலின் நுகர்ச்சிகளுக்கு அடிமையாகாது குறைபாடுகளைத் தகர்த்து, 1. தீய பழக்கங்களை அகற்றுதல் 2. நற்பழக்கங்களைக் கடைப்பிடித்தல் 3. உடனடியாகச் செய்ய வேண்டிய கடமையில் விழிப்புடன் கருத்தைச் செலுத்துதல் 4. செய்யவேண்டியவற்றை உடனுக்குடன் ஊக்கத்துடன் செய்தல் 5. முறைப்படி வாழ்க்கை நடத்துதல் 6. நாவடக்குதல் 7. மனத்தை அடக்குதல் ஆகிய பயிற்சிகளால் உள்ளத்தூய்மையும் உறுதியும் பெற்றுப் பழவினையை அனுபவித்துக்கொண்டே நற்செயல்களால் எதிர்வினை இல்லாமல் செய்துகொண்டுவிடலாம் என்று அறிவுறுத்துகிறார்[29]

> கருமவிதி மனித முயற்சிக்குத் தடையாக நிற்கவில்லை, ஆனால் மனிதன் தன் வினையின் பயனை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். இவை இரண்டும் முரண்பட்ட விஷயங்கள் அல்ல, இரண்டும் ஒரே நாணயத்தின் இருபக்கங்களாக விளங்குகின்றன[30]

என்று பௌத்தருடைய கருமக் கொள்கையைக் குறித்துப் ப. இராமஸ்வாமி கூறும் கருத்து இங்கு அறியத்தக்கது.

வடமொழியில் பாரதம், இராமயணம் போன்ற நூல்களிலும் மனித முயற்சிக்கு விதி தடையாகக் காட்டப்பெறவில்லை. உலகம் போற்றும் மெய்யுணர்வுச் சிந்தனையாளராகிய எஸ். இராதாகிருட்டிணன் 'பரம்பொருள் அனைத்தையும் மேற் பார்வையிடக்கூடிய கர்மாத்யக்ஷன்' (ஸ்வேதாஸ்வரஉபநிஷத்-VI ii) என்னும் உபநிடதக் கூற்றினைத் காட்டி கருமநியதிக்கும் முயற்சிக்கும் உரிய தொடர்பினை விளக்குகிறார்[31] மேலும் கரும நியதியைத் தவறாக உணர்ந்த காரணத்தினால் 'அனைத்தும் விதியின் வழியே நடைபெறும்' என்று கொண்டு மனிதன் மன வலிமையிழந்து தன்னால் சிறப்பாகச் செய்யக்கூடியதையும் செவ்வனே செய்ய இயலாத நிலைக்கு ஆளாகி விட்டான். மனித வாழ்க்கைக்கு நம்பிக்கையூட்ட வேண்டிய கரும நியதியானது அவனது "சோம்பல், அச்சம் ஆகியவற்றுக்குச் சமாதானம் கூறும் காரணமாகவும், அவன் மனத்துன்பம் கொள்வதற்கு வழியாகவும் அமைந்தது. பாவச் செயல் செய்து இழிந்தநிலையிலுள்ளவனைப் பார்த்து, 'நீ இந்த இழிநிலையினை அடைய வேண்டுமென்பது முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டதொன்று; இந்த நிலையைத் தவிர வேறு எந்த நிலையிலும் உன்னால் இருத்தல் இயலாது' என்று கூறும் நம்பிக்கை இழக்கச் செய்யும் கருத்து எக்காரணத்தை முன்னிட்டும் கரும நியதியின் விளைவாக விளைந்ததன்று; கரும நியதியைத் தவறாகப் புரிந்துகொண்டதால் விளைந்ததேயாகும் என்று அவர் கூறும் கருத்துக்கள் ஊழ் உழைப்பிற்குத் தடையாகா மல் மனித வாழ்வுக்கு நம்பிக்கையூட்டுவது என்பதனை வலியுறுத்துகின்றன[32]

பழவினைப்பயனை நுகரும் போது மனித முயற்சிக்கு இடம் உண்டு; பழவினையின் பயன் ஒருவன் கடன் பட்டிருத்தலை ஒத்தது. தொடக்கத்தில் அவனுடைய உழைப்பிலே பெரும்பகுதி அவனுடைய பழைய கடனைத் தீர்ப்பதிலேயே செலவாகிவிடும். தனது உழைப்பு முழுவதும் கடனை அடைக்கவே சரியாகிவிடும் என்று அவன் உழைக்காமலிருந்தால் கடன் மேலும் பெருகும்.

அங்ஙனமின்றி அவன் உழைத்துக் கடனைக் குறைத்தால், பின் பொருளைச் சேர்க்கவும் இடமுண்டு. அதைப் போலவே ஊழினால் துன்பப்படுகிறவன் முயற்சி செய்யாதிருந்தால் இன்னும் அதிகத் துன்பத்திற்கு ஆளாவான்; முயற்சி செய்தால் அதற்கேற்ப அவனது துன்பம் குறையும் என்னும் சிவபாத சுந்தரத்தின் கருத்தைக்காட்டி கி. லக்ஷ்மணன் விளக்குகிறார்[33]

மனிதவாழ்வை ஒரு 'பிறிட்ஜ்' (சீட்டு விளையாட்டு) விளையாட்டுக்கு ஒப்பிடலாம். இவ்விளையாட்டில் நமக்குக் கிடைக்கும் சீட்டுக்களைப் போல நமது பழவினை; சீட்டுகளை நாம் தேர்ந்து எடுப்பதில்லை. கிடைத்த சீட்டுகளை வைத்து வெற்றியோ தோல்வியோ ஈட்டும் வாய்ப்பு உண்டு. பழவினையைத் தேர்ந்து எடுக்க நமக்கு அதிகாரம் இல்லாவிடினும் அதைவைத்துக் கொண்டு மேலே ஆக்குவதோ அழிப்பதோ நம் கையிலேயே உள்ளது என்னும் எஸ். இராதாகிருட்டிணன் கருத்தினை எடுத்துக் காட்டி கி. லட்சுமணன் மொ. அ. துரையரங்கசாமி ஆகியோர் விளக்குகின்ற கருத்துக்கள் ஊழ், மனித முயற்சிக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குகின்றன[34]

கோள்களின் இயக்கம், எங்ஙனம், நியதிப்படி நடக்கிறதோ அதுபோல வினைகளின் பயனை, வினைகளைச் செய்தார் துய்த்தல் வேண்டும் என்ற நியதி செயற்படுகிறது. இந்த முறை பிறழாத செயற்பாட்டுக்குக் காரணம், உயிர் செய்யும் வினைகளுக்குரிய உணர்வுகளில் அழுத்தங்கள் அல்லது பதிவுகள் உயிருக்குள் அடங்கிக் கிடப்பதேயாகும். அவை உரிய காலத்தில் ஊழ்த்து வெளிப்பட்டுச் செயற்பாட்டுக்கு வருகின்றன. அந்த நிலையில் துய்ப்புக்குரிய வினைப்பயனை 'ஊழ்' என்று குறிப்பர். ஊழின் பயனைத் துய்த்துக் கழிக்காமல் அதாவது ஊழிற்குக் காரணமாக அமைந்த உயிரில் பதித்த உணர்வுத் தடத்தை அழித்து எழுதாமல் வேறு வகையாக வாழ்தல் அரிது; இயலாது. அதனால் ஊழின் வலிமையைப் பெரிது என்பர். அதன்பொருள் ஊழின் பயனைத் தட்டிக் கழிக்க முடியாது என்பதேயாகும், ஆனால் ஊழின் தடத்தை அழித்து எழுதமுடியாது என்பது பொருளன்று. முன்னர்ச் செய்த வினைகளின் வழியாக அமைந்த தீயூழ், நல்லூழ்இவைகளிலும் விஞ்சிய நல்வினைகளை நன்னோக்கத்துடன் அயர்விலாது செய்தால் ஊழின் தடத்தையும் அழித்தெழுதலாம். அனுபவத்திற்கு வந்த ஊழின் விளைவுகளையும் எளிமையாகத் துய்த்து நீக்க முடியும். ஆதலால் சமயத் துறையில் ஊழைப் பயன்படுத்தி முன்னேற்றத்திற்குரிய தடை உணர்வினை உருவாக்குதல் நெறியும் அன்று;முறையும் அன்று என்றும் வினை செய்யாதிருத்தல் வினை நீக்கத்திற்குரிய வழியன்று; தன்னலப் பற்றின்றி வினை

செய்வதே ஊழ் வாராமல் செய்துகொள்ளும் வழியென்றும் கூறி திருவள்ளுவரின் ஊழ்க் கொள்கை உழைப்பிற்குத் தடையானதன்று; உழைத்து முன்னேறத் தூண்டுவது என்னும் தவத்திரு. குன்றக்குடி அடிகளாரின் கருத்துக்கள் ஊழ்க் கொள்கைக்கும் மனித உழைப்பிற்கும் உரிய தெளிவான தொடர்பினை விளக்குகின்றன.[35]

ஊழ்க்கோட்பாடு உணர்த்தும் உண்மை :

தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், இரட்டைக் காப்பியங்கள், திருக்குறள், அற நூல்கள், ஆகியவற்றில் ஊழ்க் கோட்பாடு, ஊழின் ஆற்றல் வலியுறுத்தப் பெற்றிருப்பது உண்மை. அவை; நிகழ்ந்துவிட்ட ஒன்றுக்கு, தவிர்க்க முடியாத - விலக்க முடியாத விளைவுக்குக் காரணம் புலப்படாத நிலையில், மனித ஆற்றலுக்கு மேம்பட்ட ஆற்றல் ஒன்றினால் அவ்வாறு நிகழ்ந்ததாகவும், அந்த ஆற்றலே ஊழாற்றல் என்றும், இனிவரும் நிகழ்வுகளை நல்லவையாக்குவதற்கு மனிதன் நற்செயல்களைச் செய்ய வேண்டுமென்றும் வலியுறுத்துகின்றன. ஊழின் ஆற்றலையுணர்ந்தவர்கள் அதன் பயனை அனுபவித்துக் கொண்டே, பின்வினை வாராது செய்துகொள்ளுவர் என்பதனை விளக்கும்,

> தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
> முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்கள்
> பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
> சென்னியில் வைத்த சிவனரு ளாலே[36]

என்னும் திருமந்திரப் பாடல் சிறந்த சான்றாகக் கொள்ளத்தக்கது. இவ்வடிப்படையில் நோக்கினால் திருவள்ளுவரைப் போன்ற சான்றோர் மனித சமுதாயத்திற்கு இன்றியமையாது வேண்டிய அறக் கொள்கைகளையே வற்புறுத்தினர் என அறியலாம். ஊழ்க் கொள்கையை விளங்கிக் கொண்டுவிட்டால் மக்களுக்கு வேறு சமயக் கருத்துக்கள் தேவையில்லையென்பதும், எல்லாம் வினைகளால் விளைவனஆதலின் நல்வினைகளை நயந்தும் தீவினைக்கு அஞ்சியும் நடக்கவும், சமுதாயம் நன்னிலையில் இயங்கவும்தான் சமணம் உள்ளிட்ட சமயங்கள் வழிகாட்டுவதாக சோ. ந. கந்தசாமி கூறுகிறார்.[37]

ஆகவே சமுதாயப் பயன்பாட்டு நோக்கில் காணும்போது, ஊழ், மறுமை, வீடுபேறு பற்றிய செய்திகள் கருத்துலகத்தைச் சார்ந்தவையாயினும், மனித வாழ்வின் செம்மைக்குத் துணை செய்வனவாகும். மனிதன் தன்வாழ்வில் காரண காரியம் புலப்படாத நிலையில் நிகழும் நிகழ்ச்சிக்குக் காரணம், ஊழ் என்னும் நுண் பொருளாற்றலே எனக் கண்டான்; உலகியல் வாழ்வில் துன்பம் வந்தபோது வெறுப்பும் விரக்தியும் கொள்ளாமல் வருங்கால இன்பம் நோக்கி உழைக்கத் தூண்டுவதாகவும், வையத்துள் வாழ்வாங்கு

வாழ்ந்து தெய்வ நிலையடையச் செய்வதாகவும் ஊழ்க் கருத்தினை மிகச் சிறந்த அறக்கோட்பாடாக மக்களுக்குப் பழந்தமிழர் வலியுறுத் தினர் என்பதும் இக்கோட்பாடு உலகம் தழுவிய உயர்ந்த சிந்தனையில் தோன்றிய பொதுமைக் கோட்பாடென்பதும் புலனா கின்றன.

குறிப்புக்கள்

1. கு. ச. ஆனந்தன், **திருக்குறளின் உண்மைப் பொருள்,** தங்கம் பதிப்பகம், கோபிசெட்டிப்பாளையம், 1986, ப. 444
2. அ) சோ. ந. கந்தசாமி, **தமிழும் தத்துவமும்,** மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1976, ப. 137
   ஆ) ர, விஜயலட்சுமி, **தமிழகத்தில் ஆசீவகர்கள்,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1988, ப. 41
3. ர. விஜயலட்சுமி, மு. நூ, மு. ப,
4. சோ. ந. கந்தசாமி, மு. நூ., பக். 138-139
5. ர. விஜயலட்சுமி, மு. நூ., மு. ப.
6. ர. விஜயலட்சுமி, மு. நூ., மு. ப.
7. புறம். 139
8. மதுரை, அடி 781-782
9. குறுந். 366
10. புறம். 192
11. சோ. ந கந்தசாமி, மு. நூ., ப. 139
12. பார்க்கவும் - இயல்-4, குறிப்பு எண். 4; 32
13. பார்க்கவும் - இயல்-2, குறிப்பு எண். 43; 44
14. வ. சுப. மாணிக்கம், **வள்ளுவம்.** பாரி நிலையம், சென்னை-1, 1956, ப. 320
15. கு. ச. ஆனந்தன், மு. நூ. ப. 445
16. பார்க்கவும் - இயல்-5, குறிப்பு எண். 125
17. திருக். 319
18. திருக் 207
19. திருக். 208
20. அ. சக்கரவர்த்தி நயினார், **திருக்குறள் வழங்கும் செய்தி,** பகவதி ஜயராமன் (மொ), பாரி நிலையம், சென்னை, 1959, பக். 67-68
21. அ. சக்கரவர்த்தி நயினார், மு. நூ., ப. 73
22. K. Kailasapathy, **On Art and Literature,** New Century Book House, Madras-98, 1986 pp. 137-146

23. ர. விஜயலட்சுமி, மு. நூ., ப. 67
24. அ லெ. நடராஜன் (மொ), **புத்தர்பிரான் அருளிய தம்மபதம்** கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம், வேதாரணியம், 1979, ப. 59.
25. டி. டி. தாதாச்சாரியார், **கலைக் களஞ்சியம்**, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1956, தொகுதி-3, பக். 271-272
26. T. G. Kalghatgi, **Determinism and Karma Theory**, Indian Philosophical Annual, University of Madras 1968, Vol. 4, pp. 24-25.
27. ஜேம்ஸ் ஆலன், **விதியை வெல்லுதல்**, என். கே. வேலன் (மொ.) கழகம், 1969, ப. 9.
28. ஜேம்ஸ் ஆலன், மு. நூ., ப. 14
29. ஜேம்ஸ் ஆலன், மு. நூ., ப. 39-40
30. ப. இராமஸ்வாமி, **பௌத்த தருமம்**, ஹிலால் பதிப்பகம், திருநெல்வேலி, 1956. பக். 129
31. எஸ். இராதாகிருட்டிணன், **இந்து தருமமும் வாழ்க்கையும்**, குமார. கோமேதக வேலு (மொ), பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14, 1967, பக். 121-122.
32. எஸ். இராதாகிருட்டிணன், மு. நூ., பக். 129-130
33. கி. லட்சுமணன், **இந்திய தத்துவ ஞானம்**, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14, 1980, ப. 409
34. அ) கி. லட்சுமணன், மு. நூ., பக். 409-410
    ஆ) மொ. அ துரையரங்கசாமி, **பண்டைத் தமிழ்நெறி**. பழனியப்பா பிரதர்ஸ். சென்னை-1, 1956, ப. 143.
35. தவத்திரு குன்றக்குடி அடிகளார், **திருவள்ளுவர்**, அண்ணா மலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1981, பக். 46-47
36. திருமந்திரம், பா. 2611
37. சோ. ந. கந்தசாமி, மு. நூ., பக். 82-83

10. முடிவுரை

'பழந்தமிழ் நூல்களில் ஊழ்' என்னும் இவ்வாய்வு நூலில் முன்னுரையினை அடுத்த இயலில் ஊழ் என்னும் சொற்பொருள் விளக்கமும், தொல்காப்பியம் முதலாக அறநூல்கள் வரையுள்ள நூல்களில் அச்சொல் பெற்ற இடம்,அச்சொல்லின் பொருள் குறித்த வேறு சொற்கள், அவற்றினால் ஊழ்க்கருத்து-கோட்பாட்டு வளர்ச்சி பெற்ற நிலை, ஆகியவையும் இன்றைய நிலையில் ஊழ் பற்றிய கருத்து வளர்ச்சியும் காட்டப்பட்டுள்ளன.

ஊழ்க் கோட்பாடு உலக நாகரிகப் பழமை வாய்ந்த இன மக்களின் சிந்தனையில் பழங்காலத்திலேயே இடம் பெற்றிருந்த செய்தியும், தமிழ் மக்கள் ஊழ்வினைக் கோட்பாடு பற்றிக் கொண் டிருந்த எண்ணங்களைப் போலவே கிரேக்கர், ரோமர், சீனர், பாபிலோனியர், எகிப்தியர், ஆரியர் ஆகியோர் கொண்டிருந்தனர் என்னும் செய்திகள் ஆங்காங்கே விளக்கப் பெற்றன. இவ்வாய்வி னால் உலக மக்கள் யாவரிடமும் இக்கோட்பாடு பெற்றிருந்த செல்வாக்கும், அதனால் விளங்கும் கருத்தொற்றுமை, உலகப் பொதுமை ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியத்திலேயே . பால், பாலது ஆணை, பால்வரை தெய்வம் பற்றிய செய்திகள் இடம் பெற்றிருப்பது, தலைவன் தலைவியரின் காதல் உறவுக்கு ஊழ் காரணம் என்பதும், அவரவர்க் குரிய வினையைப் பகுத்தூட்டும் தெய்வம் பால்வரை தெய்வம் என்பதும், வினைப் பயன், வினை நீக்கம் பற்றிய செய்திகள் தொல் காப்பியத்திலேயே இடம் பெற்றுள்ளன என்பதும் ஆய்வாளரால் காட்டப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்களில் பால், முறை, வினை ஆகிய சொற்கள் ஊழ்க் கருத்தை விளக்குவனவாக உள்ளன என்பதும், சங்க இலக்கியங்களில் கடவுள், அறம், இம்மை, மறுமை, துறக்கம், நரகம், வீடுபேறு ஆகியவை பற்றிய கோட்பாட்டு நூல்கள் இல்லாவிட்டாலும் அக்கால இலக்கியங்களில் இவை பற்றிய குறிப்புக்கள் விளக்கப் பட்டுள்ளன. நல்வினை, தீவினை இவற்றின் பயன் ஆகியவை பற்றிய எண்ணங்கள் சங்கத் தமிழரிடம் இருந்த மையும், கோப்பெருஞ்சோழன் பாடிய புறநானூற்றுப் பாடலில் ஊழ், துறக்கம், வீடுபேறு பற்றிய பல்வேறு சிந்தனைகள் இடம் பெற்றுள்ளனஎன்பதும் ஆய்வாளரின் ஆய்வுமுடிவுகளால் உணர்த்தப் பட்டுள்ளன. சங்கத் தமிழர் ஊழ் பற்றிப் பேசிய பல்வேறு சூழல்கள், அவற்றின் மூலம் அவர்கள் ஊழாற்றலில் கொண்டிருந்த நம்பிக்கை

வாழ்நாளும் பிறவும் ஊழினால் வரையறுக்கப்படுவது, காதல் உறவு ஏற்படுவது, அரசுரிமை, பொருள், நட்பு ஆகியவற்றுக்கு ஊழ்வலி காரணம் என்ற நம்பிக்கை இருந்தமையும் காட்டப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களின் வழி, உணர்வுத் தாக்கங்களினால் வெறும் நம்பிக்கையடிப்படையில் மட்டும் ஊழை எண்ணவில்லையென்பதும், காரண காரிய விளைவுகளை எண்ணி அறிவார்ந்த நிலையில் சிந்தித்து ஊழ்க் கருத்தினைச் சங்கத் தமிழர் வலியுறுத்தினர் என்பதும் ஆய்வாளர் குறிப்பிடும் கருத்துக்களாகும்.

திருக்குறளில் ஊழியல் அமைப்பு, நல்வினை, தீவினை பற்றிய கருத்துக்கள், அறம் முதலான கோட்பாடுகள், உயிர்கள் அவற்றின் வினைக்குத் தக்கவாறு மறுபிறப்பு துறக்கம், நரகம் அடையும் என்னும் கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன. பொருள் ஈட்டல், காத்தல், துய்த்தல் ஆகியவையும் கல்வி, கேள்வி, உலகியலறிவுடன் நுண்ணறிவு வளர்ச்சி ஆகியவையும் ஊழினால் ஆகும் என்னும் வள்ளுவர் கருத்தும் காட்டப்பட்டுள்ளது. செல்வ, அறிவு வேறுபாடு இன்பதுன்பம், தவம், தலைவன் தலைவி உறவு ஆகியவற்றுக்கு ஊழ் காரணம் என்பதும், ஊழின் பயனைத் துய்க்காமல் தப்பித்துக் கொள்ள முடியாது என்பதும், துய்த்துக் கழித்தலே நியதி என்பதும் வள்ளுவரால் வலியுறுத்தப்பட்டுள்ளன. ஊழை வகுக்கும் ஆற்றல் உடைய தெய்வம் ஒன்று உண்டு என்ற நம்பிக்கை வள்ளுவருக்கு உண்டு என்பது ஊழ், ஆள்வினை இரண்டினிடையில் முரணில்லை யென்பதும் ஊழ் என்னும் பழவினைப் பயனைத் துய்த்துக் கழிக்கும் போது தன்னுடைய செயலின் தூய்மையால் மறுமைக்கு அல்லது வருங்காலத்திற்குரிய ஊழை, வாராமல் செய்து கொள்ளக்கூடிய உரிமை உயிருக்கு உண்டு என்றும், நேற்றைய ஆள்வினையின் (செயலின்) விளைவே இன்றைய ஊழ், இன்றைய ஆள்வினையின் விளைவே நாளைய ஊழ் என்பதும், ஆள்வினையால் எதிர்வரும் ஊழை நல்லூழாக அமைத்துக் கொள்ளும் வாய்ப்பு மனிதனுக்குக் கொடுக்கப் பட்டுள்ளது என்பதும் திருவள்ளுவர் கருத்துக்கள் என்பதைத் திருமந்திரப் பாடல்களின் துணைக்கொண்டு ஆய்வாள ரால் விளக்கிக் காட்டப் பட்டுள்ளன. ஊழ் நம்பிக்கை அறிவடிப் படையிலமைந்தது என்பதும், திருக்குறள் உழைப்பிற்கு எதிரானது அன்று, உழைப்பிற்கு ஊக்கம் ஊட்ட வந்த நூல் என்பதும் ஆய்வாளரால் வலியுறுத்தப்பட்டுள்ளன.

சிலப்பதிகாரத்தில் முப்பெருங் கோட்பாடுகளுள் ஒன்றான ஊழ்க் கோட்பாடு இக்காப்பியத்தில் இடம்பெற்ற நிலையும், காப்பியக் கதைப் போக்கிற்கு ஊழின் பங்கும், ஊழின் தோற்றம் வளர்ச்சி, முதிர்ச்சி நிலைகளும் ஆராயப்பட்டுள்ளன. மேலும்

காப்பிய மாந்தரின் முற்பிறப்பின் வினைவிளைவுகளைக் காப்பிய நிகழ்ச்சிக்குத் தொடர்புறுத்தி ஆசிரியர் காட்டுவதும், பல்வேறு கதை மாந்தர் வாயிலாகவும், தற்கூற்றாகவும் ஆசிரியர் ஊழின் ஆற்றலை வலியுறுத்துவதும், சமண சமய வினைக்கொள்கை கவுந்தியடிகள் வாயிலாகவும், இளங்கோ வாயிலாகவும் விளக்கப் படும் உண்மை, ஊழ்வினை என்பது முன்வினை, முற்பிறப்பின் வினை என்னும் தெளிவான கருத்தினை வழங்கிய சிலப்பதிகாரம் ஊழ்க்கோட்பாட்டை மக்களுக்கு வலியுறுத்தும் காப்பியம் என்பதும் ஆய்வில் காட்டப்பட்டுள்ளன.

மணிமேகலையும் சிலப்பதிகாரம் போலவே ஊழ்க் கொள் கையைப் பெரிதும் வலியுறுத்துகிறது. வினை, பலபிறப்பு, துறக்கம், நரகம், வீடு பற்றிய பல செய்திகளைச் சாத்தனார் வலியுறுத்து கிறார் என்பதும், காப்பியக் கதை மாந்தர் அனைவரது முற்பிறப்பு, மறுபிறப்புப் பற்றிய தொடர்பு இக்காப்பியத்தில் வலியுறுத்தப் படுவதும் ஆய்வாளரால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. ஊழ் வினை உருத்து வந்தூட்டும்,அவரவர் வினையின்பயனை அவரவரே அனுபவித்தல் வேண்டும் என்பது பற்றியும், நல்வினை தீவினை களுக்குரிய பிறப்புப் பற்றியும் இந்நூலில் எடுத்துக் காட்டப் பட்டுள்ளன.பல்வேறு சமய தத்துவங்கள் வற்புறுத்தும் ஊழ் பற்றிய கருத்துக்கள், ஊழினால் பிறப்பும் இறப்பும் மண்டிலமாகச் சுழலும் என்பதும், வீடுபெற ஊழின் நீங்க வேண்டுமென்றும் சாத்தனார் கூறும் முடிவுகள் காட்டப்பட்டுள்ளன.

அறநூல்களில் பெரும்பான்மையானவை சமணச் சான்றோர் எழுதியனவென்பதும்,மக்களுக்கு அறமும் ஒழுக்கமும் உரைப்பதைத் தம் வாழ்வுப் பணியாகச் சமண முனிவர் கொண்டிருந்ததால் ஊழ் போன்ற அறக் கோட்பாட்டினையும் வலியுறுத்தினர் என்பது குறிப்பிடப் பட்டுள்ளன. நாலடியார் பழவினை என்னும் தனி அதிகாரம் அமைத்தும், பிற அதிகாரங்களிலும் ஊழ் பற்றிய கருத் துக்களை வலியுறுத்துகிறது. பழமொழி நானூறு ஊழ் என்றே அதிகாரம் வகுத்தும், பிற அதிகாரங்களிலும் ஊழ்பற்றிய கருத்துக் களை வலியுறுத்துகிறது. நான்மணிக்கடிகை, திரிகடுகம், ஏலாதி, திணைமாலை நூற்றைம்பது, இன்னிலை ஆகிய நூல்களில் ஊழ் பற்றிய செய்திகள் இடம்பெற்ற நிலையும் எடுத்துக்காட்டப்பட்டு உள்ளன. மேலும் நாலடியார், பழமொழி ஆகியவற்றில் முயற்சி பற்றிக் கூறும் கருத்துக்களால் ஊழுடன் முயற்சிக்கு முரணில்லை யென்ற கருத்தும் காட்டப்பட்டுள்ளது.

முடிவுரைக்கு முன்னர் உள்ள ஊழ்க் கருத்து வளர்ச்சி நிலை என்ற இயல்,கோட்பாட்டடிப்படையில் ஊழ்க்கருத்தின் வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது. ஆசீவகரின் நியதிக் கொள்கை, சமண பௌத்தரின் ஊழ்க் கொள்கை, வைதிக சமயத்தவரின் வினைக் கொள்கை ஆகியவை பிற்காலத்தில் ஒன்றான கருத்தும், தொல் காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள் ஆகியவற்றில் இக் கோட்பாடு வலியுறுத்தப்பட்ட செய்திகளும் மீள்பார்வையாக ஆராயப்பட்டன. உழைப்பிற்கு மனிதனுடைய முயற்சிக்கு எவ் வகையிலும் ஊழ்க் கோட்பாடு தடையானதன்று என்பதும், மனித வாழ்வின் செம்மைக்காக வலியுறுத்தப்பட்டதே இக்கோட்பாடு என்பதும் ஆய்வாளரால் காட்டப்பட்டுள்ளன.

ஊழ் பற்றிய இவ்வாய்வு பழந்தமிழ் நூல்களில் உள்ள கருத்துக்களினடிப்படையில் இலக்கியச் சான்றுகளை மிகுதியாகக் கொண்டு செய்யப் பெற்றது. ஊழ்க் கோட்பாடு பற்றி மெய்யியல் அடிப்படையில் பழந்தமிழ் நூல்களை இணைத்து ஒப்பாய்வு செய்யவும். இங்கு எடுத்துக் கொள்ளப் பெற்ற நூல்களுக்குப் பின் தோன்றிய சமய இலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கி யங்கள், தத்துவ நூல்கள் ஆகிய பிற நூல்ககளில் ஊழ் பற்றி ஆய்வு மேற்கொள்ளவும், இவ்வாய்வு ஒரு முன்னோடியாக அமையுமாயின் அதுவே இவ்வாய்வாளரின் ஆய்வுப் பயனாக அமையும். இவ்வாறே பிற மொழி நூல்களில் ஊழ்க் கருத்து பற்றி தமிழ் நூல்களுடன் ஒப்பாய்வு செய்யும் வாய்ப்பு ஏற்படுமாயின், பிற மொழி பேசும் பல இனத்தவர் இக்கருத்தினைப் பற்றி எண்ணி யிருந்த சிந்தனைகளுடன் தமிழர்தம் கருத்தொற்றுமையும் உயர்வும் புலப்படும்.

பழந்தமிழரது ஊழ் பற்றிய சிந்தனைகளை விளக்கும் இந்நூல், ஊழ்க் கோட்பாட்டில் தமிழர் கொண்டிருந்த நம்பிக்கை, தெளிவு ஆகியவற்றை வலியுறுத்தி, 'ஊழ்' உழைப்புக்கு அடிப்படையாக அமைவது என்பதைக் காட்டி மனித சமுதாயத்தின் ஆக்கத்துடன் கூடிய நல்வாழ்விற்கு-உயர்விற்குத் துணை செய்வதாக அமையும் என்பது நூலாசிரியர் எண்ணமாகும்.

பின்னிணைப்பு - I

ஊழ்க் கருத்தினை உணர்த்தும் சங்க நூற் பாடல்கள்

1. தொல்காப்பியம் :

1. காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்என வருஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வருஉங் கிளவியெல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணை மேன.

(சொல். கிளவி - நூ. 57)

2. ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி யுயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே.

(பொருள். நூ. 90)

3. வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்.

(பொருள். நூ. 640)

2. நற்றிணை :

1. யாஞ்செய் தொல்வினைக்கு எவன்பேது உற்றனை
வருந்தல் வாழி தோழி யாஞ்சென்று
உரைத்தனம் வருகம் எழுமதி புணர்திரைக்
கடல்விளை அமுதம் பெயற்கேற் றாங்கு
உருகி உகுதல் அஞ்சுவல் உதுக்காண்
தம்மோன் கொடுமை நம்வயின் ஏற்றி
நயம்பெரிது உடைமையின் தாங்கல் செல்லாது
கண்ணீர் அருவி யாக
அழுமே தோழிஅவர் பழமுதிர் குன்றே.

(88)

2, உள்ளுதொறு நகுவேன் தோழி வள்ளுகிர்ப்
பிடிபிளந் திட்ட நாரில்வெண் கோட்டுக்
கொடிறுபோல் காய வாலிணர்ப் பாலைச்
செல்வளி தூக்கலின் இலைதீர் நெற்றம்

கல்லிழி அருவியின் ஒல்லென ஒலிக்கும்
புல்லிலை ஓமைய புலிவழங்கு அத்தஞ்
சென்ற காதலர் வழிவழிப் பட்ட
நெஞ்சே நல்வினைப் பாற்றே ஈண்டொழிந்து
ஆனாக் கௌவை மலைந்த
யானே தோழி நோய்ப்பா லேனே

(107)

3. அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயரும் யாணர் ஊர
நெடிய மொழிதலுங் கடிய ஊர்தலும்
செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வஞ் செல்வமென் பதுவே

(210)

3. குறுந்தொகை :

1. குணகடற் றிரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் றொண்டி முன்றுறை
அயிரை யாரிரைக் கணவந் தாங்குச்
சேய ளரியோட் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே

(128)

2. இவனிவ ளைம்பால் பற்றவும் இவளிவன்
புன்றலை யோரி வாங்குநள் பரியவும்
காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிரா
தேதில் சிறுசெரு வுறுப மன்னோ
நல்லைமன் றம்ம பாலே மெல்லியற்
றுணைமலர்ப் பிணைய லன்னவிவர்
மனமகி ழியற்கை காட்டி யோயே

(229)

3. பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
களிற்றுச்செவி யன்ன பாசடை மயக்கிப்
பனிக்கழிதுழவும் பானாட் டனித்தோர்
தேர்வந்து பெயர்ந்ததென்ப வதற்கொண்
டோரு மலைக்கு மன்னை பிறரும்

பின்னுவிடு கதுப்பின் மின்னிழை மகளிர்
இளையரு மடவரு முளரே
அலையாத் தாயரொடு நற்பா லோரே.

(246)

3. பால்வரைந் தமைத்த லல்ல தவர்வயிற்
சால்பளந் தறிதற் கியாஅம் யாரோ
வெறியாள் கூறவு மமையா ளதன்றலைப்
பைங்கண் மாச்சுனைப் பல்பிணி யவிழ்ந்த
வள்ளிதழ் நீல நோக்கி யுள்ளகை
பழுத கண்ண ளாகிப்
பழுதன் றம்மவிவ் வாயிழை துணிவே.

(366)

4. ஐங்குறுநூறு :

1. அன்னை வாழிவேண் டன்னை புன்னைப்
பொன்னிறம் விரியும் பூக்கெழு துறைவனை
என்னை என்றும் யாமே யிவ்வூர்
பிறிதொன் றாகக் கூறும்
ஆங்கு மாக்குமோ வாழிய பாலே

(110)

2. மள்ளர் கொட்டின் மஞ்ஞை யாலும்
உயர்நெடுங் குன்றம் படுமழை தலைஇச்
சுரநனி யினிய வாகுக தில்ல
அறநெறி யிதுவெனத் தெளிந்தவென்
பிறைநுதற் குறுமகள் போகிய கானே.

(371)

3. பல்லூழ் நினைப்பினு நல்லென் றூழ
மீளி முன்பிற் காளை காப்ப
முடியகம் புகாஅக் கூந்தல்ள்
கடுவனு மறியாக் காடிறந் தோளே.

(374)

4. நாடொறுங் கலிழு மென்னினு மிடைநின்று
கார்படு தீயிற் கனலியர் மாதோ
நல்வினை நெடுநகர் கல்லெனக் கலங்கப்
பூப்புரை யுண்கண் மடவரற்
போக்கிய புணர்த்த வறனில் பாலே,

(376)

5. பரிபாடல் :

1. முன்முறை செய்தவத்தின் இம்முறை யியைந்தேம்
மறுமுறை யமைந்து மியைக
நறுநீர் வையை நயத்தகு நிறையே.
(11-138-140)

2. கடந்தவை அமைந்த கழலின்அவை
இருமை வினையுமில ஏத்துமவை
ஒருமை வினைமேவும் உள்ளத்தினை
(13-47-50)

3. இடையொழி வின்றி யடியுறையார் ஈண்டி
விளைந்தார் வினையின் விழுப்பயன் துய்க்கும்
துளங்கா விழுச்சீர்த் துறக்கம் புரையும்
இருகேழ் உத்தி அணிந்த எருத்தின்
வரைகெழு செல்வ னகர்.
(பரி. திரட்டு-1. 45-49)

6. கலித்தொகை :

1, பால்மருள் மருப்பி னுரல்புரை பாவடி
... ...
... . பொருள்தான்
பழவினை மருங்கிற் பெயர்புபெயர் புறையு
மன்ன பொருள்வயிற் பிரிவோய் நின்னின்
றிமைப்புவரை வாழாள் மடவோள்
அமைக்கவின் கொண்ட தோளினை மறந்தே.
(21)

2. காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்
... .
சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
வள்ளிகீழ் வீழா வரைமிசைத் தேன்தொடா
கொல்லை குரல்வாங்கி ஈனா மலைவாழ்நர்
அல்ல புரிந்தொழுக லான்; ... ...
(39)

3. வெல்புகழ் மன்னவன் விளங்கிய ஒழுக்கத்தால்
நல்லாற்றின் உயிர்காத்து நடுக்கறத் தான்செய்த
தொல்வினைப் பயன்றுய்ப்பத் துறக்கம்வேட்
டெழுந்தாற்போல்
பல்கதிர் ஞாயிறு பகலாற்றி மலைசேர
(118)

4. நிரைதிமில் களிறாகத் திரையொலி பறையாகக்
....
சூள்வாய்த்த மனத்தவன் வினைபொய்ப்பின் மற்றவன்
வாள்வாய்நன் றாயினுமஃதெறியாது விடாதேகாண் ....
(149)

7. அகநானூறு :

1. அவரை ஆய்மலர் உதிரத் துவரின
... ... கண்ணில் வாடை
நெடிதுவந் தனையென நில்லா தேகிப்
பலபுலந் துறையுந் துணையில் வாழ்க்கை
நம்வலத் தன்மை கூறி யவர்நிலை
அறியு மாயின் நன்றுமன் தில்ல
பனிவார் கண்ணே மாகி யினியது
நமக்கே யெவ்வம் ஆகின்று
அனைத்தாற் றோழிநந் தொல்வினைப் பயனே.
(243)

2. நகைநன் றம்ம தானே அவனொடு
மனையிறந் தல்கினும் அலரென நயந்து
கானல் அல்கிய நங்கள வகலப்
பல்புரிந் தியறல் உற்ற நல்வினை
... .
(400)

8. புறநானூறு :

1. சேற்றுவளர் தாமரை பயந்த வொண்கேழ்
நூற்றித ழலரி னிரைகண் டன்ன
வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை யெண்ணுங் காலை
உரையும் பாட்டு முடையோர் சிலரே
மரையிலை போல மாய்ந்திசினோர் பலரே
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான வூர்தி
எய்துப வென்பதஞ் செய்வினை முடித்தெனக் ... ...
(27)

2. அழல் புரிந்த வடர் தாமரை
... .
கொடியோர்த் தெறுதலுஞ் செவ்வியோர்க் களித்தலும்
ஒடியா முறையின் மடிவிலை யாகி
நல்லத னலனுந் தீயதன் றீமையும்
இல்லை யென்போர்க் கினனா கிலியர் ... (29)

3. வரைபுரையு மழகளிற்றின் மிசை
... .
பொலம்பூங் காவி னன்னாட் டோரும்
செய்வினை மருங்கி னெய்த லல்லதை
உடையோ ரீதலு மில்லோ ரிரத்தலும்
கடவ தன்மையிற் கையற வுடைத்தென
ஆண்டுச் செய் நுகர்ச்சி யீண்டுங்கூடலின்
நின்னா டுள்ளுவர் பரிசிலர்
ஒன்னார் தேஎத்து நின்னுடைத் தெனவே
(38)

4. மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்
பால்தர வந்தபழவிறல் தாயம்
எய்தின மாயி னெய்தினஞ் சிறப்பெனக்
குடிபுர விரக்கும் கூரி லாண்மைச்
சிறியோன் பெறினது சிறந்தன்று மன்னே
(75)

5. அணங்குடை யவுணர் கணங்கொண் டொளித்தெனச்
... ...
சுரும்பார் கண்ணிப் பெரும்பெயர் நும்முன்
ஈண்டுச் செய்நல்வினை யாண்டுச் சென்றுணீஇயர்
உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தன னாகலின்
(174)

6. ஓரையாயத்து ஒண்டொளி மகளிர்
....
இல்லோர் சொல்மலை நல்லியக் கோடனை
உடையை வாழியெற் புணர்ந்த பாலே
(176)

7. யாது மூரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியில்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே (192)

8. செய்குவங் கொல்லோ நல்வினை யெனவே
ஐயமறாஅர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே
யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே.
அதனால், உயர்ந்த வேட்டத் துயர்ந்திசினோர்க்குச்
செய்வினை மருங்கி னெய்த லுண்டெனிற்
தொய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கூடும்
தொய்யா வுலகத்து நுகர்ச்சி யில்லெனின்
மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்
மாறிப் பிறவா ராயினும் இமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல்தவத் தலையே

(214)

9. கலையுணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழம்
சிலைகெழு குறவர்க்கு அல்குமிசை வாகும்
.... நினக்கு மற்றியான்
மேயினேன் அன்மை யானே யாயினும்
இம்மைபோலக் காட்டி யும்மை
இடையில் காட்சி நின்னோ
டுடனுறை வாக்குக வுயர்ந்த பாலே.

(236)

10. குன்றுதலை மணந்த மலைபிணித் தியாத்தமன்
பொதுமை சுட்டிய மூவ ருலகமும்
பொதுமை யின்றி யாண்டிசி னோர்க்கும்
மாண்ட வன்றே யாண்டுக டுணையே
வைத்த தன்றே வெறுக்கை வித்தும்
அறவினை யன்றே விழுத்துணை யத்துணைப்
புணைகை விட்டோர்க் கரிதே துணையழத்
தொக்குயிர் வெளவுங் காலை
இக்கரை நின்றிவர்ந் துக்கரை கொளலே

(357)

11. இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் மாநிலம்
உடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே
அதனால், நீயும் கேண்மதி யத்தை வீயா

துடம்பொடு நின்ற வுயிரு மில்லை
மடங்க லுண்மை மாயமோ வன்றே
... ...
இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே.

(363)

12. நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே யாயினுந் தம்மொடு செல்லா
வேற்றோ ராயினும் நோற்றோர்க் கொழியும்
... .
வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்
வாழச் செய்த நல்வினை யல்ல
தாழும் காலைப் புணைபிறி தில்லை

(367)

9. பத்துப்பாட்டு :

1. நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே

(நல்வினை-திருமுருகு-அடி-66)

2. மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்தினி துறைமதி பெரும
வரைந்துநீ பெற்ற நல்லூ ழியையே

(ஊழினால் வரையறுக்கப்பட்ட வாழ்நாள்-மதுரை-782)

ஊழ்க்கருத்துடன் இயைபுடைய பாடல்கள் மட்டுமே இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

பின்னிணைப்பு - II

ஊழ்க் கருத்தினை உணர்த்தும் சொற்கள்

(எட்டுத் தொகை நூல்கள் மட்டும்)

1. பால் - குறுந். 229, 366; ஐங். 110; புறம். 75, 176, 236.
2. நற்பால் - குறுந். 246.
3. நோய்ப்பால் - நற். 107; குறுந். 128.
4. அறனில்பால் - ஐங். 376.
5. அறவினை - புறம். 357.
6. இருமை வினை - பரி. 13.
7. செய்வினை - நற். 210; புறம். 27, 38.
8. தொல்வினை - நற். 88.
9. தொல்வினைப் பயன் - கலி. 118; அகம். 243.
10. நல்வினை - நற் 107; அகம். 400; புறம். 174, 214, 367.
11. பழவினை - கலி. 21.
12. முன்னிய வினை - புறம். 363.
13. வினை - கலி. 149.
14. வினையின் விழுப் பயன் - பரி. திரட்டு - 1.
15. அறநெறி - ஐங்.371.
16. முறை - புறம். 192.
17. முன்முறை - பரி. 11.

பின்னிணைப்பு - III

ஊழ் இயற்கைப் பொருள்களில் ஆளப்படும் பாடல்கள்

எட்டுத்தொகை நூல்கள் என்ன பாடலையுணர்த்தும்	முதிர்தல், உதிர்தல்	மலர்தல்	முறை
1. நற்றிணை	ஊழுறுபூ(326)உதிர்தல்	—	ஊழ்முகை (115) ஊழின் (364)
2. குறுந்தொகை	ஊழ்ப்படுமுதுகாய்(68) ஊழுறுகொழுமுகை(228) ஊழுறு தீங்கனி (278) } முதிர்தல்	—	ஊழில் (270) பல்லூழ் (285) ஊழ்மாறலைப்ப (293)
3. ஐங்குறுநூறு	வாழ்கழிபன்மலர் (368) (உதிர்தல்) ஊழ்த்தன (458) (முதிர்ந்தன)	—	பல்லூழ் (374;390)
4. பதிற்றுப்பத்து (4ஆம் பத்தின் பதிகத்தில் மட்டுமே ஓரிடத்தில் உள்ளது)	—	—	—
5. பரிபாடல்	ஊழா (8) (உதிராத)	ஊழ்ப்ப (8) ஊழ்த்து (9) ஊழிணர் (19)	ஊழூழ் (2;10) பல்லூழ் (21)


6-	கலித்தொகை	—	ஊழ்த்த (26, 32, 67) ஊழ்ப்ப (27, 36) ஊழ்த்து (33) ஊழ்கொண்ட (44)	ஊழுறு (48) பல்லூழ் (61, 106, 123) ஊழுற்ற (121) ஊழ்செய் (145)
7.	அகநானூறு	ஊழுறுதீங்கனி (2) (உதிர்தல்) ஊழுறு (217) ஊழ்த்த (348) (முதிர்தல்) ஊழ்ப்ப (273) (உதிர்தல்) ஊழ்ப்ப (339) முதிர்தல்	ஊழ்கழி (17, 101) ஊழுறு (18, 41, 115, 117, 134, 174, 398) ஊழ்மலர் (199)	ஊழ்படு (2) ஊழ்கொள்பு (25) பல்லூழ் 57, 58, ஊழடி (145, 175, 176, 42) ஊழிழிபு (178) ஊழ்கொள்பு (369)
8.	புறநானூறு	ஊழ்க்கும்(109, 322) ஊழ்த்து(381) ஊழ்முகை (399) முதிர்தல்	—	ஊழ்மாறு (381-மாறிமாறி) ஊழின் (29, 160, 237) ஊழ்ம்மாறு (125, 283) ஊழி (வாழ்நாள்) (135, 387)

பின்னிணைப்பு - IV

ஊழ் விளக்கம்

உயிர் → செயல் → செயலின் விளைவு = ஊழ்

(வினை) (வினை முதிர்வு - பயன்)



துணைநூற் பட்டியல்

1. மூல நூல்கள் :

1. அகநானூறு — களிற்றியானை நிரை, ந. மு. வேங்கடசாமி நாட்டார் மற்றும் வேங்கடாசலம்பிள்ளை உரை, கழகம், சென்னை, 1962.

2. மேற்படி — நித்திலக்கோவை, ந. மு. வேங்கடசாமி நாட்டார் மற்றும் வேங்கடாசலம்பிள்ளை உரை, கழகம், சென்னை, 1969.

3. மேற்படி — மணிமிடைபவளம், ந. மு. வேங்கடசாமி நாட்டார் மற்றும் வேங்கடாசலம்பிள்ளை உரை, கழகம், சென்னை, 1969.

4. இறையனார் அகப்பொருள் விளக்கம் — நக்கீரர் உரை, கழகம், சென்னை, 1969.

5. இன்னிலை — தி. சங்குப்புலவர் விளக்கவுரை, கழகம், 1964.

6. ஏலாதி — இளவழகனார் உரை, கழகம், சென்னை, 1968.

7. ஐங்குறுநூறு — ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1978.

8. கலித்தொகை — பொ. வே. சோமசுந்தரனார் உரை கழகம், 1973.

9. குறுந்தொகை — மூலமும் உரையும், உ. வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை, 1962.

10. சிலப்பதிகாரம் — அடியார்க்கு நல்லார் உரை, உ. வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை, 1968.

11. மேற்படி — ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரை, கழகம், சென்னை, 1956.

12. சீவகசிந்தாமணி — நச்சினார்க்கினியர் உரை, உ. வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை, 1969.

13. திணைமாலை நூற்றைம்பது — மூலமும் உரையும், கழகம், 1968.

14. திரிகடுகம் — பு. சி. புன்னைவனநாதமுதலியார் உரை, கழகம், சென்னை, 1962.

15. திருக்குறள் — பரிமேலழகர் உரை, கழகம், சென்னை, 1976.

16. திருஞானசம்பந்தர் தேவாரம் — முதல் திருமுறை, தருமையாதீன வெளியீடு, 1953.

17. திருநாவுக்கரசர் தேவாரம் — ஆறாம் திருமுறை, தருமையாதீன வெளியீடு, 1963.

18. திருமந்திரம் — மூன்றாம் தொகுதி (7, 8, 9 தந்திரங்கள்) திருக்குறள் வேள் ஜி. வரதராஜன் உரை, திருவள்ளுவர் நிலையம், புத்தூர், திருச்சி-17, 1974.

19. திருவாசகம் — தருமையாதீன வெளியிடு, 1966.

20. தொல்காப்பியம் — மூலம் இளவழகனார் குறிப்புடன், கழகம், 1967.

21. மேற்படி — சொல்லதிகாரம், சேனாவரையர் உரை, கழகம், 1970.

22. மேற்படி — சொல்லதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, கழகம்,

23. மேற்படி — பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, கழகம், 1974.

24. மேற்படி — பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, கழகம், 1966.

25. தொல்காப்பியம் — பொருட்படலப்புத்துரை, நாவலர் சோமசுந்தர பாரதியார், நாவலர் புத்தக நிலையம், 1975.

26. நற்றிணை — பின்னத்தூர், நாராயணசாமி ஐயர் உரை, கழகம், 1967.

27. நன்னூல் — ஆறுமுக நாவலர் உரை, தி. க. இராசேசுவரன் பதிப்பு, இடம் குறிப்பிடப்பட இல்லை, 1968.

28. நாலடியார் — இளவழகனார் உரை, கழகம், 1968.

29. நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் — நம்மாழ்வார் திருவாய், மொழிஅண்ணங்கராச்சாரியார் பதிப்பு, சென்னை, 1967.

30. நான்மணிக்கடிகை— இளவழகனார் உரை, கழகம், 1962.

31. பத்துப்பாட்டு — நச்சினார்க்கினியர் உரை, உ. வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை, 1974.

32. பரிபாடல் — பொ. வே. சோமசுந்தரனார்உரை கழகம், 1975.

33. பழமொழி நானூறு— ம. இராசமாணிக்கம் உரை, கழகம், 1963.

34. புறநானூறு — 2 பகுதிகள், ஔவை சு. துரை சாமிப்பிள்ளை உரை, கழகம், பகுதி-I-1967, பகுதி-II-1968.

35. பெரியபுராணம் — மூலம், காசிமடத்து வெளியீடு, திருப்பனந்தாள், 1982.

36. மணிமேகலை — நாவலர், ந. மு. வேங்கடசாமி நாட்டார் மற்றும் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை உரை, கழகம், 1969.

37. மனோன்மணீயம் — பெ. சுந்தரம்பிள்ளையின் நாடகம், கழகம், 1967.

2. ஆய்வு நூல்கள் :

1. அப்பாத்துரை, கா., உலக இலக்கியங்கள் கழகம், 1975.

2. மேற்படி தென்னகப் பண்பு மலர் நிலையம், சென்னை-1, 1961.

3. அருணாசலம் பிள்ளை, மு., ஐங்குறுநாற்றுச் சொற்பொழிவுகள் கழகம், 1965.

4. ஆனந்தன், கு. ச., திருக்குறளின் உண்மைப் பொருள் தங்கம் பதிப்பகம், கோபிச்செட்டிப் பாளையம், 1986.

5. இராகவையங்கார், மு. தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, மதுரைத் தமிழ்ச் சங்கம், 1922

6. இராதாகிருட்டிணன் எஸ். இந்து தருமமும் வாழ்க்கையும் குமார கோமேதகவேலு (மொ.) பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14, 1967.

7. இராமகிருட்டிணன் எஸ். 'வள்ளுவர் குறிப்பிடும் ஊழ்' ஓர் ஆராய்ச்சி, தாமரை திங்களிதழ், சன. 1981.

8. மேற்படி இளங்கோவின் பாத்திரப் படைப்பு மீனாட்சி புத்தக நிலையம், மதுரை-1 1975.

9. இராமஸ்வாமி. ப. பௌத்த தருமம், ஹிலால் பதிப்பகம், திருநெல்வேலி, 1956.

10. இராமநாதன் செட்டியார் லெ,ப.கரு. தொல்காப்பியச் செல்வம், முத்தையா பதிப்பகம், இடம் குறிப்பிடப் பட இல்லை, 1966.

11. இராமலிங்கம் பிள்ளை வெ.நாமக்கல் கவிஞர் இலக்கிய இன்பம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1964.

12. இராமானுஜாசாரியார், ம. வெ. (பதி), மகாபாரதம் ஆதிபருவம், தமிழ் மொழிபெயர்ப்பு, 1914,

13. மேற்படி மகாபாரதம் ஸ்திரீ பருவம், 1923

14. மேற்படி மகாபாரதம், சாந்தி பருவம், 1916.

15. இலக்குவனார், சி. தொல்காப்பிய ஆராய்ச்சி, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1961

16. இளவழகனார் பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை, கழகம், 1960

17. கணபதி முதலியார், ச. பதினெண்கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள், கழகம், 1966.

18. கந்தசாமி, சோ. ந. தமிழும் தத்துவமும் மணிவாசகர் நூலகம், சென்னை-1. 1976.

19. குருசாமி, ம.ரா.போ. சங்க காலத்திற்குமுன் மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோவை, 1975.

20.	குழந்தை புலவர்	தொல்காப்பியம் பொருளதிகாரம், உரை, வேலா பதிப்பகம், ஈரோடு, 1968.
21.	குன்றக்குடி அடிகளார், தவத்திரு.,	திருவள்ளுவர் (சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள்) அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1981.
22.	குன்றக்குடி அடிகளார், தவத்திரு.,	'திருக்குறள் உரை - ஊழ்', மக்கள் சிந்தனை திங்கள் இரு முறை இதழ்-1.8.83.
23.	கோவிந்தசாமி. பி. எஸ். ஜி. ஜி.,	சிலப்பதிகாரத்தில் ஊழின்வலிமை மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோவை-1, 1966.
24.	கோவிந்தசாமி, மு.,	குறள் மனம், பாரி நிலையம், சென்னை-1, 1958.
25.	சக்கரவர்த்திநயினார், அ.,	திருக்குறள் வழங்கும் செய்தி, பகவதி ஜயராமன் (மொ.) பாரி நிலையம், சென்னை-1, 1959.
26.	சங்கர்லால், கே. பி.,	சிலம்பில் திறனாய்வு, ஐ. ஏ. எஸ். வெளியீடு, மதுரை-9. 1973.
27.	சாமிநாதசர்மா, வெ.,	கிரீஸ் வாழ்ந்த வரலாறு, பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம், புதுக்கோட்டை, 1963.
28.	சிதம்பரனார், சாமி.,	தொல்காப்பியத் தமிழர், இடம் குறிப்பிடப்பட இல்லை, 1956.
29.	மேற்படி,	வள்ளுவர் வாழ்ந்த தமிழகம், இலக்கிய நிலையம், சென்னை-24 1964.
30.	சீனிவாச அய்யங்கார், உ.வே.சி,ஆர்.(மொ.)	ஸ்ரீமத்வான்மீகி ராமாயணம் - அயோத்தியா காண்டம், லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை,1963
31.	மேற்படி,	ஆரண்ய காண்டம், 1963.
32.	சுப்பிரமணியபிள்ளை, கா.	பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து, தமிழ் நெறி விளக்கப் பதிப்பகம், சேலம், 1939.

33. சுப்பிரமணியபிள்ளை, **பதினெண்கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள்**, கழகம், 1966.

34. சுப்பிரமணியன், ச. வே., **சிலம்பும் சிந்தாமணியும்**, தமிழ்ப் பதிப்பகம், அடையாறு, சென்னை-20, ஆண்டு குறிக்கப்பட இல்லை.

35. சுப்புரெட்டியார், ந., **தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை**, பழனியப்பா பிரதர்ஸ் 1964.

36. செந்துறைமுத்து புலவர்., **தொல்காப்பியர் வாழ்க்கை நெறி** வள்ளுவர் பண்ணை, சென்னை, 1962.

37. செபரத்தினம், ஆ., **இலக்கிய ஒளி 100**, பெருமாள் புரம், திருநெல்வேலி-7, 1962.

38. ஞானசம்பந்தம் அ. ச., **சிந்தனைச் சிலம்பு**. பத்தினிக் கோட்டப் பதிப்பகம், பூம்புகார் மேலையூர், 1977.

39. தண்டபாணி தேசிகர், ச. (தொ) **திருக்குறள் உரைவளம்-அறத்துப் பால்**, இடம் குறிக்கப்பட இல்லை 1957.

40. திருநாவுக்கரசு, க.த., **திருக்குறள் நீதி இலக்கியம்**, செ.ப.க., சென்னை, 1971.

41. துரைசாமிப்பிள்ளை, ஔவை. சு., **புறநானூற்றுச் சொற்பொழிவுகள்** கழகம், ஆண்டு குறிக்கப்பட இல்லை.

42. மேற்படி, **பதினெண்கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள்**, கழகம், 1966.

43. துரையரங்கசாமி, மொ. அ., **தொல்காப்பிய நெறி**, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை-1, 1963.

44. மேற்படி. **பண்டைத் தமிழ் நெறி**, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1956.

45. நடராஜன், அ. லெ. (மொ.), **புத்தர் பிரான் அருளிய தம்மபதம்** கஸ்தூர்பா காந்தி கன்யாகுருகுலம் வேதாரணியம், 1979.

46. நவநீதகிருட்டிணன், அ. க, **பதினெண்கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள்**, கழகம், 1966.

47. நாயுடு, அ. கி., தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம், முப்பால் நிலையம், கோவை, 1962.

48. பரமசிவம், கு., பதினெண்கீழ்க்கணக்குச் சொற் பொழிவுகள், கழகம், 1966.

49. பரிமணம், அ. மா., 'ஊழ்வினை உருத்து வந்தூட்டும்', கட்டுரைப் பொழில் கரந்தைத் தமிழ்ச் சங்க மணிவிழா மலர், தஞ்சை, 1973.

50. மாணிக்கம், வ.சுப., தமிழ்க் காதல், பாரி நிலையம், சென்னை, 1975.

51. மேற்படி, எந்தச் சிலம்பு, பேகன் பதிப்பகம், காரைக்குடி, 1971.

52. மேற்படி, இரட்டைக் காப்பியங்கள், செல்வி பதிப்பகம், காரைக்குடி, 1960.

53. மேற்படி, வள்ளுவம், பாரி நிலையம், சென்னை, 1956

54. லட்சுமணன், கி., இந்திய தத்துவஞானம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14, 1980.

55. வச்சிரவேல் முதலியார், க. திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே, திருவருள்தவநெறி மன்றம், மதுரை, 1953.

56. வரதராசன், மு , திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், பாரி நிலையம், சென்னை, 1956.

57. விமலானந்தம், மது. ச., தமிழ் இலக்கிய வரலாறு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை-1 1979.

58. விஜயலட்சுமி, ர. தமிழகத்தில் ஆசீவகர்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1988.

59. வெள்ளைவாரணர், க. தமிழ் இலக்கிய வரலாறு - தொல்காப்பியம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1978.

60. வேங்கடசாமி, சீனி. மயிலை., பௌத்தமும் தமிழும் கழகம், சென்னை, 1964.

61. மேற்படி — சமணமும் தமிழும், கழகம், சென்னை, 1954.

62. ஜேம்ஸ் ஆலன் — விதியை வெல்லுதல் (Mastery of Destiny) என். கே. வேலன் (மொ) கழகம், சென்னை, 1969.

3. ஆங்கில நூல்கள் :

1. Albert Schweitzer — **Indian thought and its Development**, Wilco Publising Co., Bombay, 1960.

2. Alif Ibrahimov, — **Thirukkural in Couplets** with Illustra tions, Progressive Publishers, Moscow, 1974.

3. Ilakkuvanar, S. — **Tholkappiyam** (in English) with **Critical Studies**, 1963.

4. Kailasapathy, K — **On Art and Literature**, New Century Book House, Madras-98, 1986.

5. Kalghatgi, T.G. — **Determinism and Karma Theory**, Indian Philosophical Annual, University of Madras, 1968

6. Subramanian, K. — 'Know your English', **The Hindu**, February 28, 1989

4. நிகண்டுகள் :

1. கயாதர நிகண்டு, சென்னைப் பல்கலைக் கழகம், 1939.
2. சூடாமணி நிகண்டு, ஆறுமுக நாவலர் வி. அச்சகம், சென்னை, ஆண்டு குறிப்பிடப்பட இல்லை.
3. திவாகர நிகண்டு, கழகம், 1958.
4. பிங்கல நிகண்டு, கழகம், 1968.

5. அகராதிகள் :

1. இருபதாம் நூற்றாண்டுத் தமிழகராதி — பி. இராமநாதன் (தொ.) 1909.
2. கம்பர் தமிழகராதி — வே. இராமச்சந்திரசர்மா (தொ.)
3. கழகத் தமிழகராதி — கழகம், சென்னை, 1969.
4. செந்தமிழகராதி — ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, ஆண்டு குறிக்கப்பட இல்லை.
5. தமிழ்ப்பேரகராதி (Tamil Lexicon) செ ப.க. தொகுதி I-பகுதி II, 1956.
6. மேற்படி, செ. ப. க., தொகுதி II - பகுதி I, 1962.
7. மேற்படி, செ. ப. க., தொகுதி IV - பகுதி I, 1963.
8. மேற்பேடி, செ ப. க., தொகுதி V - பகுதி I, ஆண்டு குறிப்பிடப்பட இல்லை.
9. மேற்படி, செ. ப. க., தொகுதி VI, பகுதி I, 1934.
10. மேற்படி, செ. ப. க., தொகுதி VI, பகுதி IV, 1935.
11. பழந்தமிழ் நூற் சொல்லடைவு. பிரஞ்சு இந்தியக் கலைக் கழகம், பாண்டிச்சேரி, 3 பகுதிகள், 1967, 1968, 1970.
12. ஆங்கிலத் தமிழகராதி, அ. சிதம்பரநாதன் (பதி.) செ. ப. க. 1965.
13. A Sanskrit - English Dictionary -Sir Monier Monier Williams M. A., K. C. I. E , Oxford of the Clarendon Press, Reprinted in 1963.

6 கலைக்களஞ்சியங்கள் :

1. தமிழ்க் கலைக் களஞ்சியம், தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, தொகுதி-3, 1956.

2. Compton's Pictured Encyclopedia- Published by F. E. Compton and Company, Chicago.

3 Encyclopaedia Americana, 1829.

4 Encyclopaedia Britannica, First Published in 1768, by a Society of Gentlemen in Scotland Publisher - William Benton, Printed in U.S.A. 1969

5. Encyclopaedia of Religion and Ethics, Edinburgh, T & T Clark. 38, George Street Latest Impression Vol. V. 1967.

6. The Columbia Encyclopaedia, Edited by William Bridgwater and Seymourkurtz, Columbia University Press, London 1963

7. The New Dictionary of Thought - An Encyclopaedia of Quotations, Compiled by Tryon Edwards D. D., Revised and Enlarged by C. N. CATREVAS and JONATHAN, EDWARDS, Universal Text Books Limited, London.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	11	கூறப்படுவது	கூறப்படுவதும்
1	15	கொள்ளப்பட்டதால்	கொள்ளப்பட்டதாலும்
4	18	கொள்ளப்பட்டது	கொள்ளப்பட்டன
5	21	அடிப்படை கருத்துக்கள்	அடிப்படைக் கருத்துக்கள்
13	31	ஊழ்ம் பொருளிலும்	ஊழ்ப் பொருளிலும்
14	10	பா என்னும்	பால் என்னும்
16	1	முற்பிறப்பினனக்கூறி	முற்பிறப்பினைக்கூறி
16	6	ஊழ்லினை	ஊழ்வினை
34	37	துர்	துர் பாக்யம்
35	3	முடியாது	முடியாமல்
35	19	குறிப்பிடுகின்றனர்	குறிப்பிடுகின்றார்
49	9	ஊர்	ஊழ்
61	20	இதுகாரும்	இதுகாறும்
64	1	பாடாலல்	பாடலால்
65	2	போவனவாகுக	போவதாகுக
73	18	உருசெழு	உருகெழு
86	9	அடுத்ந	அடுத்த
87	38	என்னும்	என்றும்
101	27	எல்லாலற்றையும்	எல்லாவற்றையும்
109	1	தத்துவங்களைத்	தத்துவங்களைக்
117	21	விளங்கும்.	விளங்கும்
118	6	ஒரே வழி	ஒரோ வழி
118	32	தான்	தாம்
120	15	ஒர்	ஓர்

124		21	வளைஇ	வளை இய
131		32	நீ நிமித்தம்	தீ நிமித்தம்
138		31	வரையறுக்கய்பட்ட	வரையறுக்கப்பட்ட
141		16	Inexarable Fate	Inexorable Fate
159		34	உடற்றுனி	உடற்றுணி
172		31	தமிழராய்ச்சி	தமிழாராய்ச்சி
173		26	பசுக்களின் இளங்சன்று	பசுவின் இளங்கன்று
199		6	ஒமுக்கம்	ஒழுக்கம்
199		6	வழியலமைந்த	வழியிலமைந்த
200		8	இராமயணம்	இராமாயணம்
208		18	நூல்ககளில்	நூல்களில்
222	எண்	19	வெளியிடு	வெளியீடு
223	,,	37	பெ. கந்தரம் பிள்ளை	பெ. சுந்தரம்பிள்ளை
228	,,	3-1	Publising	Publishing
229	,,	5-8	மேற்பேடி	மேற்படி



நூலாசிரியர் என் மாணவர். பழைய தஞ்சை மாவட்டம் மன்னார்குடி வட்டம் எடமேலையூரில் தோன்றியவர். தெய்வத்திரு அ.பெருமாள்சாளுவர்-திருமதி.செல்லம்மாள் ஆகியோரின் மூத்த புதல்வர். இன்று தஞ்சையில் வாழ்பவர்.

பிறந்த ஊரில் பள்ளிப்படிப்பும், பூண்டி அ.வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரியில் இளங்கலைத் தமிழிலக்கியமும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் முதுகலைத்தமிழிலக்கியமும் பயின்றவர். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் 'ஊழ்' பற்றி ஆய்வுப்பட்டமும், திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப்பயிற்சி வகுப்பில் பயின்று 'சித்தாந்த இரத்தினம்' என்னும் பட்டமும் பெற்றவர்.

புட்பம் கல்லூரித் தமிழ்த்துறையில் 1975 முதல் பணியாற்றுபவர். ஆய்வு மாணவர் பலருக்கு நெறியாளர். கவிதைகள், கட்டுரைகள் எழுதுபவர். சங்க இலக்கியம், சமய இலக்கியம் ஆகியவற்றில் ஆர்வம் உடையவர். சிவ நெறியில்- சன்மார்க்க நெறியில் ஈடுபாடு கொண்டவர். இசையுடன் ஆன்மிகச் சொற்பொழிவாற்றுபவர். தஞ்சை அகத்தியர் சன்மார்க்க குருகுலத்தில் 1995முதல் திருமந்திரம், சிவஞான போதம், திருவருட்பா ஆகிய அருள்நூல்களில் தொடர் சொற்பொழிவாற்றிவரும் தொண்டினர். தஞ்சை அருள் நெறித்திருக்கூட்டத்தால் 'அருள்நெறிச் செம்மல்' எனும் பட்டம் அளித்துப் பாராட்டப்பெற்றவர்.

இவரது வாழ்வுக்கு வளம் சேர்த்த சான்றோர் தெய்வத்திரு குன்றக்குடி அடிகளார், கல்விக்காவலர் திருப்பெருந்திரு.கி.துளசி ஐயா வாண்டையார், தெய்வத்திரு.முனைவர் ந.சஞ்சீவி மற்றும் இவரது பேராசிரியப் பெருமக்கள்.

சிவனடி மறவா சிந்தையும் அருள் நயந்த நெஞ்சமும் தமிழ்நெறி தழைக்கவேண்டுமென்ற ஆர்வமும், கொண்டகோலத்திற்கு ஏற்றசீலமுடைய வாழ்வும் வேண்டும் என்று எப்போதும் இறையருளை வேண்டுபவர்.

முனைவர் அ.தட்சிணாமூர்த்தி
முன்னாள் முதல்வர்
செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

"ஆய்வேடு அருமை". 'ஊழ்' பற்றிய குழப்ப வாதங்கள் அடிபட்டுப்போகும் வகையில் ஆழமாகச் சிந்தித்து எழுதப்பெற்றுள்ளது .... ஊழின் ஆற்றல் பற்றிய முடிவு மரபு தவறாப்புதுமை! வளரும் உலகிற்கு வழிகாட்டுதலாக அமைந்துள்ளது. எனது உளமார்ந்த பாராட்டுக்கள்!

கவிஞர்கோ மரு. பரமகுரு
குன்றக்குடி.